ஆணையர் அவர்களின் 21.03.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:347/2025 **பொருள் எண்.19**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-6, வார்டு-73, பழைய வாழைமா நகரில் அமைந்துள்ள சத்துணவு கூடம் கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-73, பழைய வாழைமா நகரில் அமைந்துள்ள சத்துணவு கூடம் கட்டிடம் மிகவும் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், பொதுமக்கள் நலன் கருதி எவ்வித பாதிப்புகள் ஏற்படா வண்ணம் இருக்க இக்கட்டிடத்தை இடித்து கட்டுவது அவசியமாகிறது.

தற்போதுள்ள கட்டிடத்தை இடிக்க ஒப்பம் கோரும் பொழுது கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையர் அவர்களின் 01.09.2023 நாளிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள மதிப்பினை நிர்ணயிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டதின் அடிப்படையில் கட்டிடத்தை இடிப்பதற்கான சுற்றறிக்கையில் உள்ளவாறு மதிப்பீட்டு தொகை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம்

வ. எண்	பணியின் விவரம்	கட்டிடத்தின் சதுர அடி விவரம்	சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட தொகை	மதிப்பீட்டு தொகை
1.	மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-73, பழைய வாழைமா நகரில் அமைந்துள்ள சத்துணவு கூடம் கட்டிடத்தை இடித்து அகற்றும் பணி	728.02 சதுர அடி	1,000 சதுர அடி ரூ.25,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது	ரூ.25,000/-
மொத்தம்		**728.02 சதுர அடி**		ரூ.**25**,000/-

மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-73, பழைய வாழைமா நகரில் அமைந்துள்ள சத்துணவு கூடம் கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-73, பழைய வாழைமா நகரில் அமைந்துள்ள சத்துணவு கூடம் கட்டிடம்.
2.	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	
3.	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு?	தரைத்தளம் – 728.02 சதுர அடி

4.	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு?	67.66 சதுர மீட்டர்
5.	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு?	ரூ. 9461.34
6.	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	பயன்பாட்டில் உள்ளது
7.	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	
8.	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்?	பழுதடைந்துள்ளது
9.	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்?	செயற்பொறியாளர்/மண்டலம்-6

எனவே, மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-73, பழைய வாழைமா நகரில் அமைந்துள்ள சத்துணவு கூட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.197/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

UNIT17/3/2025-UNIT(17)-AEE

ஆணையர் அவர்களின் 19.03.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:348/2025 **பொருள் எண்.20**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, வார்டு-75க்குட்பட்ட சிவ சண்முகபுரம் அ பகுதியில் 2வது தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்குட்பட்ட சிவ சண்முகபுரம் அ பகுதியில் 2வது தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம் தரைதளம் – 126 சதுர மீட்டர், முதல் தளம் – 126 சதுர மீட்டர் சுமார் 224 சதுர மீட்டர் நிலப்பரப்பில் 1975 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும், இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், பொது மக்கள் நலன் கருதி எவ்வித பாதிப்புகள் ஏற்படா வண்ணம் இருக்க இக்கட்டிடத்தை இடித்து கட்டுவது அவசியமாகிறது.

தற்போதுள்ள கட்டிடத்தை இடிக்க ஒப்பம் கோரும் பொழுது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள மதிப்பினை நிர்ணயிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டதின் அடிப்படையில் 2500 முதல் 5000 சதுர அடி வரை கட்டிடத்தை இடிப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,00,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்குட்பட்ட சிவ சண்முகபுரம் அ பகுதியில் 2வது தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடத்தின் விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	மண்டலம்-6	வார்டு-75
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்குட்பட்ட சிவ சண்முகபுரம் அ பகுதியில் 2வது தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம்
2.	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	1975 ஆம் ஆண்டு
3.	அந்த கட்டிடத்தின் பரப்பளவு?	தரைதளம் – 126 சதுர மீட்டர் முதல் தளம் – 126 சதுர மீட்டர் (252 m2 x 10.76 = 2711 sq.ft)
4.	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு?	224 சதுர மீட்டர்
5.	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு?	ரூ.45,868.18

6.	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	பயன்பாட்டில் இல்லை
7.	அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளது
8.	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்?	பழுதடைந்துள்ளது
9.	கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்?	மாமன்ற உறுப்பினர் அவர்கள்

எனவே, மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்குட்பட்ட சிவ சண்முகபுரம் அ பகுதியில் 2வது தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"17.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.43/2025, நாள்.17.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.202 /2025, நாள். 23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ7.நக.எண்.இ1/ 2268/2025

ஆணையர் அவர்களின் 15.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:349/2025 **பொருள் எண்.21**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 7(அம்பத்தூர்), கோட்டம் – 79 க்குட்பட்ட ஒற்றை வாடை தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள துப்புரவு ஆய்வாளர் அலுவலகம் கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 7 (அம்பத்தூர்), பகுதி – 18, கோட்டம் – 79க்குட்பட்ட ஒற்றை வாடை தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள துப்புரவு ஆய்வாளர் அலுவலக கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்	மண்டலம் – 7	கோட்டம் எண் – 79
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	ஒற்றை வாடை தெருவிலுள்ள கோட்டம் – 79-ன் துப்புரவு ஆய்வாளர் அலுவலகம்.
2	அந்த கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	2001 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கட்டப்பட்டது.
3	அந்த கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு எத்தனை வருடங்கள் ஆகின்றது?	இக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு சுமார் 25 வருடங்கள் ஆகின்றது.
4	அந்த கட்டிடத்தின் பரப்பளவு எவ்வளவு?	48.84 சதுர மீ
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	கோட்டம் – 79-ன் துப்புரவு ஆய்வாளர் அலுவலக கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ. 26551/-
6	கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து சிதிலமடைந்துள்ளது.
7	கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	இக்கட்டிடத்தினை இடித்துவிட்டு துப்புரவு ஆய்வாளர் கோட்டம் – 79-ன் புதிய அலுவலக கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது-
8	கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது.	மண்டல அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களின் மூலம் ஆய்வு மேற்கொண்டு இக்கட்டிடம் தரம் மற்றும் உறுதி தன்மை மிகவும் அபாயகரமான நிலையில் இருப்பதாக அறிவுறுத்தியதன் அடிப்படையில்

9	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண், (ம), நாள்	11.04.2025 அன்று நடைபெறவுள்ள வார்டு குழுவில் ஒப்புதல் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒரகடம் ஒற்றைவாடை தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள கோட்டம் - 79ன் துப்புரவு ஆய்வாளர் அலுவலக கட்டிடத்தை இடித்துவிட்டு அவ்விடத்தை புதிய துப்புரவு ஆய்வாளர் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே மண்டலம் – 7 (அம்பத்தூர்), பகுதி – 18, கோட்டம் – 79 க்குட்பட்ட ஒற்றை வாடை தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள துப்புரவு ஆய்வாளர் அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.159/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.7.ந.க.எண்.இ1 /1212/2 /2025

ஆணையர் அவர்களின் 21.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:350 / 2025 **பொருள் எண்.22**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, கோட்டம் – 83-க்குட்பட்ட கொரட்டூர் அக்ரஹாரம் வடக்கு ரயில்வே சாலையில் அமைந்துள்ள பழுதடைந்த நிலையில் உள்ள பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 7, பகுதி – 18, கோட்டம் – 83-க்குட்பட்ட கொரட்டூர் அக்ரஹாரம் வடக்கு ரயில்வே சாலையில் அமைந்துள்ள பழுதடைந்த நிலையில் உள்ள பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ.எண்.	மண்டலம் - 7	வார்டு எண். 83
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	கொரட்டூர் அக்ரஹாரம் வடக்கு ரயில்வே சாலையில் அமைந்துள்ள பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி .
2.	அக்ரஹாரம் பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி கட்டப்பட்ட ஆண்டு	இக்கட்டிடம் 1982-1983 ஆம் ஆண்டு கட்டப்பட்டது
3	கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் முடிவடைந்துள்ளது	43 ஆண்டுகள்
4.	பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி மையம் பரப்பளவு	பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி பரப்பளவு 80.49 சதுர .மீ
5.	இடிக்கும் பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ.1000/-. கீழ்
6.	பழைய பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	குழந்தைகள் இருக்கும் இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து அபாய நிலையில் உள்ளது.
7.	பழைய பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	பள்ளி கட்டிட இடைவெளியில் (set back) பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி கட்டப்பட்டுள்ளது. இதனை இடித்த பிறகு, திறந்த வெளியாக பயன்படுத்தப்படும்.
8.	பழைய பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது.	குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திட்டம் -14 மாதவரம் கிராமம் சென்னை -14
9.	ஆய்வு செய்து மேற்கொள்ளப்பட்ட கட்டிடம் இடிக்க பரிந்துரை செய்த அதிகாரி	செயற் பொறியாளர்-7

10	வார்டுகுழு (பரிந்துரை) தீர்மான எண். மற்றும் நாள்.	வார்டுகுழு (பரிந்துரை) தீர்மான எண்105 நாள். 11.04.2025

எனவே, மண்டலம் – 7, பகுதி – 18, கோட்டம் – 83-க்குட்பட்ட கொரட்டூர் அக்ரஹாரம் வடக்கு ரயில்வே சாலையில் அமைந்துள்ள பழுதடைந்த நிலையில் உள்ள பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.196/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.7.ந.க.எண்: E.no :481940/2025

ஆணையர் அவர்களின் 08.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 351/2025 **பொருள் எண்.23**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 7 (அம்பத்தூர்), த.நா.வீ.வா. 11-வது தெருவிலுள்ள கோட்டம்-84-ன் கோட்ட அலுவலகம் மிகவும் பழுதடைந்துள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 7 (அம்பத்தூர்), பகுதி - 19, கோட்டம் – 84க்கு உட்பட்ட கொரட்டூர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 11-வது தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள கோட்டம் -84-ன் அலுவலக கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ.எண்	மண்டலம் – 7	வார்டு எண் – 84
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	த.நா.வீ.வா. 11-வது தெருவிலுள்ள கோட்டம் – 84-ன் கோட்ட அலுவலகம்.
2	அந்த கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	2016-17-ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
3	அந்த கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு எத்தனை வருடங்கள் ஆகின்றது?	இக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 9 வருடங்கள் ஆகின்றது.
4	அந்த கட்டிடத்தின் பரப்பளவு எவ்வளவு?	கட்டிடத்தின் பரப்பளவு 192.0 சதுர. மீ.
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.33,66,388/-
6	கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து சிதலமடைந்துள்ளது.
7	கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	இக்கட்டிடத்தினை இடித்துவிட்டு கோட்டம் – 84-ன் புதிய கோட்ட அலுவலகம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது-
8	கட்டிடம் இடித்ததற்கு பரிந்துரை செய்தது.	கட்டிட துறையின் மூலம் ஆய்வு மேற்கொண்டு இக்கட்டிடம் தரம் மற்றும் உறுதிதன்மை மிகவும் அபாயகரமான நிலையில் இருப்பதாக பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில்.
9	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண், (ம), நாள்	பின்னர் பெறப்படும்.

கொரட்டூர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 11-வது தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள கோட்டம்-84-ன் கோட்ட அலுவலக கட்டிடத்தை இடித்துவிட்டு அவ்விடத்தை கோட்டம்-84-ன் புதிய கோட்ட அலுவலகம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் – 7 (அம்பத்தூர்), பகுதி - 19, கோட்டம் – 84க்கு உட்பட்ட கொரட்டூர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 11-வது தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள கோட்டம் -84-ன் கோட்ட அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.177/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ. 7.ந.க.எண்:473246/2025

ஆணையர் அவர்களின் 04.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 352/2025 **பொருள் எண்.24**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 7 (அம்பத்தூர்), கோட்டம் - 84-க்குட்பட்ட த.நா.வீ.வா 32-வது தெருவிலுள்ள மிகவும் பழுதடைந்துள்ள ஆரம்ப சுகாதார மைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 7 (அம்பத்தூர்), பகுதி - 19, கோட்டம் - 84-க்கு உட்பட்ட த.நா.வீ.வா 32-வது தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள ஆரம்ப சுகாதார மையம் கட்டிடத்தினை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ.எண்	மண்டலம் - 7	வார்டு எண் - 84
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	த.நா.வீ.வா. 32-வது தெருவிலுள்ள ஆரம்ப சுகாதார மையம்.
2	கட்டிடம் எப்போது கட்டப்பட்ட ஆண்டு	இக்கட்டிடம் 1994-95-ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
3	கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு எத்தனை வருடம் ஆகிறது?	30 ஆண்டுகள்
4	கட்டிடத்தின் பரப்பளவு எவ்வளவு?	கட்டிடத்தின் பரப்பளவு 582.78 சதுர.மீ.
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ. 93576.86/-
6	கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து சிதலமடைந்துள்ளது.
7	கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	இக்கட்டிடத்தினை இடித்துவிட்டு புதிய ஆரம்ப சுகாதார மையம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது-
8	கட்டிடம் இடித்ததற்கு பரிந்துரை செய்தது.	மண்டல அலுவலர் / ம-7
9	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். (ம), நாள்	தீர்மான எண். 814 நாள்.22.12.2023

இந்நிலையில், இவ்விடத்தில் உள்ள ஆரம்ப சுகாதார மைய கட்டிடத்தை இடித்துவிட்டு அவ்விடத்தில் புதிய ஆரம்ப சுகாதார மையம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-7, வார்டு - 84-க்கு உட்பட்ட த.நா.வீ.வா 32-வது தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள ஆரம்ப சுகாதார மைய கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.187/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

ம.அ 7/ந.க.எண்: இ1/1383 / 2025

ஆணையர் அவர்களின் 04.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 353/2025 **பொருள் எண்.25**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 7(அம்பத்தூர்), கோட்டம் – 84 மற்றும் 85 க்குட்பட்ட பகுதிகளில் உள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிட கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–7 (அம்பத்தூர்), பகுதி - 19, கோட்ட - 84 மற்றும் 85 க்குட்பட்ட பகுதிகளில் உள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிட கட்டிடங்களை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. விவரங்கள் பின்வருமாறு,

வ. எண்	மண்டலம் – 7	வார்டு எண் – 84 மற்றும் 85
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்களின் விவரம்	1. வார்டு -84 க்குட்பட்ட காந்தி தெரு பொதுக்கழிப்பிடம் 2. வார்டு -84 பெரியார் நகர் பொதுக்கழிப்பிடம் 3. வார்டு -85 காமராஜபுரம், அம்பேத்கார் தெரு பொதுக்கழிப்பிடம் 4. வார்டு -85 காமராஜபுரம், ஜீவா தெரு பொதுக்கழிப்பிடம் 5. வார்டு -85 மங்களபுரம், பஜனை கோயில் தெரு பொதுக்கழிப்பிடம்
2	அந்த பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1. வார்டு -84 க்குட்பட்ட காந்திதெரு பொதுக்கழிப்பிடம் 2006 - 07 கட்டப்பட்டது ஆம் ஆண்டு 2. வார்டு -84ல் பெரியார் நகர் பொதுக்கழிப்பிடம் 2005 - 06 ஆம் ஆண்டு கட்டப்பட்டது, 3. வார்டு -85 காமராஜபுரம், அம்பேத்கார் தெரு பொதுக்கழிப்பிடம் 2002-03 ஆம் ஆண்டு கட்டப்பட்டது 4. வார்டு -85 காமராஜபுரம், ஜீவா தெரு பொதுக்கழிப்பிடம் 2005-06 ஆம் ஆண்டு கட்டப்பட்டது,

		5. வார்டு -85 மங்களபுரம், பஜனை கோயில் தெரு பொதுக்கழிப்பிடம் 2002-03 ஆம் ஆண்டு கட்டப்பட்டது
3	கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் முடிவடைந்துள்ளது	18 ஆண்டுகள் 19 ஆண்டுகள் 22 ஆண்டுகள் 19 ஆண்டுகள் 22 ஆண்டுகள்
4	அந்த பழைய பொதுக்கழிப்பிட கட்டிடங்களின் பரப்பளவு எவ்வளவு?	1. வார்டு-84 காந்தி தெரு பொதுக்கழிப்பிடம் இடிக்கப்பட வேண்டியுள்ள கட்டிடத்தின் பரப்பளவு 749.16 சதுர அடி 2. வார்டு -84ல் பெரியார் நகர் பொதுக்கழிப்பிடம் இடிக்கப்பட வேண்டியுள்ள கட்டிடத்தின் பரப்பளவு 1110.83 சதுர அடி 3. வார்டு -85 காமராஜபுரம், அம்பேத்கார் தெரு பொதுக்கழிப்பிடம் இடிக்கப்பட வேண்டியுள்ள கட்டிடத்தின் பரப்பளவு 264.00 சதுர அடி 4. வார்டு -85 காமராஜபுரம், ஜீவா தெரு பொதுக்கழிப்பிடம் இடிக்கப்பட வேண்டியுள்ள கட்டிடத்தின் பரப்பளவு 271.00 சதுரஅடி 5. வார்டு -85 மங்களபுரம், பஜனை கோயில் தெரு பொதுக்கழிப்பிடம் இடிக்கப்பட வேண்டியுள்ள கட்டிடத்தின் பரப்பளவு 265.00 சதுர அடி
4	பழைய பொதுக்கழிப்பிட கட்டிடங்களின் தற்போதைய புத்தக மதிப்பு	1. வார்டு -84 காந்தி தெரு பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ. 35000/-

		2. வார்டு -84 பெரியார் நகர் பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ. 50000/- 3. வார்டு -84 பெரியார் நகர் பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ. 50000/- 4. வார்டு -85 காமராஜபுரம், அம்பேத்கார் தெரு பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ.12,000/- 5. வார்டு -85 காமராஜபுரம், ஜீவா தெரு பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ. 12,000/- 6. வார்டு -85 மங்களபுரம், பஜனை கோயில் தெரு பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ. 12,000/-
5	பழைய பொதுக்கழிப்பிடங்களை இடிப்பதற்கான காரணம்	இந்த பொதுக்கழிப்பிட கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து சிதலமடைந்துள்ளன.
6	அந்த பழைய பொதுக்கழிப்பிட கட்டிடங்கள் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது	புதிய நவீன பொதுக்கழிப்பிடங்களாக கட்டப்பட உள்ளன.
7	பழைய பொதுக்கழிப்பிட கட்டிடங்கள் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது.	மண்டல அலுவலர் / ம-7
8	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். (ம), நாள்	பின்னர் பெறப்படும்

இந்நிலையில், மேற்சொன்ன இடங்களில் உள்ள பழைய பொதுக்கழிப்பிடங்களை இடித்துவிட்டு புதிய நவீன பொதுக்கழிப்பிடங்களாக கட்டப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் *7(அம்பத்தூர்)*, பகுதி-*19* கோட்டம்-*84* மற்றும் *85*க்குட்பட்ட பகுதிகளில் உள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிட கட்டிடங்களை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.04.2025 **அன்று நடைபெற்ற நிலைக்குழு *(பணிகள்)* கூட்டத்தின் தீர்மான எண்**.169/2025, **நாள்**.23.04.2025-**ன்படி இதற்கு நிலைக்குழு *(பணிகள்)* பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ7.ந.க.எண்.இ1/002292/2025

ஆணையர் அவர்களின் 16.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 354/2025 **பொருள் எண்.26**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 7 (அம்பத்தூர்), கோட்டம்-85க்குட்பட்ட காமராஜபுரம், அம்பேத்கார் தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் பழைய தலைமை ஆசிரியர் அறை மற்றும் இரண்டாம் வகுப்பறை கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7(அம்பத்தூர்), பகுதி-19, கோட்டம்-85க்குட்பட்ட காமராஜபுரம், அம்பேத்கார் தெருவில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் பழைய தலைமை ஆசிரியர் அறை மற்றும் இரண்டாம் வகுப்பறை கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்.	மண்டலம்-7	வார்டு-85
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம்-7(அம்பத்தூர்), பகுதி-19, கோட்டம்-85க்குட்பட்ட காமராஜபுரம், அம்பேத்கார் தெருவில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் பழைய தலைமை ஆசிரியர் அறை மற்றும் இரண்டாம் வகுப்பறை கட்டிடம்.
2.	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	இக்கட்டிடம் 2000-01 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
3.	அந்த கட்டிடத்தின் பரப்பளவு?	42.75 சதுர மீட்டர்
4.	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு?	ரூ.7083/- கீழ்
5.	அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	சென்னை தொடக்கப்பள்ளி கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
6.	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்?	இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து சேதமடைந்துள்ளது.
7.	கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்?	செயற்பொறியாளர், மண்டலம்-7

8.	வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள்	பின்னர் பெறப்படும்.

எனவே, மண்டலம்-7(அம்பத்தூர்), பகுதி-19, கோட்டம்-85க்குட்பட்ட காமராஜபுரம், அம்பேத்கார் தெருவில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் பழுதடைந்துள்ள பழைய தலைமை ஆசிரியர் அறை மற்றும் இரண்டாம் வகுப்பறை கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"17.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.39/2025, நாள்.17.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.198/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ7.ந.க.எண்.இ1/002291/2025

ஆணையர் அவர்களின் 16.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 355/2025 **பொருள் எண்.27**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7 (அம்பத்தூர்), கோட்டம்-85க்குட்பட்ட வரதராஜபுரம் பஜார் தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7(அம்பத்தூர்), பகுதி-19, கோட்டம்-85க்குட்பட்ட வரதராஜபுரம் பஜார் தெருவில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளி கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்.	மண்டலம்-7	வார்டு-85
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம்-7(அம்பத்தூர்), பகுதி-19, கோட்டம்-85க்குட்பட்ட வரதராஜபுரம் பஜார் தெருவில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளி கட்டிடம்.
2.	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	இக்கட்டிடம் 2000-01 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
3.	அந்த கட்டிடத்தின் பரப்பளவு?	103 சதுர மீட்டர்
4.	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு?	ரூ.2061/- கீழ்
5.	அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	சென்னை தொடக்கப்பள்ளி கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
6.	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்?	இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து சேதமடைந்துள்ளது.
7.	கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்?	செயற்பொறியாளர், மண்டலம்-7
8.	வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள்	பின்னர் பெறப்படும்.

எனவே, மண்டலம்-7(அம்பத்தூர்), பகுதி-19, கோட்டம்-85க்குட்பட்ட வரதராஜபுரம் பஜார் தெருவில் பழுதடைந்துள்ள சென்னை தொடக்கப்பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“17.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.40/2025, நாள்.17.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.199/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

ம.அ.7.நக.எண்:இ1/1212/4/2025

ஆணையர் அவர்களின் 06.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 356/2025 **பொருள் எண்.28**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 7 (அம்பத்தூர்), கோட்டம் – 86-க்குட்பட்ட மண்ணூர்பேட்டை, பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள பழுதடைந்துள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 7(அம்பத்தூர்), பகுதி - 19, கோட்டம் – 86-க்குட்பட்ட மண்ணூர்பேட்டை, பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள அங்கன்வாடி மைய கட்டிட த்தினை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்	மண்டலம் – 7	வார்டு எண் – 86
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்ணூர்பேட்டை, பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள அங்கன்வாடி மையம்.
2.	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1984-85-ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
3	கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் முடிவடைந்துள்ளது	40 ஆண்டுகள்
4	கட்டிடத்தின் பரப்பளவு	120.00 சதுர.மீ
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.1000/- கீழ்
6.	கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து சிதலமடைந்துள்ளது.
7	கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	அங்கன்வாடி மையம் கட்டிடம் மற்றும் பள்ளி. உத்தேசிக்கப்பட்டுள்ளது.
8	கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது.	மண்டல அலுலவர் / ம-7
9.	கட்டிடம் இடிக்க பரிந்துரை செய்த அதிகாரி	செயற்பொறியாளர்-7
10	வார்டுகுழு (பரிந்துரை) தீர்மான எண். மற்றும் நாள்.	வார்டுகுழு (பரிந்துரை) தீர்மான எண் 1555 நாள்-12.02.2025

எனவே, மண்டலம்-7, வார்டு – 86க்கு உட்பட்ட மண்ணூர்பேட்டை, பிள்ளையார் கோயில் தெருவில் பழுதடைந்துள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தினை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.183 /2025, நாள். 23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.7.ந.க.எண்: இ1/ 1212/3/ 2025

ஆணையர் அவர்களின் 06.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 357/2025 **பொருள் எண்.29**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 7 (அம்பத்தூர்), கோட்டம் – 86-க்குட்பட்ட வெள்ளாளர் தெருவில் உள்ள பழுதடைந்த நிலையில் உள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 7(அம்பத்தூர்), பகுதி-19, கோட்டம் – 86க்குட்பட்ட வெள்ளாளர் தெருவில் உள்ள அங்கன்வாடி மைய கட்டிட த்தினை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்.	மண்டலம் - 7	வார்டு எண். 86
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	வெள்ளாளர் தெருவில் உள்ள அங்கன்வாடி மையம்.
2.	அங்கன்வாடி மையம் கட்டப்பட்ட ஆண்டு	1994 -95-ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
3	கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் முடிவடைந்துள்ளது	30 ஆண்டுகள்
4.	அங்கன்வாடி மையத்தின் பரப்பளவு	96.00 சதுர .மீ
5.	அங்கன்வாடி மையம் கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.1000/- கீழ்
6	அங்கன்வாடி மைய கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து சிதலமடைந்துள்ளது.
7.	கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	புதிய அங்கன்வாடி மையம் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
8	பழைய அங்கன்வாடி மையம் கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது.	குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்திட்டம் -14 மாதவரம் கிராமம் சென்னை -14
9.	கட்டிடம் இடிக்க பரிந்துரை செய்த அதிகாரி	செயற் பொறியாளர்-7
10	வார்டுகுழு (பரிந்துரை) தீர்மான எண். மற்றும் நாள்.	வார்டுகுழு (பரிந்துரை) தீர்மான எண் 1554 நாள்-12.02.2025

எனவே, மண்டலம்-7, வார்டு-86க்கு உட்பட்ட வெள்ளாளர் தெருவில் பழுதடைந்துள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தினை இடிப்பதற்கு நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.185/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

DIV87/15/2025-DIV(87)-SAN.INS

ஆணையர் அவர்களின் 16.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 358/2025 **பொருள் எண்.30**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7 (அம்பத்தூர்), கோட்டம்–87-க்குட்பட்ட சர்ச் சாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியிலுள்ள இரண்டு வகுப்பு அறை மற்றும் சமையலறை கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7(அம்பத்தூர்), பகுதி-19, கோட்டம்-87க்குட்பட்ட சர்ச் சாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியிலுள்ள இரண்டு வகுப்பு அறை மற்றும் சமையலறை கட்டிடத்தினை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்.	மண்டலம்-7	வார்டு-87
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம்-7(அம்பத்தூர்), பகுதி-19, கோட்டம்-87க்குட்பட்ட சர்ச் சாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியிலுள்ள இரண்டு வகுப்பு அறை மற்றும் சமையலறை கட்டிடம்
2.	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	இக்கட்டிடம் 2004-05-ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
3.	அந்த கட்டிடத்தின் பரப்பளவு?	152.06 சதுர மீட்டர்
4.	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு?	ரூ.1.17/- இலட்சம்
5.	அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	புதிய அங்கன்வாடி மையம் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
6.	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்?	இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து சேதமடைந்துள்ளது.
7.	கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்?	மாமன்ற உறுப்பினர், வார்டு-87 மண்டல அலுவலர், மண்டலம்-7.
8.	வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள்	வார்டுகுழு (பரிந்துரை) தீர்மான நாள். 11.04.2025

எனவே, மண்டலம்–7(அம்பத்தூர்), பகுதி-19, கோட்டம்–87க்குட்பட்ட சர்ச் சாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியிலுள்ள இரண்டு வகுப்பு அறை மற்றும் சமையலறை கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“17.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.41/2025, நாள்.17.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.200/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

DIV88/9/2025-DIV(88)-SAN.INS

ஆணையர் அவர்களின் 16.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 359/2025 **பொருள் எண்.31**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 7 (அம்பத்தூர்), கோட்டம் – 88-க்குட்பட்ட பூங்கா சாலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7(அம்பத்தூர்), பகுதி-19, கோட்டம்-88க்குட்பட்ட பூங்கா சாலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளி கட்டிடத்தினை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்.	மண்டலம்-7	வார்டு-88
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம்-7(அம்பத்தூர்), பகுதி-19, கோட்டம்-88க்குட்பட்ட பூங்கா சாலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளி கட்டிடம்.
2.	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	இக்கட்டிடம் 2000-01-ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
3.	அந்த கட்டிடத்தின் பரப்பளவு?	244.85 சதுர மீட்டர்
4.	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு?	ரூ.1.06 இலட்சம்
5.	அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	புதிய தொடக்கப்பள்ளி கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
6.	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்?	இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து சேதமடைந்துள்ளது.
7.	கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்?	மாமன்ற உறுப்பினர், வார்டு-88 மண்டல அலுவலர், மண்டலம்-7
8.	வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள்	வார்டுகுழு (பரிந்துரை) தீர்மான நாள். 11.04.2025

எனவே, மண்டலம்-7(அம்பத்தூர்), பகுதி-19, கோட்டம்-88க்குட்பட்ட பூங்கா சாலையில் பழுதடைந்துள்ள சென்னை தொடக்கப்பள்ளி கட்டிடத்தினை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“17.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.42/2025, நாள்.17.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.201/2025, நாள். 23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

ம.அ.7.ந.க.எண். இ1 / 1390 / 2025

ஆணையர் அவர்களின் 12.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 360 / 2025 **பொருள் எண்.32**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 7, கோட்டம் – 89-க்குட்பட்ட இளங்கோ நகர் விளையாட்டு மைதானத்தில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தினை இடித்து அகற்ற அனுமதி

வார்டு தீர்மானத்தின் பேரில் ஆணையர் மற்றும் மன்றத்திற்கான ஒப்புதலுக்காக கீழ்காணும் வகையில் சமர்ப்பிக்கப்படுகிறது.

வ.எண்.	மண்டலம் - 7	வார்டு எண். 89
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம்-7, வார்டு -89 இளங்கோ நகர் விளையாட்டு மைதானத்தில் உள்ள பொதுக்கழிப்பிடம்.
2.	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	2005 - 06 ஆம் ஆண்டு கட்டப்பட்டது
3	கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் முடிவடைந்துள்ளது	19 ஆண்டுகள்
4.	கட்டிடத்தின் பரப்பளவு	307.85 சதுர. அடி
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ. 15453.53/-
6	கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	இந்த பொதுக்கழிப்பிட கட்டிடம் மிகவும் பழுதடைந்து சிதலமடைந்துள்ளது.
7	கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	2022-23-ஆம் ஆண்டு இளங்கோ நகர் விளையாட்டு மைதானத்தில் புதிய நவீன பொதுக்கழிப்பிடம் கட்டப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.
8	பழைய கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது.	மண்டல அலுலவர் / மண்டலம் – 7
9	வார்டுகுழு (பரிந்துரை) தீர்மான எண். மற்றும் நாள்.	பின்னர் பெறப்படும்.

இந்நிலையில், இளங்கோ நகர் விளையாட்டு மைதானத்தில் ஏற்கனவே உள்ள பொதுக்கழிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததால், அதன் அருகாமையில் 2022-23-ஆம் ஆண்டு ரூ. 22.30 இலட்சத்தில் 4+1 கொண்ட புதிய நவீன பொதுக்கழிப்பிடம் கட்டப்பட்டது, தற்போது அந்த பொதுக்கழிப்பிடம் பொது மக்கள் பயன்பாட்டில் நல்ல நிலையில் உள்ளது.

எனவே, மண்டலம்-7, வார்டு -89 இளங்கோ நகர் விளையாட்டு மைதனத்தில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய பொதுகழிப்பிட கட்டிடத்தினை இடித்து அகற்றுவதற்கு, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.182/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ7.நக.எண்.இ1/2212/2025

ஆணையர் அவர்களின் 15.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 361/2025 **பொருள் எண்.33**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, வார்டு- 90 - பாடிபுது நகர் 2வது தெருவில் உள்ள சிதிலமடைந்த 16வது நாள் காரியக் கூட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

ஆணையர் மற்றும் மன்றத்திற்கான ஒப்புதலுக்காக கீழ்காணும் வகையில் சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்	பொருள்	விவரம்
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	பாடிபுது நகர் 2வது தெருவில் உள்ள சிதிலமடைந்த 16வது நாள் காரியக் கூட கட்டிடம்.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது	1986ஆம் ஆண்டு
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு?	32.64 சதுரமீட்டர்
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு?	32.64 சதுரமீட்டர்
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.2431.21/-
6	அந்த கட்டிடம் தற்போது பயன்பாட்டில் உள்ளதா?	இல்லை
7	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	புதிய 16வது நாள் காரியக் கூட கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	கட்டடம் மிகவும் சிதிலமடைந்து உள்ளது.
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்த்துயார்?	மண்டல அலுவலர்/மண்டலம் 7
10	வார்டுகுழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள்.	பின்னர் பெறப்படும்.

எனவே, மண்டலம்-7, பகுதி-20, வார்டு-90, பாடிபுது நகர் 2வது தெருவில் உள்ள சிதிலமடைந்த 16வது நாள் காரியக் கூட கட்டிடம் மிகவும் சிதிலமடைந்து உள்ளதால் இக்கட்டிடத்தினை இடித்து அகற்றுவதற்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.158/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.7.ந.க.எண்.7728/2024

ஆணையர் அவர்களின் 03.03.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 362/2025 **பொருள் எண்.34**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7 அம்பத்தூர், கோட்டம் – 93 , 6வது பிளாக், 2வது குறுக்குத் தெருவில் (ஸ்ரீ அபார்ட்மெண்ட் அருகில்) அமைந்துள்ள அங்கன்வாடி கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 7 அம்பத்தூர், பகுதி - 20, கோட்டம் – 93க்கு உட்பட்ட 6வது பிளாக், 2வது குறுக்குத் தெருவில் (ஸ்ரீ அபார்ட்மெண்ட் அருகில்) அமைந்துள்ள அங்கன்வாடி கட்டிடத்தின் விவரம் பின்வருமாறு.

வ. எண்	மண்டலம் - 7	வார்டு எண் - 93
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	6வது பிளாக், 2வது குறுக்குத் தெருவில் (ஸ்ரீ அபார்ட்மெண்ட் அருகில்) அமைந்துள்ள அங்கன்வாடி கட்டிடம்
2	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1995 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
3	கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு?	தரைதளம் – 1000 Sqft
4	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.93576.86/-
5	கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து காணப்படுகிறது.
6	கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	இக்கட்டிடத்தை இடித்து விட்டு புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
7	கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது.	மண்டல அலுவலர் / ம-7
8	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். (ம), நாள்	எண். 1431, நாள். 12.12.2024

இந்நிலையில், இவ்விடத்தில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தினை இடித்துவிட்டு அதே இடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியில் இருந்து புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே மண்டலம்-7, வார்டு – 93க்கு உட்பட்ட 6வது பிளாக், 2வது குறுக்குத் தெருவில் (ஸ்ரீ அபார்ட்மெண்ட் அருகில்) அமைந்துள்ள அங்கன்வாடி கட்டிடத்தினை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.157/2025, நாள். 23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.8.ந.க.எண் இ1/ 2124 /2025

ஆணையர் அவர்களின் 21.03.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 363/2025 **பொருள் எண்.35**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 8, பகுதி - 21, 22 மற்றும் 23, கோட்டம் – 94 முதல் 108 வரை பல்வேறு தெருக்களில் உள்ள மிகவும் பழுதடைந்த பொது கழிப்பிட கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8, பகுதி-21, 22 மற்றும் 23க்குட்பட்ட கோட்டம் - 94 முதல் 108 வரை பல்வேறு தெருக்களில் பழுதடைந்த மற்றும் பயன்பாடில்லாத பொது கழிப்பிட கட்டிடங்கள் இடிந்து விழும் நிலையில் உள்ளது.

எனவே, கீழ்கண்ட பொது கழிப்பிட கட்டிடங்களை (மண்டலம்-8ன் வார்டு குழுவின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு இடிக்க ஆணை வேண்டப்படுகிறது.

இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்களின் விவரம்

வ.எண்	வார்டு(ம) தெருவின் பெயர்	இடிக்கப்படவுள்ள கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பு ரூ.	இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் பரப்பளவு	கட்டிடம் பயன் பாட்டில் உள்ளதா	கட்டிடம் இடித்த பின்பு எந்த மாதிரியான பயன் பாட்டிற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது.	இடிப்பதற்கு அவசியம் என்ன?
1	94 MTH Service சாலை	1984	8976.20	450 ச.அடி	பயன்பாட்டில் இல்லை	பல்நோக்கு கட்டிடம்	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
2	98 கே.கே. நகர் 5வது தெரு	2000	2014 .05	695 ச. அடி	பயன்பாட்டில் இல்லை	------	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
3	98 கே.கே. நகர் 11வது தெரு	2000	1758.28	416 ச. அடி	பயன்பாட்டில் இல்லை	------	மிகவும்பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
4	98 ஆஸ்பிரன் கார்டன்	2005	138618.17	310 ச. அடி	பயன்பாட்டில் இல்லை	------	மிகவும்பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
5	98 குட்டியப்பன் தெரு, பம்பிங்ஸ்டேஷன் ரோடு	1986	13961.96	310 ச. அடி	பயன்பாட்டில் இல்லை	------	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது

6	*99* சாஸ்திரி நகர்	1992	14430.38	*48.00* ச.மீ	பயன்பாட்டில் இல்லை	------	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
7	*99* புல்லாபுரம் (ஆண்கள்)	1992	10061.69	*44.03* ச.மீ	பயன்பாட்டில் இல்லை	------	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும்8நிலையில் உள்ளது
8	*99* சதாசிவம் தெரு	1997	14757.00	*40.40* ச.மீ	பயன்பாட்டில் இல்லை	------	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
9	*99* புல்லா புரம் (பெண்கள்)	1992	10060.69	*46.50* ச.மீ	பயன்பாட்டில் இல்லை	------	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
10	*99* திடீர் நகர்	1989	5932.73	*44.77* ச.மீ	பயன்பாட்டில் இல்லை	புதிய கழிப்பிடம்	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
11	*100* வள்ளியம்மாள் தெரு சந்திப்பு	1995	2000.00	*436* ச. அடி	பயன்பாட்டில் இல்லை	பல்நோக்கு கட்டிடம்	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில்
12	*100* ஆர்ம்ஸ் சாலை	1995	2000.00	*565* ச.அடி	பயன்பாட்டில் இல்லை	பல்நோக்கு கட்டிடம்	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
13	*100* ஜோதியம்மாள் நகர்	1993	2000.00	*489.58* ச.அடி	பயன்பாட்டில் இல்லை	பல்நோக்கு கட்டிடம்	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
14	*100* டெய்லர்ஸ் ரோடு	1989	2500.00	*29.89* ச.மீ	பயன்பாட்டில் இல்லை	-------	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
15	*106* எம்.எம்.டி.ஏ பேருந்து நிறுத்தம்	1991	1,10,866.00	*678* ச.அடி	பயன்பாட்டில் உள்ளது	புதிய பொது கழிப்பிடம்	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
16	*107 M.H.* காலனி 2வது பிரதான சாலை	1995	2,74,160.81	*106.75* ச.மீ	பயன்பாட்டில் இல்லை	மகளிர் உடற்பயிற்சி கூடம்	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது

17	*108* ஹாரிங்டன் சாலை	1964	150626.39	*313.00* ச.மீ	பயன்பாட்டில் இல்லை	புதிய பொது கழிப்பிடம்	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
18	*108* ஜெகநாத புரம்	1982	8747.50	*40* ச.மீ	பயன்பாட்டில் இல்லை	புதிய பொது கழிப்பிடம்	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது
19	*96 ICF LINK ROAD*	2005	285046.38	*695* ச.மீ	பயன்பாட்டில் இல்லை	புதிய பொது கழிப்பிடம்	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது

எனவே, மண்டலம்-*8*, பகுதி-*21*, *22* மற்றும் *23*, கோட்டம்-*94* முதல் *108* வரை உள்ள பழுதடைந்த பொது கழிப்பிட கட்டிடங்களை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.059/2025, நாள்.23.04.2025-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், மேற்கண்ட பொது கழிப்பிட கட்டிடங்களை இடித்ததற்கு பிறகு அந்த இடத்தில் பொது சுகாதாரத்துறை சார்ந்த கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.8.நக.எண் இ1/ 2327/2025

ஆணையர் அவர்களின் 04.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 364/2025 **பொருள் எண்.36**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 8 அண்ணாநகர், கோட்டம்–105, ஜி- பிளாக், திருப்பூர் குமரன் தெருவில் உள்ள சிதலமடைந்த அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 8, பகுதி – 22, கோட்டம் – 105, ஜி- பிளாக், திருப்பூர் குமரன் தெருவில் உள்ள அங்கன்வாடி மையம் கட்டிடம் 2000 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. மேலும் இக்கட்டிட சுவர்கள் இடிந்து விரிசல் ஏற்பட்டு மற்றும் மேற்கூரையும் சேதமடைந்து மிகவும் பழுதடைந்து பயன்பாடில்லாத நிலையில் இடிந்து விழும் நிலையில் உள்ளது.

எனவே, இந்த அங்கவாடி மைய கட்டிடம் பயன்படுத்தும் வகையில் இல்லாததால், இந்த கட்டிடத்தை இடிக்க ஆணை வேண்டப்படுகிறது..

இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்

1	இடிக்கப்படவுள்ள கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	2000ஆம் ஆண்டு
2	இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பு	ரூ. 6590.16
3	இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் பரப்பளவு	968 சதுர அடி
4	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	பயன்பாட்டில் இல்லை
5	கட்டிடம் இடித்த பின்பு எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	அங்கவாடி மையம்
6	இடிப்பதற்கு அவசியம் என்ன?	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது

எனவே, மண்டலம் –8, பகுதி–22, கோட்டம் –105, ஜி- பிளாக், திருப்பூர் குமரன் தெருவில் உள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.170/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.10.ந.க.எண்.720/2025

ஆணையர் அவர்களின் 17.03.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 365/2025 **பொருள் எண்.37**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10 - பகுதி-31, கோட்டம்-131, பாளையக்காரன் தெருவில் உள்ள சிதிலமடைந்த பொதுகழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, பகுதி-31, கோட்டம்-131, என். எஸ். கே. சாலை சந்திப்பில் பாளையக்காரன் தெருவில் உள்ள சிதிலமடைந்த பொதுகழிப்பிடம் 2005 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, சுமார் 20 ஆண்டுகள் ஆகியுள்ளது, பாளையக்காரன் தெருவை ஒட்டியுள்ள என்.எஸ்.கே. சாலையில் சென்னை மெட்ரோ ரயில் வழித்தடம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், கழிவுநீர் குழாய்கள் சிதலமடைந்துள்ள காரணத்தினால், கழிப்பிடத்தில் கழிவுநீர் செல்வதில் தடைபட்டுள்ளது.

மேலும் கழிப்பிடத்தின் அருகில் மெட்ரோ ரயில் வழித்தடம் அமைக்கும் பணிகளால், தரை பகுதி உள்வாங்கி உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது மற்றும் கழிப்பிடத்தின் பக்கவாட்டு சுவர் மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும், இது தொடர்பாக 04.3.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் கழிப்பிடம் பழுதடைந்த நிலையில் உள்ளது என தெரியவந்துள்ளது. எனவே, இதனை இடித்து அகற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் அதனை சுற்றியுள்ள பகுதியில் உள்ள பொதுமக்களின் வீடுகளில் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், என்.எஸ்.கே.சாலை சந்திப்பில் பாளையக்காரன் தெருவில் புதிதாக கழிப்பிடம் கட்டுவதற்கான அவசியம் ஏற்படவில்லை. இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	மண்டலம்-10	கோட்டம்-131
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விபரம்	மண்டலம்-10, பகுதி-31, கோட்டம்-131-ல் பாளையக்காரன் தெருவில் உள்ள சிதிலமடைந்த பொது கழிப்பிடம்.
2.	கட்டிடம் கட்டிய துறை (ம) வருடம்	2005 ஆம்ஆண்டு மூலதன நிதியின் மூலம் கட்டப்பட்டு உள்ளது
3.	பரப்பளவு	24ச.மீ.
4.	தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.109885/-
5.	கட்டிடம் பயன்பாட்டில்உள்ளதா?	இல்லை

6.	கட்டிடம் இடிப்பதற்கான காரணம்	பாளையக்காரன் தெருவை ஒட்டியுள்ள என். எஸ். கே. சாலையில் சென்னை மெட்ரோ ரயில் வழித்தடம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், கழிவுநீர் குழாய்கள் சிதலமடைந்துள்ள காரணத்தினால், கழிப்பிடத்தில் கழிவுநீர் செல்வதில் தடைபட்டுள்ளது. மேலும் தரை பகுதி உள்வாங்கி உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

எனவே, மண்டலம்-10, பகுதி-31, கோட்டம்-131, பாளையக்காரன் தெருவில் உள்ள சிதிலமடைந்த பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.060/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ10.ந.கஎண்.இ1/721 /2024

ஆணையர் அவர்களின் 17.03.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 366/2025 **பொருள் எண்.38**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10, வார்டு 135ல் அசோக்நகர் 2வது தெருவில் உள்ள சிதிலமடைந்த உடற்பயிற்சி கூடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, பகுதி-31, கோட்டம்-135ல் அசோக்நகர் 2வது தெருவில் உள்ள சிதிலமடைந்த உடற்பயிற்சி கூடம் 2001 ஆம் ஆண்டு கட்டப்பட்டு உள்ளது. இக்கட்டிடம் கட்டப்பட்டு சுமார் 25 ஆண்டுகள் ஆகியுள்ளது மேலும், உடற்பயிற்சி கூடத்தில் உள்ள தரைதளம் மிகவும் சிதலமடைந்துள்ளது. மற்றும் மழைக்காலங்களில் உடற்பயிற்சி கூடத்தில் மேற்கூரை வழியாக தண்ணீர் கசிவு ஏற்படுவதால் மேற்கூரையில் உள்ள கம்பிகளில் துருப்பிடித்து வலுவிழந்த நிலையில் அபாயகரமாக உள்ளது. எனவே, பழுதடைந்த நிலையில் அபாயகரமாக உள்ள உடற்பயிற்சி கூடத்தை இடித்து அகற்றிவிட்டு கோட்டம் -135 மாமன்ற உறுப்பினர் நிதியில் புதிதாக உடற்பயிற்சி கூடம் கட்டுவதற்கு கடிதம் அனுப்பியுள்ளார். இது தொடர்பாக 04.03.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் உடற்பயிற்சி கூடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது தெரிய வந்துள்ளது. ஆகவே, அபாயகரமாக உள்ள உடற்பயிற்சி கூடத்தை இடித்து அகற்றிவிட்டு கோட்டம் -135 மாமன்ற உறுப்பினர் நிதியில் புதிதாக உடற்பயிற்சி கூடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின்விவரம்

வ. எண்	மண்டலம்-10	கோட்டம்-135
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விபரம்	மண்டலம்-10, பகுதி-31, கோட்டம்-135ல் அசோக்நகர் 2வது தெருவில் உள்ள சிதிலமடைந்த உடற்பயிற்சி கூடம்
2	கட்டிடம் கட்டிய துறை (ம) வருடம்	2001 ஆம் ஆண்டு மூலதன நிதியின் மூலம் கட்டப்பட்டு உள்ளது
3	கட்டிடத்தின் பரப்பளவு	பழுதடைந்த உடற்பயிற்சி கூடம் = 48ச.மீ
4	தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.109885/-
5	கட்டிடம்பயன்பாட்டில்உள்ளதா?	ஆம்
6	கட்டிடம் இடித்த பின்பு எந்த மாதிரி பயன்படுத்தப்படவுள்ளது	மாமன்ற உறுப்பினர் நிதியில் புதிய கட்டிடம் கட்டப்படவுள்ளது.

7	கட்டிடம் இடிப்பதற்கான காரணம்	உடற்பயிற்சி கூடத்தில் உள்ள தரைதளம் மிகவும் சிதலமடைந்துள்ளது, மற்றும் மழைக்காலங்களில் உடற்பயிற்சி கூடத்தில் மேற்கூரை வழியாக தண்ணீர் கசிவு ஏற்படுவதால் மேற்கூரையில் உள்ள கம்பிகளில் துருப்பிடித்து வலுவிழந்த நிலையில் அபாயகரமாக உள்ளது.

எனவே, மண்டலம்-*10*, பகுதி-*31*, வார்டு-*135*ல் அசோக்நகர் *2*வது தெருவில் உள்ள சிதிலமடைந்த உடற்பயிற்சி கூட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு *(*பணிகள்*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 **அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*பணிகள்*)* கூட்டத்தின் தீர்மான எண்**.191/2025, **நாள்**.23.04.2025**-ன்படி இதற்கு நிலைக்குழு *(*பணிகள்*)* பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.11.ந.க.எண்.இ1/435329/2025

ஆணையர் அவர்களின் 03.03.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 367/2025 **பொருள் எண்.39**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம் -11, வார்டு -143 -நொளம்பூர் பாடசாலையில் உள்ள பழைய பழுதடைந்த கட்டிடத்தில் இயங்கி வந்த ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு மைய கட்டிடத்தை (ICDS) இடித்து அகற்ற அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11 பகுதி-32, வார்டு -143 நொளம்பூர் பாடசாலையில் உள்ள கல்நார் கூரை கொண்ட கட்டிடம் முந்தைய நொளம்பூர் ஊராட்சி காலத்தில் 1985ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டிடமாகும். இக்கட்டிடம் சென்னை நடுநிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ளதால் இப்பள்ளியில் மாணவர் சேர்க்கை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட வேண்டியதன் அடிப்படையில் அதிக பரப்பளவு கொண்ட மேற்கண்ட பழுதடைந்த கல்நார் கூரை வேய்ந்த அங்கன்வாடி கட்டிடத்தை இடித்துவிட்டு இணை ஆணையர் (கல்வி) அவர்களின் 02.01.2025 நாளிட்ட கடிதத்தின்படி புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேல்நடவடிக்கை வேண்டி கட்டிடத்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, பழுதடைந்த கல்நார் கூரை வேய்ந்த அங்கன்வாடி கட்டிடத்தின் விவரம் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	வார்டு எண்.	இடம்	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	கட்டிடத்தின் பரப்பளவு	இடத்தின் பரப்பளவு	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	கட்டிடம் இடத்தில் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது.
1	143	நொளம்பூர் பாடசாலை	1985	102.05 ச.மீ	102.05 ச.மீ	14529.30	இல்லை	அங்கன்வாடி

எனவே, மண்டலம்-11, பகுதி-32, வார்டு -143 நொளம்பூர் பாடசாலையில் உள்ள மிகவும் பழுதடைந்த உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.180/2025, நாள். 23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.11.ந.க.எண்:480929/2025

ஆணையர் அவர்களின் 10.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 368/2025 **பொருள் எண்.40**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 11 , வார்டு -144ல் மதுரவாயல் எம்.எம்.டி.ஏ காலனி 2வது பிரதான சாலையில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் 7 எண்ணிக்கையிலான வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய 8 எண்ணிக்கையிலான வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் கட்ட அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, வார்டு 144ல் மதுரவாயல் எம்.எம்.டி.ஏ காலனி 2வது பிரதான சாலையில் சென்னை நடுநிலைப் பள்ளி வளாகத்தின் மையத்தில் அமைந்துள்ள 7 எண்ணிக்கையிலான வகுப்பறைகள் கொண்ட கட்டிடமானது 1990ஆம் ஆண்டு மதுரவாயல் மூன்றாம் நிலை ஊராட்சி காலத்தில் கட்டப்பட்டது. மேலும், 35 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கட்டிடமானது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது.

மேலும் 144 வது மாமன்ற உறுப்பினர் அவர்களின் 19.11.2024 நாளிட்ட கடிதத்தில், கோட்டம் 144ல் தற்போதுள்ள நடுநிலைப் பள்ளியானது முன்பிருந்த மதுரவாயல் நகராட்சி காலத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மேலும் ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக மாணவர்கள் சேர்க்கை அதிகரிப்பதால் பள்ளியின் உள்கட்டமைப்பு வசதிகளான வகுப்பறையின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல், போதுமான கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல், மாணவர்களுக்கு விளையாட்டு திடல் கட்டமைத்தல் போன்ற வசதிகள் ஏற்படுத்தி தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் பள்ளி வளாகத்தின் மத்தியில் அமைந்துள்ள 7 எண்ணிக்கையிலான பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து வளாகத்தின் தெற்கு எல்லையில் புதியதாக 8 வகுப்பறைகள் கட்டுவதால் மழலையர் வகுப்புகள் துவங்குவதற்கு போதுமான வகுப்பறை வசதி ஏற்படுத்த இயலும். மற்றும் மாணவர்களின் விளையாட்டு திறனை மேம்படுத்த தேவையான விளையாட்டு திடல் அமைக்க போதுமான இட வசதி ஏற்படுத்த இயலும்.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பள்ளி வளாகத்தின் மத்தியில் அமைந்துள்ள 7 எண்ணிக்கையிலான பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து வளாகத்தின் தெற்கு எல்லையில் புதியதாக 8 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டி பள்ளியின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியமாகிறது.

மேலும் கல்வி அலுவலர் அவர்களின் 20.02.2025 கடிதத்தின்படி வார்டு 144, மண்டலம்-11, எம்.எம்.டி.ஏ காலனி சென்னை நடுநிலைப் பள்ளி நடப்பு கல்வி ஆண்டில் 2024-25 மொத்தம் 516 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். இப்பள்ளி கட்டிடமானது மிகவும் பழுதடைந்து காணப்படுவதாகவும், 1985ல் கட்டப்பட்ட கட்டிடம் எனவும், மழை

காலங்களில் மழைநீர் கட்டிடத்திற்குள் கசிந்து வருவதாகவும், கட்டிடம் மிகவும் தாழ்வான நிலையில் உள்ளதால் மழைநீர் வகுப்பறைக்குள் நுழைவதால் மாணவர்கள் கல்வி கற்க இயலாத நிலை உள்ளது.

எனவே, மதுரவாயல் சென்னை நடுநிலைப் பள்ளி கட்டிடத்தின் உறுதித் தன்மை *(Building Stability)* குறித்து மண்டல அலுவலகம், மண்டலம் *11*ன் வாயிலாக ஆய்வு மேற்கொண்டு அதன் பொருட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனை தொடர்ந்து மதுரவாயல் சென்னை நடுநிலைப் பள்ளி வளாகத்தின் மையத்தில் அமைந்துள்ள *1990*ஆம் ஆண்டு மதுரவாயல் மூன்றாம் நிலை ஊராட்சி காலத்தில் கட்டப்பட்ட *7* வகுப்பறைகள் கொண்ட கட்டிடத்தை இடித்து புதிய *8* எண்ணிக்கையிலான வகுப்பறைகள் மற்றும் கூடுதல் கழிவறைகள் கட்டுவதற்கு *consultancy* நியமித்து மண் பரிசோதனை மற்றும் கட்டுமான வரைப்படம் தயார் செய்ய இணை ஆணையர் *(*பணிகள்*)* அவர்களிடம் *03.12.2024* அன்று அனுமதி பெறப்பட்டுள்ளது.

வ. எண்	வார்டு எண்	இனம்	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	கட்டிடத்தின் பரப்பளவு	இடத்தின் பரப்பளவு	தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு ரூ.	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா *?*	கட்டிடம் இடித்தபின் எந்த மாதிரி பயன்படுத்த உள்ளது
1	*144*	சென்னை நடுநிலைப் பள்ளி	*1990*	*491 sqm*	*1216 sqm*		ஆம்	புதிய *8 Nos* வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட உள்ளது

1. முந்தய மதுரவாயல் நகராட்சி மூலம் கட்டப்பட்ட கட்டிடம் ஆனதால் கல்வெட்டுகள் ஏதும் இல்லாத காரணத்தினால் தற்போது உள்ள கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள பழுதடைந்த இரும்பு சாளரங்கள் மற்றும் கிரில்கள் போன்ற பொருட்களுக்கு உண்டான தற்போதைய விலையின் அடிப்படையில் கட்டிடத்தின் மதிப்பு தோராயமாக ரூ. *15,000/-* ஆகும்.
2. அனுமதி பெற்றப்பின் அதே பள்ளி வளாகத்தில் சிங்கார சென்னை *2.0* திட்டத்தில் கட்டப்பட்ட புதிய வகுப்பறைகளில் மாணவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு தொடர்ந்து கல்வி பயில வழிவகை செய்யப்படும்.

எனவே, மண்டலம் *11*, வார்டு *144*ல் எம்.எம்.டி.ஏ காலனி *2*வது பிரதான சாலையில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் பழுதடைந்த *7* எண்ணிக்கையிலான வகுப்பறைகள் கொண்ட கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக *8* எண்ணிக்கையிலான வகுப்பறைகள் மற்றும் கூடுதல் கழிவறைகள் கட்டுவதற்கு, நிலைக்குழு *(*பணிகள்*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.193/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

ம.அ.11.ந.க.எண்.இ1/485673/2024

ஆணையர் அவர்களின் 10.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 369/2025 **பொருள் எண்.41**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம் - 11, வார்டு-144ல் மதுரவாயல் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, வார்டு 144ல் மதுரவாயல் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடமானது 1994 ஆம் ஆண்டு மதுரவாயல் மூன்றாம் நிலை ஊராட்சி காலத்தில் கட்டப்பட்டது. மேலும், இக்கட்டிடம் 31 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது ஆகும்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் இக்கட்டிடம் மேம்படுத்தப்பட்டு சுகாதார மையமாக தற்போது வரை இயங்கி வருகிறது.

தற்போது இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும், ஒவ்வொரு ஆண்டும் மழை காலங்களில் மேற்கூரையில் ஏற்பட்ட விரிசல் காரணமாக மழைநீர் கட்டிடத்திற்குள் கசிந்து வருவதால் தொடர்ச்சியாக இக்கட்டிடத்தை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வ. எண்	வார்டு எண்	இனம்	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	கட்டிடத்தின் பரப்பளவு	இடத்தின் பரப்பளவு	தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு ரூ,	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா?	கட்டிடம் இடித்தபின் எந்த மாதிரி பயன்படுத்த உள்ளது
1	144	நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்	1994	209 sqm	442 sqm	-	ஆம்	நகர்புற சுகாதார மையம் அமைக்க பட உள்ளது

1) முந்தய மதுரவாயல் நகராட்சி மூலம் கட்டப்பட்ட கட்டிடம் ஆனதால் கல்வெட்டுகள் ஏதும் இல்லாத காரணத்தினால் தற்போது உள்ள கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள பழுதடைந்த மரச்சாளரங்கள், தகரத்தால் ஆன மேற்கூரைகள், மரக்கதவுகள் மற்றும் கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்பட்ட இரும்பு கம்பிகள் போன்ற பொருட்களுக்கு உண்டான தற்போதைய விலையின் அடிப்படையில் கட்டிடத்தின் மதிப்பு தோராயமாக ரூ. 35,000/- ஆகும்.

2) நிலைக்குழு (பொது சுகாதாரம்) தீர்மானத்தின்படி தற்காலிகமாக நகர்புற ஆரம்ப சுகாதார மையத்தின் அருகாமையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி துவக்க பள்ளியில் உள்ள வகுப்பறைகளில் தொடர்ந்து இயங்க வழிவகை செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் இடிக்கப்படவிருக்கும் கட்டிடம் அமையப்பெற்ற இடத்தில் புதிதாக தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட நகர்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டிடம்

கட்டுவதற்கு ரூ. 2.30 கோடி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி கோப்பு கட்டிடத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் 11, வார்டு 144ல் மதுரவாயல் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக நகர்ப்புற சுகாதார மையக் கட்டிடம் கட்டுவதற்கு, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.192/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.11.ந.க.எண்.இ1/VKM/276/2025 ADMIN(ENGINEERING)-E3

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 370/2025 **பொருள் எண்.42**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-11, கோட்டம்-151ல் -பழைய சிதலமடைந்த பயன்பாடற்ற பழைய பஞ்சாயத்து அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, பகுதி-34, கோட்டம்-151ல் பழைய சிதலமடைந்த பயன்பாடற்ற கீழ்கண்ட பழைய பஞ்சாயத்து அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்து அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

வ. எண்.	வார்டு எண்.	இடம்	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	கட்டிடத்தின் பரப்பளவு	இடத்தின் பரப்பளவு	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	இடத்தில் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது.
1	151	பஜனை கோயில் தெரு (அங்கன்வாடி மையம்)	1982	103.85 ச.மீ	111.16 ச.மீ	ரூ. 57,664.74/-	இல்லை	பல்நோக்கு கட்டிடம்

எனவே, மண்டலம்-11, பகுதி-34, கோட்டம்-151ல் பழைய சிதலமடைந்த பயன்பாடற்ற பழைய பஞ்சாயத்து அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.189/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.11.ந.க.எண்.இ1/486119/2025

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 371/2025 **பொருள் எண்.43**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-11, கோட்டம்-151ல், பழைய சிதலமடைந்த பயன்பாடற்ற பழைய பஞ்சாயத்து நியாய விலை கடை கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, பகுதி-34, கோட்டம்-151ல் பழைய சிதலமடைந்த பயன்பாடற்ற கீழ்கண்ட பழைய பஞ்சாயத்து நியாய விலை கடை கட்டிடத்தை இடித்து அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

வ.எண்.	வார்டு எண்.	இடம்	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	கட்டிடத்தின் பரப்பளவு	இடத்தின் பரப்பளவு	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	இடத்தில் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது.
1	151	பஜனை கோயில்தெரு (நியாய விலை கடை)	2010	37.13 ச.மீ	37.13ச.மீ	ரூ. 1,75,389/-	இல்லை	நியாய விலை கடை

எனவே, மண்டலம்-11, பகுதி-34, கோட்டம்-151ல் பழைய சிதலமடைந்த பயன்பாடற்ற கீழ்கண்ட பழைய பஞ்சாயத்து நியாய விலை கடை கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.194/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.11.ந.க.எண்.இ / VKM / 229 / 2025

ஆணையர் அவர்களின் 04.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 372 / 2025 **பொருள் எண்.44**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 11, வார்டு- 153, சக்தி நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள வார்டு அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, பகுதி-34, வார்டு-153ல் சக்தி நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள வார்டு அலுவலக கட்டிடம் 1995 ஆம் ஆண்டு பேரூராட்சியால் கட்டப்பட்டதாக தெரிய வருகிறது. தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள அக்கட்டிடத்தை இடித்து அகற்ற கோரி மாமன்ற உறுப்பினர் வார்டு 153 அவர்கள் '18.01.2025 நாளிட்ட கடிதம் வழங்கியுள்ளார், அதன் அடிப்படையில் மன்றத்தின் அனுமதி/ பரிந்துரை பெற 153 வது மாமன்ற உறுப்பினர் அவர்களின் 18.01.2025 நாளிட்ட கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேலும் இடித்து அகற்றப்பட வேண்டிய பழுதடைந்த நிலையில் உள்ள வார்டு அலுவலக கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

வ.எண்	விவரம்	விவரம்
1	வார்டு எண்.	153
2	இடம்	சக்தி நகர் பிரதான சாலை, போரூர்
3	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1995ஆம் ஆண்டு
4	கட்டிடத்தின் பரப்பளவு	233.20.ச.மீ
5	கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு	280.00.ச.மீ
6	தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு	ரூ.155961.43
7	தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	பழுதடைந்த நிலையில் உள்ளது
8	கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது	புதிதாக வார்டு அலுவலக கட்டிடம் கட்டப்பட உள்ளது.
9	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பழுதடைந்த நிலையில் உள்ளது
10	வார்டு குழு தீர்மான எண்.	தீர்மான எண் : 984/2025 நாள். 18.03.2025

எனவே, மண்டலம் 11, பகுதி-34, வார்டு-153ல் சக்தி நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள வார்டு அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.168/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.12.ந.க.எண்.இ1/1799-03/2025

ஆணையர் அவர்களின் 08.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 373/2025 **பொருள் எண்.45**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 12, வார்டு -158 ல் கிழக்கு குளக்கரை தெருவில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, பகுதி-35, வார்டு-158 கிழக்கு குளக்கரை தெருவில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக் கழிப்பிடக் கட்டிடம் 2006 ஆம் ஆண்டு நந்தம்பாக்கம் பேரூராட்சியால் கட்டப்பட்டதாக தெரிய வருகிறது. தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள அக்கட்டிடத்தை இடித்து அகற்ற கோரி மாமன்ற உறுப்பினர் வார்டு-158 அவர்கள் 24.03.2025 நாளிட்ட கடிதம் வழங்கியுள்ளார், அதன் அடிப்படையில் மன்றத்தின் அனுமதி பெற 158 வது மாமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேலும் இடித்து அகற்றப்பட வேண்டிய பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

வார்டு எண்.	158
இடம்	கிழக்கு குளக்கரை தெரு
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	2006 ஆம் ஆண்டு கட்டப்பட்டது
கட்டிடத்தின் பரப்பளவு	57.35 ச.மீ
கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு	160.56 ச.மீ
தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு	ரூ.51194.77
தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	பழுதடைந்த நிலையில் உள்ளது
கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது	புதிதாக பொதுக்கழிப்பிடம் கட்டப்பட உள்ளது.
கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பழுதடைந்த நிலையில் உள்ளது

எனவே, மண்டலம்-12, பகுதி-35, வார்டு-158 கிழக்கு குளக்கரை தெருவில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

> "23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.173/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.12.ந.க.எண்.இ1/1799-02/2025

ஆணையர் அவர்களின் 08.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 374/2025 **பொருள் எண்.46**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 12, வார்டு -157 ல் பெரிய காலனியில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, பகுதி-35, வார்டு-157ல் பெரிய காலனியில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடக் கட்டிடம் 2002 ஆம் ஆண்டு மணப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியால் கட்டப்பட்டதாக தெரிய வருகிறது. தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள அக்கட்டிடத்தை இடித்து அகற்ற கோரி மாமன்ற உறுப்பினர் வார்டு- 157 அவர்கள் 24.03.2025 நாளிட்ட கடிதம் வழங்கியுள்ளார், அதன் அடிப்படையில் மன்றத்தின் அனுமதி பெற 157 வது மாமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேலும் இடித்து அகற்றப்பட வேண்டிய பழுதடைந்த நிலையில் உள்ள பெரிய காலனியில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

வார்டு எண்.	157
இடம்	பெரிய காலனி
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	2002 ஆம் ஆண்டு கட்டப்பட்டது
கட்டிடத்தின் பரப்பளவு	105.87 ச.மீ
கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு	126.35 ச.மீ
தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு	ரூ.65314.02
தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	பழுதடைந்த நிலையில் உள்ளது
கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது	புதிதாக பொதுக்கழிப்பிடம் கட்டப்பட உள்ளது.
கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பழுதடைந்த நிலையில் உள்ளது

எனவே, மண்டலம்-12, பகுதி-35, வார்டு-157 ல் பெரிய காலனியில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.174/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.12.நக.எண்.இ1/1799-01/2025

ஆணையர் அவர்களின் 08.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 375/2025 **பொருள் எண்.47**

பெருநகர சென்னை மாநகராட்சி -மண்டலம்-12, வார்டு- 157, புரட்சி தலைவி நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 12, பகுதி-35 வார்டு -157 ல் புரட்சி தலைவி நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக் கழிப்பிடக் கட்டிடம் 2006ஆம் ஆண்டு மணப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியால் கட்டப்பட்டதாக தெரிய வருகிறது. தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள அக்கட்டிடத்தை இடித்து அகற்ற கோரி மாமன்ற உறுப்பினர் வார்டு-157 அவர்கள் 24.03.2025 நாளிட்ட கடிதம் வழங்கியுள்ளார், அதன் அடிப்படையில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெற 157 வது மாமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேலும் இடித்து அகற்றப்பட வேண்டிய பழுதடைந்த நிலையில் உள்ள புரட்சி தலைவி நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

வார்டு எண்.	157
இடம்	புரட்சி தலைவி நகர் பிரதான சாலை
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	2006 ஆம் ஆண்டு கட்டப்பட்டது
கட்டிடத்தின் பரப்பளவு	20 ச.மீ
கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு	20 ச.மீ
தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு	ரூ.30114.57
தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	பழுதடைந்த நிலையில் உள்ளது
கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது	புதிதாக பொதுக்கழிப்பிடம் கட்டப்பட உள்ளது.
கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பழுதடைந்த நிலையில் உள்ளது

எனவே, மண்டலம் 12, பகுதி-35 வார்டு -157 ல் புரட்சி தலைவி நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.175/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.12.நு.க.எண்.இ1/1208-30/2025

ஆணையர் அவர்களின் 04.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 376/2025 **பொருள் எண்.48**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-12, வார்டு-158, ஆற்காட்பேட் தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள நந்தம்பாக்கம் பேரூராட்சி காலத்தில் கட்டப்பட்ட கிராம நிர்வாக அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்றஅனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, வார்டு-158, ஆற்காட்பேட் தெருவில் அமைந்துள்ள கிராம நிர்வாக அலுவலக கட்டிடம் 2003 ஆம் ஆண்டு நந்தம்பாக்கம் பேரூராட்சியால் கட்டப்பட்டதாக தெரியவருகிறது. தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள அக்கட்டிடத்தை இடித்து அகற்றக் கோரி மாமன்ற உறுப்பினர் வார்டு- 158 அவர்கள் 03.03.2025 நாளிட்டு, கடிதம் வழங்கியுள்ளார், அதன்அடிப்படையில் 12/03/2025 அன்று நடைபெற்ற 12வதுமண்டல வார்டு குழுவில் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி/பரிந்துரை பெற 12வது மண்டல வார்டு குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் இடித்து அகற்றப்பட வேண்டிய பழுதடைந்த நிலையில் உள்ள கிராம நிர்வாகஅலுவலக கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

வ.எண்	விவரம்	விவரம்
1	வார்டு எண்.	158
2	இடம்	ஆற்காட்பேட் தெரு
3	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	2003ஆம் ஆண்டு
4	கட்டிடத்தின் பரப்பளவு	40ச.மீ
5	கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்தபரப்பளவு	64 ச.மீ
6	தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு	ரூ.40078.73
7	தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	பழுதடைந்த நிலையில் உள்ளது.
8	கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது	புதிதாக பல்நோக்குமைய கட்டிடம் கட்டப்பட உள்ளது.
9	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பழுதடைந்த நிலையில் உள்ளது
10	வார்டு குழு தீர்மான எண்.	தீர்மான எண் : 984 நாள்.12.03.2025

எனவே, மண்டலம் 12, வார்டு-158 பகுதி-35, வார்டு-158 ஆற்காட்பேட் தெருவில் அமைந்துள்ள கிராம நிர்வாக அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.167/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.12.ந.க.எண்.இ1/1799-04/2025

ஆணையர் அவர்களின் 08.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 377/2025 **பொருள் எண்.49**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 12, வார்டு- 159 அண்ணா தெருவில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, பகுதி-35, வார்டு- 159 அண்ணா தெருவில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடக் கட்டிடம் 2001 ஆம் ஆண்டு மணப்பாக்கம் பேரூராட்சியால் கட்டப்பட்டதாக தெரியவருகிறது. தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள அக்கட்டிடத்தை இடித்து அகற்ற கோரி மாமன்ற உறுப்பினர் வார்டு- 159 அவர்கள் 24.03.2025 நாளிட்ட கடிதம் வழங்கியுள்ளார், அதன் அடிப்படையில் மன்றத்தின் அனுமதி பெற 159 வது மாமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேலும், இடித்து அகற்றப்பட வேண்டிய பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

வார்டு எண்.	159
இடம்	அண்ணா தெரு
கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	2001 ஆம் ஆண்டு கட்டப்பட்டது
கட்டிடத்தின் பரப்பளவு	36 ச.மீ
கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு	36 ச.மீ
தற்போதைய கட்டிடத்தின்புத்தக மதிப்பு	ரூ.34493.97
தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	பழுதடைந்த நிலையில் உள்ளது
கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது	புதிதாக பொதுக்கழிப்பிடம் கட்டப்பட உள்ளது.
கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பழுதடைந்த நிலையில் உள்ளது

எனவே, மண்டலம்-12, பகுதி-35, வார்டு-159 அண்ணா தெருவில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.176/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.13.ந.க.எண்.சி1/1879/2025

ஆணையர் அவர்களின் 04.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 378/2025 **பொருள் எண்.50**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -13, கோட்டம்- 174க்குட்பட்ட அருணாசலம்புரம் பிரதான சாலை, வசந்தா பிரஸ் சாலை, ஆதி ஆந்திரா குடியிருப்பு, பஜனை கோயில் தெரு, ஊரூர் குப்பம் -1 ஆகிய இடங்களில் அமைந்துள்ள பழுதடைந்த பொது கழிப்பிடங்களை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-38, கோட்டம்-174ல் அருணாசலம்புரம் பிரதான சாலை, வசந்தா பிரஸ் சாலை, ஆதி ஆந்திரா குடியிருப்பு, பஜனை கோயில் தெரு, ஊரூர் குப்பம்-1 இடங்களில் அமைந்துள்ள பொதுகழிப்பிடங்கள் பழுதடைந்து இடியும் தருவாயில் உள்ளது. இதில் இரவு நேரத்தில் சமூக விரோத செயல்கள் நடைபெறுகிறது என்பதால் பழுதடைந்த பொதுகழிப்பிடங்களை மண்டலம் 13, வார்டு குழு பின்னேற்பு தீர்மானத்திற்குட்பட்டு இடித்து அகற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது

பொதுகழிப்பிடங்களின் பட்டியல்

வ. எண்	வார்டு எண்	இடம்	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	கட்டிடத்தின் பரப்பளவு	இடத்தின் பரப்பளவு	தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா
1	174	அருணாசல புரம் பிரதான சாலை பொது கழிப்பிடம்	1979	27 Sq.mt	72 Sq.mt	ரூ. 6039.78	இல்லை
2	174	வசந்தா பிரஸ் சாலை (கபாலிதோட்டம்) பொது கழிப்பிடம்	1977	87 Sq.mt	87 Sq.mt	ரூ. 5476.33	இல்லை
3	174	ஆதி ஆந்திரா குடியிருப்பு (கக்கன் காலனி) பொது கழிப்பிடம்	1979	98.70 Sq.mt	98.70 Sq.mt	ரூ. 10753.43	இல்லை
4	174	பஜனை கோயில் தெரு பொது கழிப்பிடம்	1981	30 Sq.mt	30 Sq.mt	ரூ. 8685.97	இல்லை
5	174	ஊரூர் குப்பம் -1 பொது கழிப்பிடம்		90.16 Sq.mt	90.16 Sq.mt	ரூ.279903.00	இல்லை
6	174	ஊரூர் குப்பம் -2 பொது கழிப்பிடம்	2010	70.56 Sq.mt	70.56 Sq.mt	ரூ- 566180.23	இல்லை

எனவே, மண்டலம் 13 பகுதி- 38, கோட்டம் – 174 ல் அருணாசலம்புரம் பிரதான சாலை, வசந்தா பிரஸ் சாலை, ஆதி ஆந்திரா குடியிருப்பு, பஜனை கோயில் தெரு, ஊரூர் குப்பம்-1 ஆகிய இடங்களில் அமைந்துள்ள பொதுகழிப்பிடங்கள் பழுதடைந்து இடியும் தருவாயில் உள்ளதால் இக்கட்டிடங்களை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.164/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.14.ந.க.எண்.இ1 / PRGD / 250 / 2025

ஆணையர் அவர்களின் 04.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 379 / 2025 **பொருள் எண்.51**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 14, கோட்டம் – 183, பாலவாக்கம் குப்பம் மீனவர் பல்நோக்கு மைய கட்டிடம் பழுதடைந்த மற்றும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-14, பகுதி-41, கோட்டம்-183, பாலவாக்கம் குப்பம் மீனவர் பல்நோக்கு மைய கட்டிடம் பழுதடைந்த மற்றும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இக்கட்டிடம் முந்தைய ஊராட்சியால் 1997ம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது இந்த கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

வ. எண்	வார்டு – 183	மண்டலம் – 14
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம் – 14 ,பகுதி – 41, கோட்டம் – 183 பாலவாக்கம் குப்பம் மீனவர் பல்நோக்கு மைய கட்டிடம் பழுதடைந்த மற்றும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள கட்டிடம்.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது	முந்தைய பாலவாக்கம் ஊராட்சியால் 1997ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது.
3	அந்த கட்டிடங்களின் பரப்பளவு எவ்வளவு?	பாலவாக்கம் குப்பம் மீனவர் பல்நோக்கு மைய கட்டிடத்தின் மொத்தப் பரப்பு = 8.80 x 5.70 = 50.16 ச.அடி.
4	அந்த கட்டிடங்கள் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு?	8.80 x 5.70 = 50.16 ச.அடி.
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.75721/-
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	இல்லை
7	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	புதிய பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	மிகவும் பழுதடைந்த மற்றும் பயன்படுத்த இயலாத நிலையில்உள்ளதால்
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்?	செயற்பொறியாளர் மற்றும் மண்டல அலுவலர் / ம - 14

மேற்குறிப்பிட்ட பாலவாக்கம் குப்பம் மீனவர் பல்நோக்கு மைய கட்டிடம் பழுதடைந்த மற்றும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அவ்விடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல்-14ன் மூலம் புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் -14, பகுதி-41, கோட்டம்-183, பாலவாக்கம் குப்பம் மீனவர் பல்நோக்கு மைய கட்டிடம் பழுதடைந்த மற்றும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்கு, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.165/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.14.ந.க.எண்.இ1/0504-1/2025

ஆணையர் அவர்களின் 28.03.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 380/2025 **பொருள் எண்.52**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-14, பகுதி-41, கோட்டம்-184, வீரபாண்டியன் கட்டபொம்மன் சாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள நுண் உரம் தயாரிக்கும் கட்டிடத்தை இடித்து அகற்ற-அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-14, பகுதி-41, கோட்டம்-184, வீரப்பாண்டிய கட்டப்பொம்மன் தெருவில் 1045.26 ச.மீ/11246.35 சதுர அடி நிலப்பரப்பில் 530.918 சமீ/5712.59 சதுர அடி பரப்பளவில் நுண் உரம் தயாரிக்கும் (MCC) உரக்கிடங்கு இயங்கி வருகிறது. இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேலும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் தொடர்ந்து துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் உடல் பாதிப்பு ஏற்படுவதாகவும் புகார் தெரிவித்து வருகின்றனர். மேலும் வார்டு-184க்குட்பட்ட பகுதியில் சுமார் 80,000க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வரும் நிலையில் அப்பகுதியில் சமுதாய நலக்கூடம் (Community hall) இல்லாத சூழ்நிலை உள்ளது. அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும்பாலானோர் வறுமை கோட்டின் விளிம்பு நிலையில் வசித்து வருகின்றனர். எனவே, பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு போதுமான இட வசதி இல்லாததால் மேற்படி உரக்கிடங்கை (MCC) இடித்துவிட்டு அந்த இடத்தில் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு மண்டலம்-14, வார்டு குழு தீர்மான எண்.132, நாள்.15.07.2024ல் அனுமதி பெறப்பட்டது.

அதனால் பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையான சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு போதுமான இடவசதி இல்லாததாலும் மேலும் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்களின் ஆட்சேபணை இருப்பதாலும் மேற்கண்ட MCCயை இடிக்கவும் மேலும் அவ்விடத்தில் சமுதாய நலக்கூடம் கட்டவும் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

எனவே, மண்டலம்-14, பகுதி-41, வார்டு-184ல் வீரபாண்டியன் கட்டபொம்மன் சாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள நுண் உரம் தயாரிக்கும் கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.058/2025, நாள்.23.04.2025-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், மேற்கண்ட உரம் தயாரிக்கும் கட்டிடத்தை இடித்ததற்கு பிறகு அந்த இடத்தில் பொது சுகாதாரத்துறை சார்ந்த கட்டிடம் கட்ட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.14.நு.க.எண்.இ1 /2451/ 2025

ஆணையர் அவர்களின் 10.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 381/2025 **பொருள் எண்.53**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம் – 14, கோட்டம் – 190, பள்ளிக்கரணை கண்ணபிரான் கோவில் தெருவில் உள்ள பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பல்நோக்கு மைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்- 14, பகுதி - 43, கோட்டம் - 190, கண்ணபிரான் கோவில் தெருவில் உள்ள பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பல்நோக்கு மைய கட்டிடம் உள்ளது. இக்கட்டிடம் முந்தைய ஊராட்சியால் 1998ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது இந்த கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

வ. எண்	வார்டு - 190	மண்டலம் - 14
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம் - 14 ,பகுதி - 43, கோட்டம் - 190, கண்ணபிரான் கோவில் தெருவில் உள்ள பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பல்நோக்கு மைய கட்டிடம்
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது	முந்தைய பள்ளிக்கரணை ஊராட்சியால் 1998ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது.
3	அந்த கட்டிடங்களின் பரப்பளவு எவ்வளவு?	கண்ணபிரான் கோவில் தெருவில் உள்ள பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பல்நோக்கு மைய கட்டிடத்தின் மொத்தப் பரப்பு = 6.10 x 5.65 = 34.46ச.அடி
4	அந்த கட்டிடங்கள் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு?	6.10 x 5.65 = 34.46 ச.அடி
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.27070/-
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	இல்லை
7	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	புதிய பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	மிகவும் பழுதடைந்த மற்றும் பயன்படுத்த இயலாத நிலையில்உள்ளதால்

9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்?	செயற்பொறியாளர் மற்றும் மண்டல அலுவலர் / ம - 14
10	வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள்	வார்டு குழு தீர்மானம் எண். நாள்.

மேற்குறிப்பிட்ட கண்ணபிரான் கோவில் தெருவில் உள்ள பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பல்நோக்கு மைய கட்டிடம் உள்ளதால் அவ்விடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல்-14 மூலம் புதியதாக பல்நோக்கு கட்டிம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-14, பகுதி – 43, கோட்டம் – 190, கண்ணபிரான் கோவில் தெருவில் உள்ள பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பல்நோக்கு மைய கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்கு, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.181/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.14.நக.எண்.இ1/PRGD/249/2025

ஆணையர் அவர்களின் 04.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 382/2025 **பொருள் எண்.54**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 14 , பகுதி -41, 42 மற்றும் 43, கோட்டம்-181, 185, 188, 190 மற்றும் 191ல், 13 எண்ணிக்கையிலான பொது கழிப்பிடம் பழுதடைந்த மற்றும் பொது மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி , மண்டலம் – *14* , பகுதி-*41, 42* மற்றும் *43*, கோட்டம்-*181, 185, 188, 190* மற்றும் *191*ல், *13* எண்ணிக்கையிலான பொது கழிப்பிடங்கள் பழுதடைந்த மற்றும் பொது மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இக்கட்டிடங்கள் முந்தைய ஊராட்சியால் *1999*ம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது இந்த கட்டிடங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

வ. எண்	வார்டு - *183*	மண்டலம் - *14*
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம் – *14* , பகுதி–*41, 42* மற்றும் *43*, கோட்டம்-*181, 185, 188, 190* மற்றும் *191*ல், *13* எண்ணிக்கையிலான பொது கழிப்பிடம் பழுதடைந்த மற்றும் பொது மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள கட்டிடம்
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது	முந்தைய ஊராட்சியால் *1999*ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது.
3	அந்த கட்டிடங்களின் பரப்பளவு எவ்வளவு?	பொது கழிப்பிடங்கள்
4	அந்த கட்டிடங்கள் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு?	அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ளது
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ளது
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	இல்லை
7	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ளது

8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	மிகவும் பழுதடைந்த மற்றும் பயன்படுத்த இயலாத நிலையில்உள்ளதால்
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்?	செயற்பொறியாளர் மற்றும் மண்டல அலுவலர் / ம -14
10	வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள்	வார்டு குழு தீர்மானம் எண். 158 நாள்.12,03,2025

எனவே, மண்டலம் -14, பகுதி-41, 42 மற்றும் 43, கோட்டம்-181, 185, 188, 190 மற்றும் 191ல், 13 எண்ணிக்கையிலான பொது கழிப்பிடங்கள் பழுதடைந்த மற்றும் பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் இக்கட்டிடங்களை இடித்து அகற்றுவதற்கு, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.166/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.15.நக.எண்.பி1/1677/2025

ஆணையர் அவர்களின் 10.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 383/2025 **பொருள் எண்.55**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 15 - பகுதி – 44 & 45 - கோட்டம் – 192, 193 & 200ல் பழுதடைந்துள்ள 3 எண்ணிக்கை அங்கன்வாடி கட்டிடம் மற்றும் கோட்டம்-192ல் 2 கழிப்பிட கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15, கோட்டம்-192ல் கபாலீஸ்வரர் நகர் பிரதான சாலையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி வளாகம், கோட்டம்-193, ராஜீவ்காந்தி சாலை வார்டு அலுவலக வளாகம் மற்றும் கோட்டம்-200 பாண்டிச்சேரி பாட்டை சாலை ஆகிய இடங்களில் உள்ள 3 பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடங்களை இடித்து அவ்விடத்தில் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணியினை மேற்கொள்ளவும், மற்றும் கோட்டம்-192ல் கபாலீஸ்வரர் நகர் பிரதான சாலையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி வளாகத்தில் பழுதடைந்த 2 கழிப்பிடங்களை (ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பிடம்) இடித்து அவ்விடத்தில் புதிய 2 கழிப்பிட கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி பெற மண்டலம்-15ன் வார்டு குழு கூட்டத்தில் தீர்மான எண். 80, 99, 100 & 101, நாள்.14.02.2025 மற்றும் தீர்மான எண்.169, நாள்.12.03.2025ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்களின் விவரம் பின்வருமாறு:-

வ.எண்	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	கட்டிடத்தின் பரப்பளவுகளம் வாரியாக எவ்வளவு?	கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு?	கட்டிடத்தின் புத்தக மதிப்பு?	கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	கட்டிடம் இடிப்பதற்கு அவசியம் என்ன?	கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தவர் யார்?
1	வார்டு 192, கபாலீஸ்வரர் நகர் பிரதான சாலை சென்னை நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள அங்கன்வாடி கட்டிடம்	முந்தைய ஊராட்சியால் கட்டப்பட்டது	15 ச.மீ	15 ச.மீ	ரூ.168,135	இல்லை	புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டப்பட உள்ளது	பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ளது	192வது வார்டு மாமன்ற உறுப்பினர்

2	வார்டு 193 ராஜீவ்காந்தி சாலையில் வார்டு அலுவலக வளாகத்தில் உள்ள அங்கன்வாடி கட்டிடம்	2006	84.75 ச.மீ	3120 ச.மீ	ரூ.1,23,628.24	ஆம்	ரூ.30.00 இலட்சம் மதிப்பில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டப்பட உள்ளது (under MLA 2024-25 fund)	பழுதடைந்த நிலையில் உள்ளது	193வது வார்டு மாமன்ற உறுப்பினர்
3	வார்டு 200, பாண்டிச்சேரி பாட்டை சாலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடம்	2006	36.55 ச.மீ	197.60 ச.மீ	ஏதுமில்லை	ஆம்	புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டப்பட உள்ளது	பழுதடைந்த நிலையில் உள்ளது	200வது வார்டு மாமன்ற உறுப்பினர்
4	வார்டு 192, கபாலீஸ்வரர் நகர் பிரதான சாலை சென்னை நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள ஆண்கள் கழிப்பிடம்	முந்தைய வார்ட் சியால் கட்டப்பட்டது	50 ச.மீ	50 ச.மீ	ஏதுமில்லை	இல்லை	ரூ.20.00 இலட்சம் மதிப்பில் ஆண்கள் கழிப்பிடம் கட்டப்பட உள்ளது (Under Ward councilor fund 2024-25)	பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ளது	192வது வார்டு மாமன்ற உறுப்பினர்
5	வார்டு 192, கபாலீஸ்வரர் நகர் பிரதான சாலை சென்னை நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள பெண்கள் கழிப்பிடம்	முந்தைய வார்ட் சியால் கட்டப்பட்டது	50 ச.மீ	50 ச.மீ	ஏதுமில்லை	இல்லை	ரூ.20.10 இலட்சம் மதிப்பில் பெண்கள் கழிப்பிடம் கட்டப்பட உள்ளது (Under Ward councilor fund 2024-25)	பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ளது	192வது வார்டு மாமன்ற உறுப்பினர்

மேற்கண்ட விவரங்களின்படி மண்டலம்-15, கோட்டம்-192, கபாலீஸ்வரர் நகர் பிரதான சாலையில் சென்னை நடுநிலைப்பள்ளி வளாகத்தில் 15 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடம், கோட்டம்-193, ராஜீவ்காந்தி சாலையில் வார்டு அலுவலக வளாகத்தில் உள்ள 84.75 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடம் மற்றும் கோட்டம் 200 பாண்டிச்சேரி பாட்டை சாலையில் 36.55 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடம் ஆகிய 3 அங்கன்வாடி கட்டிடங்களும், கோட்டம்-192 கபாலீஸ்வரர் நகர் பிரதான சாலை சென்னை நடுநிலைப்பள்ளி வளாகத்தில் 50 சதுர மீட்டர்

பரப்பளவு கொண்ட ஆண்கள் கழிப்பிடம், *50* சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட பெண்கள் கழிப்பிடம் ஆகிய *2* பழுதடைந்த கழிப்பிட கட்டிடங்களும் ஆக மொத்தம் *5* கட்டிடங்களை இடித்து அகற்ற, நிலைக்குழு *(*கல்வி, பூங்கா *(*ம*)* விளையாட்டு திடல்*)* மற்றும் நிலைக்குழு *(*பணிகள்*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"17.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*கல்வி, பூங்கா *(*ம*)* விளையாட்டு திடல்*)* கூட்டத்தில் தீர்மான எண்.44/2025, நாள்.17.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு *(*கல்வி, பூங்கா *(*ம*)* விளையாட்டு திடல்*)* பரிந்துரை செய்து நிலைக்குழு *(*பணிகள்*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*பணிகள்*)* கூட்டத்தின் தீர்மான எண்.203/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு *(*பணிகள்*)* பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

மஅ.15.நக.எண்:1522/2025

ஆணையர் அவர்களின் 09.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 384/2025 **பொருள் எண்.56**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 15, வார்டு – 199ல் ராஜீவ் காந்தி சாலையில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய 15வது மண்டல அலுவலக கட்டிடம் கட்டப்பட உள்ளதால் பழைய 15வது மண்டல அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15 அலுவலகமானது முந்தைய சோழிங்கநல்லூர் ஊராட்சியால் 2001-ம் ஆண்டு கட்டப்பட்ட கட்டிடம் ஆகும்.

சென்னை மாநகராட்சி, பெருநகர சென்னை மாநகராட்சியாக விரிவாக்கம் செய்யப்பட்ட போது 2011-ம் ஆண்டு மண்டலம்-15ன் நிர்வாகப்பிரிவு, பொறியியல் பிரிவு, பகுதி கணக்கு அலுவலகம் மற்றும் இதர பிரிவுகள் முந்தைய சோழிங்கநல்லூர் ஊராட்சி அலுவலக கட்டிடத்திலும் மற்றும் வருவாய் பிரிவு, மின்சார பிரிவு மற்றும் சுகாதாரப் பிரிவு அருகில் உள்ள சமுதாய நலக்கூடத்திலும் இயங்கி வருகிறது.

தற்போது சமுதாய நலக்கூடம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக உபயோகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாலும், மண்டலம்-15ல் உள்ள அனைத்து பிரிவுகளுக்கும் போதுமான இடவசதி இல்லாத காரணத்தினாலும் முந்தைய சோழிங்கநல்லூர் ஊராட்சியால் கட்டப்பட்ட 15வது மண்டல அலுவலகத்தை இடித்துவிட்டு அவ்விடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய மண்டல அலுவலக கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டு ரூ. 9,99,00,000.00க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 21.03.2005 அன்று நடைபெற்ற மன்றக்கூட்டத்தில் தீர்மான எண்.323/2025, நாள்-21.03.2025ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, கட்டிடத் துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

மேலும் பழைய 15வது மண்டல அலுவலக கட்டிடத்தினை இடித்து அகற்ற நிலைக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற 12.03.2025 அன்று நடைபெற்ற மண்டலம்-15ன் வார்டு குழு கூட்டத்தில் தீர்மானம் எண்.168 ஆக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	கட்டிடத்தின் விவரம்	குறிப்பு
1	கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	2001-ம் ஆண்டில் சோழிங்கநல்லூர் ஊராட்சியால் கட்டப்பட்டுள்ளது.
2	கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு?	தரை தளம் - 386.14 சதுர மீட்டர் முதல் தளம் - 351.33 சதுர மீட்டர்
3	கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு?	2430.00 சதுர மீட்டர்
4	கட்டிடத்தின் புத்தக மதிப்பு ?	ரூ.16,21,262.00
5	கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	ஆம், பயன்பாட்டில் உள்ளது

6	கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	நவீன வசதிகளுடன் கூடிய புதிய 15வது மண்டல அலுவலக கட்டிடம் கட்டப்பட உள்ளது.
7	கட்டிடம் இடிப்பதற்கு அவசியம் என்ன?	போதிய இட வசதி இன்மையாலும் மற்றும் வருவாய் பிரிவு, மின்சார பிரிவு மற்றும் சுகாதாரப் பிரிவு அருகில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் இயங்கி வருவதால் சமுதாய நலக்கூடம் பொது மக்களின் பயன்பாட்டிற்காக உபயோகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாலும்
8	கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தவர் யார்?	மண்டல அலுவலர்-15

எனவே, மண்டலம்-15, பகுதி-44, வார்டு-199, ராஜீவ் காந்தி சாலையில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய 15வது மண்டல அலுவலக கட்டிடம் கட்டப்பட உள்ளதால் பழைய 15 வது மண்டல அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.190/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தி.க.மே.து.ந.க.எண்.அ7 / 1845 / 2025

ஆணையர் அவர்களின் 08.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 385 / 2025 **பொருள் எண்.57**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத் துறை - பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டுமானம் மற்றும் இடிப்பாட்டு கழிவுகளை திறனுடன் கையாள்வதற்காக - சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வரைவு வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டுள்ளது - ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களில் அறிவிக்கை வெளியிடப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி வலைதளத்தில் சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வரைவு வழிகாட்டுதல்கள் 2025 பதிவேற்றம் செய்யப்பட்டது - இது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளது - சுத்தமான கட்டுமானத்திற்கான வழிகாட்டுதல்கள் 2025க்கு மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியானது சுமார் *426* ச.கி.மீ பரப்பளவில் *15* மண்டலங்களில் *200* வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்த பகுதிகளில் நாள்தோறும் சுமார் *6150* மெ.டன் அளவிற்கு திடக்கழிவுகள் உருவாக்கம் செய்யப்படுகிறது. இது தவிர்த்து தினசரி சுமார் *800* மெ.டன் அளவிற்கு கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் உருவாகின்றன. மேற்கண்ட, கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகளை கட்டுமான தளங்களில் பெரும்பாலும் முறையற்ற முறைகளில் பராமரிப்பது வாகனங்களில் கொண்டு செல்வது போன்ற பணிகளில் கட்டுமான நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வழிகாட்டுதல்களை செயல்படுத்துவதற்கு முன்னர் பொதுமக்களின் ஆலோசனைகள் பெறுவதற்காக ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களில் கடந்த *26.02.2025* அன்று அறிவிக்கையும், பெருநகர சென்னை மாநகராட்சி வலைதளத்தில் சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வரைவு வழிகாட்டுதல்கள் *2025* பதிவேற்றம் செய்யப்பட்டது. 30 நாட்கள் முடிவுற்ற பிறகு பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகள் பெறப்பட்டன.

பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமான வழிகாட்டுதலில் சேர்க்கப்பட்டுள்ளது.

சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான

(கட்டணங்கள் - அபராதங்கள்) மற்ற மாநிலங்களுடனான ஒப்பீடு

சுத்தமான மற்றம் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வழிகாட்டுதல்கள் டெல்லி, மும்பை போன்ற பெருநகரங்கள் பின்பற்றி வருகின்றன. அங்கு விதிமீறல்களுக்கான விதிக்கப்படும் தொகை, கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரம்	விதிமீறல்களுக்கான அபராதம்
டெல்லி	• ரூபாய் *5,00,000/-* 20,000 சதுர மீட்டருக்கும் அதிகமான பரப்பளவு கொண்ட கட்டிடத்திற்கு. • ரூபாய் *50,000/-* 500 சதுர மீட்டர் முதல் 20,000 சதுர மீட்டர் வரையிலான பரப்பளவு கொண்ட கட்டுமானத்திற்கு. • ரூபாய் *30,000/-* 300 சதுர மீட்டர் முதல் 500 சதுர மீட்டர் வரையிலான பரப்பளவு கொண்ட கட்டுமானத்திற்கு. • டெல்லியில், சுற்றுப்புற காற்றின் தரம் மோசமடைவதைக் கருத்தில் கொண்டு, அக்டோபர் 15 முதல் ஜனவரி 31 வரை விதிமீறல்களுக்கான அபராதங்களின் அளவு இரட்டிப்பாகும்.
மும்பை	• மும்பை மாநகராட்சியின் விதிகளை மீறுவேருக்கு ரூ.*5,00,000* முதல் ரூ.*20,00,000* வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழில் தயாரிக்கப்பட்டுள்ள *"*சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வழிகாட்டுதல்கள் *2025"* கீழ்கண்டவாறு:-

<u>பெருநகர சென்னை மாநகராட்சிக்கான சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வரைவு வழிகாட்டுதல்கள்</u>

சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வரைவு வழிகாட்டுதல்கள் மூலம் சென்னையில் நடைபெறும் அனைத்து கட்டிட கட்டுமானங்கள், ரெடி-மிக்ஸ் கான்கிரீட் *(RMC)* ஆலைகள் மற்றும் பிற கட்டுமானப் பணிகளால் எற்படும் சுற்றுச்சூழல் மாசு அடைதல் மற்றும் பிற இதர பாதிப்புகளில் இருந்து தவிர்க்க முடியும். மேலும் இந்த வழிகாட்டுதல்கள் மூலம், காற்று மாசுபாட்டைக் குறைத்தல், பொது சுகாதாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் நிலையான நகர்ப்புற வளர்ச்சியை உறுதி செய்ய முடியும். காற்று மாசுப்பட்டை ஏற்படுத்தும் கட்டுமான நடவடிக்கைகள் மற்றும் காற்று மாசுப்பாட்டை எற்படுத்தும் முக்கிய பொருள்களான தூசி கொண்ட துகள்கள்(*PM10* மற்றும் *PM2.5)* போன்றவற்றை இந்த வழிகாட்டுதல்கள் மூலம் தவிர்க்க முடியும். கட்டுமானங்களால் காற்றின் தரத்தில் ஏற்படும் தாக்கம் மற்றும் பிற கட்டுமான பொருட்கள், மீண்டும் காற்றில் கலக்கப்படும்போது, காற்றின் தரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன இந்த வழிகாட்டுதல்கள் மூலம் இவை அனைத்தும் தவிர்க்கப்படும்.

காற்று மாசுபாட்டைத் குறைப்பதற்காக கட்டிட கட்டுமானப் பணிகளுக்கு இந்த வரைவு வழிகாட்டுதல்கள் பரிந்துரைக்கப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்படும் கட்டிடக் கட்டுமானங்கள், *RMC/ Batching Plants* மற்றும் இதர கட்டுமானப் பணிகளுக்கு இவை பொருந்தும்.

1. ஒரு ஏக்கர் வரை பரப்பளவு கொண்ட திட்டத் தளங்களில், வெளிப்புற இடங்களில் தூசி மற்றும் குப்பைகள் பரவுவதைத் தடுக்க, தளத்தை சுற்றி 6 மீ உயரமுள்ள தகரம்/உலோகத் தடுப்புகள் அமைக்கப்பட வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**

2. ஒரு ஏக்கருக்கும் அதிகமான தளப் பரப்பு கொண்ட திட்டத் தளங்களில் அல்லது 70 மீட்டருக்கும் உயரமான கட்டிடங்கள் மற்றும் அனைத்து *RMC* ஆலைகளிலும், வெளிப்புற இடங்களில் தூசி மற்றும் குப்பைகள் பரவுவதைத் தடுக்க, தளத்தை சுற்றி 10மீ உயரமுள்ள தகரம்/உலோகத்தடுப்புகள் அமைக்கப்பட வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**

3. புதிய கட்டுமானம் அல்லது இடிக்கப்படும் அனைத்துக் கட்டமைப்புகளியிருந்து வெளிவரும் தூசித் துகள்கள் பரவுவதைத் தடுக்க அதிக அடர்த்தி கொண்ட துணி/ தார்ப்பாய்/இரட்டை அடுக்கு பச்சை வலையால் மூடப்பட்டிருக்க வேண்டும். தூசிகள் உருவாகும் பகுதிகளில் தண்ணீர் தெளிப்பான்கள் மூலம் தண்ணீர் தெளித்து தூசி உற்பத்தியைக் கட்டுப்படுத்தவேண்டும் . **(அதிக முக்கியத்துவம்)**

4. இடித்தல், தோண்டுதல், வெட்டுதல், துளையிடுதல், மெருகூட்டுதல், கலக்குதல் போன்ற பணிகளின் போது உருவாகும் தூசிகள் தடுக்கும் நோக்கில் தொடர்ந்து தானாக இயங்கும் தெளிப்பான்கள்/இயந்திர தெளிப்பான்கள் மூலம் தண்ணீர் தெளித்து தூசி மற்றும் குப்பைகள் பரவுவதைத் தடுக்க வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**

5. அனைத்து கட்டுமானப் பொருட்களும், தோண்டப்பட்ட மண் மற்றும் கட்டிட இடிப்பாட்டுக் கழிவுகள் தளத்தில் தனியாக, அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் சேமிக்கப்பட வேண்டும், அவை சாலைகள் அல்லது நடைபாதைகளில் கொட்டப்படக்கூடாது மற்றும் அவற்றிலிருந்து காற்றினால் பரவும் தூசிகளைத் தவிர்க்க குறைந்தபட்சம் 200 *GSM* உயர் அடர்த்தி பாலிஎதிலீன் தாள் / தார்பாலினால் மூடப்பட்டிருக்க வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**

6. தூசித் துகள்களைக் குறைப்பதை உறுதி செய்யும் வகையில் கட்டுமான தளங்களில் உருவாகும் தூசி மற்றும் குப்பைகளை வாருதல், சுத்தம் செய்தல், தண்ணீர் தெளித்தல் மற்றும் துடைத்தல் போன்றவற்றின் மூலம் தளத்தில் வழக்கமான பராமரிப்பை நாள் முழுவதும் கட்டுமான பணி புரிபவர் மேற்கொள்ள வேண்டும். **(நடுத்தர முக்கியத்துவம்)**

7. கட்டுமானத்தின் போது உருவாகும் எந்தவொரு கழிவுப் பொருட்களையும் திறந்த வெளியில் காற்றில் பரவுவதை / கலப்பதை தவிர்க்க மூடப்பட்ட தட்டுகள், தூசிச் சட்டிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி அதற்காக ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு கொண்டு செல்ல வேண்டும். முறையாக மூடப்பட்ட லிப்ட் ஷாஃப்ட்களும் தூசி சேமிப்பானாக பயன்படுத்தப்பட வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**

8. எஞ்சியிருக்கும் அனைத்து கட்டுமானப் பொருட்கள்/ கட்டுமானம் மற்றும் இடிபாடு கழிவுகள் மாநகராட்சியின் கட்டுமான மற்றும் இடிபாட்டு *(C&D)* கழிவு மேலாண்மை வழிகாட்டுதல்களின்படி பிரிக்கப்பட்டு வாகனங்களில் கொண்டு செல்லப்பட வேண்டும், மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுமான மற்றும் இடிபாட்டு *(C&D)* கழிவு மேலாண்மை வழிகாட்டுதல்களின்படி பெருநகர சென்னை மாநகராட்சியால் உருவாக்கப்பட்ட கட்டுமான மற்றும் இடிபாட்டு *(C&D)* கழிவு மேலாண்மை தளங்களுக்கு பிரிக்கப்பட்ட நிலையில் கொண்டு செல்லப்பட வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**

9. பொருட்கள் கட்டிட, இடிப்பாடு கழிவுகள் மற்றும் அதை சார்ந்த கழிவுகளை ஏற்றிச் செல்லும் அனைத்து வாகனங்களும் காற்று மாசுபடுவதை தவிர்ப்பதற்காக அதிக சுமைகளை ஏற்றிச்செல்லக் கூடாது, மேலும் தூசிகள் பரவுவதைத் தடுக்க அவற்றின் சேமிப்புப் பகுதிகள் சுற்றி மேல் மற்றும் பக்கவாட்டில் உள்ள திறந்த பகுதிகள் முற்றிலும் தார்பாலின் மூலம் மூடப்பட்டிருக்க வேண்டும். போக்குவரத்தின் போது தார்பாலின்கள் சரியாக கட்டப்பட்டு பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**

10. அனைத்து வாகனங்களும் தளத்தில் இருந்து வெளியேறும் முன் தானாக இயங்கும் இயந்திரம்/ கைமுறையாக வாகனங்களின் சக்கரங்களை கழுவுதல் மேற்கொள்ள வேண்டும். நுழைவு/வெளியேறும் இடங்கள் மற்றும் அணுகுச் சாலைகளை அவ்வப்போது சுத்தம் செய்வது, வாகனங்களால் தூசி/சேறுகள் அதை ஒட்டியுள்ள சாலைகளில் பரவுவதைத் தடுக்க வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**

11. காற்று மாசுபாட்டைத் தணிக்கும் நடவடிக்கைகளைப் பணியாளர்கள் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக, உயரமான கட்டிடத் தளங்களில் (18.5 மீட்டருக்கு மேல்) *CCTV* கண்காணிப்பை கட்டடம் கட்டுபவர் பயன்படுத்த வேண்டும். *CCTV* காட்சிகள் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு தேவைப்படும் பட்சத்தில் ஆய்வுக்கு சமர்பிக்க வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**

12. கட்டுமான நிறுவனம், உயரமான கட்டிடத் திட்ட இடங்களில் (கட்டிட உயரம் 18.5 மீட்டருக்கு மேல்) சென்சார் அடிப்படையிலான காற்று மாசை கண்டறியும் கண்காணிப்பு கருவிகளை பயன்படுத்த வேண்டும், குறைந்தபட்சம் இரண்டு சென்சார்கள் முறையே ஒரு கருவி மேல்நோக்கியும் மற்றொரு கருவி கீழ்நோக்கியும் சுற்றளவுக்கேற்ப வைக்கப்பட வேண்டும். கட்டுமான நிறுவனம், தங்கள் தளங்களில் அதிக அளவிலான காற்று மாசு பதிவுகளை கண்டறிந்தால் உடனடியாகச் செயல்பட வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்குத் தேவைப்படும்போது ஆய்வுக்காகக் கண்காணிப்பு கருவிகளின் பதிவுகளை காண்பிக்க வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**

13. தளங்களில் செயல்படும் *DG* செட்கள், *LPG/ PNG/* மின்சாரம், எரிபொருள் பயன்முறை போன்ற சுத்தமான எரிபொருளில் இயங்குதல் வேண்டும். மேலும் அவற்றில் மாசு கட்டுப்பாட்டு சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும், மேலும் அவை *MoEFCC* வழிகாட்டுதல்களின்படி இயக்கப்படுதல் வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**

14. பெரிய அடுக்குமாடி குடியிருப்புகள் , வணிக வளாகங்கள் போன்ற கட்டுமானங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் *(Alarm System, Safety measures)* கண்டிப்பாக இருத்தல் வேண்டும் **(அதிக முக்கியத்துவம்)**

15. கட்டுமான பொருட்கள், கட்டிட இடிப்பாடு கழிவுகள் மற்றும் அதை சார்ந்த கழிவுகளக் கொண்டு செல்லும் அனைத்து வாகனங்களும் கட்டாயம் மாசு கட்டுப்பாட்டு சான்றிதழ் வைத்திருக்க வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**

16. கட்டிடம் கட்டுபவர் தளத்தில் ஒரு தளப் பொறியாளர்/சுற்றுச்சூழல் பொறியாளர்/திட்ட மேலாளர் அல்லது நிர்வாக மட்டத்தில் பொருத்தமான தள பணியாளர்களை நியமித்து, திட்டத்தின் வாழ்க்கைச் சுழற்சிக்கான காற்று மாசுபாட்டைத் தணிக்கும் வகையில் திட்டத்தை உருவாக்கி, திட்டத்தின் கால சுழற்சிக்கு ஏற்றார்போல் செயல்படுத்திட வேண்டும். **(நடுத்தர முக்கியத்துவம்)**

17. தளத்தில் உள்ள பணியாளர்கள், தொழிலாளர்கள் போன்ற அனைத்து ஊழியர்களுக்கு கட்டிடம் கட்டுபவர் காற்று மாசுபடுதலை தவிர்ப்பது பற்றிய புரிதலை/விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். கட்டிடம் கட்டுபவர் ஊழியர்களுக்கு இது தொடர்பான புரிதல் ஏற்படுத்தும் வகையில் அது சம்மந்தமான விழிப்புணர்வு பதாகைகள்/படங்கள் போன்றவற்றை தளத்தில் நிறுவியிருக்க வேண்டும். **(குறைந்த முக்கியத்துவம்)**

18. மாசுபட்ட காற்றில் உள்ள துகள்களை சுவாசிப்பதில் இருந்து தொழிலாளர்களைப் பாதுகாக்க, சுவாச முகமூடிகள், கண்ணாடிகள் மற்றும் பாதுகாப்பு கவசங்கள் போன்ற முறையான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் *(PPE)* கிடைக்கச் செய்ய வேண்டும். **(நடுத்தர முக்கியத்துவம்)**

<u>வழிகாட்டுதல்களை மீறுபவர்களுக்கான அபராதம்</u>:

a) பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் காற்று மாசுபாட்டை தவிர்க்கும் நடவடிக்கைகள் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொள்ளலாம், மேலும் கட்டடம் கட்டுபவர் , பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கேட்கும் பட்சத்தில் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும், மேலும் தளத்திற்குள் ஆய்வுகள் மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களை அனுமதிக்க வேண்டும்.

b) மேற்கூறிய வழிகாட்டுதல்களை மீறுபவர்களுக்கு கீழ் உள்ளவாறு அபராதம் விதிக்கப்படும்:

வரிசை எண்	திட்டத்தின் பரப்பளவு	அதிக முக்கியத்துவம் வாய்ந்த இனங்களுக்கு அபராதம்	குறைந்த மற்றும் நடுத்தர முக்கியத்துவம் வாய்ந்த இனங்களுக்கு அபராதம்
1	*20,000* ச.மீட்டருக்கு*(BUA)* அதிகமான பரப்பளவு உள்ள தளங்களில் வழிகாட்டு விதிமீறுதலுக்கு	Rs.5,00,000/-	Rs.1,00,000
2	*500* ச.மீ க்கு மேல் *20,000* ச.மீ-வரை பரப்பளவில் *(BUA)* அமைந்துள்ள தளங்களில் வழிகாட்டு விதிமீறுதலுக்கு	Rs. 25,000/-	Rs.10,000
3	*300* ச.மீ முதல் *500* ச.மீ பரப்பளவில் *(BUA)* அமைந்துள்ள தளங்களில் வழிகாட்டு விதிமீறுதலுக்கு	Rs. 10,000/-	Rs.1000

நடுத்தர/குறைந்த முக்கியத்துவம் கொண்ட வழிகாட்டுதல்களில் விதி மீறல்கள் ஏற்பட்டால், மீறல்களை சரிசெய்வதற்கான எச்சரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டு அதை சரி செய்வதற்கு *15* நாட்கள் அவகாசம் அளிக்கப்படும். *15* நாட்களுக்கு பிறகும் சரி செய்யாவிட்டால் பரப்பளவிற்கு ஏற்றவாறு அபராதம் விதிக்கப்படும். அதன் பிறகு *7* நாட்கள் அவகாசம் அளிக்கப்படும் அதன் பிறகும் சரிசெய்யாவிட்டால் கட்டுமான நடவடிக்கைகள் நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும்.

அதிக முக்கியத்துவம் வாய்ந்த விதிமீறல்கள் சரிசெய்வதற்கான அறிவிப்பு வழங்கப்பட்டு அதை சரி செய்வதற்கு *15* நாட்கள் அவகாசம் அளிக்கப்படும். *15* நாட்களுக்கு பிறகும் சரிசெய்யாவிட்டால் பரப்பளவிற்கு ஏற்றவாறு அபராதம் விதிக்கப்படும். அதன் பிறகு *7* நாட்கள் அவகாசம் அளிக்கப்படும் அதன் பிறகும் சரிசெய்யாவிட்டால் கட்டுமான நடவடிக்கைகள் நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும்.

எனவே, தமிழில் தயாரிக்கப்பட்டுள்ள "சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வரைவு வழிகாட்டுதல்கள் *2025"*க்கு நிலைக்குழு *(*பொது சுகாதாரம்*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*பொது சுகாதாரம்*)* கூட்டத்தில் தீர்மான எண்.067/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு *(*பொது சுகாதாரம்*)* பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

நதுநக.எண.D1/LA/SD/WDCN01/00236/2025

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண: 386 / 2025 **பொருள் எண.58**

தானப்பத்திரம்

மண்டலம்-01, கோட்டம்-14ல் M/s.Insight Retail Private Limited represented by its Power Agent M/s. South Gate Constructions LLP represented by its Managing Partner Mr. Praveen Kumar Darda அவர்கள் Thiruvottriyur Main Road, North Terminus Road, comprised in Old S.No.169/1B1 part, 170/2A part, 2B part, 173/2 part, as per patta T.S.No.15/1, Block No.15, Ward - J of Thiruvottriyur Village, Thiruvottriyur Taluk, Chennaiல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN01/00236/2025, நாள்:07.04.2025ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்:09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காf ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதார் M/s. Insight Retail Private Limited represented by its Power Agent M/s. South Gate Constructions LLP represented by its Managing Partner Mr. Praveen Kumar Darda அவர்கள் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) M/s. Insight Retail Private Limited represented by its Power Agent M/s. South Gate Constructions LLP represented by its Managing Partner Mr. Praveen Kumar Darda என்பவர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 9828.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 2417.00 சதுர மீட்டர் நிலமும் TANGEDCO விற்கு 37.10சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 37.69 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) M/s. Insight Retail Private Limited represented by its Power Agent M/s. South Gate Constructions LLP represented by its Managing Partner Mr. Praveen Kumar Darda என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், திருவொற்றியூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 7.2 மீட்டர் அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO விற்கு மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். M/s. Insight Retail Private Limited represented by its Power Agent M/s. South Gate Constructions LLP represented by its Managing Partner Mr. Praveen Kumar Darda அவர்கள் அதற்கேற்றவாறு 37.69ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் 37.10ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCOவிற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன்படி 10,000ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம். மனைப்பிரிவு 10,000 சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் M/s. Insight Retail Private Limited represented by its Power Agent M/s. South Gate Constructions LLP represented by its Managing Partner Mr. Praveen Kumar Darda அவர்கள் அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும், சாலைக்கான 2417.00சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 37.69சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(எ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department Dated:16.07.2022ன்படி சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளரே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்.

(ஏ) அபிவிருத்தியாளர் தங்களின் கடிதத்தில், சாலை மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வருவதாகவும் ஆகவே, ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

(ஐ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதால் M/s.Insight Retail Private Limited represented by its Power Agent M/s. South Gate Constructions LLP represented by its Managing Partner Mr. Praveen Kumar Darda அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) Thiruvottriyur Main Road, North Terminus Road, comprised in Old S.No.169/1B1 part, 170/2A part, 2B part, 173/2 part, as per patta T.S.No.15/1, Block No.15, Ward - J of Thiruvottriyur Village, Thiruvottriyur Taluk, Chennai, Division-14, Zone-1ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 2417.00 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 37.69 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை M/s. Insight Retail Private Limited represented by its Power Agent M/s. South Gate Constructions LLP represented by its Managing Partner Mr. Praveen Kumar Darda அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர் / அபிவிருத்தியாளர் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.35/2025, நாள்.24.04.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.நக.எண்.D1/PPA/WDCN02/00631/2025

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 387 / 2025 **பொருள் எண்.59**

தானப்பத்திரம்

மண்டலம்-02, கோட்டம்-16ல் Thiru.M.Mirunaline and Mr.M.Deepak Dwarakesh அவர்கள் Plot No.D, Vichoor Main Road, Kadapakkam, Ambattur Taluk, comprised in S.No.71, 77, New S.No.71/1A, 1B2, 2A, 2B2, 3A, 3B2, 4A, 4B2, 1B1A2, 2B1A2, 3B1A2, 4B1A2, 5B1A1C, 5A2, 5B2B & 77/1A1B of Kadapakkam Villageல் உள்ள இடத்திற்கு குடிசை தொழில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வேண்டி PPA/WDCN02/00631/2025, நாள்:30.01.2025ன்படி திட்ட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள். விண்ணப்பதாரர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக Vichoor Main Road 14.84 m அமைய பெற்றுள்ளது. Vichoor Main Road சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம் //ன்படி 18.00 m அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர்கள் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர்கள் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 82.07ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர்கள் Thiru.M.Mirunaline and M. Deepak Dwarakesh அவர்களிடமிருந்து Plot No.D, Vichoor Main Road, Kadapakkam, Ambattur Taluk, comprised in S.No.71, 77, New S.No.71/1A, 1B2, 2A, 2B2, 3A, 3B2, 4A, 4B2, 1B1A2, 2B1A2, 3B1A2, 4B1A2, 5B1A1C, 5A2, 5B2B & 77/1A1B of Kadapakkam Village, Division-16, Zone-02ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 82.07 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு)
கூட்டத்தில் தீர்மான எண்.36/2025, நாள்.24.04.2025ன்படி,
இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.ந.க.எண்.D1/PPA/WDCN02/01931/2025

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 388 / 2025 **பொருள் எண்.60**

தானப்பத்திரம்

மண்டலம்-02, கோட்டம்-16ல் (1) Radhe Goyal (2) Mr. Rohit Goel (3) Mrs. Kanta Devi அவர்கள் As per patta S.No.108/3B, 3C, 109/1A, 1B, 2B, 113/2A, 2B, 2C, 114/1A, 1B & 1C of Kadapakkam Village, Thiruvottriyur Talukல் உள்ள இடத்திற்கு குடிசை தொழில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வேண்டி PPA/WDCN02/01931/2025, நாள்:30.03.2025ன்படி திட்ட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள். விண்ணப்பதாரர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம் //ன் படி 18.00m அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர்கள் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர்கள் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 123.82 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர்கள் (1) Radhe Goyal (2) Mr. Rohit Goel (3) Mrs. Kanta Devi அவர்களிடமிருந்து As per patta S.No.108/3B, 3C, 109/1A, 1B, 2B, 113/2A, 2B, 2C, 114/1A, 1B & 1C of Kadapakkam Village, Thiruvottiyur Taluk, Division-16, Zone-02ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 123.82 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.37/2025, நாள்.24.04.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நதுநக.எண்.D1/LA/SD/WDCN02/00235/2025

ஆணையர் அவர்களின் 08.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 389 / 2025 **பொருள் எண்.61**

தானப்பத்திரம்

மண்டலம்-02, கோட்டம்-17ல் Mr.Y. Mohammed Shibin and Mrs. Nesreen Shibin அவர்கள் S.No.221, 225, 226, 227, 228/1 and 228/2 of Kosapur Village, Madhavaram Taluk, Chennai Districtல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN02/00235/2025, நாள்.04.04.2025ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

இம்மனைப்பிரிவுக்கான திட்டஅனுமதி ஒப்புதல் உறுப்பினர் - செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடிதம் எண்.LAYOUT-1/0233/2024, நாள்: 05.12.2024ன்படி வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை G.O.Ms.No.181.வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்:09.12.2020ல் ஏற்கனவே சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் சாலை மற்றும் இதர பயன்பாட்டிற்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் எடுத்துக் கொண்டதை மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) Mr. Y. Mohammed Shibin and Mrs. Nesreen Shibin என்பவர்கள் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 24645.00சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கான 2499.00சதுர மீட்டர் நிலமும், திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான 2219.00 சதுர மீட்டர் நிலம் பொது பயன்பாட்டிற்காக TANGEDCOவிற்கு 112.00சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 112.00 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு சார் பதிவாளர், திருவொற்றியூர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பத்திர பதிவு எண்.,103/2025, நாள்: 06.01.2025.

(ஆ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department, Dated 16.07.2022ன்படி சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளர்களே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர்கள் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்கள்.

(இ) அபிவிருத்தியாளர்கள் தங்களின் கடிதத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வருவதாகவும், ஆகவே ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

(ஈ) விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 7.2m அகல சாலை அமைந்துள்ளது. ஏனைய மனைகள் அனைத்தும் 72.00 ச.மீ பரப்பளவு கொண்டுள்ளது.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, (சாலை பகுதி நீங்கலாக) மனையின் பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCOவிற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். Mr.Y.Mohammed Shibin and Mrs. Nesreen Shibin என்பவர்கள் அதற்கேற்றவாறு 112.00ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 112.00ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCOவிற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(ஊ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதால் Mr.Y.Mohammed Shibin and Mrs. Nesreen Shibin அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) S.No.221, 225, 226, 227, 228/1 and 228/2 of Kosapur Village, Madhavaram Taluk, Chennai District, Division - 17, Zone - 02 ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான 2499.00சதுர மீட்டர் நிலம், திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான 2219.00சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கான 112.00 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை Mr.Y.Mohammed Shibin and Mrs. Nesreen Shibin அவர்களிடமிருந்து சார் பதிவாளர் திருவொற்றியூர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் பதிவு எண்.103/2025 நாள்: 06.01.2025 மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறப்பட்ட நிலத்திற்கு, பின்னேற்பு அனுமதியும்,

(2) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர் / அபிவிருத்தியாளர் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.38/2025, நாள்.24.04.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

****

நதுநக.எண்.D1/LA/SD/WDCN04/00145/2025

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 390 / 2025 **பொருள் எண்.62**

தானப்பத்திரம்

மண்டலம்-04, கோட்டம்-42ல் Mr. D. Shyam Kumar அவர்கள் New Door No.420/1 & 424, Old Door No.660, 660/1 & 660/2-1, Thiruvottriyur High Road, as per patta R.S.No.3964/11, 3964/12 & 3964/17, Block No.75, Tondiarpet Village, Tondiarpet Talukல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN04/00145/2025, நாள்:28.02.2025ன்படிவிண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்:09.12.2020 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் Mr. D. Shyam Kumar அவர்கள் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) Mr. D. Shyam Kumar என்பவர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 2140.62 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 456.58சதுர மீட்டர் நிலம், TANGEDCO விற்கு 8.50 சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 8.50 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) Mr.D.Shyam Kumar என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார், மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், தண்டையார்பேட்டை வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 35.00மீட்டர் அகல சாலை அமைந்துள்ளது, விண்ணப்பதாரர் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, (சாலை பகுதி

நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCOவிற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். Mr. D. Shyam Kumar அவர்கள் அதற்கேற்றவாறு 8.50 ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 8.50 ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(உ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் Mr.D.Shyam Kumar அம்மனையின மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவர்களாக கருதுவதாலும் சாலைக்கான 456.58 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 8.50சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(ஊ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated 16.07.2022ன்படி சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளரே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்.

(எ) *Tamil Nadu Combined Development & Building Rules, 2019* ன் படி *10,000* ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம். மனைஉட்பிரிவு *10,000* சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்.

(ஏ) அபிவிருத்தியாளர் தங்களின் கடிதத்தில் சாலை மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வருவதாகவும் ஆகவே, ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

(ஐ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதால் Mr. D. Shyam Kumar அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) New Door No.420/1 & 424, Old Door No.660, 660/1 & 660/2-1, Thiruvottriyur High Road, as per patta R.S.No.3964/11, 3964/12 & 3964/17, Block No.75, Tondiarpet Village, Tondiarpet Taluk, Division - 42, Zone-04ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட

வரைபடத்தில் சாலைக்கான 456.58 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 8.50 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை Mr. D. Shyam Kumar அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர் / அபிவிருத்தியாளர் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.39/2025, நாள்.24.04.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.நக.எண்.A5/PPA/WDCN04/02242/2025

ஆணையர் அவர்களின் 08.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 391 / 2025 **பொருள் எண்.63**

தானப்பத்திரம்

மண்டலம்-04, கோட்டம்-44ல் Sri. T. Ravindran அவர்கள் Old Door No.134, New Door No.54, Madhavaram High Road, Perambur, Chennai - 600011 comprised in T.S.No.60/3, Block No.32, Sembium Village, Perambur Talukல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN04/02242/2025, நாள்: 24.03.2025ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்தப் பரப்பளவு 246.60ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 12.00 m அகல Madhavaram High Road அமைய பெற்றுள்ளது. Madhavaram High Road சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம் //ன்படி 24.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர்கள் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 29.12 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Sri. T. Ravindran அவர்கள் Old Door No.134, New Door No.54, Madhavaram High Road, Perambur, Chennai - 600011 comprised in T.S.No.60/3, Block No.32, Sembium Village, Perambur Taluk Division-44, Zone-04ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 29.12ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.40/2025, நாள்.24.04.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

நகுநக.எண்.A5/PPA/WDCN05/00846/2025

ஆணையர் அவர்களின் 06.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 392/2025 **பொருள் எண்.64**

தானப்பத்திரம்

மண்டலம்-05, கோட்டம்- 49ல் (1) Mr. R. Ganesh & (2) Ms. G. Hemalatha அவர்கள் Door No.7(4), G.A. Road, Gollavar Agraharam Road, P.A.N. Rajarathinam Salai, Old Wahermenpet, Tondiarpet, Chennai - 600081 Comprised in O.S.No.3277 & 3278, R.S.No.3006, Block No.45 of Tondiarpet Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN05/00846/2025, நாள்: 04.02.2025ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் விண்ணப்பித்துள்ளார்கள். விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்தப் பரப்பளவு 453.00 ச.மீ ஆகும். விண்ணப்பதாரர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 9.40m அகல G.A. Road, Gollavar Agraharam Road, P.A.N. Rajarathinam Salai அமைய பெற்றுள்ளது. G.A. Road, Gollavar Agraharam Road, P.A.N. Rajarathinam Salai சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம் //ன் படி 18.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர்கள் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும், ஆகவே, மனுதாரர்கள் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 39.13 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர்கள் (1) Mr. R. Ganesh & (2) Ms. G. Hemalatha அவர்களிடமிருந்து Door No.7(4), G.A. Road, Gollavar Agraharam Road, P.A.N. Rajarathinam Salai, Old Wahermenpet, Tondiarpet, Chennai-600081 Comprised in O.S.No.3277 & 3278, R.S.No.3006, Block No.45 of Tondiarpet Village, Division-49, Zone-5ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 39.13 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.41/2025, நாள்.24.04.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.நக.எண்.D1/0058/2025

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 393 / 2025 **பொருள் எண்.65**

தானப்பத்திரம்

மண்டலம்-05, கோட்டம்-51ல் Mr.D.Rajaram அவர்கள் New Door No.1 & 3, Old Door No.1 & 2, Narayanappa Naicken 2nd Lane and Abutting M.C. Road on the Eastern Side, Oldwashermenpet, Chennai - 600021 comprised in R.S.No.1113/19, Block No.20 of Tondiarpet Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN05/0815/2025, நாள்:03.02.2025ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-05 ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 163.50ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 12.20 மீ அகல Narayanappa Naicken 2nd Lane and Abutting M.C. Road on the Eastern Side அமையபெற்றுள்ளது. Narayanappa Naicken 2nd Lane and Abutting M.C. Road on the Eastern Side சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 10.80ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mr.D.Rajaram அவர்களிடமிருந்து New Door No.1 & 3, Old Door No.1 & 2, Narayanappa Naicken 2nd Lane and Abutting M.C. Road on the Eastern Side, Oldwashermenpet, Chennai - 600021 comprised in R.S.No.1113/19, Block No.20 of Tondiarpet Village, Division-51, Zone-05ல் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 10.80 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.42/2025, நாள்.24.04.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.நி.க.எண்.D1/PPA/WDCN06/02209/2025

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 394/2025 **பொருள் எண்.66**

தானப்பத்திரம்

மண்டலம்-06, கோட்டம்-70ல் Lourdes Matriculation Higher Secondary School represented by Sr. Mangala Mary அவர்கள் Door No.305/86, Paper Mills Road, Perambur, Chennai-11 comprised in T.S.No.6, Block No.11 of Siruvallur Village, Ayanaravam Talukல் உள்ள இடத்திற்கு கல்வி நிறுவனம் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN06/02209/2025, நாள்:20.03.2025ன்படி திட்ட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்தப் பரப்பளவு 13820.00சமீ ஆகும். விண்ணப்பதாரர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 13.7மீ அகலம் கொண்ட Paper Mills Road அமைந்துள்ளது. Paper Mills Road சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம் //ன்படி 18.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 12.28 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Lourdes Matriculation Higher Secondary School represented by Sr. Mangala Mary அவர்களிடமிருந்து Door No.305/86, Paper Mills Road, Perambur, Chennai - 11 comprised in T.S.No.6, Block No.11 of Siruvallur Village, Ayanaravam Taluk, Division - 70, Zone - 06ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 12.28 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.43/2025, நாள்.24.04.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நது.நக.எண்.D1/0057/2025

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 395 / 2025 **பொருள் எண்.67**

தானப்பத்திரம்

மண்டலம்-06, கோட்டம்-75ல் Mr. Sunil Jain அவர்கள் Old Door No.187, New Door No.36, Bricklin Road, Otteri, Chennai - 600012 comprised in New S.No.2886/28 & 2886/29, Block No.45 of Purasaiwakkam Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN06/01309/2025, நாள்:20.02.2025ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-06ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு ஆவணப்படி 235.78 ச.மீ, பட்டாவின் படி 238.00 ச.மீ மற்றும் மனை அமைவிடத்தில் பரப்பளவு 230.86 ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 11.90 மீ அகல Bricklin Road அமையபெற்றுள்ளது. Bricklin Road சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 27.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 11.32 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mr. Sunil Jain அவர்களிடமிருந்து Old Door No.187, New Door No.36, Bricklin Road, Otteri, Chennai - 600012 comprised in New S.No.2886/28 & 2886/29, Block No.45 of Purasaiwakkam Village, Division-75, Zone-06ல் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 11.32 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.44/2025, நாள்.24.04.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.நா.க.எண்.D1/PPA/WDCN10/01626/2025

ஆணையர் அவர்களின் 08.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 396 / 2025 **பொருள் எண்.68**

தானப்பத்திரம்

மண்டலம்-10, கோட்டம்-133ல் Institute of Franciscan Missionaries of Mary Holy Angels Convent, represented by its Superior, Sr. Rosy Joseph அவர்கள் Door No.107, Dr. Nair Road, T.Nagar, Chennai - 600017 comprised in T.S.No.4855 part, 4856 part, 4857/1 part & 4857/2 part, Block No.113 of T. Nagar Village, Guindy Taluk, Chennaiல் உள்ள இடத்திற்கு கல்வி நிறுவன கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வேண்டி PPA/WDCN10/01626/2025, நாள்:28.02.2025ன்படி திட்ட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்தப் பரப்பளவு 19,485.00சமீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலைகளில் ஒன்றான 15.73 m and 14.98 m அகலம் கொண்ட Dr. Nair Road அமைய பெற்றுள்ளது. Dr. Nair Road சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம் //ன்படி 18.00m அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர்கள் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 166.69 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Institute of Franciscan Missionaries of Mary Holy Angels Convent, represented by its Superior, Sr. Rosy Joseph அவர்களிடமிருந்து *D*oor No.107, Dr. Nair Road, T.Nagar, Chennai - 600017 comprised in T.S.No.4855 part, 4856 part, 4857/1 part & 4857/2 part, Block No.113 of T.Nagar Village, Guindy Taluk, Chennai, Division-133, Zone-10ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 166.69ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.45/2025, நாள்.24.04.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

நதுநக.எண்.A5/PPA/WDCN10/00758/2025

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 397 / 2025 **பொருள் எண்.69**

தானப்பத்திரம்

மண்டலம்-10, கோட்டம்-134ல் (1) Mr. R. Rajagopalan & (2) Mrs. R. Harini அவர்கள் Door No. 93, Arya Gowda Road, West Mambalam, Chennai – 600033, comprised in Old T.S. No. 20 (Part) and T.S. No. 20/56, Block No. 48 of Puliyur Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN10/00758/2025, நாள்:01.02.2025ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் விண்ணப்பித்துள்ளார்கள். விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்தப் பரப்பளவு பட்டாவின் படி 279.00ச.மீ மற்றும் ஆவணப்படி 285.40ச.மீ. ஆகும். விண்ணப்பதாரர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 15.00 m அகல Arya Gowda Road அமைய பெற்றுள்ளது. Arya Gowda Road சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம் //ன்படி 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர்கள் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர்கள் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 29.99 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர்கள் (1) Mr. R. Rajagopalan & (2) Mrs. R. Harini அவர்களிடமிருந்து Door No. 93, Arya Gowda Road, West Mambalam, Chennai – 600033, comprised in Old T.S. No. 20 (Part) and T.S. No. 20/56, Block No. 48 of Puliyur Village, Division-134, Zone-10ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 29.99 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.46/2025, நாள்.24.04.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ந.து.நக.எண்.D1/PPA/WDCN13/02494/2025

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 398 / 2025 **பொருள் எண்.70**

தானப்பத்திரம்

மண்டலம்-13, கோட்டம்-174ல் M/s. Bhoomi and Buildings Pvt Ltd, Rep by its Authorized Signatory Mr. Manoj Wadhawan அவர்கள் Plot No.8-A/1 & 8-A/2, Dr. Muthulakshmi Salai (L.B. Road), Adyar, Chennai - 600020 as per patta T.S.No.13/6, Block No.21, Ward-1 of Urur Village, Velachery Talukல் உள்ள இடத்திற்கு குடிசை தொழில் கட்டிடம் கட்டுவதற்கு திட்ட அனுமதி வேண்டி PPA/WDCN13/02494/2025, நாள்:26.03.2025ன்படி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்தப் பரப்பளவு 413.60சமீ ஆகும். டாக்டர் முத்துலட்சுமி சாலை (எல்.பி. சாலை)யின் தற்போதைய சாலை அகலம் 25.56 மீ. (L.B. Road) சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம்-//ன் படி 30.00m அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர்கள் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 42.78 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே மனை உரிமையாளர் M/s. Bhoomi and Buildings Pvt Ltd, Rep by its Authorized Signatory Mr. Manoj Wadhawan அவர்களிடமிருந்து Plot No.8-A/1 & 8-A/2, Dr. Muthulakshmi Salai (L.B. Road), Adyar, Chennai - 600020 as per patta T.S.No.13/6, Block No.21, Ward-1 of Urur Village, Velachery Taluk, Division-174, Zone-13 ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 42.78ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.47/2025, நாள்.24.04.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.நக.எண்.D1/LA/SD/WDCN14/00111/2025

ஆணையர் அவர்களின் 16.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 399 / 2025 **பொருள் எண்.71**

தானப்பத்திரம்

மண்டலம்-14, கோட்டம்-190ல் (1) Mr.S.Dellibabu (2) Mr.D.Boozan அவர்கள் Chakravarthy Nagar 2nd Main Road, Pallikaranai, Chennai - 600100 comprised in S.No.182/2 and 182/11B of Pallikaranai Village, Sholinganallur Taluk ல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN14/ 00111/2025, நாள்:19.02.2025ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்: 09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் (1) Mr. S. Dellibabu (2) Mr. D. Boozan மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) (1) Mr. S. Dellibabu (2) Mr. D. Boozan என்பவர்கள் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 2065.13 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 519.00 சதுர மீட்டர் நிலமும் TANGEDCOவிற்கு 7.75சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 7.75 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) (1)Mr.S.Dellibabu (2)Mr.D.Boozan என்பவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவர்களாக அறியப்படுகிறார்கள். மனை உரிமையாளர்கள் பட்டாவினை, வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 7.31மீட்டர் அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCOவிற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். (1) Mr. S. Dellibabu (2) Mr. D. Boozan அவர்கள் அதற்கேற்றவாறு 7.75 ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 7.75ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன்படி 10,000ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம். மனைப்பிரிவு 10,000சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர்கள் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(ஊ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர்கள் (1)Mr.S.Dellibabu (2)Mr.D. Boozan அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவர்களாக கருதுவதாலும் சாலைக்கென 519.00 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 7.75சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(எ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated:16.07.31022ன்படி சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளர்களே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர்கள் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்கள்.

(ஏ) அபிவிருத்தியாளர்கள் தங்களின் கடிதத்தில் சாலை மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வருவதாகவும் ஆகவே, ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

(ஐ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதால் (1)Mr.S.Dellibabu (2) Mr.D.Boozan அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) Chakravarthy Nagar 2nd Main Road, Pallikaranai, Chennai - 600100 comprised in S.No.182/2 and 182/11B of Pallikaranai Village, Sholinganallur Taluk, Division- 190, Zone - 14**ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான** 519.00**சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான** 7.75 **சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை** (1) Mr. S. Dellibabu (2) Mr. D. Boozan **அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,**

(2) **மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர்கள் / அபிவிருத்தியாளர்கள் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,**

மேற்கண்ட *1* **மற்றும்** *2* **ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு** *(*நகரமைப்பு*)* **மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

> "24.04.2025 **அன்று நடைபெற்ற நிலைக்குழு** (நகரமைப்பு) **கூட்டத்தில் தீர்மான எண்.**49/2025, **நாள்.**24.04.2025**ன்படி, இதற்கு நிலைக்குழு** (நகரமைப்பு) **பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."**

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ந.து.நக.எண்.D1/LA/SD/WDCN15/00177/2025

ஆணையர் அவர்களின் 15.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 400 / 2025 **பொருள் எண்.72**

தானப்பத்திரம்

மண்டலம்-15, கோட்டம்-192ல் M/s. Life Help Centre for the Handicapped Rep by its Secretary Mr. Blaze Kannan அவர்கள் East Coast Road, comprised in S.No.74/1, as per patta S.No.74/84A1A2A1A1 of Neelakarai Village, Sholinganallur Talukல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN15/ 00177/2025, நாள்:11.03.2025ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்: 09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரரான M/s. Life Help Centre for the Handicapped Rep by its Secretary Mr. Blaze Kannan மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) M/s. Life Help Centre for the Handicapped Rep by its Secretary Mr. Blaze Kannan என்பவர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 8248.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 1399.50சதுர மீட்டர் நிலம், TANGEDCOவிற்கு 34.20சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 34.20 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) M/s. Life Help Centre for the Handicapped Rep by its Secretary Mr. Blaze Kannan என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

(இ) விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 30.5 மீட்டர் அகல சாலை அமைந்துள்ளது. சமர்ப்பித்த வரைபடத்தில் குறைந்தபட்ச நில அளவு 220.00சதுர மீட்டர் மற்றும் நிலத்தின் முன்பக்கம் 12.00 மீட்டர் என காட்டப்பட்டுள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCOவிற்கும் மற்றும் 0.5% பெருநகர

சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். M/s. Life Help Centre for the Handicapped Rep by its Secretary Mr. Blaze Kannan அவர்கள் அதற்கேற்றவாறு 34.20 ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் 34.20ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன்படி 10,000ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம். மனைஉட்பிரிவு 10,000 சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் M/s. Life Help Centre for the Handicapped Rep by its Secretary Mr. Blaze Kannan அவர்கள் அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கான 1399.50 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 34.20 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(எ) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான தோராய அபிவிருத்தி கட்டணம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கப்படவேண்டும்.

(ஏ) மனையில் தற்போதுள்ள கட்டிடம் இடிக்கப்பட உள்ளது. விண்ணப்பதாரர் கட்டிடங்கள் இடிப்பதற்கு DA/WDCN15/00334/2025ன்படி விண்ணப்பித்துள்ளார்.

எனவே, East Coast Road, comprised in S.No.74/1, as per patta S.No.74/84A1A2A1A1 of Neelakarai Village, Sholinganallur Taluk, Division-192, Zone-15ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 1399.50 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 34.20 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை M/s. Life Help Centre for the Handicapped Rep by its Secretary Mr. Blaze Kannan அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.50/2025, நாள்.24.04.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நதுநக.எண்.D1/LA/SD/WDCN13/00191/2025

ஆணையர் அவர்களின் 15.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 401 / 2025 **பொருள் எண்.73**

தானப்பத்திரம்

மண்டலம்-13, கோட்டம்-176ல் M/s. Prime Estates represented by its Managing Partner Mr. J. Ramanjaneyulu அவர்கள் T.S.No.21, 24/1 & 2, 25/1 & 2, 28, 29/1 & 2, 31/1 & 2, 33, 35, 38/1, 2, 3 & 4, 40, 41/2, 43/2, Old S.No.336/1A2, 1B, 1C, 4, 5, 11, 12, 13 (pt), 14 (part), 19, 24 (part), Ward - 001, Block No.0186, Velachery -1 Town, Velachery Taluk ல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN13/00191/2025, நாள்:17.03.2025ன்படிவிண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்:09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் M/s. Prime Estates represented by its Managing Partner Mr.J.Ramanjaneyulu என்பவர் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) M/s.Prime Estates represented by its Managing Partner Mr.J.Ramanjaneyulu என்பவர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 3512.94 சதுர மீட்டர் ஆகும். இவற்றில் இம்மனைப்பிரிவிற்கு 6.5 மீ அகலம் கொண்ட அணுகு சாலைக்கு கூடுதலாக சாலைக்கென 192.41சதுர மீட்டர் நிலமும் TANGEDCOவிற்கு 17.04சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 17.03 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) M/s.Prime Estates represented by its Managing Partner Mr.J.Ramanjaneyulu என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார், மனை உரிமையாளர் பட்டாவினை, மண்டல துணை வட்டாட்சியர், வேளச்சேரி வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் இம்மனைப்பிரிவிற்கு 30.00மீ அகலம் கொண்ட அணுகு சாலை 10.00மீ அகலம் கொண்ட சிறுபாலம் வழியாக அமையபெற்றுள்ளது மேலும் மற்றொரு அணுகு சாலையாக 6.5மீ அகலம் கொண்ட சாலை அமைந்துள்ளது, விண்ணப்பதாரர் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00 ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது-

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம் 6, வார்டு 69ல் சிங்கார சென்னை 2.0 ஜிகேஎம் காலனி 12வது தெருவில் புதியதாக கட்டப்பட்டுள்ள 10 வகுப்பறைகள் கொண்ட சென்னை தொடக்கப்பள்ளி கட்டிடம் கட்டும் பணி - பணியிடத்தின் தன்மை காரணமாக ஒப்பம் சாரா இனங்கள் மேற்கொள்ளப்பட்டது - கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, கட்டடத்துறை மூலமாக மண்டலம் 6ல் வார்டு 69ல் ஜி.கே.எம். காலனி 12வது தெருவில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்டுள்ள 10 வகுப்பறைகள் கொண்ட சென்னை தொடக்கப்பள்ளி கட்டிடம் கட்டும் பணி திருவாளர்கள்.விசாலம் கன்ஸ்டிரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணி ஆணை 14.06.2022 அன்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்காக கலந்தறிதற்குரியவர் மூலம் ரூ.2,43,00,000/-க்கு மதிப்பீடு திருத்தப்பட்டு TUFIDCO மூலம் நிதி இசைவு பெறப்பட்டு ஒப்பங்கள் முடிவு செய்து திருவாளர்கள். விசாலம் கன்ஸ்டிரக்ஷன்ஸ் அவர்களுக்கு ரூ.1,84,98,639/-க்கு பணி ஆணை வழங்கப்பட்டு கட்டிடத்துறை மூலம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பணி பல்வேறு ஆய்வுகளில், சில வடிவமைப்பு மாறுபாடுகள், முகப்பு மாறுபாடுகள் செய்ய வேண்டி இருந்தது.

எனவே, மேற்கண்ட பணியிடத்தின் தன்மை காரணமாக மதிப்பீட்டில் இல்லாத ஒப்பம் சாராத சில இனங்கள் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- இந்த ஆரம்ப பள்ளி கட்டிடம் கட்டும் பணி முடிவடையும் நிலையில் ஆண்டு விடுமுறை முடிந்து மீண்டும் துவங்க குறுகிய காலம் இருந்த நிலையில் சிறு குழந்தைகள் பாதுகாப்பு கருதி உடனடியாக பள்ளி துவங்குவதற்கு முன்பே சுற்று சுவர் கட்ட வேண்டியிருந்த நிலையில் ஏற்கனவே இப்பணியின் கட்டுமான பணிக்கான ஒப்பந்ததாரரை கொண்டே சுற்றுசுவர் அமைக்கப்பட்டது.
- மேற்படி பணி புதிய ஆரம்ப பள்ளி கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் அருகில் உள்ள இடம் கோயில் ஆக்கிரமிப்புகள் மாநகராட்சி மூலம் அகற்றி மைதானம் தயார் செய்ததால், குழந்தைகளின் பாதுகாப்பு கருதி அவ்விடத்தில் ஆரம்ப பள்ளியில் பயிலும் 1 முதல் 5 வரையிலான மாணவர்கள் பயன்படும் விதமாக ILP கொண்டு பள்ளியினை சுற்றியுள்ள பகுதி சீர்செய்யப்பட்டு தரை அமைக்கப்பட்டுள்ளது.

- உயர் அலுவலர்களின் அறிவுறுத்தலின்படி புதிய கட்டிடத்தின் தரை தளம் முதல் கூரை வரை தளத்தின் உயரம் 10அடியில் இருந்து 12 அடியாக உயர்த்தி அமைக்கப்பட்டது.
- சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்படி புதியதாக கட்டப்பட்ட பள்ளிகள் அனைத்திலும் அலங்கார நுழைவாயில் அமைக்க அறிவுறுத்தப்பட்டதன் காரணமாக சுற்றுசுவர் கட்டும்போதே பள்ளியில் புதிய *Arch with Pergola* அமைக்கப்பட்டது.

மேற்கண்ட காரணங்களுக்காக கீழ்கண்ட ஒப்பம் சாரா இனங்கள் செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வ.எண்.	பணியின் பெயர்	செலவினத்தொகை
1	Compound Wall	ரூ.20,38,153/-
2	ILP Flooring around the School	ரூ.17,11,614/-
3	Increasing of Roof upto 12feet Height	ரூ.6,82,463/-
4	Entrance Arch with Pergola	ரூ.3,51,654/-

பள்ளியின் கட்டுமான பணியின் மதிப்பு : ரூ.1,98,88,871

ஒப்பத்தொகை : ரூ.1,84,98,639/-(Excl. GST)

ஒப்பம் சாரா இனங்கள் மற்றும்

அளவுகளுக்கான தொகை : ரூ. 47,83,886/-

18% *GST* தொகை : ரூ. 8,61,099/-

மொத்தம் : **ரூ. 56,44,985/-**

மேற்படி புதிய பள்ளி கட்டிடம் அமைக்கும் பணி சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் அதற்கான மதிப்பீட்டு தொகையான ரூ.2.43 கோடி ஒதுக்கீடு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டது.

மொத்த மதிப்பீட்டு தொகையான ரூ.2.43 கோடி சிங்கார சென்னை திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதனுடன் ரூ.56,44,985/- மதிப்பிற்கு மீதமுள்ள ஒப்பம் சாரா இனங்களுடன் செய்த மொத்த தொகைக்கு பணியின் மதிப்பில் 24% மட்டும் கூடுதலாக உள்ளது.

ஒப்ப கூறு 54ன்படியும் மற்றும் ஒப்ப விதிகள் படியும் *(Tender Transparency Act)* 25%க்கு உட்பட்டு அதே ஒப்பந்ததாரரை கொண்டு பணிகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, ஒப்பம் சாரா இனங்கள் மற்றும் அளவுகள் திருத்தியமைக்கப்பட்ட அளவுகள் மற்றும் ஒப்பம் சாரா இனங்கள் கொண்டு பணியினை மேற்கொள்ளப்பட்டதற்கான கூடுதல் செலவினத் தொகையான ரூ.***56,44,985***/-ஐ*(Incl GST)* மாநகராட்சி மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட வேண்டும்,

எனவே,

1. **ஒப்பம் சாரா இனங்கள் மற்றும் அளவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான பணிக்கான கூடுதல் செலவினத்தொகையான ரூ.*56,44,985/-*க்கு *(Incl GST)* முடிக்கப்பட்ட பணிக்கு பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,**
2. **கூடுதல் செலவினத்தொகையான ரூ.*56,44,985/-* ஐ *(Incl GST)* தொகையுடன் சேர்த்து கூடுதல் நிதியாக மூலதன நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,**
3. **கூடுதல் நிதி தொகையான ரூ.*56,44,985/-*ஐ ஏற்கனவே பணி மேற் கொள்ளப்பட்டு வரும் சிங்கார சென்னை *2.0, Function Centre 202800/412-102-300*ல் ஒதுக்கீடு பெற்று செலவினப்பட்டியினை தீர்வு செய்ய அனுமதியும்,**
4. **மேற்கண்ட பணிக்காக மதிப்பீட்டு தொகையில் *24.00%* க்கு உள்ளாக உள்ள நிலையில் அதே ஒப்பந்ததாரருக்கு *(Supplementary Agreement)* உடன்படிக்கை மேற்கொண்டு அதற்கான உரிய கணக்கு தலைப்பில் பட்டி தீர்வு செய்ய அனுமதியும்,**

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.228/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.162/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ1.நக.எண்.பி1 / 00675 / 2025

ஆணையர் அவர்களின் 19.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 473 / 2025 **பொருள் எண்.145**

பெருநகர சென்னை மாநகராட்சி - மதிப்பீடு - 2024-25 மூலதன நிதியின் கீழ் - மண்டலம்-1, கோட்டம்-4 எர்ணாவூர் தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி புதிய கட்டிடமாக கட்டும் பணி - 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-1, கோட்டம்-4 எர்ணாவூர் தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி புதிய கட்டிடமாக கட்டும் பணிக்கு 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் கீழ்கண்டவாறு மதிப்பீடு தாயரிக்கப்பட்டுள்ளது.

1	பணியின் விவரம்	மண்டலம்-1, பகுதி-1, கோட்டம்-4 எர்ணாவூர் தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி புதிய கட்டிடமாக கட்டும் பணி
2	எந்த துறைக்க்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்-1
3	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது.	2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி
4	மதிப்பீட்டின் தொகை	ரூ. 9,13,00,000/-
	அ) பணியின் செலவினம்	ரூ. 7,45,30,106.84
	ஆ) மற்ற எதிர்பாரா செலவினம்	ரூ. 18,63,872.00
	இ) தரக்கட்டுப்பாட்டு செலவினம்	ரூ. 7,45,301.07
	ஈ) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி	ரூ. 7,45,301.07
	உ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ.1,34,15,419.23
	மொத்தம்	ரூ. 9,13,00,000
5	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
6	நிதியின் தன்மை	மூலதன நிதி (நிதி பின்னர் பெறப்படும்)
7	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ. 9,13,00,000/-

எனவே,

1. மண்டலம்-1, பகுதி-1, கோட்டம்-4 எர்ணாவூர் தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி புதிய கட்டிடமாக கட்டும் பணிக்காக 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,13,00,000/- (ரூபாய் ஒன்பது கோடியே பதிமூன்று இலட்சம் மட்டும்) க்கு நிர்வாக அனுமதியும்,

2. இப்பணி மேற்கொள்ள தேவைப்படும் மூலதன நிதியினை பெற்று கட்டிட துறையின் மூலம் ஒப்பம் கோருவதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.223/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.158/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.ந.க.எண்.அ1/3813/2025

ஆணையர் அவர்களின் 22.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 474/2025 **பொருள் எண்.146**

பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - 2025-2026ஆம் கல்வியாண்டிற்கான மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படி சென்னை பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் விளையாட்டு திறனை மேம்படுத்தும் வகையில் 141 உடற்கல்வி ஆசிரியர்களை பணியமர்த்த அவர்களுக்கான மாதம் ஊதியத்திற்கான மொத்தம் ரூபாய் 2.34 கோடி ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி.

மாண்புமிகு மேயர் அவர்களின் *2025-2026*ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை அறிவிப்பு எண். *5*ல் பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் *69* நடுநிலைப்பள்ளிகள், *72* உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தி பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்ளவும் கோப்பைகளை வெல்லவும் அவர்களுக்கு பயிற்சி அளித்து தயார்படுத்தும் விதமாக தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள் நடுநிலை பள்ளிகளுக்கு மாதம் ரூ.*15,000/-* உயர் நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு மாதம் ரூ.*18,000/-* என்ற வகையில், மொத்தம் *141* உடற்கல்வி ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இதற்கென ரூ.*2.34/-* கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அறிவிப்பினை செயல்படுத்துவதற்கு *2025-2026*ஆம் கல்வியாண்டில் *69* நடுநிலைப்பள்ளிகள், *72* உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தி பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்ளவும் கோப்பைகளை வெல்லவும் அவர்களுக்கு பயிற்சி அளித்து தயார்படுத்தும் விதமாக தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள் நடுநிலை பள்ளிகளுக்கு மாதம் ரூ.*15,000/-* உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு மாதம் ரூ.*18,000/-* என்ற வகையில், மொத்தம் *141* உடற்கல்வி ஆசிரியர்கள் பணியமர்த்த ஆணையர் அவர்களின் *02.04.2025* நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே,

1. சென்னை பள்ளிகளில் 141 உடற்கல்வி ஆசிரியர்களை நியமனம் செய்ய நிர்வாக அனுமதியும்
2. மேற்குறிப்பிட்ட பணிக்கு ரூ.2.34/- கோடி தொகையில் செலவினம் மேற்கொள்வதற்கு அனுமதியும்,
3. மேற்குறிப்பிட்ட செலவினத் தொகையினை உரிய தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 17.04.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 25.04.2025 அன்று தீர்மான எண்.*45/2025*ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.179/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.13.ந.க.எண்.சி2/1572/2025-4

ஆணையர் அவர்களின் 21.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 475/2025 **பொருள் எண்.147**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-13, பகுதி – 40A, கோட்டம் 172ல் வேளச்சேரி பிரதான சாலையில் மழைநீர் தேங்குவதை தவிர்க்கும் பொருட்டு புதிய மழை நீர்வடிகால்வாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -13, பகுதி -40A கோட்டம்.172 க்குட்பட்ட கிண்டி ரேஸ்கோர்ஸ் வளாகம் மற்றும் ஐந்து பர்லாங்கு சாலையில் கடந்த பருவ மழையின் போது அதிக அளவில் மழைநீர் தேங்கியது , அவ்வாறு தேங்கிய மழைநீரானது வேளச்சேரி பிரதான சாலை வழியாக சர்தார் பட்டேல் சாலை வழியாக அடையாறு ஆற்றிற்கு சென்றடைகிறது.

மேலும், மேற்கண்ட வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள மழைநீர் வடிகால்வாயானது குறைந்த கொள்ளவில் பல வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்டு தற்போது மிகவும் சிதிலமடைந்த நிலையில் உள்ள கால்வாய்களில் மழைநீர் வெளியேற வழியின்றி அதிகளவில் சாலைகளில் தேங்கியதால் அப்பகுதியின் குடியிருப்பு சுற்றியுள்ள பகுதிகளில் குடிருப்புவாசிகளும், பொது மக்களும் பெரிதும் பாதிப்படைந்தனர். மேலும், போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறு ஏற்படுகிறது. இது தொடர்பாக கடந்த 2024 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவ மழையின் போது மேற்கண்ட தெருக்களில் தேங்கிய மழைநீர் குறித்த புகைப்படங்கள் (ம) SWD Network Map இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, கீழ்கண்ட சாலையில் மழைநீர் தேங்குவதை தவிர்க்கும் பொருட்டு பழைய மழைநீர் கால்வாயை இடித்து அகற்றி புதியதாக மழைநீர்கால்வாய் அமைக்க உத்தேசிக்கப்பட்டு 13வது மண்டல வார்டு குழு தீர்மானத்திற்குட்பட்டு இப்பணியை மேற்கொள்ள கீழ்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது-

S.no	Division	Name of the street	Estimate No	Estimate Value
1	172	Velachery Main Road	NN/2024-25/23804	4,97,50,000.00

எனவே,

1.	மண்டலம் -13, பகுதி 40A, கோட்டம் 172-ல் மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளபடி வேளச்சேரி பிரதான சாலையில் புதியதாக மழைநீர் வடிகால்வாய்களை அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2.	இப்பணிக்கு தலைமையிடத்து மழைநீர் வடிகால்வாய் துறையின் மூலமாக ஒப்பம் கோர அனுமதியும்,
3.	இப்பணிகளுக்கான செலவீன தொகையை மூலதன நிதியில் (Capital Fund) மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.257/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.180/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

ம.அ.13.ந.க.எண்.சி2 / 1571-2 / 2025-4

ஆணையர் அவர்களின் 21.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 476 / 2025 **பொருள் எண்.148**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 13, பகுதி – 40A, கோட்டம் 168ல் பல்வேறு தெருக்களில் மழைநீர் தேங்குவதை தவிர்க்கும் பொருட்டு புதிய மழைநீர் வடிகால்வாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் *13* - பகுதி – *40A* கோட்டம் *168*க்குட்பட்ட பூந்தமல்லி பிரதான சாலை கடந்த பருவ மழையின் போது மழைநீர் வெளியேற வழியின்றி சாலைகளில் தேங்கி அப்பகுதியின் குடியிருப்பு சுற்றியுள்ள பகுதிகளில் குடிருப்புவாசிகளும், பொது மக்களும் பெரிதும் பாதிப்படைந்தனர். மேலும் போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறு ஏற்பட்டது. இத்துடன் *SWD Network map* இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, கீழ்கண்ட தெருக்களில் மழைநீர் தேங்குவதை தவிர்க்கும் பொருட்டு செங்கற்களால் கட்டப்பட்ட சேதமடைந்தபழைய மழைநீர் கால்வாய்களை இடித்து அகற்றி புதியதாக மழைநீர்கால்வாய் அமைக்க உத்தேசிக்கப்பட்டு *13*வது மண்டல வார்டு குழு தீர்மானத்திற்குட்பட்டு இப்பணியை மேற்கொள்ள கீழ்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

S.no	Division	Name of the street	Estimate No	Estimate Value
1	168	Poonmalle road	NN/2024-25/28257	4,01,00,000.00

எனவே,

1.	மண்டலம்-*13*, பகுதி –*40A*, கோட்டம்-*168* ல் மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளபடி புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும் மற்றும் மன்றத்தின் பதிவுக்காகவும்,
2.	இப்பணிக்கு தலைமையிடத்து மழைநீர் வடிகால்வாய் துறையின் மூலமாக ஒப்பம் கோர அனுமதியும்,
3.	இப்பணிகளுக்கான செலவீன தொகையை மூலதனம் நிதியில் ***(Capital Fund)*** மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மூலமாக நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.258/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது".

“25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 181/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”

******

க.து.ந.க.எண்.பி1/ 0781 /2025

ஆணையர் அவர்களின் 04.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 477/2025 **பொருள் எண்.149**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம்-10, வார்டு-140, கோடம்பாக்கம் சாலையில் உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆடிட்டோரியம் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.

மண்டலம்-10, வார்டு-140, கோடம்பாக்கம் சாலையில்உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் **ஆடிட்டோரியம்** கட்டும் பணியினை மேற்கொள்ள வேண்டி 2024-2025ஆம் ஆண்டின் படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு;

1	பணியின் பெயர்	மண்டலம்- 10,வார்டு- 140, கோடம்பாக்கம் சாலையில்உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் **ஆடிட்டோரியம்** கட்டும் பணி. (UTM)
2	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்- 10.
3	**மதிப்பீட்டின் தொகை விவரம்**	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 4,32,52,113.28
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி18%	ரூ. 77,85,380.39
	(இ) த.நா.க.தொ.ந.வா.1%	ரூ. 4,32,521.13
	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 4,32,521.13
	(உ) மின்சார செலவு	ரூ. 50,000.00
	(உ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 5,47,464.06
	மொத்தம்	**ரூ.** 5,25,00,000.00
4	நிதியின் தன்மை	Higher Secondary School (20 - 28 - 00 / 412- 400 - 404)
5	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	**ரூ.** 5,25,00,000.00

மேற்குறிப்பிட்டுள்ள மண்டலம்-10, வார்டு-140, கோடம்பாக்கம் சாலையில் உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் **ஆடிட்டோரியம்** கட்டும் பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இம்மதிப்பீடுகளின் செலவீனத்தை Higher Secondary School (20 - 28 - 00 / 412- 400 - 404) நிதியில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. **மண்டலம்-10,வார்டு-140, கோடம்பாக்கம் சாலையில் உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆடிட்டோரியம் கட்டும் பணிக்கு மண்டலம் - 10ன் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள ரூ.5,25,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும்,**
2. **மேற்கண்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவினத்தினை Higher Secondary School (20 - 28 - 00 / 412- 400 - 404) நிதியில் மேற்கொள்வதற்கு அனுமதியும்,**
3. **மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,**
4. **மேற்குறிப்பிட்டுள்ள பணிக்குண்டான Structural Design அண்ணா பல்கலைக்கழகம் மூலம் Vetting செய்த பின்னர் கலந்தாலோசகருக்கு பட்டி தீர்வு செய்யவும்,**

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.211/2025, நாள். 23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 154/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

க.து.நக.எண்.பி1/0771/2025

ஆணையர் அவர்களின் 08.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 478/2025 **பொருள் எண்.150**

பெருநகரசென்னைமாநகராட்சி - கட்டடத்துறை - நீத்தார்உடல்பாதுகாப்புமையம் - பொதுமற்றும்தனியார்பங்களிப்பு (PPP) முறையில் வடிவமைப்பு கட்டுமானம் நிதி இயக்குதல் (ம) பராமரித்தல் மாதிரியில் உள்கட்டமைப்பை (DBFOT) (10 இறந்த நபர்களின் உடல்கள் வைப்பதற்கு) அமைக்க சலுகையாளர் தேர்வு - கோட்டம்-53, மண்டலம்-05 இல் மூலகொத்தளம் மயான பூமி சவக்கிடங்கு சேமிப்பு வசதி அமைப்பதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி பல்வேறு மண்டலங்களில் உள்ள *203* மயான பூமிகளில் பயோகேஸ், மின் தகன மேடை எல்.பி.ஜி போன்ற பல்வேறு வகையான தகன மேடைகளை கொண்டுள்ளது. நகரங்கள் வேகமாக விரிவடைந்து வருவதால், அடுக்குமாடி கலாச்சாரமும் பன்மடங்கு வளர்ந்து வருகிறது. எந்த ஒரு மரணம் நடந்தாலும், இறந்தவர்களுக்கு உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அஞ்சலி செலுத்துவதற்கு, இறந்தவரின் உடலை ஓரிரு நாட்களுக்கு மேல் வைத்திருக்க, குடியிருப்புகளை பராமரிக்கும் சங்கங்கள் அனுமதிப்பதில்லை.

இந்நிலையில், வீட்டில் யாராவது இறந்தால், தொலை தூரத்திலோ, வெளியூர்களிலோ வசிக்கும் உறவினர்கள் உடனடியாக வீட்டிற்கு வந்து சேர இயலாத நிலை உள்ளது. இந்நிலையில், இறந்தவரின் உடலை, இரண்டு, மூன்று நாட்கள் பாதுகாப்பாக வைக்க வேண்டியுள்ளது.

சமூகத்தில் உள்ள மேற்கண்ட நிலையினை கருத்தில் கொண்டு *8* முதல் *10* உடல்களை வைக்க, இறந்தவர்களின் உடல்களை *(*சவக்கிடங்கு*)* சேமித்து வைக்க, டீப்ஃப்ரீசர் *(Deep Freezer)* பெட்டிகளை அமைக்க மாண்புமிகு மேயர் அவர்கள் *2025 – 2026* ஆம் ஆண்டு நிதி நிலையில் அறிவிப்பு வெளியிட்டார்கள். எனவே, மண்டலம்-*05* மூலகொத்தளத்தில் உள்ள மயான பூமியை ஒட்டி, *2400* சதுர அடி பரப்பளவில் நீத்தார் உடல் பாதுகாப்பு மையம் தனியார் பங்களிப்பு *(PPP)* முறையில் செயல்படுத்த கண்டறியப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு டீப்ஃப்ரீசர் பாக்ஸ் *(Deep Frezer Box Facility)* அமைந்த பிணவறையை இயக்கும் நிபுணத்துவம் இல்லை, எனவே, பொதுத்தனியார் பங்களிப்பு முறையில் *(PPP Mode)* இறந்த உடல்களைச் சேமிப்பதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திட்டங்களின் சிறப்பம்சங்கள்:

1) ஆம்புலன்சில் உடல்களை மருத்துவமனை அல்லது வீட்டிலிருந்து தனியார் பிணவறைக்கு எடுத்துச் செல்ல சலுகையாளர் ஏற்பாடு செய்ய வேண்டும், அது தேவையான காலத்திற்கு வைக்கப்பட்டு பின்னர் அவர்களின் வீட்டிற்கு அல்லது மயானபூமிக்கு அனுப்பப்படும்.

2) இறந்த உடல்களின் சேமிப்பு (பிணவறை) ஆழமான உறைவிப்பான் சேமிப்பு வசதியுடன் முன் மொழியப்பட்டது, இது ஜெனரேட்டர் அறை, *EB* அறை மற்றும்

உபகரணங்கள் மற்றும் இரசாயனங்களுக்கான ஸ்டோர் மற்றும் வசதியைப் பராமரிக்க தேவையான மனிதவளம் போன்ற சேவைகளைக் கொண்டுள்ளது. இத்திட்டம் வெளிப்படைத்தன்மை மற்றும் காட்சி இணைப்பை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

3) சலுகையாளர், சேமிப்பு அலகுக்கான உள்கட்டமைப்பு மற்றும் இயந்திரங்களை அமைக்க வேண்டும் மற்றும் செயல்பாட்டு (மின்சாரம் உட்பட) மற்றும் நிதிப்பொறுப்புகள், உடல்களைச் சேகரிப்பதற்கான தளவாட ஏற்பாடுகள் மற்றும் தளத்திற்கு இறுதி பயனர் இடத்தை எளிதாக்குதல் ஆகியவை சலுகைதாரரின் முழுப்பொறுப்பாகும். செயல்பாட்டின் பிராண்டிங் பயிற்சி சலுகைதாரரிடம் மட்டுமே உள்ளது.

4) அதன்படி, உள்கட்டமைப்பு (2400 சதுரஅடி), உறைவிப்பான்பெட்டி, ஜெனரேட்டர், பர்னிச்சர் போன்ற குளிர்பதனக் கிடங்கு சாதனங்கள் உட்பட ரூ.90.00 எல் (ரூபாய் தொண்ணூறு இலட்சம் மட்டும்) முதலீட்டிற்காக தற்காலிக நிதி மாதிரி தயாரிக்கப்பட்டது.

சலுகைதாரரின் ஆலோசனையுடன் மண்டல அலுவலரால் நிர்ணயிக்கப்படும் பகுதியின் எல்லை வரையறுக்கப்படும் (முன்னுரிமை சாலையோரம் எதிர்கொள்ளும் வகையில்) மூலகொத்தளம் மயான நிலமானது தொகுதி எண் 28 புதிய சர்வே எண்.1802/1 இல் உள்ளது, நிலத்தின் பயன்பாடு சுடுகாட்டின் கீழ்வருகிறது. அதனால் நிலத்திற்கு வழிகாட்டி மதிப்பு இல்லை.

குத்தகை வாடகை திருத்தப்பட்டு, G.O.M.s.No.45, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன்படி ஆண்டுக்கு 3% என கணக்கிடப்படுகிறது. அருகிலுள்ள குடியிருப்பு நிலத்தின் வழிகாட்டி மதிப்பு ரூ. 1600/ச.அடி எனவே, ஒரு மாதத்திற்கு நிலத்திற்கு ரூ.10,000/- கணக்கீட்டில் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், பயனருக்கு மாதம் கட்டணமாக ரூ. 30,000/- என குறிப்பு எண்.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி வேலங்காடு மயானபூமியில் சலுகைதாரருக்கு முன் எடுக்கப்பட்ட ஒப்பத்தின் அடிப்படையில் மாதவாடகைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, சலுகையாளர் குறைந்தபட்ச சலுகைக் கட்டணமாக ரூ.30,000/- மாதம் ஒன்றுக்கு (நிலப்பயனர் கட்டணம் + ஆண்டுக்கு 10 உறைவிப்பான் பெட்டிகளுக்கான ராயல்டி கட்டணம்) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.

எனவே,

1) மூலகொத்தளம் மயானபூமியில் DN-53, மண்டலம்-05 இல் PPP முறையில் DBFOT மாதிரியில் இறந்த நபருக்கு ஆழ்கூள (நீத்தார்உடல்பாதுகாப்புமையம்) உறைவிப்பான் சேமிப்பு வசதியை அமைக்க, சலுகையாளரை தேர்ந்தெடுப்பதற்காக ரூ.90.00 இலட்சத்திற்கு நிர்வாகஅனுமதியும்.

2) மாதாந்திர வாடகை ரூ.30,000/- (நிலப்பயனர்கட்டணம் + ஆண்டுக்கு 10 உறைவிப்பான் பெட்டிக்கான ராயல்டி கட்டணம்) ஏற்றுக்கொள்வது, இது ஒரு

வருடத்திற்கான ஏல அளவுரு மற்றும் கட்டுமான காலம் மற்றும் 8 ஆண்டுகள் செயல்பாட்டு பராமரிப்பு காலம் ஆகும்.

3) மேலே உள்ள திட்டத்திற்கான RFP ஆவணத்தைஅங்கீகரிக்கவும்,

4) பொது தனியார் கூட்டு கொள்முதல் விதிகள், 2012ன் கீழ் டெண்டர்களில் தமிழ்நாடு வெளிப்படைத்தன்மையின்படி ஆன்லைன் ஒப்பம் அழைக்கவும்,

5) ஃப்ரீசருக்கு ராயல்டி கட்டணத்துடன் நிதி ஏலத்திற்கான ஏல அளவுருவைச் சேர்க்க மற்றும் 2400 சதுர அடிக்கு குத்தகை வாடகை விடவும்,

6) ஒரு நாளைக்கு அதிகபட்ச கட்டணமாக ஒரு நபருக்கு ரூ.3,500/- என்ற தொகையை உறைவிப்பான் சேமிப்பு வசதியை பெறுவதற்காக ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 5% உயர்த்தி பொதுமக்களிடம் வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.219/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 156/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.நக.எண்.பி1/0772/2025

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 479/2025 **பொருள் எண்.151**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - நீத்தார் உடல் பாதுகாப்பு மையம் - பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் வடிவமைப்பு கட்டுமானம் நிதி இயக்குதல் (ம) பராமரித்தல் மாதிரியில் உள்கட்டமைப்பை (DBFOT) (10 இறந்த நபர்களின் உடல்கள் வைப்பதற்கு) அமைக்க சலுகையாளர் தேர்வு - வார்டு - 174, மண்டலம் - 13 இல் பெசன்ட் நகர் மயான பூமி சவக்கிடங்கு சேமிப்பு வசதி அமைத்தல் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி பல்வேறு மண்டலங்களில் உள்ள *203* மயான பூமிகளில் பயோகேஸ், மின் தகன மேடை எல்பிஜி போன்ற பல்வேறு வகையான தகன மேடைகளை கொண்டுள்ளது. நகரங்கள் வேகமாக விரிவடைந்து வருவதால், அடுக்குமாடி கலாச்சாரமும் பன்மடங்கு வளர்ந்து வருகிறது. எந்த ஒரு மரணம் நடந்தாலும், இறந்தவர்களுக்கு உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அஞ்சலி செலுத்துவதற்கு, இறந்தவரின் உடலை ஓரிரு நாட்களுக்கு மேல் வைத்திருக்க, குடியிருப்புகளை பராமரிக்கும் சங்கங்கள் அனுமதிப்பதில்லை.

இந்நிலையில், வீட்டில் யாராவது இறந்தால், தொலைதூரத்திலோ, வெளியூர்களிலோ வசிக்கும் உறவினர்கள் உடனடியாக வீட்டிற்கு வந்து சேர இயலாத நிலை உள்ளது. இந்நிலையில், இறந்தவரின் உடலை, இரண்டு, மூன்று நாட்கள் பாதுகாப்பாக வைக்க வேண்டியுள்ளது.

சமூகத்தில் உள்ள மேற்கண்ட நிலையினை கருத்தில் கொண்டு *8* முதல் *10* உடல்களை வைக்க, இறந்தவர்களின் உடல்களை *(*சவக்கிடங்கு*)* சேமித்து வைக்க, டீப் ஃப்ரீசர் *(Deep Freezer)* பெட்டிகளை அமைக்க மாண்புமிகு மேயர் அவர்கள் *2025 – 2026* ஆம் ஆண்டு நிதி நிலையில் அறிவிப்பு வெளியிட்டார்கள். எனவே, மண்டலம் *-13* பெசன்ட் நகரில் உள்ள மயான பூமியை ஒட்டி, *2400* சதுர அடி பரப்பளவில் நீத்தார் உடல் பாதுகாப்பு மையம் தனியார் பங்களிப்பு *(PPP)* முறையில் செயல்படுத்த கண்டறியப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு டீப் ஃப்ரீசர் பாக்ஸ் *(Deep Freezer Box Facility)* அமைந்த பிணவறையை இயக்கும் நிபுணத்துவம் இல்லை. எனவே, பொதுத் தனியார் பங்களிப்பு முறையில் *(PPP Mode)* இறந்த உடல்களை சேமிப்பதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திட்டங்களின் சிறப்பம்சங்கள்:

1. ஆம்புலன்சில் உடல்களை மருத்துவமனை அல்லது வீட்டிலிருந்து தனியார் பிணவறைக்கு எடுத்து செல்ல சலுகையாளர் ஏற்பாடு செய்ய வேண்டும். அது தேவையான காலத்திற்கு வைக்கப்பட்டு பின்னர் அவர்களின் வீட்டிற்கு அல்லது மயான பூமிக்கு அனுப்பப்படும்.

2. இறந்த உடல்களின் சேமிப்பு (பிணவறை) ஆழமான உறைவிப்பான் சேமிப்பு வசதியுடன் முன்மொழியப்பட்டது, இது ஜெனரேட்டர் அறை, EB அறை மற்றும் உபகரணங்கள் மற்றும் இரசாயனங்களுக்கான ஸ்டோர் மற்றும் வசதியைப் பராமரிக்க தேவையான மனிதவளம் போன்ற சேவைகளைக் கொண்டுள்ளது. இத்திட்டம் வெளிப்படைத்தன்மை மற்றும் காட்சி இணைப்பை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
3. சலுகையாளர், சேமிப்பு அலகுக்கான உள்கட்டமைப்பு மற்றும் இயந்திரங்களை அமைக்க வேண்டும் மற்றும் செயல்பாட்டு (மின்சாரம் உட்பட) மற்றும் நிதிப் பொறுப்புகள், உடல்களைச் சேகரிப்பதற்கான தளவாட ஏற்பாடுகள் மற்றும் தளத்திற்கு இறுதி பயனர் இடத்தை எளிதாக்குதல் ஆகியவை சலுகைதாரரின் முழுப் பொறுப்பாகும் செயல்பாட்டின் பிராண்டிங் பயிற்சி சலுகைதாரரிடம் மட்டுமே உள்ளது.
4. அதன்படி, உள்கட்டமைப்பு (2400 சதுர அடி), உறைவிப்பான் பெட்டி, ஜெனரேட்டர், பர்னிச்சர் போன்ற குளிர்பதனக் கிடங்கு சாதனங்கள் உட்பட ரூ.90.00 இலட்சம் (ரூபாய் தொண்ணூறு லட்சம் மட்டும்) முதலீட்டிற்காக தற்காலிக நிதி மாதிரி தயாரிக்கப்பட்டது.
5. சலுகைதாரரின் ஆலோசனையுடன் மண்டல அலுவலரால் நிர்ணயிக்கப்படும் பகுதியின் எல்லை வரையறுக்கப்படும் (முன்னுரிமை சாலையோரம் எதிர்கொள்ளும் வகையில்) பெசன்ட் நகர் மயான நிலமானது தொகுதி எண் 0040 புதிய சர்வே எண்.5/124pt இல் உள்ளது, நிலத்தின் பயன்பாடு சுடுகாட்டின் கீழ் வருகிறது. அதனால் நிலத்திற்கு வழிகாட்டி மதிப்பு இல்லை.
6. குத்தகை வாடகை திருத்தப்பட்டு, G.O.M.s.No.45, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் படி ஆண்டுக்கு 3% என கணக்கிடப்படுகிறது. அருகிலுள்ள குடியிருப்பு நிலத்தின் வழிகாட்டி மதிப்பு ரூ. 6000/ச.அடி எனவே ஒரு மாதத்திற்கு நிலத்திற்கு ரூ.25,000/- கணக்கீட்டில் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், பயனருக்கு மாதம் கட்டணமாக ரூ.30,000/- என குறிப்பு எண்.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி வேலங்காடு மயான பூமியில் சலுகைதாரருக்கு முன் எடுக்கப்பட்ட ஒப்பத்தின் அடிப்படையில் மாத வாடகைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
7. எனவே, சலுகையாளர் குறைந்தபட்ச சலுகைக் கட்டணமாக ரூ. 30,000/- மாதம் ஒன்றுக்கு (நிலப் பயனர் கட்டணம் + ஆண்டுக்கு 10 உறைவிப்பான் பெட்டிகளுக்கான ராயல்டி கட்டணம்) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.

எனவே,

1. பெசன்ட் நகர் மயான பூமியில் DN-174, மண்டலம்-13 இல் PPP முறையில் DBFOT மாதிரியில் இறந்த நபருக்கு ஆழ்கூள (நீத்தார் உடல் பாதுகாப்பு

மையம்) உறைவிப்பான் சேமிப்பு வசதியை அமைக்க, சலுகையாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக ரூ.90.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும்,

2. மாதாந்திர வாடகை ரூ.30,000/- (நிலப் பயனர் கட்டணம் + ஆண்டுக்கு 10 உறைவிப்பான் பெட்டிக்கான ராயல்டி கட்டணம்) ஏற்றுக்கொள்வது, இது ஒரு வருடத்திற்கான ஏல அளவுரு மற்றும் கட்டுமான காலம் மற்றும் 8 ஆண்டுகள் செயல்பாட்டு பராமரிப்பு காலம் ஆகும்.
3. மேலே உள்ள திட்டத்திற்கான RFP ஆவணத்தை அங்கீகரிக்கவும்,
4. பொது தனியார் கூட்டு கொள்முதல் விதிகள்,2012ன் கீழ் டெண்டர்களில் தமிழ்நாடு வெளிப்படைத்தன்மையின்படி ஆன்லைன் ஒப்பம் அழைக்கவும்,
5. ஃப்ரீசருக்கு ராயல்டி கட்டணத்துடன் நிதி ஏலத்திற்கான ஏல அளவுருவை சேர்க்க மற்றும் 2400 சதுர அடிக்கு குத்தகை வாடகை விடவும்,
6. ஒரு நாளைக்கு அதிகபட்ச கட்டணமாக ஒரு நபருக்கு ரூ 3,500/- என்ற தொகையை உறைவிப்பான் சேமிப்பு வசதியை பெறுவதற்காக ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 5% உயர்த்தி பொது மக்களிடம் வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.218/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 155/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.நக.எண்.பி1/0840/2025

ஆணையர் அவர்களின் 20.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 480/2025 **பொருள் எண்.152**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம்-05,கோட்டம்-62, அருணாச்சலத் தெரு, சிந்தாதிரிபேட்டையில் மாநகர ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணிக்கு 2024-2025ஆம் ஆண்டின் விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

மாண்புமிகு மேயர்அவர்களின் ***2025 - 2026***ஆம் ஆண்டின் நிதிநிலை அறிவிப்பில் மண்டலம்-05, கோட்டம்- 62, அருணாச்சலத் தெரு, சிந்தாதிரிபேட்டையில் **மாநகரஆரம்ப சுகாதார நிலையம்** கட்டும் பணியினை மேற்கொள்ள அறிவித்தார்கள்.

இது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது, அதன்விவரம் பின்வருமாறு;

1	பணியின் பெயர்	மண்டலம்-05, கோட்டம்- 62, அருணாச்சலத் தெரு, சிந்தாதிரிபேட்டையில் **மாநகர ஆரம்ப சுகாதார நிலையம்** கட்டும் பணி.
2	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 05
3	மதிப்பீட்டின் தொகை விவரம்	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 3,65,13,457.60
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ 65,72,422.37
	(இ) த.நா.க.தொ.ந.வா.1%	ரூ 3,65,134.58
	(ஈ) கலந்தாளுநர் கட்டணம் 2.50%	ரூ 9,12,836.44
	(உ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 6,36,149.01
	மொத்தம்(Rounded Off)	**ரூ.** 4,50,00,000.00
4	நிதியின் தன்மை	Health Department Building (20 - 28 - 00 / 412-400-301)
5	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	**ரூ.** 4,50,00,000.00

மேற்குறிப்பிட்டுள்ள மண்டலம்-05, கோட்டம்-62, அருணாச்சலத் தெரு, சிந்தாதிரிபேட்டையில் மாநகர ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் செலவீனத்தை Health Department Building (20 - 28 - 00 / 412-400-301) மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. **மண்டலம்-05, கோட்டம்- 62, அருணாச்சலத் தெரு, சிந்தாதிரிபேட்டையில் மாநகர ஆரம்ப சுகாதார நிலையம்** கட்டும் பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள **ரூ**.4,50,00,000.00 **(ரூபாய்** நான்கு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்)க்கான திட்ட மதிப்பீட்டிற்கு **நிர்வாக அனுமதி** வேண்டியும்,
2. **மேற்கண்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவீனத்தினை** Health Department Building (20 - 28 - 00 / 412-400-301) **நிதியில் ஒதுக்கீடு அளிக்கவும்,**
3. **மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,**

மேற்கண்ட 1 **முதல்** 3 **வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.**

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.225/2025, நாள். 23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது".

25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 159/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

பே.த.சா.து.ந.க.எண்.பி3 / 1403 / 2025

ஆணையர் அவர்களின் 23.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 481 / 2025 **பொருள் எண்.153**

பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து தட சாலைகள் துறை - பல்வேறு மண்டலங்களில் உள்ள சாலைகளில் - பேருந்து தட சாலை மற்றும் உட்புற சாலைகளில் தார் சாலை, சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் இன்டர் லாக்கிங் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணிக்கு பல்வேறு நிதி நிறுவனங்களின் மூலமாக கடனாக மற்றும் மானியமாக நிதி பெற மன்றத்தின் அனுமதி.

அரசாணை *(D)* எண். *130*, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்- *10.03.2025*.ன்படி *025-2026* ஆம் ஆண்டு பல்வேறு நிதி திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது- இதில் ரூ.*100* கோடி தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டம் *(TNUIFSL)* நிதியின் கீழ் மற்றும் ரூ.*80* கோடி தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் *(TUFIDCO)* நிதியின் கீழ் கடனாக வழங்க அனுமதி அளிக்கப்பட்டு மண்டலம் *1* முதல் *15* வரை உள்ள உட்புற மற்றும் பேருந்து தட சாலைகளை மேம்படுத்த மதிப்பீடு தயார் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களில் மதிப்பீடுகள் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட திட்டத்தில் விடுபட்ட சாலைகளில் தார்சாலை / சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் / இன்டர் லாக்கிங் பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் பணிகளுக்காக ரூ.*120* கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்ட *(TNUDP)* நிதியின் கீழ் நிதி பெற்று பணிகளை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. அரசாணை *(D)* எண். *130*, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்- *10.03.2025* யின் படி ரூ.*100* கோடி தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டம் *(TNUIFSL)* நிதியின் கீழ் மற்றும் ரூ.*80* கோடி தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் *(TUFIDCO)* நிதியின் கீழ் கடனாக பெற அனுமதி பெறவும்,
2. பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.*120* கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் *(TNUDP)* சாலை பணிகளை மேற்கொள்ள அனுமதி பெறவும்,
3. மேற்குறிப்பிட்ட பணிக்கான செலவினத்தை பேருந்து தட சாலைகள் துறை கணக்கு குறியீட்டு எண் *202108*, கணக்கு தலைப்பு எண் *412-400-801 BRR - Blacktopped* கீழ் நிதி ஒதுக்கீடு பெறவும்,

4. நிதி நிர்வாக பிரிவின் மூலமாக பேருந்து தட சாலைகள் துறை கணக்கு குறியீட்டு எண் *202108*, கணக்கு தலைப்பு எண் *412-400-801 BRR - Blacktopped* கீழ் நிதி ஒதுக்கீடு செய்திடவும்,
5. மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு பல்வேறு நிதி நிறுவனங்களின் மூலம் நிதியினை பெறவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.259 /2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.182/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

பே.த.சா.து.நக.எண்.பி3 / 1377 / 2025

ஆணையர் அவர்களின் 22.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 482 / 2025 **பொருள் எண்.154**

பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து தட சாலைகள் துறை - 2025-26 ஆம் ஆண்டு பல்வேறு மண்டலங்களில் உள்ள பேருந்து தட சாலைகளில் தார் சாலை மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் 2024-25 ஆம் ஆண்டு விலைபட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு தனித்தனியாக நிர்வாக அனுமதி மற்றும் மின்னணு ஒப்பம் கோர அனுமதி.

அரசாணை *(D)* எண். *130*, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்- *10.03.2025*ன்படி *2025-2026* ஆம் ஆண்டு ரூ.*96* கோடி மதிப்பீட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி பல்வேறு மண்டலங்களில் உள்ள பேருந்து தட சாலைகளில் *2024-25* ஆம் ஆண்டு விலைபட்டியலின்படி தார் சாலை மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் விவரம் பின்வருமாறு.

Sl.No	Zone	Div No	Name of the Road	Length (M)	Estimate Amount Rs in lakhs
1	BRR-N	42	Kailasam Street (CC)	370.00	235.00
2	BRR- C	93	Padikuppam Main Road	1900	208.80
3	BRR- C	102&103	Anna Nagar 2nd Avenue (RHS)	2100	331.20
4	BRR- C	102&103	Anna Nagar 2nd Avenue (LHS)	2100	322.70
5	BRR- C	99 &100	Anna Nagar 4th Avenue	2000	316.10
6	BRR- C	96	Konnur High Road(Part)(Mettu Street to ICF Signal)	1800	248.10
7	BRR- C	123&124	St Marys Road	1500	248.00
8	BRR-S	169	Sardar Patel Road (Part)	1320	252.69
9	BRR-S		Perungudi Station Road (From Perungudi MRTS Railway Station to MGR Salai)	1400	334.80

எனவே,

1. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் உள்ள மதிப்பீட்டுக்கு தனித்தனியே நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பம் கோருவதற்கான அனுமதியும்,
2. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் உள்ள பணிக்கு செலவினத்தை பேருந்து தட சாலைகள் துறை கணக்கு குறியீட்டு எண் *202108*, கணக்கு தலைப்பு எண் *412-400-801 BRR - Blacktopped* கீழ் நிதி ஒதுக்கீடு பெறவும்,
3. நிதி நிர்வாக பிரிவின் மூலமாக பேருந்து தட சாலைகள் துறை கணக்கு குறியீட்டு எண் *202108*, கணக்கு தலைப்பு எண் *412-400-801 BRR - Blacktopped* கீழ் நிதி ஒதுக்கீடு செய்திடவும்

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.260/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”

******

பே.த.சா.து.ந.க.எண்.பி3 / 1378 / 2025

ஆணையர் அவர்களின் 22.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 483 / 2025 **பொருள் எண்.155**

பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து தட சாலைகள் துறை - பல்வேறு மண்டலங்களில் உள்ள சாலைகளில் பேருந்து தட தார் சாலைகள் அமைக்கும் பணிக்கு தனித்தனியாக நிர்வாக அனுமதி மற்றும் மின்னணு ஒப்பம் கோர அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

அரசாணை *(D)* எண். *130*, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்- *10.03.2025*ன்படி *2025-2026* ஆம் ஆண்டு ரூ.*96* கோடி மதிப்பீட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி பல்வேறு மண்டலங்களில் உள்ள பேருந்து தட சாலைகளில் *2024-25* ஆம் ஆண்டு விலைபட்டியலின்படி தார் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் விவரம் பின்வருமாறு.

Sl.No	Zone	Name of the Road	Length (M)	Estimate Amount Rs in lakhs
1	BRR-S	Perungudi Station Road (From Velachery towards Perungudi MRTS Railway Station)	2000	477.80

எனவே,

1. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் உள்ள மதிப்பீட்டுக்கு நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பம் கோருவதற்கான அனுமதியும்,
2. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் உள்ள பணிக்கு செலவினத்தை பேருந்து தட சாலைகள் துறை கணக்கு குறியீட்டு எண் *202108*, கணக்கு தலைப்பு எண் *412-400-801 BRR - Blacktopped* கீழ் நிதி ஒதுக்கீடு பெறவும்,
3. நிதி நிர்வாக பிரிவின் மூலமாக பேருந்து தட சாலைகள் துறை கணக்கு குறியீட்டு எண் *202108*, கணக்கு தலைப்பு எண் *412-400-801 BRR - Blacktopped* கீழ் நிதி ஒதுக்கீடு செய்திடவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.261 /2025, நாள். 23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது".

“25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 183/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”

******

பே.சா.து.ந.க.எண்.பி4 / 4871-1 / 2024

ஆணையர் அவர்களின் 10.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 484 / 2025 **பொருள் எண்.156**

பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து தட சாலைகள் துறை - மண்டலம் 1 முதல் 5 வரை உள்ள பேருந்து சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட்டால் ஆன பூந்தொட்டிகள் மற்றும் சாலை மத்திய தடுப்பு சாலையோரங்களில் அமைக்கும் பணிக்கு ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். GURUMURTHY ENGINEERING ENTREPRISES அவர்களுக்கு பணியினை வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் *23.12.2024* நாளிட்ட குறிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறை மூலம் மண்டலம் *1* முதல் *5* வரை உள்ள பேருந்து சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட்டால் ஆன பூந்தொட்டிகள் மற்றும் சாலை மத்திய தடுப்பு சாலையோரங்களில் அமைக்கும் பணிக்கு பணி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டன.

இதன்படி மண்டலம் *1* முதல் *5* வரை உள்ள பேருந்து சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட்டால் ஆன பூந்தொட்டிகள் மற்றும் சாலை மத்திய தடுப்பு சாலையோரங்களில் அமைக்கும் பணிக்கு "இரண்டு உறைகள்" என்ற முறையில் ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு, ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாளாக *18.02.2025* என நிர்ணயிக்கப்பட்டு தமிழ் நாளிதழ் "தினச்செய்தி" மற்றும் ஆங்கிலம் நாளிதழ் "*THE TIMES OF INDIA* " ஆகியவற்றில் *23.01.2025* அன்றும், பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் *23.01.2025* அன்றும் பிரசுரிக்கப்பட்டது. *18.02.2025* அன்று திறக்கப்பட்ட ஒப்பத்தில் எவரும் பங்கேற்காததால், *07.03.2025* அன்று தள்ளி வைக்கப்பட்டது. *07.03.2025* அன்றும் எவரும் பங்கேற்காததால் ஒப்பம் *12.03.2025* அன்றும் தள்ளிவைக்கப்பட்டு ஒப்பம் *12.03.2025* அன்று திறக்கப்பட்டது.

ஒப்ப நாளான *12.03.2025* அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டு, தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் *18.03.2025* அன்று திறக்கப்பட்டது. ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை-I

S. No (1)	File No / BRR.C.No. (2)	Zone (3)	No.of Bidder Participated (4)	Name of the Bidder (L1) (5)	Work Value Including GST 18% (Rs.) (6)	Quoted % (7)	Quoted Amount (8)
1	பி4/4871/2025-1	1 TO 5	2	THOMAS IYADURAI INFRASTRUCTURE PVT LTD IP ADDRESS :49.204.140.4	61270266.61	(+)1.79%	62367004.38
2	பி4/4871/2025-1	1 TO 5		GURUMURTHY ENGINEERING ENTERPRISES IP ADDRESS :106.51.175.71		(-)5.20%	58084212.75

குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஒப்பப் புள்ளியானது *2024-25*ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் குறைவாக இருப்பினும் மேலும் விலைகுறைப்பு செய்வதற்கு ஒப்பந்ததாரரிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது, ஆனால் ஒப்பந்ததாரர் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என்று அளித்துள்ள கடிதத்தின்படி ஒப்பத் தொகையின் விவரம் பின் வருமாறு பட்டியலிடப்படுகிறது,

அட்டவணை -II

S. No (1)	File No / BRR.C.No. (2)	Zone (3)	No. of Bidder Participated (4)	Name of the Bidder (L1) (5)	Work Value Including GST 18% (Rs.) (6)	Quoted % (7)	% After Negotiation (8)
1	பி4/4871/2025-1	1 TO 5	2	GURUMURTHY ENGINEERING ENTERPRISES IP ADDRESS :106.51.175.71	61270266.61	(-)5.20%	(-)5.20%

மேற்காணும் அட்டவணை-IIல் உள்ளவாறு, ஒப்பந்ததாரர் அளித்த விலைக்குறைப்பு, கீழ்வரும் காரணங்களின் அடிப்படையில் ஒப்ப கூர்ந்து ஆராயும் குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது, இந்த ஒப்பப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு *(e-tender)* முறையில் கலந்து கொண்ட ஒப்பப்புள்ளி ஆகும், சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால், விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்ன் ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் உள்ளது,

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து அளித்துள்ள விலைப்புள்ளிகளுக்கு பணியினை வழங்க *21.03.2025* அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கப்பட்டது, அதன் விவரம் அட்டவணை -3ல் பின்வருமாறு,

அட்டவணை -III

S. No (1)	File No / BRR.C.No. (2)	Zone (3)	No. of Bidder Participated (4)	Name of the Bidder (L1) (5)	SOR 2024-25 After Negotiation % (6)	SOR 2024-25 After Negotiation Amt (7)
1	பி4/4871/2025-1	1 TO 5	2	GURUMURTHY ENGINEERING ENTERPRISES IP ADDRESS:106.51.175.71	(-)5.20%	5,80,84,212.75

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து தட சாலைகள் துறை, மண்டலம் *1* முதல் *5* வரை உள்ள பேருந்து சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட்டால் ஆன பூந்தொட்டிகள் சாலை மத்திய தடுப்பு மற்றும் சாலையோரங்களில் அமைக்கும் பணிக்கு, கோரப்பட்ட ஒப்ப புள்ளிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த

ஒப்பந்தாரர்திருவாளர். GURUMURTHY ENGINEERING ENTERPRISES அவர்களுக்கு பணியினை வழங்கவும்,

2. குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு மேற்கண்ட அட்டவணை- 3மற்றும் கலம் எண்-6ல் உள்ள ஒப்பப்புள்ளி சதவிகிதம் மற்றும் கலம் எண்-7ல் உள்ள ஒப்பத் தொகைக்கு (18% GST வரி சேர்த்து) பணியினை வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.267 /2025, நாள். 23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டிசமர்ப்பிக்கப்படுகிறது".

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 186/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

பே.த.சா.து.ந.க.எண்.பி3 / 0720 / 2024

ஆணையர் அவர்களின் 23.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 485 / 2025 **பொருள் எண்.157**

பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து தட சாலைகள் துறை - மண்டலம் – XV, வார்டு-197, பகுதி-44ல் பக்திவேதாந்தா சாலை முதல் Cattle Bound shed வரை (Approach road for CNG plant & Cattle Bound Shed) ILP சாலை அமைக்கும் பணிக்கு குறைந்த ஒப்பபுள்ளி அளித்த திருவாளர்கள். Gurumurthy Engineering Enterprises அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

ஆணையாளர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் *18.02.2025* ஆணையின் படி, மண்டலம் –*XV*, வார்டு-*197*, பகுதி-*44*ல் பக்திவேதாந்தா சாலை முதல் *Cattle Bound shed* வரை *(Approach road for CNG plant & Cattle Bound Shed) ILP* சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டன.

இதன்படி மண்டலம் –*XV*, வார்டு-*197*, பகுதி-*44*ல் பக்திவேதாந்தா சாலை முதல் *Cattle Bound shed* வரை *(Approach road for CNG plant & Cattle Bound Shed) ILP* சாலை அமைக்கும் பணிக்கு *"*இரண்டு உறைகள்*"* என்ற முறையில் ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு, ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாளாக *18.03.2025* என நிர்ணயிக்கப்பட்டு தமிழ் நாளிதழ் *"*தினமலர்*"* மற்றும் ஆங்கிலம் நாளிதழ் *"Deccan Chronicle"* ஆகியவற்றில் *11.03.2025* அன்றும், பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் *13.03.2025* அன்றும் பிரசுரிக்கப்பட்டது.

ஒப்ப நாளான *18.03.2025* அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டு, தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் *19.03.2025* அன்று திறக்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி விவரங்கள் பின்வருமாறு:

(அட்டவணை-I)

S. No (1)	File No / BRR.C.No. (2)	Zone (3)	No.of Bidder Participated (4)	Name of the Bidder (L1) (5)	Work Value Including GST18% (Rs.) (6)	Quoted % (7)	Quoted Amount (8)
1	B3/0720/2025	XV	2	Thomas Iyadurai Infrastructure pvt ltd	68662743. 50	(+)12.00%	76902272.72
2				Gurumurthy Engineering Enterprises		(+)9.00%	74842390.42

மேற்படி பணிக்கு விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஒப்பப் புள்ளியானது *2023-24*ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, ஒப்ப புள்ளிகள் அளித்த ஒப்பந்ததாரரிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து அளித்துள்ள கடிதத்தின் படி, விலைக்குறைப்புக்கான ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

அட்டவணை -II

S. No (1)	File No / BRR.C.No. (2)	Zone (3)	Name of the Bidder (L1) (4)	Work Value Including GST 18% (Rs.) (5)	Quoted % (6)	% After Negotiation (7)
1	B3/0720/2025	XV	Gurumurthy Engineering Enterprises	68662743. 50	(+) 9.00%	(+)4.90%

மேற்படி பணிக்கு ஒப்பந்ததாரர் அளித்துள்ள விலைப்புள்ளியின் மீது, மேலும் விலைக் குறைப்பு அளித்திட கோரி ஒப்பந்ததாரருக்கு கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து அளித்துள்ள கடிதத்தின் படி, விலைக்குறைப்புக்கான ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

அட்டவணை -III

S. No (1)	File No / BRR.C.No. (2)	Zone (3)	Name of the Bidder (L1) (4)	Work Value Including GST 18% (Rs.) (5)	Quoted % (6)	% 1st After Negotiation (7)	% 2nd After Negotiation (8)
1	B3/0720/2025	XV	Gurumurthy Engineering Enterprises	68662743. 50	(+) 9.00%	(+)4.90%	(+)4.50%

மேற்காணும் அட்டவணை-IIல் உள்ளவாறு, ஒப்பந்ததாரர் அளித்த விலைக்குறைப்பு, கீழ்வரும் காரணங்களின் அடிப்படையில் ஒப்ப கூர்ந்து ஆராயும் குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு *(e-tender)* முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால், விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் உள்ளது.

மேலும் ஒப்பந்ததாரர், தங்கள் விலைக்குறைப்பு கடிதத்தில், மூலப்பொருள்கள் விலை ஏற்றம், தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, போக்குவரத்து வாகன செலவு மற்றும் சுங்க சாலை கட்டணம் உயர்வினை கருத்தில் கொண்டு பணிகள் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து அளித்துள்ள விலைப்புள்ளிகளுக்கு பணியினை வழங்க *07.04.2025* அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கப்பட்டது. அதன் விவரம் அட்டவணை -3ல் பின்வருமாறு.

அட்டவணை - *IV*

S. No (1)	File No / BRR.C.No. (2)	Zone (3)	No.of Work (4)	Name of the Bidder (L1) (5)	SOR 2023-24 After Negotiation % (6)	SOR 2023-24 After Negotiation Amt (7)
1	B3/0720/2025	XV	Forming and laying of ILP Road on approach to CNG Plant & cattle bound shed (from junction Bakthivedanta salai (B-Canal Bund) to Cattle bound shed) in Dn-197, Unit-44, Zone-15	Gurumurthy Engineering Enterprises	(+) 4.50%	71752566.96

எனவே,

1. **மண்டலம் –XV, வார்டு-197, பகுதி-44ல் பக்திவேதாந்தா சாலை முதல் *Cattle Bound shed* வரை** (Approach road for CNG plant & Cattle Bound Shed) ILP **சாலை அமைக்கும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள்.** GurumurthyEngineering Enterprises **அவர்களுக்கு ரூ.7,17,52,566.96 (ரூபாய் ஏழு கோடியே பதினேழு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து ஐநூற்று அறுபத்தி ஆறு மற்றும் தொண்ணூற்று ஆறு பைசா மட்டும்)** (18% GST **வரி சேர்த்து) பணியினை வழங்கவும்,**
2. **மேற்காணும் பணிகளுக்கான நிதியினை** 412-400-802 Blocktopped Interior Roads**ல் மண்டல அளவில் ஒப்பந்ததார்களுக்கு பட்டி தீர்வு செய்யவும் ஆணை வேண்டப்படுகிறது.**

மேற்கண்ட 1 **மற்றும்** 2 **ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**

> "23.04.2025 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.264 /2025, நாள். 23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டிசமர்ப்பிக்கப்படுகிறது**".
>
4. பணி ஆணை வழங்கப்பட்ட பின் இப்பணிகளை வட்டார அலுவலகம் (வடக்கு) மூலம் கண்காணிக்கவும் மற்றும் அனைத்து மண்டலங்களிலிருந்து செயல்திறன் சான்றிதழ்கள் பெற்று வட்டார மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) மூலம் பட்டியை தீர்க்கவும்.

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.079/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 187/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தி.க.மே.து.ந.க.எண்.அ7 / 4640 / 2023

ஆணையர் அவர்களின் 19.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 493 / 2025 **பொருள் எண்.165**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - பொது தனியார் கூட்டாண்மையில் வடிவமைத்தல், கட்டுதல், நிதி, இயக்குதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் என்ற (DBFOT) ஒப்ப முறையில் மாநகரத்தை சுத்தம் செய்யும் திட்டம்: மண்டலம் - 5 மற்றும் 6 பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வது, தெரு துப்புரவு கழிவுகள் (தெரு துப்புரவு கழிவுகள் அகற்றும் நடவடிக்கைகள் உட்பட), தோட்டக்கழிவுகள் அபாயகரமான கழிவுகளை சேகரித்தல் மற்றும் சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு செயலாக்க வசதி/ குப்பைக்கொட்டும் வளாகம் (தொகுப்பு - 6) கொண்டு சேர்த்தல் - இத்திட்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர், Consortium of Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited. அவர்களின் இறுதி ஒப்பத் தொகையான முதல் வருடத்திற்கான செயலாக்க கட்டணம் (IAQ) ரூ.276.00 கோடியினை அதற்கான குழுவின் பரிந்துரையின்படி ஏற்கவும் மற்றும் இத்திட்டத்திற்கான பணியாணை ஒப்பந்ததாரருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களில் 11 மண்டலங்கள் ஏற்கனவே தனியார் மயமாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. மேலும் இந்த 11 தனியார் மயமாக்கப்பட்ட மண்டலங்களில் துப்புரவு பணிகளின் செயல்பாடு சேவை வழங்கல் மற்றும் திருப்திகரமான செயல் திறனைக் கண்டு, பொதுமக்கள் / RWA மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மண்டலத்தில் சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை சேவைகளை அதே தரத்தில் மண்டலம்-5 மற்றும் 6 ல் எதிர்பார்க்கப்படுவது தெரிய வருகிறது.

எனவே, மண்டலம்-5 & 6ன் துப்புரவு பணியினை தனியார் மயமாக்க முடிவு செய்யப்பட்டது. மண்டலம்-5 & 6ல் அதிக மக்கள் தொகை அடர்த்தி மற்றும் அதிகமாக வந்து செல்வோர் மக்கள் எண்ணிக்கை, குறுகிய சாலைகள், தெருக்கள் மற்றும் அதிக எண்ணிக்கையிலான அரசு அலுவலகங்களான தலைமை செயலகம், மாண்புமிகு உயர்நீதிமன்றம், ராஜீவ் காந்தி பொது மருத்துவமனை, மத்திய ரயில்வே நிலையம், ரிப்பன் கட்டிடம் உட்பட முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் உள்ளது. சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை சேவைகளின் தரத்தை மேம்படுத்தவும், சேவையின் விலை குறைய வாய்ப்புள்ளதாலும் 5 மற்றும் 6 மண்டலங்களில் தூய்மைப்பணி நடவடிக்கைகளை தனியார் மயமாக்குவது என முடிவு செய்யப்பட்டது.

2021-2022ஆம் ஆண்டுக்கான மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கொள்கை குறிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மையினை மேம்படுத்த தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின், 12.05.2022 நாளிட்ட அறிவுறுத்தலின்படி, கொடுங்கையூரில் ஒருங்கிணைந்த கழிவுகளை செயலாக்குவதற்கும் மற்றும் மறுசுழற்சி செய்வதற்கும் தகுந்த வசதிகளை நிறுவுவதற்கும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம் 5 & 6 பகுதிகளில் திடக்கழிவு சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வது குறித்து சாத்தியக்கூறு மதிப்பீட்டை மேற்கொள்ளவும் பரிவர்த்தனை ஆலோசனை சேவைகளை வழங்கவும் தொழில்நுட்ப ஆலோசகர் மற்றும் பரிவர்த்தனை ஆலோசகர் M/s.SSIA மற்றும் M/s.Pollucare Engineers India Private Limited கூட்டமைப்பு நிறுவனம் (Consortium) தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் லிமிடெட் (TNUIFSL) மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் இப்பணிக்காக நியமனம் செய்யப்பட்டார்கள்.

இத்திட்ட பணிக்கான இறுதி விரிவான திட்ட சாத்திய கூறு அறிக்கை (DFR) நிபுணர் குழுவால் 05.06.2023 அன்று அங்கீகரிக்கப்பட்டது.

மேலும், அங்கீகரிக்கப்பட்ட இறுதி விரிவான திட்ட சாத்திய கூறு அறிக்கை (DFR) திட்ட கட்டமைப்பு மற்றும் திட்டச் செலவுக்கான ஒப்புதலுக்காக தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு (TNIDB) 24.08.2023 நாளிட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. திட்ட கட்டமைப்பு மற்றும் மதிப்பீட்டுடன் கூடிய இறுதி விரிவான திட்ட சாத்திய கூறு அறிக்கைக்கு (DFR) 17.11.2023 அன்று தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் (TNIDB) ஒப்புதல் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் TNIDB ஒப்புதலுக்கு பின், இத்திட்டப் பணிக்கு அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறுவதற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

அரசாணை (நிலை) எண்.41, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC.I), நாள்.06.03.2024-ன்படி 10 ஆண்டு திட்ட காலத்திற்கான இத்திட்ட பணியானது பொது தனியார் கூட்டாண்மையில் (PPP) வடிவமைத்தல், கட்டுதல், நிதி, இயக்குதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் என்ற (DBFOT) ஒப்ப முறையில் மேற்கொள்ள இத்திட்ட பணிக்கு அரசிடமிருந்து ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், ஒப்பம் இறுதி செய்ததின் அடிப்படையில் சரியான நிதித் தேவை மற்றும் கட்டமைப்புக்கான இறுதி அனுமதி வழங்கப்படும் என்று அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவரங்கள்	மண்டலம்-5	மண்டலம்-6	மொத்தம்
மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பு)	6,19,440	6,47,580	12,67,020
மக்கள் தொகை (2023) (குடியிருப்போர்)	8,25,429	8,62,274	16,87,703
மக்கள் தொகை (2023) (Resident+ Floating)	9,90,515	9,05,388	18,95,903
மக்கள் தொகை (2032) (குடியிருப்போர்)	10,37,950	10,84,285	21,22,235
மக்கள் தொகை (2032) (Resident+ Floating)	12,45,540	11,38,499	23,84,039
பரப்பளவு (சதுர.கி.மீ)	21.81	17.11	38.92
சாலையின் நீளம் (கி.மீ)	257.23	380.27	637.50

விவரங்கள்	மண்டலம்-5	மண்டலம்-6	மொத்தம்
மக்கள் தொகை அடர்த்தி (2011) (நபர்கள்/ சதுர.கி.மீ)	28,402	37,848	33,125 (சராசரி)
மக்கள் தொகை அடர்த்தி (2023) (நபர்கள் / சதுர.கி.மீ)	37,846	50,396	44,121 (சராசரி)
மக்கள் தொகை அடர்த்தி (2032) (நபர்கள் / சதுர.கி.மீ.)	47,590	63,371	55,481 (சராசரி)
திடக்கழிவு உருவாக்கம் 2023 (மெ.டன்/நாள்)	683	561	1,244
திடக்கழிவு உருவாக்கம் 2032 (மெ.டன்/நாள்)	768	631	1,398
கோட்டத்தில் இருந்து கொடுங்கையூர் குப்பை அகற்றும் வளாகம் வரை உள்ள சராசரி நீளம் (கி.மீ)	8	8	8

மன்ற தீர்மான எண்.183/2024, நாள்:24.06.2024ன்படி வரைவு முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP) ஆவணங்கள் கூடிய இத்திட்டப்பணிக்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. மன்றத்தின் ஒப்புதலுக்கு பிறகு, வரைவு முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP) ஆவணங்கள் 01.07.2024 அன்று தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு (TNIDB) சமர்ப்பிக்கப்பட்டு, இதற்கு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் (TNIDB) ஒப்புதல் 03.08.2024 அன்று பெறப்பட்டது.

இதனை தொடர்ந்து, பொது தனியார் கூட்டாண்மையில் வடிவமைத்தல், கட்டுதல், நிதி, இயக்குதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் என்ற (DBFOT) ஒப்ப முறையில் மாநகரத்தை சுத்தம் செய்யும் திட்டம்: மண்டலம்-5 மற்றும் 6 பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வது, தெரு துப்புரவு கழிவுகள் (தெரு துப்புரவு கழிவுகள் அகற்றும் நடவடிக்கைகள் உட்பட), தோட்டக்கழிவுகள் அபாயகரமான கழிவுகளை சேகரித்தல் மற்றும் சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு செயலாக்க வசதி/ குப்பைக்கொட்டும் வளாகம் (தொகுப்பு -6) கொண்டு சேர்த்தல் என்ற இத்திட்ட பணிக்கான முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP) ஆவணங்கள் 03.08.2024 அன்று tntender இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

இத்திட்ட பணிக்கான ஒப்ப முன் ஆய்வு கூட்டம் (Pre Bid Meeting) 22.08.2024 அன்று நடத்தப்பட்டு, 14 ஒப்பந்ததாரர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஒப்ப முன் ஆய்வு கூட்டத்தில் எழுப்பப்பட்ட வினவல்களுக்கு பதிலளிக்கவும் மற்றும் இத்திட்டப் பணியின் நோக்கத்தில் சில திருத்தங்கள் செய்திட, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திடம் (TNIDB) 26.09.2024 அன்று ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறு, ஒப்ப முன் ஆய்வு கூட்டத்தில் ஒப்பந்ததாரர்களின் வினவல்களுக்கான பதில்கள் மற்றும் திருத்தங்கள் *01.10.2024* அன்று *tntenders* இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

அதன்பிறகு இவ்வொப்பத்திற்கான காலக்கெடு *15.10.2024* அன்று நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்ட பணிக்கான ஒப்பம் இறுதி நாளான *17.10.2024* அன்று தொழில்நுட்ப ஒப்பம் திறக்கப்பட்டு, பின்வரும் ஒப்பந்ததாரர்கள் இவ்வொப்பத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

1. திருவாளர்கள். *Delhi MSW Solution Limited*
2. திருவாளர்கள். *Swachatha Corporation & M/s. Brij Gopal Construction Company Private Limited* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)*
3. திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited.* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)*

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அசல் சான்றிதழ்கள் ஒப்பம் ஏற்கும் அதிகாரியால் *Tender Inviting Authority (TIA)* சரிபார்க்கப்பட்டது. *02.12.2024* அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழு *(Tender Scrutiny and Evaluation Committee)* கூட்டத்தில், இவ்வொப்பத்தில் பங்கேற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து கூடுதல் விளக்கங்களைப் பெற முடிவு செய்யப்பட்டு, ஒப்பந்ததாரர்களிடம் சில விளக்கம் கோரப்பட்டு, தகுந்த விளக்கங்கள் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்பட்டது. ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்பட்ட விளக்கங்கள் அடிப்படையில் இரண்டு ஒப்பந்ததாரர்களே தொழில்நுட்ப தகுதி பெற்றவர் என்று *03.01.2025* அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டது.

வ.எண்	ஒப்பந்ததாரர்களின் விவரம்	தொழில்நுட்ப தகுதி
1.	திருவாளர்கள். *Delhi MSW Solution Limited*	தகுதி பெற்றவர்
2.	திருவாளர்கள். *Swachatha Corporation & M/s. Brij Gopal Construction Company Private Limited* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)*	தகுதி பெறாதவர்
3.	திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited.* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)*	தகுதி பெற்றவர்

ஒப்ப காலத்தில், திட்டத்தில் கடற்கரை சுத்தம் செய்யும் செயல்பாட்டைச் சேர்ப்பதன் மூலம் திட்ட பணியின் நோக்கத்தை மாற்ற பெருநகர சென்னை மாநகராட்சி முடிவு செய்தது. இதனால் திட்ட மதிப்பீட்டில் கூடுதல் செலவிற்கு மாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ள *03.02.2025* அன்று தமிழக அரசிடமிருந்து திருத்தப்பட்ட நிர்வாக ஒப்புதலுக்கான முன்மொழிவைச் சமர்ப்பிப்பதன் மூலம்

முன்மொழியப்பட்ட திட்டத்திற்கான திருத்தப்பட்ட நிர்வாக ஒப்புதலைப் பெற பெருநகர சென்னை மாநகராட்சியால் கடிதம் அனுப்பப்பட்டது.

தமிழ்நாடு அரசிடமிருந்து திருத்தப்பட்ட நிர்வாக அனுமதி *(Revised Administrative Sanction (RAS)* பெறும் வரை தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது.

அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் *24.03.2025* நாளிட்ட கடிதத்தில், ஒப்பத்தை இறுதி செய்த பிறகு திருத்தப்பட்ட நிர்வாக முன்மொழிவை அனுப்புமாறு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிடப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு தொழில்நுட்ப தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி *18.03.2025* அன்று திறக்கப்பட்டது. ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்த விலைப்புள்ளியின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வ. எண்.	ஒப்பந்ததாரர்களின் பெயர்	முதல் வருடத்திற்கான செயலாக்கக் கட்டண தொகை *(IAQ)* (ரூ.)
1	திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited.* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)*	2,77,48,14,395.49
2	திருவாளர்கள். *Delhi MSW Solution Limited*	3,60,00,00,000.00

மேலே உள்ள அட்டவணையின்படி, இவ்வொப்பத்தில் பங்குபெற்ற ஒப்பந்தராரர்களில், திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited.* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)* அவர்கள் முதல் வருடத்திற்கான செயலாக்க கட்டணம் *(Initial Annual Quote (IAQ))* ரூ.*2,77,48,14,395.49* (ரூபாய் இருநூற்று எழுபத்தேழு கோடி நாற்பத்தெட்டு இலட்சத்து பதினான்காயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபாய் மற்றும் நாற்பத்தொன்பது பைசா மட்டும்) குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரராக தகுதி பெற்றுள்ளார்.

நிதி ஒப்பம் திறக்கப்பட்ட பிறகு, குறைந்த விலைப்புள்ளி அளித்த *L1* ஒப்பந்ததாரருடன் விலைக்குறைப்பு செய்ய பேச்சுவார்த்தை கூட்டம் நடைபெற்றது, அதில் *L1* ஒப்பந்ததாரரிடம் நிதி விலைப்புள்ளியை மறு பரிசீலனை செய்யுமாறு கோரப்பட்டது. இதனை தொடர்ந்து, குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited.* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)* அவர்களின், *09.04.2025* நாளிட்ட கடிதத்தின்படி இறுதியாக முதல் வருடத்திற்கான செயலாக்க கட்டணம் *(Initial Annual Quote (IAQ))*ரூ.*276.00* கோடியில் இத்திட்ட பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார்.

DFR 17.11.2023 அன்று TNIDB யிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அரசின் நிர்வாக ஒப்புதல் 06.03.2024 அன்று பெறப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாளிற்கும் மேற்குறிப்பிட்ட 17.11.2023ற்கும் இடைப்பட்ட காலத்தில் தினக்கூலி விகிதங்கள், டீசல் விலை, நுகர் பொருட்கள் மற்றும் மூலதனச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் அத்தியாவசிய தேவைகளின் அடிப்படையில், மண்டலங்கள் 1, 4, 5 , 9 , & 13ன் கடற்கரை பகுதிகள் (மணற்பகுதி உட்பட) சுத்தம் செய்தல், அதன் தொடர்புடைய சேவைகளுக்கான கூடுதல் செலவினங்கள் கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டதில் மதிப்பீட்டில் உயர்வு ஏற்பட காரணமாக அமைந்துள்ளது. இதன் அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி 07.04.2025 அன்று ஆலோசகர் சமர்ப்பித்த செலவு மதிப்பீடு மற்றும் பகுத்தறிவு அறிக்கையின் (Cost Truing Up and Rationalization Report) அடிப்படையில், திருத்தப்பட்ட IAQ ரூ.271.44 கோடியாக கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் திட்ட பணியினை கண்காணிக்கும் பொறியாளர் "Independent Engineer" நியமிக்க ஆகும் செலவு பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் ஒப்பந்ததாரருக்கும் இடையில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்றும், அந்த செலவு மதிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை என்றும் ஒப்ப பணிகள் தொடக்கத்தின் போது மண்டலங்களில் தேக்கத்தில் உள்ள மொத்தப் பகுதியினை சுத்தம் செய்தல் (Initial Total Area Cleaning) செலவு மதிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை என்பது குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

மேற்குறிப்பிட்ட இனங்களை கருத்தில் கொண்டு ஒப்ப கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழுவால் ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி விலைப்புள்ளித் தொகை ரூ.276.00 கோடி ஏற்புடையது என கருதப்பட்டு, இத்திட்டப் பணிக்காக ஒப்பந்ததாரர் திருவாளர்கள். Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited. கூட்டமைப்பு நிறுவனம் (Consortium) அவர்கள் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியான ரூ.276.00 கோடியினை முதல் வருடத்திற்கான செயலாக்க கட்டணமாக (Initial Annual Quote (IAQ)) ஏற்கலாம் என ஒப்ப கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழுவால் 09.04.2025 அன்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் (TNIDB) ஒப்புதல் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியால் தீர்மானிக்கப்பட்டவாறு இத்திட்ட பணியினை செயல்படுத்த அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. பொது தனியார் கூட்டாண்மையில் வடிவமைத்தல், கட்டுதல், நிதி, இயக்குதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் என்ற (DBFOT) ஒப்ப முறையில் மாநகரத்தை சுத்தம் செய்யும் திட்டம்: மண்டலம்-5 மற்றும் 6 பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வது, தெரு துப்புரவு கழிவுகள் (தெரு துப்புரவு கழிவுகள் அகற்றும் நடவடிக்கைகள் உட்பட),

தோட்டக்கழிவுகள் அபாயகரமான கழிவுகளை சேகரித்தல் மற்றும் சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு செயலாக்க வசதி/ குப்பைக்கொட்டும் வளாகம் (தொகுப்பு -6) கொண்டு சேர்த்தல் திட்ட பணியினை 10 ஆண்டு காலத்திற்கு செயல்படுத்தவும்,

2. இத்திட்ட பணிக்கு ஒப்ப கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டுக்குழுவின் பரிந்துரையின்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited. கூட்டமைப்பு நிறுவனம் (Consortium) அவர்கள் இறுதியாக அளித்துள்ள முதல் வருடத்திற்கான செயலாக்க கட்டணம் (Initial Annual Quote (IAQ)) ரூ.276.00 கோடி (ரூபாய் இருநூற்று எழுபத்து ஆறு கோடி மட்டும்) விலைப்புள்ளியினை ஏற்கவும்,

3. தமிழக அரசிடமிருந்து திருத்தப்பட்ட நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி இத்திட்டப் பணியினை மேற்கொள்ள குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited. கூட்டமைப்பு நிறுவனம் (Consortium) அவர்களுக்கு பணியாணை வழங்குவதற்குஅனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.080/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 190/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

M.E.D.C.No.M1/0673/2025

ஆணையர் அவர்களின் 08.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 494/2025 **பொருள் எண்.166**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மாண்புமிகு மேயர் அவர்களின் 2025-26 ஆம் நிதி ஆண்டுக்கான அறிவிப்பு - நெகிழிக் கழிவுகளை கையாளுதல் - தானியங்கி பேலிங் இயந்திரம் (Fully Automatic Horizontal Baling Machine with Conveyor Attachment) மூலம் நெகிழிக் கழிவுகளை கனசதுர வடிவிலான சிப்பங்களாக (Bale) செய்வதற்கென 10 எண்ணிக்கையிலான இயந்திரங்களை - ரூ.5,58,14,000/- (Incl GST) தோராய மதிப்பீட்டில் மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியினை எதிர்நோக்கி மின்னணு ஒப்பம் மட்டும் கோரி நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி.

மாண்புமிகு மேயர் அவர்களின் *2025 - 2026*ம் ஆண்டிற்கான திடக்கழிவு மேலாண்மை துறையின் அறிவிப்பில், குப்பை கொட்டும் வளாகத்தில் பிளாஸ்டிக் கொட்டுவதை தவிர்க்க ஏற்கனவே, *5*-மண்டலங்களில் *(2, 5, 6, 7, & 14)* தலா *10* மெட்ரிக் டன் திறன் கொண்ட பிளாஸ்டிக் பேலிங் செய்யும் மையங்கள் இயங்கி வருகின்றன. இப்பணி மேலும் சிறக்க மீதமுள்ள *10* - மண்டலங்களிலும் சம்மந்தப்பட்ட மண்டலங்கள் தேர்வு செய்யும் இடத்தில், திடக்கழிவு துறையின் மூலம் தலா *10* மெட்ரிக் டன் திறன் கொண்ட பிளாஸ்டிக் பேலிங் செய்யும் மையங்கள் ரூ.*22.25* கோடி மதிப்பிட்டில் அமைக்கப்படும் என அறிவித்திருந்தார்கள்.

கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) துறை அவர்களின், *21.03.2025* நாளிட்ட கடிதத்தில், மண்டலங்களிலிருந்து பேலிங் செய்யும் மையங்களுக்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதால் புதியதாக அமையவிருக்கும் 10 மெ.டன் திறன் கொண்ட 10 எண்ணிக்கையிலான பிளாஸ்டிக் பேலிங் செய்யும் இயந்திரத்தை மூன்று மாத காலத்திற்குள் கொள்முதல் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

இது குறித்து தெரிவிப்பதாவது, மண்டலங்களில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் பேலிங் இயந்திர மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு கன்வேயர் மூலம் பேலிங் இயந்திரத்தில் செலுத்தப்பட்டு, நெருக்கப்பட்டு சிப்பங்களாக *(Bale)* அழுத்தப்பட்டு, வாகனங்களில் கொண்டு செல்ல உகந்த முறையில் பயன்படுத்த உலோக கயிறு பயன்படுத்தி கட்டப்படுகிறது.

இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பம் மட்டும் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், மன்றத்தின் உரிய நிர்வாக அனுமதி பெற்றபின் ஒப்பம் இறுதி செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இத்தகைய, ஒரு எண்ணிக்கையிலான புதிய பேலிங் இயந்திரம் *(Fully Automatic Horizontal Baling Machine with Conveyor Attachment)* கொள்முதல் செய்வதற்கான தோராயமான செலவீனம் ரூ.55,81,400/- ஆகும், (இதில் போக்குவரத்து, தொகை நிறுவல்

கட்டணங்கள் மற்றும் ஜிஎஸ்டி 18% உட்பட) அதன்படி, 10 எண்ணிக்கையிலான பேலிங் இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கான தோராய செலவீனம் ரூ.5,58,14,000/- ஆகும். இவ்வியந்திரங்களை தயாரிக்கும் நிறுவனங்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக்கொள்ப்படுகிறது.

மேலும் மேற்கண்ட *(Fully Automatic Horizontal Baling Machine with Conveyor Attachment)* இயந்திரம் உற்பத்தியாளர்கள் பணியாணை வழங்கப் பெற்ற பின்தான் உற்பத்தியை தொடங்குவார்கள். இதனால் இயந்திரம் பெறுவதற்கு ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்க பேலிங் மையங்கள் அமையவுள்ள மண்டலங்களுக்கேற்ப வட்டார ரீதியாக கணக்கீடு செய்து கீழ்கண்டவாறு 3 சிப்பங்களாக ஒப்பம் கோரலாம் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பேலிங் இயந்திரம் மையம் அமையவுள்ள மண்டலங்கள்	வட்டாரம்	கொள்முதல் செய்யவுள்ள மொத்த பேலிங் இயந்திரங்களின் எண்ணிக்கை	தோராய மதிப்பீடு (ஒரு இயந்திரத்தின் விலை ரூ.55,81,400/-) (Inclu GST 18%)
1,2,4	வடக்கு	3	ரூ.1,67,44,200
8,9,10	மத்தியம்	3	ரூ.1,67,44,200
11,12,13,15	தெற்கு	4	ரூ.2,23,25,600
மொத்த தோராய மதிப்பீட்டுத்தொகை (ஜிஎஸ்டி 18% உட்பட)		10	ரூ.5,58,14,000/-

மேற்கண்ட இயந்திரம் கொள்முதல் செலவீனத்தை 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான இயந்திர பொறியியல் துறை தலைமையக பிரிவு குறியீடு 41-40-10 / 410-40-18-01 ன் மூலதன நிதியின் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மாண்புமிகு மேயர் அவர்களின் 2025-26 ஆம் நிதி ஆண்டுக்கான அறிவிப்பின் படி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை திறம்பட கொண்டு செல்ல, பிளாஸ்டிக் பேலிங் செய்யும் மையங்கள் இல்லாத 10 மண்டலங்களில் மண்டலத்திற்கு ஒன்று வீதம் பிளாஸ்டிக் கழிவுகளை சிப்பங்களாக *(Bale)* செய்வதற்கென 10 எண்ணிக்கையிலான புதிய பேலிங் இயந்திரம் *(Fully Automatic Horizontal Baling Machine with Conveyor Attachment)* தோராய மதிப்பீடான ரூ.5,58,14,000/- (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்தெட்டு இலட்சத்து பதிநான்காயிரம் மட்டும்) (இதில் போக்குவரத்து, தொகை நிறுவல் கட்டணங்கள் மற்றும் ஜிஎஸ்டி 18%) தோராய மதிப்பீட்டில் மன்றத்தின்

பின்னேற்பு நிர்வாக அனுமதியினை எதிர்நோக்கி மின்னணு ஒப்பம் மட்டும் கோரி நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. அவசர அவசியம் கருதி இக்கொள்முதல் பணியினை தேவைப்படும் மண்டலங்களுக்கேற்ப வட்டார ரீதியாக கீழ்கண்ட 3 சிப்பங்கலாக ஒப்பம் கோர நடவடிக்கை தொடங்கப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

பேலிங் இயந்திரம் மையம் அமையவுள்ள மண்டலங்கள்	வட்டாரம்	கொள்முதல் செய்யவுள்ள மொத்த பேலிங் இயந்திரங்களின் எண்ணிக்கை	தோராய மதிப்பீடு (ஒரு இயந்திரத்தின் விலை ரூ.55,81,400/-) (Inclu GST 18%)
1,2,4	வடக்கு	3	ரூ.1,67,44,200
8,9,10	மத்தியம்	3	ரூ.1,67,44,200
11,12,13,15	தெற்கு	4	ரூ.2,23,25,600
மொத்த தோராய மதிப்பீட்டுத்தொகை (ஜிஎஸ்டி 18% உட்பட)		10	ரூ.5,58,14,000/-

3. இச்செலவீனத்தை 2025-2026 ஆம் ஆண்டிற்கான இயந்திர பொறியியல் துறை தலைமையக பிரிவு குறியீடு 41-40-10 / 410-40-18-01 ன் மூலதன நிதியின் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.071/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 172/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

இ.பொ.து.ந.க.எண்.எம்1/0617/2025

ஆணையர் அவர்களின் 03.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 495/2025 **பொருள் எண்.167**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை சாலையோர மரங்களை பராமரித்தல் கிளைகளை வெட்டுதல் பருவ நிலை மாறுபாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற பேரிடர் நிகழ்வுகளால் சாலைகளில் விழும் மரங்களை துண்டாக்கி அகற்றுதல் - பொதுமக்களிடம் மரங்கள் சம்மந்தமான புகார் அதிகமாக உள்ள மண்டலம் - 6, 8, 9, 10 மற்றும் 13ற்கு கூடுதலாக நவீன கருவிகளான ஹைட்ராலிக் மூலம் இயக்கப்படும் மரக்கிளை நீக்கும் இயந்திரம் (Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine) 5 எண்ணிக்கையில் ரூ.1,41,85,000/- மதிப்பீட்டில் கொள்முதல் செய்து கொள்முதல் செய்யும் ஒப்பந்ததாரரின் மூலமே கொள்முதலுடன் சேர்த்து 5 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.3,01,36,500/- ஆக மொத்தம் ரூ.4,43,21,500/- செலவீனத்தில் மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் *1* முதல் மண்டலம் *15* வரை சாலையோர மரங்களின் பராமரிப்பு பணிகளான கிளைகளை வெட்டுதல் மற்றும் பருவ நிலை மாறுபாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற பேரிடர் நிகழ்வுகளால் சாலைகளில் விழும் மரங்களை துண்டாக்கி அகற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. இப்பணிகளை மேற்கொள்ள ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரம் அறுக்கும் இயந்திரம் *(Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine) 9* எண்ணிக்கையில் மண்டலம்-*3, 4, 5, 6, 8, 9, 10, 13* மற்றும் *14*ல் பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மீதமுள்ள மண்டலங்களான மண்டலம் – *1, 2, 7, 11, 12* மற்றும் *15*ற்கு *6* எண்ணிக்கையிலான இவ்வகை இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டு விரைவில் பயன்பாட்டிற்கு வழங்கப்பட உள்ளது.

மேற்கண்ட *2019* முதல் *2024* வரை சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டு அறைக்கு மரங்கள் விழுவதாலும் மற்றும் மரங்கள் வளர்ந்து பொது மக்களுக்கு இடையூறாக உள்ளதாகவும் தொடர்பாக பெறப்பட்ட பொதுமக்களின் புகார்கள் கணக்கிடப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ளது. அதன்படி, மண்டலம் -*6, 8, 9, 10* மற்றும் *13* ஆகிய மண்டலங்களில் அதிக அளவில் பொதுமக்களிடமிருந்து புகார் பெறப்பட்டு சரிசெய்யப்பட்டு வரப்படுகிறது. மேலும் இந்த புகார்களை சரி செய்வதற்கு காலமதாமதம் ஏற்படுவதால் இம்மண்டலங்களுக்கு கூடுதலாக ஹைட்ராலிக் மூலம் இயக்கப்படும் மரக்கிளை நீக்கும் இயந்திரம் *(Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine)* மண்டலத்திற்கு ஒன்று வீதம் *5* எண்ணிக்கையில் கொள்முதல் செய்து வழங்கினால் இப்புகார்களை விரைவில் சரிசெய்யலாம் என்று கருதப்படுகிறது. இது சம்மந்தமாக *26.03.2025* அன்று நடைபெற்ற துறை சார்ந்த ஆய்வு கூட்டத்தில் மேல் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

மேலும், இவ்வகை இயந்திரங்களைக் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள மரங்களை தொடர் இடைவெளிகளில் தேவையற்ற மரக்கிளைகளை வெட்டி சீரமைப்பதால் மரங்கள் பலத்த காற்று வீசும் போது சாய்ந்து விழாமல் எதிர் கொண்டு நிற்பதால் மரங்களுக்கு ஏற்படும் சேதத்தை குறைப்பதன் மூலம் மாநகராட்சி பகுதிகள் பசுமையாக இருக்கவும் மற்றும் காற்று மாசு குறைந்திடவும் உதவியாக உள்ளது. மேலும் மண்டலங்களில் உள்ள மரங்களை தொடர் இடைவெளியில் தேவையற்ற மரக்கிளைகளை நீக்குவதால் போக்குவரத்துக்கு இடையூறு நேராமலும் மற்றும் இரவு நேரங்களில் சாலைகளில் தெரு விளக்கின் மின்னொளி மறைக்கப்படுவதும் தவிர்க்கபடுகிறது.

எனவே, கூடுதலாக 5 எண்ணிக்கையில் ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரக்கிளை நீக்கும் இயந்திரங்களை *(Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine)* முந்தைய ஆண்டு *(2024* ஆம் ஆண்டு*)* கொள்முதல் செய்யப்பட்ட விலையின் அடிப்படையிலேயே புதியதாக கொள்முதல் செய்திட கீழ்கண்டவாறு தோராய மதிப்பீட்டு தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

(A)-கொள்முதல்

Sl. No	Description	Rate per Machine (Incl. 18% GST) (in Rs.)	Total Amount for 5 Machines (Incl. 18% GST) (in Rs.)
1.	Supply of Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine (Inclusive of All Taxes, Entry Tax, Levies, Transit Insurance, Transportation Charges with Temporary Registration along with GST)	28,37,000/-	1,41,85,000/-

இவ்வுபகரணம் சிறப்பு தொழில் நுட்பத்துடன் கூடியது என்பதால் இதனை இயக்குவதற்கு மற்றும் பராமரிப்பதற்கு சிறப்பு தொழில் நுட்ப பயிற்சி பெற்ற திறன் உள்ள பணியாளர்கள் தேவைப்படுகிறது. மாநகராட்சியில் இவ்வகை பணியாளர்கள் நியமிக்கப்படாத காரணத்தினால் இயந்திரம் வழங்கும் ஒப்பந்ததாரர் மூலம் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிக்கும் பணியினை மேற்கொள்ளலாம் என கருதப்படுகிறது.

இதன் அடிப்படையில், மேலே தெரிவித்துள்ளபடி புதியதாக கொள்முதல் செய்யவுள்ள 5 எண்ணிக்கையிலான ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரக்கிளை நீக்கும் இயந்திரங்களை *(Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine)* 5 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு தோராய மதிப்பீட்டு தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

(B)-Operation & Comprehensive Maintenance

Description	Estimated Cost per Machine (Rs.) (Including GST 18%)					Overall Amount For 5 Years For 5 Machines (Rs.)
	I - Year (2025)	II - Year (2026)	III - Year (2027)	IV - Year (2028)	V - Year (2029)	
Operation cost per Shift per day per Machine	2,693/-	2,829/-	2,969/-	3,120/-	3,275/-	**2,23,29,000/-**

Comprehensive Maintenance cost per Day per Machine	720/-	897/-	1,033/-	1,186/-	1,369/-	**78,07,500/-**
Overall Amount per Year (300 Days) For 5 Machines (Rs.)	**51,19,500**	**55,89,000**	**60,03,000**	**64,59,000**	**69,66,000**	**3,01,36,500**

மேலே குறிப்பிட்டுள்ளவாறு, 5 எண்ணிக்கையில் ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரக்கிளை நீக்கும் இயந்திரம் 5 வருடத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்ய கணக்கிடப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகை பின்வருமாறு:

5 எண்ணிக்கையிலான, இயந்திரங்களுக்கு மொத்த கொள்முதல் விலை *(A)*	ரூ.1,41,85,000/-
5 வருட கால இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு தொகை *(B)*	ரூ.3,01,36,500/-
மொத்த தொகை	ரூ.4,43,21,500/-

மேற்கண்டுள்ளவாறு இவ்வுபகரணங்களை கொள்முதல் செய்வதற்கான பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண் *40-41-01/410-40-12-00-* மரம் அறுக்கும் உபகரணங்கள் என்னும் தலைப்பின் கீழ் *2025-26* ஆம் நிதி ஆண்டில் உரிய நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் எனவும், இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் *40-41-10* மற்றும் கணக்கு தலைப்பு எண். *230-80-03-00* என்னும் தலைப்பின் கீழ் அந்தந்த நிதி ஆண்டில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, 5 எண்ணிக்கையில் ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரக்கிளை நீக்கும் இயந்திரம் 5 வருடத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி ரூ.*4,43,21,500/-* (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்து இருபத்தோராயிரத்து ஐந்நூறு மட்டும்) *(GST 18%* உட்பட*)* தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்யும் பணியினை மின்னணு ஒப்பம் கோரி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில் மரங்களால் ஏற்படும் இடையூறு தொடர்பாக அதிகளவில் புகார்கள் பெறப்படும் மண்டலங்களான மண்டலம் *6, 8, 9, 10* மற்றும் *13* -ன் பல்வேறு பகுதிகளில் அதிக அளவில் வளர்ந்துள்ள மரங்களில் உள்ள கிளைகளால் பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறாக உள்ள மரக்கிளைகளை அகற்றி சீரமைக்கவும் மற்றும் புயல்/மழை போன்ற பேரிடர் காலங்களில் முறிந்து விழும் மரங்களை அகற்றிடவும் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களின் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் மண்டலத்திற்கு ஒன்று வீதம்

கூடுதலாக 5 எண்ணிக்கையில் ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரக்கிளை நீக்கும் இயந்திரம் (Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine) 5 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி ரூ.4,43,21,500/- (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்து இருபத்தோராயிரத்து ஐந்நூறு மட்டும்) (GST 18% உட்பட) தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்யும் பணியினை மின்னணு ஒப்பம் கோர நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. இவ்வுபகரணங்களை கொள்முதல் செய்வதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண் 40-41-01/410-40-12-00- மரம் அறுக்கும் உபகரணங்கள் என்னும் தலைப்பின் கீழ் 2024-25 ஆம் நிதி ஆண்டில் உரிய நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,
3. இவ்வுபகரணங்களின் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-41-10 மற்றும் கணக்கு தலைப்புஎண்.230-80-03-00 என்னும் தலைப்பின் கீழ் அந்தந்த நிதி ஆண்டில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.072/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது"

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.173/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

இ.பொ.து.நி.க.எண்.எம்1 / 1036A / 2022

ஆணையர் அவர்களின் 06.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 496 / 2025 **பொருள் எண்.168**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தூய்மை இந்தியா திட்ட சேமிப்பு நிதியின் கீழ் ஒரு எண்ணிக்கையில் ஆம்பிபியன் (Amphibian Equipment) உபகரணம், ஐந்தாண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியுடன் கூடி மொத்தம் ரூ.17.19 கோடி தோராய மதிப்பீட்டில் மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது - ஒரு எண்ணிக்கையில் ஆம்பிபியன் எஸ்கவேட்டர் உபகரணத்திற்கு மாற்றாக 3 எண்ணிக்கையில் ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் உபகரணம் (Amphibious Excavator) ஐந்தாண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியுடன் கூடி மொத்தம் ரூ.14,06,78,385 / - தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய அரசின் திருத்திய நிர்வாக அனுமதிக்கான அரசாணை பெறப்பட்டு கோரப்பட்ட குறுகிய கால மறு மின்னணு ஒப்பத்தில் கலந்து கொண்டு குறைந்த விலைபுள்ளி அளித்துள்ள நிறுவனமான திருவாளர்கள். Vinayagaa Transport நிறுவனத்தார் மூலம் 3 எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் (Amphibious Excavator) உபகரணங்கள் 5 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி.

தமிழக அரசு *2022 -23* நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டத்தை தாக்கல் செய்து தொடர்ந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சம்பந்தப்பட்ட மானிய கோரிக்கையின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மை பணிக்காக ரூ.*25.50* கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்ட உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் கொள்முதல் செய்யப்படும் என அறிவித்திருந்தார்கள், அதன் விவரம் கீழ்வருமாறு:

அட்டவணை - I

உபகரண/ வாகன வகை	எண்ணிக்கை	மொத்த தொகை (கோடியில்)	உபகரணம்/வாகன பயன்பாடு
ஆம்பிபியன் உபகரணம்	*1*	*8.00*	மழை காலங்களில் வெள்ள நீரை வெளியேற்ற ஏதுவாக *3.5* மீட்டருக்கும் அதிகமான அகலம் கொண்ட நீர்வழி தடங்களை சுத்தப்படுத்தும் பணிக்காக
ரோபோடிக் மல்டி பர்பஸ் எஸ்கவேட்டர் உபகரணம்	*2*	*13.00*	மழை காலங்களில் வெள்ள நீரை வெளியேற்ற ஏதுவாக *3.5* மீட்டருக்கும் குறைவான அகலம் கொண்ட நீர்வழி தடங்களை சுத்தப்படுத்தும் பணிக்காக
இயந்திர பெருக்கி வாகனம்	*8*	*4.50*	சாலைகளை தூய்மை படுத்தும் பணிக்காக
மொத்தம்		*25.50*	

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியிலுள்ள நீர் நிலைகளில் 3.5 மீட்டருக்கு மேல் அகலம் அதிகமாக உள்ள கால்வாய்களில் மிதக்கும் கழிவுகளை அகற்றும் பணியினை மனிதர்களை கொண்டு மேற்கொண்டு வந்த நிலையில் உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி மனிதர்களை பயன்படுத்தாமல் ஆம்பிபியன் (Amphibian Equipment) உபகரணத்தை பயன்படுத்தி தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியில் 2 எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணம் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. இவ்வுபகரணங்களை கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்குள் உள்ள கால்வாய்கள் மற்றும் ஆறுகளில் மிதக்கும் கழிவுகள், ஆகாய தாமரைகள் மற்றும் சகதிகளை அகற்றி வருவதால் பருவமழை காலங்களில் வெள்ள நீர் தங்கு தடையின்றி செல்வதற்கு வழிவகை செய்யப்படுகிறது. மேலும், மண்டலம்-1 முதல் 15 வரையுள்ள கால்வாய்களை சுத்தப்படுத்துவதற்கு தற்போதுள்ள உபகரணம் போதுமானதாக இல்லாத காரணத்தால் இவ்வகை உபகரணங்களின் கொள்முதல் அவசியமாகிறது.

எனவே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ஒரு எண்ணிக்கையில் ஆம்பிபியன் உபகரணம் (ரூ.8.00 கோடி) (Amphibian Equipment) 5 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் (ரூ.9.19 கோடி) கூடி மொத்தம் ரூ.17.19 கோடி தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய மன்றத் தீர்மான எண்.193/2022, நாள்.28.06.2022ல் மன்றத்தின் அனுமதி மற்றும் அரசாணை எண்.119 நாள்.29.08.2022ன் மூலம் அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் கூடுதல் முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அவர்களுடன் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய ஆம்பிபியன் உபகரணம் (Amphibian Equipment) ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் ஒரு எண்ணிக்கையில் கொள்முதல் செய்வதற்கு மாற்றாக இதே மதிப்பீட்டில் (ரூ.8.00 கோடி) ஆம்பிபியன் உபகரணத்தினை (Amphibian Equipment) போன்ற 3.5 மீட்டருக்கு மேல் அகலம் உள்ள கால்வாய்கள் மற்றும் ஆறுகளை தூர்வாரக்கூடிய 3 எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் (Amphibious Excavator) உபகரணங்களை கொள்முதல் செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

ஒரு எண்ணிக்கையில் ஆம்பிபியன் உபகரணத்தினை தூய்மை இந்தியா திட்ட சேமிப்பு நிதியின் கீழ் கொள்முதல் செய்ய 27.06.2022 அன்று நடைபெற்ற தூய்மை இந்தியா திட்டம் (U) 2.0விற்கான 3வது உயர் மட்ட அதிகாரகுழு கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ள நிலையில் கூடுதல் முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அவர்களுடன் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய ஆம்பிபியன் உபகரணம் (Amphibian Equipment) ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் ஒரு எண்ணிக்கையில் கொள்முதல் செய்வதற்கு மாற்றாக இதே மதிப்பீட்டில் (ரூ.8.00 கோடி) 3 எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் (Amphibious Excavator)

உபகரணங்களை கொள்முதல் செய்யுமாறு அறிவுறுத்தியதன் காரணமாக, ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் *(Amphibian Equipment)* உபகரணத்திற்கு மாற்றாக ரூ.*7,43,40,000/-* தோராய மதிப்பீட்டில் *3* எண்ணிக்கையில் ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் *(Amphibious Excavator)* உபகரணங்களை தூய்மை இந்தியா திட்ட சேமிப்பு நிதியின் கீழ் கொள்முதல் செய்ய *26.06.2023* அன்று நடைபெற்ற தூய்மை இந்தியா திட்டம்*(U) 2.0*விற்கான *5*வது மாநில உயர்மட்ட அதிகார குழு கூட்டத்தில் திருத்திய ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும், *3* எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் உபகரணங்களை *5* வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி ரூ.*14,06,78,385/-* மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய அரசின் திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ள நிதி ஒதுக்கீடு கீழ்கண்டவாறு:

அட்டவணை - II

வ. எண்.	பணியின் விவரம்	திட்ட மதிப்பீடு *(GST* உட்பட*)*	நிதி ஆதாரம்	*SBM GOI* பங்களிப்பு *(35%)*	அரசு பங்களிப்பு *(55%)*	*ULB* (மாநகராட்சி) பங்களிப்பு *(10%)*
1	கொள்முதல் விலை	ரூ.*7,43,40,000/-*	தூய்மை இந்தியா திட்ட நிதி	ரூ.*2,60,19,000/-*	ரூ.*4,08,87,000/-*	ரூ.*74,34,000/-*
2	*5* வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு தொகை	ரூ.*6,63,38,385/-*	மாநகராட்சியின் வருவாய் நிதி			
மொத்தம்		ரூ.*14,06,78,385/-*				

மேற்படி மூன்று எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் *(Amphibious Excavator)* உபகரணங்களை ஐந்து வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியுடன் கூடி கொள்முதல் செய்ய ஒப்பத் திறப்பு நாள் *20.10.2023* என தெரிவித்து ஒப்பந்த புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் ஒப்பப் படிவங்கள் இலவச பதிவிறக்கம் செய்யும் பொருட்டு கணினியில் ஏற்றம் செய்யப்பட்டது. மேலும், இவ்வுபகரணத்திற்கான தொழில்நுட்ப வரையறைகளை *(Technical Specifications)* தீர்வு செய்வதில் அதிக விவரங்கள் தேவைப்பட்டதால் பலவேறு அரசு துறை அலுவலர்களை இணைத்து *04.07.2024* அன்று தொழில்நுட்ப குழு அமைத்து இவ்வுபகரணத்திற்கான தொழில்நுட்ப வரையறைகள் *(Technical Specification)* இறுதி செய்யப்பட்டு ஒப்பத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. இவ்வொப்பம் *20.08.2024* அன்று திறக்கப்பட்டதில் நான்கு நிறுவனங்கள் கலந்து கொண்டனர். இவ்வொப்பத்தில் கலந்து கொண்ட நான்கு நிறுவனங்களும் தொழில்நுட்ப தகுதி பெறாததால் இவ்வொப்பம் நிராகரிக்கப்பட்டு குறுகியகால மறு மின்னணு ஒப்பம் கோர தலைமை பொறியாளர் *(இ/தி.க.மே)* அவர்களின் *06.11.2024* நாளிட்ட ஆணை பெறப்பட்டது.

ஒப்பந்த புள்ளி அறிவிப்பு *07.11.2024* நாளிட்ட ஆங்கில நாளேடு, தமிழ்நாளேடு மற்றும் *07.11.2024* நாளிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்த புள்ளி செய்தி மலர்

ஆகியவற்றில் வெளியிடப்பட்ட நிலையில் நிர்வாக காரணங்களால் ஒப்பம் ஒத்தி வைக்கப்பட்டு *29.11.2024* அன்று திறக்கப்பட்டது.

இவ்வொப்பத்தில் திருவாளர்கள். *Cleantec Infra Ltd.*, திருவாளர்கள். *N Mohamed Jamaluddin* மற்றும் திருவாளர்கள். *Vinayaga Transports* நிறுவனத்தார் ஒப்ப முன்வைப்பு தொகையினை மின்னணு மூலம் செலுத்தி கலந்து கொண்டனர். இந்நிறுவனங்கள் சமர்ப்பித்துள்ள ஆவணங்களை சரிபார்த்த நிலையில் ஆணையர் அவர்களின் ஆணைப்படி மூன்று கண்காணிப்பு பொறியாளர்கள் அடங்கிய ஒப்ப சீராய்வுக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு மேற்கண்ட மூன்று ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்திருந்த தொழில் நுட்ப ஒப்பத்தினை கூராய்வு செய்து திருவாளர்கள். *N Mohamed Jamaluddin* மற்றும் திருவாளர்கள். *Vinayaga Transports* ஆகிய இரு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே தொழில்நுட்ப தகுதி பெற்றிருப்பதாக சான்று அளித்துள்ளார்கள். எனவே, திருவாளர்கள். *N Mohamed Jamaluddin* மற்றும் திருவாளர்கள். *Vinayaga Transports* ஆகிய இரு நிறுவனத்தாரின் நிதி ஒப்பம் *27.02.2025* அன்று திறக்கப்பட்டது.

திருவாளர்கள். *N Mohamed Jamaluddin* மற்றும் திருவாளர்கள். *Vinayaga Transports* நிறுவனத்தார் *3* எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் *(Amphibious Excavator)* உபகரணங்களை *5* வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி வழங்க மின்னணு ஒப்பத்தில் தெரிவித்துள்ள விலைப்புள்ளிகள் விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை - III

Machine Cost					
Sl. No	Description of work	Total Estimate Cost for 3 Nos. of Amphibious Excavator (Incl 18% GST) in Rs.	Rates Quoted by the Contractors		
			M/s. N MOHAMED JAMALUDDIN (Incl 18% GST) in Rs.	M/s. VINAYAGAA TRANSPORTS (Incl 18% GST) in Rs.	Name of The L1 bidder & Value
1	Supply, testing & Commissioning of 3 Nos of Amphibious Excavator as per tender specifications inclusive of all taxes, duties GST, etc.,	7,43,40,000	8,67,30,000.00	7,42,65,660.00	M/s. VINAYAGAA TRANSPORTS Rs.7,42,65,660.00 (Incl 18% GST) (0.10%) less than the estimate value

Operation Cost					
Sl. No	Period	Total Estimate for Operation for 3 nos of Amphibious Excavator @ 8 Hrs Shift/Day (Incl 18% GST) in Rs.	Rates Quoted by the Contractors		
			M/s. N MOHAMED JAMALUDDIN (Incl 18% GST) in Rs.	M/s. VINAYAGAA TRANSPORTS (Incl 18% GST) in Rs.	Name of The L1 bidder M/s. VINAYAGAA TRANSPORTS & Value
1	1st year	53,78,640.00	68,22,288.00	53,75,136.00	53,75,136.00
2	2nd year	61,84,560.00	75,45,864.00	55,40,524.80	55,40,524.80
3	3rd year	71,13,120.00	82,69,440.00	55,81,872.00	55,81,872.00
4	4th year	81,81,840.00	90,96,384.00	56,85,240.00	56,85,240.00
5	5th year	94,08,240.00	1,00,26,696.00	57,88,608.00	57,88,608.00
Total		3,62,66,400.00	4,17,60,672.00	2,79,71,380.80	Rs.2,79,71,380.8 (22.87%) less than the estimate value

Maintenance Cost					
Sl. No	Period	Total Estimate for Maintenance for 3 nos of Amphibious Excavator for 365 Days (Incl 18% GST) in Rs.	Rates Quoted by the Contractors		
			M/s. N MOHAMED JAMALUDDIN (Incl 18% GST) in Rs.	M/s. VINAYAGAA TRANSPORTS (Incl 18% GST) in Rs.	Name of The L1 bidder M/s. VINAYAGAA TRANSPORTS & Value
1	1st year	44,59,935.00	51,68,400.00	44,57,745.00	44,57,745.00
2	2nd year	51,28,980.00	56,85,240.00	51,03,795.00	51,03,795.00
3	3rd year	58,98,765.00	62,02,080.00	52,33,005.00	52,33,005.00
4	4th year	67,83,525.00	68,80,432.50	54,26,820.00	54,26,820.00
5	5th year	78,00,780.00	75,58,785.00	55,56,030.00	55,56,030.00
Total		3,00,71,985.00	3,14,94,937.50	2,57,77,395.00	RS.2,57,77,395.00 (14.28%) less than the estimate value
Overall value (Supply, Operation & Comprehensive Maintenance) quoted by the L1 bidder		14,06,78,385.00	15,99,85,609.50	12,80,14,435.80	RS.12,80,14,435.80 (9 % less than the estimate value)

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். *Vinayagaa Transports*, நிறுவனத்தார் *3* எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் *(Amphibious Excavator)* உபகரணங்களை *5* வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி வழங்க தெரிவித்துள்ள விலைப்புள்ளி விவரம்:

3 எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் உபகரணத்திற்கான மொத்த கொள்முதல் விலை *(A)*	ரூ.*7,42,65,660/- (Inclu. GST)*
5 வருட இயக்குதல் பணிக்கான மொத்த தொகை *(B)*	ரூ. *2,79,71,380.80 (Inclu. GST)*
5 வருட ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான தொகை*(C)*	ரூ. *2,57,77,395/- (Inclu. GST)*
3 எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் உபகரணங்களை 5 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்வதற்கான மொத்த தொகை	ரூ.12,80,14,435.80 (*Inclu. GST)*

திருவாளர்கள். *Vinayagaa Transports*, நிறுவனத்தார் *3* எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் *(Amphibious Excavator)* உபகரணங்களை *5* வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி வழங்க தெரிவித்துள்ள விலைப்புள்ளியானது இப்பணிக்கான தோராய மதிப்பீட்டினைக்காட்டிலும் *9%* குறைத்து விலைப்புள்ளி அளித்திருந்ததாலும் இந்நிறுவனத்தாரை *04.03.2025* அன்று மின்னணு வாயிலாக மேலும் விலைகுறைப்பு செய்யுமாறு கோரப்பட்டு *05.03.2025* அன்று விலைக்குறைப்பு ஒப்பம் திறக்கப்பட்டது. இதில் திருவாளர்கள். *Vinayagaa Transports* நிறுவனத்தார் விலை குறைப்பு ஏதும் செய்து வழங்கவில்லை. மேலும் இரண்டாவது முறை இந்நிறுவனத்தாரை *06.03.2025* அன்று மின்னணு வாயிலாக மீண்டும் விலைக்குறைப்பு செய்யுமாறு கோரப்பட்டு *07.03.2025* மறு விலைக்குறைப்பு ஒப்பம் திறக்கப்பட்டதில் இந்நிறுவனத்தார் விலைக்குறைப்பு செய்து

வழங்கவில்லை. இந்நிலையில் ஒப்பந்ததாரர் இறுதியாக அளித்துள்ள விலைப்புள்ளி விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை - IV

Comparative Statement After 2nd Negotiation							
Sl No	Description of work	Qty. (No's)	Quoted by M/s. VINAYAGAA TRANSPORTS				Remarks (L1 bidder M/s. VINAYAGAA TRANSPORTS)
			Before 2nd Negotiation		After 2nd Negotiation		
			Basic Rate per unit (Incl. GST for Fabrication 18%) (Rs.)	Total Amount for 3 nos. (Rs.) (Incl GST)	Basic Rate per unit (Incl. GST for Fabrication 18%) (Rs.)	Total Amount for 3 nos. (Rs.) (Incl GST)	
I	Supply	(A)	(B)	3 B	(B)	3 B	
1.1	Supply, testing & Commissioning of Amphibious Excavator as per tender specifications inclusive of all taxes, duties GST, etc.	3	2,47,55,220. 00	7,42,65,660 .00	2,47,55,220.00	7,42,65,660. 00	0.10 % Less

Sl No	Description of work	Days (1shift = min 8 hrs)	Operation Cost per hour per unit (incl. 18% GST) (Rs.)	Total Amount for 3 nos. (Rs.)	Operation Cost per hour per unit (incl. 18% GST) (Rs.)	Total Amount for 3 nos. (Rs.)	Remarks
II	Operation	(A)	(B)	C=365* B*3	(B)	C=365* B*3	
2.1	Operation Cost per day (8 Hours Shift) for 1st year	365 days	613. 60	53,75,136.00	613.60	53,75,136.00	0.07 % Less
2.2	Operation Cost per day (8 Hours Shift) for 2nd year	365 days	632. 48	55,40,524.80	632.48	55,40,524.80	10.41 % Less
2.3	Operation Cost per day (8 Hours Shift) for 3rd year	365 days	637. 20	55,81,872.00	637.20	55,81,872.00	21.53 % Less
2.4	Operation Cost per day (8 Hours Shift) for 4th year	365 days	649. 00	56,85,240.00	649.00	56,85,240.00	30.51 % Less
2.5	Operation Cost per day (8 Hours Shift) for 5th year	365 days	660. 80	57,88,608.00	660.80	57,88,608.00	38.47 % Less
Sub Total (II)				2,79,71,380.80		2,79,71,380.80	22.87 % Less
Sr. No.	Description of work	Days	Basic Rate per unit (Incl. 18% GST) (Rs.)	Total Amount for 3 Machines (Rs.)	Basic Rate per unit (Incl. 18% GST) (Rs.)	Total Amount for 3 Machines (Rs.)	Remarks
III	Comprehensive Maintenance	(A)	(B)	C=365* B*3	(B)	C=365* B*3	
3.1	Maintenance Cost per day for 1st year	365 days	4,071. 00	44,57,745.00	4,071.00	44,57,745.00	0.05 % Less
3.1	Maintenance Cost per day for 2nd year	365 days	4,661. 00	51,03,795.00	4,661.00	51,03,795.00	0.49 % Less
3.1	Maintenance Cost per day for 3rd year	365 days	4,779. 00	52,33,005.00	4,779.00	52,33,005.00	11.29 % Less

3.1	Maintenance Cost per day for 4th year	365 days	4,956. 00	54,26,820.00	4,956.00	54,26,820.00	20.00 % Less
3.1	Maintenance Cost per day for 5th year	365 days	5,074. 00	55,56,030.00	5,074.00	55,56,030.00	28.78 % Less
Sub Total (III)				2,57,77,395.00		2,57,77,395.00	14.28 % Less
Over All Total (Sub Total (I+II+III)				**12,80,14,435.80 Say 12,80,14,436/-**		**12,80,14,435.80 Say 12,80,14,436/-**	**9 % Less**

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். *Vinayagaa Transports* நிறுவனத்தார் *3* எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் *(Amphibious Excavator)* உபகரணங்களை *5* வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி வழங்க இறுதி விலைப்புள்ளியாக தெரிவித்துள்ள ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் *(Amphibious Excavator)* உபகரணத்திற்கு ரூ.*2,47,55,220/-* வீதம், *3* எண்ணிக்கையிலான உபகரண கொள்முதலுக்கு ரூ.*7,42,65,660/-* மற்றும் *5* வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கு ரூ.*5,37,48,775.80* என மொத்த தொகையாக ரூ.*12,80,14,435.80* முழுமையாக ரூ.*12,80,14,436/-* வழங்கியுள்ளனர். இந்நிறுவனத்தார் வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளியான ரூ.*12,80,14,436/-* ஆனது தோராய மதிப்பீட்டுத் தொகையான ரூ.*14,06,78,386/-* ஐ விட *9%* குறைவாகும். எனவே, திருவாளர்கள். *Vinayagaa Transports* நிறுவனத்தார் வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளியினை ஏற்று, இந்நிறுவனத்தாரிடமிருந்து *3* எண்ணிக்கையில் ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் *(Amphibious Excavator)* உபகரணங்களை *5* வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி ரூ.*12,80,14,435.80 (Inclu.GST)* மதிப்பீட்டில் கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் ஒப்பங்கள் ஏற்கும் குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, அக்குழுமத்தின் *23.03.2025* நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் தற்போது அமல்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்ட விதி *2023* ன்படி *(G.O.Ms. No 45, Municipal Administration Water Supply (Election) Department dated 12/04/2023)*ல் வெளிப்புற நிதி மூலம் *(External Fund)* மேற்கொள்ளப்படும் பணிகளில் ரூ.*5.00* கோடிக்கு மேல் மேற்கொள்ளும் பணிகளுக்கான நிர்வாக அனுமதி அரசிடமிருந்து பெறப்பட வேண்டும் எனவும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, தலைமை அலுவலகத்தில் கோரப்படும் ஒப்ப பணிகளில் ரூ.*1.00* கோடிக்கு மேல் கோரப்படும் ஒப்பங்களுக்கு அனுமதி அளிக்க அதிகார பங்களிப்பு ஆணையர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது, எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, *3* எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் *(Amphibious Excavator)* உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கான மதிப்பீடு ரூ.*10.00* கோடிக்கு மேல் உள்ளதால் அரசிடமிருந்து ஏற்கனவே நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும், இந்த உபகரணங்களின் கொள்முதலுக்கான செலவீனத்தினை தூய்மை இந்தியா திட்ட சேமிப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் எனவும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை இவ்வுபகரணங்களை ஒதுக்கீடு பெறும் சம்மந்தப்பட்ட வட்டார இயந்திர பொறியியல் துறையின் மூலம் கணக்கு தலைப்பு எண் *230-80-03-00* என்னும் தலைப்பின் கீழ் அந்தந்த நிதி ஆண்டில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் *2022-23* ஆம் நிதி ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தூய்மை இந்தியா திட்ட சேமிப்பு நிதியின் கீழ் மூன்று எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் *(Amphibious Excavator)* உபகரணங்களை *5* வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்ய கோரப்பட்ட மின்னணு ஒப்பத்தில் கலந்து கொண்ட இரு நிறுவனங்களில் குறைந்த விலைபுள்ளி அளித்துள்ள நிறுவனமான திருவாளர்கள். *Vinayagaa Transports* நிறுவனத்தார் மூலம் ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் *(Amphibious Excavator)* உபகரணத்திற்கு ரூ.*2,47,55,220/-* வீதம்,*3* எண்ணிக்கையிலான உபகரண கொள்முதலுக்கு ரூ.*7,42,65,660/-* மற்றும் *5* வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கு ரூ.*5,37,48,775.80* என மொத்த தொகையாக ரூ.*12,80,14,435.80* முழுமையாக ரூ.*12,80,14,436/-* (ரூபாய். பன்னிரெண்டு கோடியே எண்பது இலட்சத்து பதினான்காயிரத்து நானூற்று முப்பத்தாறு மட்டும்) (தோராய மதிப்பீடு ரூ.*14,06,78,385/-*ஐ விட *9%* குறைவு) மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,
2. மூன்று எண்ணிக்கையிலான உபகரணங்களை *5* ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள திருவாளர்கள். *Vinayagaa Transports* வழங்கியுள்ள கீழ்க்கண்ட விலைப்புள்ளி விவரங்களை ஏற்கவும்,

அட்டவணை - *V*

Description	Operation Cost (inclu. GST@18%)					Overall amount for 3 machines for a period of 5years (**Inclu.GST@18** Rs.
	1st Year	2nd Year	3rd year	4th year	5th year	
Cost per hour per equipment	613.60	632.48	637.20	649	660.80	2,79,71,380.80
Total cost for 3 equipment for one year (365 days)	53,75,136	55,40,524.80	55,81,872	56,85,240	57,88,608	

Description	Comprehensive Maintenance Cost (inclu. GST@18%)					
Cost per day per equipment	4,071	4,661	4,779	4,956	5,074	2,57,77,395.00
Total cost for 3 equipment for one year (365 days)	44,57,745	51,03,795	52,33,005	54,26,820	55,56,030	
Total Cost for Operation And Comprehensive Maintenance for 5 Years for 3 Machines						**5,37,48,775.80 Say 5,37,48,756.00**

"23.04.2025 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.**279/2025, **நாள்.**23.04.2025**-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.04.2025 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**197/2025, **நாள்.**25.04.2025**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

க.து.நா.க.எண்.பி1/0221-4/2025

ஆணையர் அவர்களின் 10.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 515/2025 **பொருள் எண்.187**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 06, 07, 08 மற்றும் 10ல் உள்ள அங்கன்வாடிகள் மற்றும் மதிய உணவு கூடங்களை மேம்படுத்தி புதுப்பித்து கட்டும் பணிகளுக்கு திருவாளர். Vijay Gowtham Engineering Works., அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம் - 06, 07, 08 மற்றும் 10ல் உள்ள அங்கன்வாடிகள் மற்றும் மதிய உணவு கூடங்களை மேம்படுத்தி புதுப்பித்து கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள்: 10.02.2025. 2. மன்ற தீர்மானம் எண்: 213/2025, நாள்: 27.02.2025.
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 06, 07, 08 மற்றும் 10.
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	**மதிப்பீட்டின் தொகை**	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 6,05,00,000.00
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 1,08,90,000.00
	(இ) த.நா.க.தொ.ந.,வா 1%	ரூ. 6,05,000.00
	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 6,05,000.00
	(உ) எதிர்பாரா செலவு	ரூ. 8,03,000.00
	மொத்தம் (Rounded Off)	**ரூ.** 7,34,03,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 27.02.2025. 2. தினபூமி 28.02.2025. 3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 28.02.2025.
7	ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	13.03.2025
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	Anganwadi Centre **(412 - 400 - 406)**
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட	

	நாளிலிருந்து ***15/30*** நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	**இரண்டு** (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு *14.03.2025* அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து கீழ்கண்டவாறு ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார், விவரம் பின்வருமாறு:

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ***2024-2025*** (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	***2024-2025***ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	Vijay Gowtham Engineering Works	6,05,00,000.00	6,54,00,500.00	(+) 8.10 % **அதிகம்**
2	Thomas Iyadurai Infrastructure Pvt Ltd	6,05,00,000.00	6,77,60,000.00	(+) 12.00 % அதிகம்

இவ்வொப்பத்தில் திருவாளர், *Vijay Gowtham Engineering Works*., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார், இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார், விவரம் பின்வருமாறு:

வ. எண்	மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம்	*L1* ஒப்பந்ததாரர் ***2024-2025***ஆம் ஆண்டு ***SOR***-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம்
1	முதற் கட்ட விலை குறைப்பு நாள் 27.03.2025	ரூ. 6,34,94,750.00 (+) 4.95 % அதிகம்

இதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - *06, 07, 08* மற்றும் *10*ல் உள்ள அங்கன்வாடிகள் மற்றும் மதிய உணவு கூடங்களை மேம்படுத்தி புதுப்பித்து கட்டும் பணிகளுக்காக *2024-2025* ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட *(+) 4.95 %* அதிகம், ஒப்பத் தொகை ரூ. *6,34,94,750.00* மற்றும் *18%* சரக்கு மற்றும் சேவை வரி ரூ.*1,14,29,055.00*ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.*7,49,23,805.00*க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு *2024-2025* ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்.	மதிப்பீட்டின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூபாய்) **(A)**	தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+)4.95% சேர்த்து (ரூபாய்) **(B)**
1	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 6,05,00,000.00	**ரூ.** 6,34,94,750.00
2	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 1,08,90,000.00	**ரூ.** 1,14,29,055.00
3	(இ) த.நா.க.தொ.ந.,வா 1%	ரூ. 6,05,000.00	ரூ. 6,05,000.00
4	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 6,05,000.00	ரூ. 6,05,000.00
5	(உ) எதிர்பாரா செலவு	ரூ. 8,03,000.00	ரூ. 8,03,000.00
	மொத்தம் (Rounded Off)	ரூ. 7,34,03,000.00	**ரூ.** 7,69,36,805.00
		கூடுதல் தொகை (B- A)	**ரூ.** 35,33,805.00

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+) 4.95%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.7,69,36,805.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.7,69,36,805.00-க்கு நிர்வாக அனுமதியும்,

2. மண்டலம் - 06, 07, 08 மற்றும் 10 ல் உள்ள அங்கன்வாடிகள் மற்றும் மதிய உணவு கூடங்களை மேம்படுத்தி புதுப்பித்து கட்டும் பணிகளுக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.95% அதிகம், ஒப்பத் தொகை ரூ. 6,34,94,750.00 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,14,29,055.00ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.7,49,23,805.00-க்கு (ரூபாய் ஏழு கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து எண்ணூற்று ஐந்து எட்டு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Vijay Gowtham Engineering Works., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,

3. இப்பணிக்கான செலவீனத்தினை Anganwadi Centre (20 - 28 - 00 / 412 - 400 - 406) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.271/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.192/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.ந.க.எண்.பி1/0866-1/2025

ஆணையர் அவர்களின் 20.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 516/2025 **பொருள் எண்.188**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 11, வார்டு - 143, நொளம்பூர், பாடசாலை தெருவில் சென்னை நடுநிலைப்பள்ளி கட்டும் பணிக்கு 2024-2025ஆம் ஆண்டின் விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

2024-2025 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின்படி மண்டலம் - *11*, வார்டு - *143*, நொளம்பூர், பாடசாலை தெருவில் சென்னை நடுநிலைப்பள்ளி கட்டும் பணியினை மேற்கொள்ள வேண்டி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

1	பணியின் பெயர்	மண்டலம்-11, வார்டு-143, நொளம்பூர், பாடசாலை தெருவில் சென்னை நடுநிலைப்பள்ளி கட்டும் பணி.
2	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 11.
3	**மதிப்பீட்டின் தொகை விவரம்**	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 1,42,90,135.78
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 25,72,224.44
	(இ) த.நா.க.தொ.ந.வா.1%	ரூ. 1,42,901.36
	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 1,42,901.36
	(உ) மின்சார செலவு	ரூ. 30,000.00
	(ஊ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 3,21,837.06
	மொத்தம்	**ரூ.** 1,75,00,000.00
4	நிதியின் தன்மை	Middle School (20 - 28 - 00 / 412 - 400 - 402)
5	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	**ரூ.** 1,75,00,000.00

மேற்குறிப்பிட்டுள்ள மண்டலம் - 11, வார்டு - 143, நொளம்பூர், பாடசாலை தெருவில் சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டும் பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் செலவீனத்தை Middle School (20 - 28 - 00 / 412 - 400 - 402) நிதியில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. மண்டலம் - 11, வார்டு - 143, நொளம்பூர், பாடசாலை தெருவில் சென்னை நடுநிலைப்பள்ளி கட்டும் பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,75,00,000.00 (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் : Middle School (20 - 28 - 00 / 412 - 400 - 402) தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு அளிக்கவும்,

3. மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம்கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

ம.நீ.வ.து.ந.க.எண்.பி1/0147-26/2025

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 517/2025 **பொருள் எண்.189**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால்துறை-மண்டலம்-8, வார்டு-105 மற்றும் 106ல் உள்ள பாஞ்சாலியம்மன் கோயில் தெரு முதல் இந்திராகாந்தி தெரு, அசோகா தெரு தண்ணீர் தொட்டி சாலை வழியாக விருகம்பாக்கம் கால்வாய் வரையில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி - குறைந்த விலைப்புள்ளி அளித்த Th.R. Rama Rao அவர்களுக்கு பணியேற்பு கடிதம் வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8, வார்டு-105 மற்றும் 106ல் உள்ள பாஞ்சாலியம்மன் கோயில் தெரு முதல் இந்திராகாந்தி தெரு, அசோகா தெரு தண்ணீர் தொட்டி சாலை வழியாக விருகம்பாக்கம் கால்வாய் வரையில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு மன்றத்தீர்மானத்தின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பணிக்கு மின்னணு மூலம் 13.01.2025 அன்று ஒப்பம் கோரப்பட்டது. இவ்வொப்பந்தப்புள்ளி 14.01.2025 அன்று ஆங்கில செய்தித்தாளான "The Times of India", தமிழ் செய்தித்தாளான "தினகரன்" மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதனை தொடர்ந்து ஒப்ப இறுதி நாளான07.02.2025 அன்று திறக்கப்பட வேண்டிய ஒப்பம் நிர்வாக காரணங்களால் 12.03.2025 அன்று மாலை 3.30 மணி அளவில், ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. இவ்வொப்பத்தில் 5 ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். அதன் விவரம் பின்வருமாறு

அட்டவணை-I

வ.எண்	சிப்பத்தில்கலந்துகொண்டஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள்	குறிப்பு
1	M/s. Menakaa& Co	Qualified
2	Th.R. Ramarao	Qualified
3	M/s. Sasi Constructions	Qualified
4	M/s. KSM Constructions Pvt Ltd	Qualified
5	M/s. Thomas Iyadurai Infrastructure Pvt Ltd	Qualified

ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் வரிசை எண்.1 முதல் 5 வரை உள்ள ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப ஆவணங்கள் முறையாக சமர்ப்பித்ததால் அந்நிறுவனங்களின் நிதி ஆவணம் (Financial Bid) 27/03/2025 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

அட்டவணை-II

வ.எண்	ஒப்பத்தில்கலந்துக்கொண்ட ஒப்பந்ததாரர் பெயர்கள்திரு/திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை 2023-24 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல்படி (18 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்ததொகை (18 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்தஒப்பசதவீதம் 2023-24 ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி
(1)	(2)	(3)	(4)	(5)
1	M/s. Menakaa& Co	ரூ. 7,84,18,342.40	ரூ.8,39,07,626.36	(+) 7.00%
2	Th.R. Rama Rao		ரூ. 8,23,31,417.68	(+) 4.99%
3	M/s. Sasi Construction		ரூ. 9,18,98,455.45	(+) 17.19%
4	M/s. KSM Constructions Pvt Ltd		ரூ. 8,41,42,881.39	(+) 7.30%
5	M/s. Thomas Iyadurai Infrastructure Pvt Ltd		ரூ. 8,54,75,993.21	(+) 9.00%

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் Th.R. Rama Rao அவர்களிடம் விலைக் குறைப்பு கோரி 27.03.2025 அன்று கடிதம் அளிக்கப்பட்டது.அதன்படி L1 ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு

அட்டவணை-III

வ-எண்	ஒப்பத்தில் கலந்துக் கொண்ட ஒப்பந்ததாரர் பெயர்கள் திரு/திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை 2023-24 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல்படி (18 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத்தொகை (18 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2023-24 ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல்படி
(1)	(2)	(3)	(4)	(5)
1	Th.R. Rama Rao	ரூ. 7,84,18,342.40	ரூ.8,11,62.984.38	(+) 3.50%

மீண்டும் மேற்குறிப்பிட்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் Th.R. Rama Rao அவர்களிடம் இரண்டாவது முறையாக விலைக்குறைப்பு செய்ய வேண்டி 03.04.2025 அன்று கடிதம் அளிக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு

அட்டவணை-IV

வ-எண்	ஒப்பத்தில் கலந்துக் கொண்ட ஒப்பந்ததாரர் பெயர்கள் திரு/திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை 2023-24 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல்படி (18 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	பேச்சு வார்த்தைக்கு பின்ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத்தொகை (18 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2023-24 ஆண்டு அலுவலக விலை விவரப் பட்டியல்படி
(1)	(3)	(4)	(5)	(6)
1	Th.R. Rama Rao	ரூ. 7,84,18,342.40	ரூ.8,03,70,959.13	(+) 2.49%

எனவே மேற்குறிப்பிட்டுள்ள ஒப்ப சதவீதத்தினை ஏற்க பரிந்துரை வேண்டி ஒப்பந்த புள்ளிகள் விவர அறிக்கை துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் தலைமையிலான ஒப்ப ஆய்வுக்குழுவிடம் (Tender Scrutiny Committee) 04.04.2025 சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே,

1. மண்டலம்-8, வார்டு-105 மற்றும் 106ல் உள்ள பாஞ்சாலியம்மன் கோயில் தெரு முதல் இந்திராகாந்தி தெரு, அசோகா தெரு தண்ணீர் தொட்டி சாலை வழியாக விருகம்பாக்கம் கால்வாய் வரையில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு 2023-24 ஆம் ஆண்டு அலுவலக விலையை விட கூடுதலாக (+)2.49% அளித்த ஒப்பந்ததாரரான Th.R.RamaRao அவர்களுக்கு அட்டவணை 4ல் குறிப்பிட்டுள்ள விவரத்தின்படி ரூ.8,03,70,959.13 ஒப்பத்தொகைக்கு பணியேற்பு கடிதம் வழங்க அனுமதியும்,
2. மேற்காணும் பணிக்கு ஒப்பந்ததாரருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண். 412-401-100 (Stormwater Drain and Culverts) என்ற நிதி ஒதுக்கீட்டில் பட்டி தீர்வு செய்ய அனுமதியும்,
3. இப்பணிக்குண்டான செலவீனத்தை நிதி ஆலோசகர் அவர்கள் மூலம் மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண் 412-401-100 (Stormwater Drain and Culverts) கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.277/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.195/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

ம.நீ.வ.து.ந.க.எண்.பி1/0147-28/2025

ஆணையர் அவர்களின் 11.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 518/2025 **பொருள் எண்.190**

பெருநகரசென்னைமாநகராட்சி - மழைநீர் வடிகால்துறை - மண்டலம்-8, வார்டு-106, விநாயகபுரம் பிரதான சாலை மற்றும் MMDA காலனி பிரதான சாலையில் இருந்து சிட்கோ 1வது தெரு மற்றும் காயிதே மில்லத் தெரு வழியாக விருகம்பாக்கம் கால்வாய் வரையில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி - குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனமான M/s.RVS Constructions அவர்களுக்கு பணியேற்பு கடிதம் வழங்க அனுமதி.

பெருநகர சென்னைமாநகராட்சி, மண்டலம்-*8*, வார்டு-*106*க்குட்பட்ட விநாயகபுரம் பிரதான சாலை மற்றும் *MMDA* காலனி பிரதான சாலையில் இருந்து சிட்கோ *1*வது தெரு மற்றும் காயிதே மில்லத் தெரு வழியாக விருகம்பாக்கம் கால்வாய் வரையில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு மன்றத்தீர்மான *571/2024*, நாள்.*30.12.2024*ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட பணிக்கு மின்னணு மூலம் *13.01.2025* அன்று ஒப்பம் கோரப்பட்டது.

இவ்வொப்பந்தப்புள்ளி *14.01.2025*அன்று ஆங்கில செய்தித் தாளான *"The Times of India"*, தமிழ் செய்தித்தாளான *"தினகரன்"* மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதனை தொடர்ந்து ஒப்ப இறுதி நாளான *07.02.2025* அன்று திறக்கப்பட வேண்டிய ஒப்பம் நிர்வாக காரணங்களால் *12.03.2025* அன்று மாலை *3.30* மணி அளவில், ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. இவ்வொப்பத்தில் *4* ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். அதன் விவரம் பின்வருமாறு

(அட்டவணை-I)

வ.எண்	சிப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள்	குறிப்பு
1	M/s. Menakaa & Co	Qualified
2	Th.R. Rama Rao	Qualified
3	M/s. Sasi Constructions	Qualified
4	M/s. RVS Constructions	Qualified

ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் வரிசை எண்.*1* முதல் *4* வரை உள்ள ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப ஆவணங்கள் முறையாக சமர்ப்பித்ததால் அந்நிறுவனங்களின் நிதி ஆவணம் *(Financial Bid) 27.03.2025* அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

(அட்டவணை-II)

வ.எண்	ஒப்பத்தில் கலந்துக் கொண்ட ஒப்பந்ததாரர் பெயர்கள் திரு/திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை *2023-24* ஆம்ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி *(18* சதவீதம் *GST* சேர்த்து*)* *(*ரூபாய்*)*	ஒப்பந்ததாரர் அளித்ததொகை *(18* சதவீதம் *GST* சேர்த்து*)* *(*ரூபாய்*)*	ஒப்பந்ததாரர் அளித்தஒப்ப சதவீதம் *2023-24* ஆண்டு அலுவலக விலைவிவரப் பட்டியல்படி
(1)	(2)	(3)	(4)	(5)
1	M/s. Menakaa & Co	ரூ.5,06,41,946.94	ரூ.5,36,29,821.81	(+) 5.90%
2	Th.R. Rama Rao		ரூ.5,42,37,525.18	(+) 7.10%
3	M/s. Sasi Constructions		ரூ.6,02,58,852.67	(+) 18.99%
4	M/s. RVS Constructions		ரூ.5,34,01,933.05	(+) 5.45%

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் *M/s. RVS Constructions* அவர்களிடம் விலைக் குறைப்பு கோரி *27.03.2025* அன்று கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். அதன்விவரம் பின்வருமாறு

(அட்டவணை-III)

வ-எண்	ஒப்பத்தில் கலந்துக் கொண்ட ஒப்பந்ததாரர் பெயர்கள் திரு/ திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை *2023-24* ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி *(18* சதவீதம் *GST* சேர்த்து*)* *(*ரூபாய்*)*	பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத்தொகை *(18* சதவீதம் *GST* சேர்த்து*)* *(*ரூபாய்*)*	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் *2023-24* ஆண்டு அலுவலக விலைவிவரப் பட்டியல்படி
(1)	*(3)*	*(4)*	*(5)*	*(6)*
1	M/s. RVS Constructions	ரூ.5,06,41,946.94	ரூ. 5,19,07,995.61	(+) 2.50%

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள ஒப்ப சதவீதத்தினை ஏற்க பரிந்துரை வேண்டி ஒப்பந்த புள்ளிகள் விவர அறிக்கை துணை ஆணையர் *(*பணிகள்*)* அவர்களின் தலைமையிலான ஒப்ப ஆய்வுக்குழுவிடம் *(Tender Scrutiny Committee) 04.04.2025* அன்று சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே,

1. மண்டலம்-8, வார்டு-106க்குட்பட்ட விநாயகபுரம் பிரதான சாலை மற்றும் MMDA காலனி பிரதான சாலையில் இருந்து சிட்கோ 1வது தெரு மற்றும் காயிதே மில்லத் தெரு வழியாக விருகம்பாக்கம் கால்வாய் வரையில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு அலுவலக விலையை விட கூடுதலாக (+)2.50% அளித்த ஒப்பந்ததாரரான M/s. RVS Constructions

அவர்களுக்கு ரூ. 5,19,07,995.61 ஒப்பத்தொகைக்கு பணியேற்பு கடிதம் வழங்க அனுமதியும்,

2. மேற்காணும் பணிக்கு ஒப்பந்ததாரருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண் 412-401-100 (Stormwater Drain and Culverts) என்ற நிதி ஒதுக்கீட்டில் பட்டி தீர்வு செய்ய அனுமதியும்,
3. இப்பணிக்குண்டான செலவீனத்தை நிதி ஆலோசகர் அவர்கள் மூலம் மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண் 412-401-100 (Stormwater Drain and Culverts) கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.269/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 191/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

மநீ.வ.து.நி.க.எண்.பி3/0378-14/2025

ஆணையர் அவர்களின் 13.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 519/2025 **பொருள் எண்.191**

பெருநகர சென்னை மாநகராட்சி- மழைநீர் வடிகால் துறை - மண்டலம்-10 வார்டு-127 மற்றும் மண்டலம் – 8, வார்டு -105க்குட்பட்ட பாஞ்சாலி அம்மன் கோயில் தெரு (PH சாலை முதல் வள்ளுவன் சாலை வரை) முதல் வள்ளுவன் சாலை மற்றும் ஜெய் நகர் பிரதான சாலை வழியாக ஜவஹர்லால் நேரு சாலை வரை) மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு.R.Ramarao அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*10* வார்டு-*127* மற்றும் மண்டலம் – *8*, வார்டு -*105*க்குட்பட்ட பாஞ்சாலி அம்மன் கோயில் தெரு *(PH* சாலை முதல் வள்ளுவன் சாலை வரை*)* முதல் வள்ளுவன் சாலை மற்றும் ஜெய் நகர் பிரதான சாலை வழியாக ஜவஹர்லால் நேரு சாலை வரை*)* மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.*6,50,96,000/-*க்கு நிர்வாக அனுமதி மன்றத்தீர்மான எண்.*110*, நாள்.*30.01.2025* ன்படி ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்கண்ட பணியினை செயல்படுத்த ஒப்பந்தபுள்ளி *15.02.2025* அன்று கோரப்பட்டு இவ்வொப்பந்தபுள்ளி *18.02.2025* அன்று ஆங்கில செய்தித்தாளான "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" தமிழ் செய்திதாளான தினத்தந்தி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் ஒப்ப அறிவிப்பு *20.02.2025* அன்று வெளியிடப்பட்டது. பின்னர் நிர்வாக நலன் கருதி ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய நாள் *04.03.2025* இருந்ததை *11.03.2025* என்றும் ஒப்பம் திறப்பு நாள்.*05.03.2025* இருந்ததை *12.03.2025* என்றும் மாற்றம் செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து மின்னணு ஒப்பம் திறப்பு நாளான *12.03.2025* அன்று மாலை *3.30* மணியளவில் ஒப்பந்ததாரர் முன்னிலையில் ஒப்பம் திறக்கப்பப்பட்டன. இவ்வொப்பத்தில் நான்கு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்களை பரிசீலனை செய்த விவரம் பின்வருமாறு

அட்டவணை-*I*

வ. எண்	பெயர் திரு/திருவாளர்	பணியின் அலுவலக மதிப்பு *(Incl 18% GST)*	குறிப்பு
1	R.Ramarao	6,19,46,607.54	தொழில்நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் தகுதியுடையவர்கள்
2	K.Durvasalu	6,19,46,607.54	தொழில்நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் தகுதியுடையவர்கள்
3	Menakaa & Co.,	6,19,46,607.54	தொழில்நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் தகுதியுடையவர்கள்
4	Sasi Constructions	6,19,46,607.54	தொழில்நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் தகுதியுடையவர்கள்

இதன் தொடர்ச்சியாக, இப்பணிகளுக்கு தொழில் நுட்ப ஆவணத்தில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரரின் நிதி ஆவணங்கள் *27.03.2025* அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு

அட்டவணை-II

வ-எண்	ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் பெயர்கள் திரு/திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை *2024-25* ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி *(18% GST* சேர்த்து) ரூ	ஒப்பந்ததாரர் அளித்த தொகை *(18% GST* சேர்த்து) ரூ	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் *2024-25* ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் படி
1	R.Ramarao	6,19,46,607.54	6,50,37,743.25	(+)4.99%
2	K.Durvasalu	6,19,46,607.54	6,64,68,709.89	(+)7.30%
3	Menakaa & Co.,	6,19,46,607.54	6,62,82,870.06	(+)7.00%
4	Sasi Constructions	6,19,46,607.54	7,34,31,508.57	(+)18.54%

மேற்கண்ட பணிக்கு விலை ஒப்பீட்டு அறிக்கையின்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திரு. *R.Ramarao* அவர்கள் அலுவலக விலையைவிட *(+) 4.99%* கூடுதலாக அளித்துள்ளார்கள்.

எனவே, குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திரு. *R.Ramarao* அவர்களிடம் *27.03.2025* அன்று விலைக் குறைப்பு செய்ய கடிதம் அளிக்கப்பட்டது, அதன்படி திருவாளர்கள். *R.Ramarao* அவர்கள் விலைக்குறைப்பு *(+)3.40%* செய்து கடிதம் அளித்துள்ளார்கள்.

(முதலாம் கட்ட விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு அட்டவணை-*III*)

வ-எண்	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் திரு/திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை *2024-25* ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி *(18% GST* சேர்த்து) ரூ	*1*வது விலைக்குறைப்புக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத் தொகை *(18% GST* சேர்த்து)	*1*வது விலைக்குறைப்புக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் *2024-25* ஆண்டு அலுவலக விலை விவரப் பட்டியல் படி
1	R.Ramarao	6,19,46,607.54	6,40,52,792.19	(+) 3.40%

மேலும் விலைக்குறைப்பு அளிக்குமாறு கோரப்பட்டதன் அடிப்படையில் *29.03.2025* அன்று *(+)2.49%* விழுக்காட்டிற்கு விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள் அதன் அடிப்படையில் திரு. *R.Ramarao* அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

(இரண்டாம் கட்ட விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு அட்டவணை - *IV*)

வ. எ ண்	கோப்பு எண் / பணியின் விவரம்	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் திரு/ திருவாளர்கள் (L 1)	பணியின் அலுவலக தொக 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி(18% GST சேர்த்து)	விலைக்குறைப்பு கடிதம் அளித்த பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத் தொகை (18% GST சேர்த்து)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2024-25 ஆண்டு அலுவலக விலை விவரப் பட்டியல் படி
1	**ம.வ.து.ந.க.எண்.பி3/0378-14/2025** மண்டலம்-10, வார்டு-127 மற்றும் மண்டலம் – 8, வார்டு -105க்குட்பட்ட பாஞ்சாலி அம்மன் கோயில் தெரு (PH சாலை முதல் வள்ளுவன் சாலை வரை) முதல் வள்ளுவன் சாலை மற்றும் ஜெய் நகர் பிரதான சாலை வழியாக ஜவஹர்லால் நேரு சாலை வரை) மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி	R.Ramarao	6,19,46,607.54	6,34,89,078.07	(+) 2.49%

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திரு.R.Ramarao அவர்கள் இரண்டாம் கட்ட விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப்பின் அளித்துள்ள ஒப்பத் தொகை ரூ.6,34,89,078.07 ஆகும். இத்தொகையானது 2024-25 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+)2.49% கூடுதல் ஆகும்.

மேற்குறிப்பிட்டுள்ள ஒப்ப சதவீதங்கள் ஏற்க பரிந்துரை வேண்டி இப்பணிக்கான ஒப்பந்த புள்ளிகள் விவர அறிக்கை 04.04.2025 அன்று துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் தலைமையிலான ஒப்பம் ஆய்வுக் குழுவிடம் (Tender Scrutiny Committee) சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே,

1. மண்டலம்-10 வார்டு-127 மற்றும் மண்டலம் – 8, வார்டு -105க்குட்பட்ட பாஞ்சாலி அம்மன் கோயில் தெரு (PH சாலை முதல் வள்ளுவன் சாலை வரை) முதல் வள்ளுவன் சாலை மற்றும் ஜெய் நகர் பிரதான சாலை வழியாக ஜவஹர்லால் நேரு சாலை வரை) மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு. R.Ramarao அவர்களுக்கு ஒப்பத் தொகை ரூ.6,34,89,078.07 (Including GST 18%) (ரூபாய். ஆறு கோடியே முப்பத்தி நான்கு இலட்சத்து எண்பத்தி ஒன்பதாயிரத்து எழுபத்தி எட்டு மற்றும் ஏழு பைசா மட்டும்)க்கு 2024-25 ஆம் ஆண்டின் அலுவலக

விலையின்படி (+)2.49% கூடுதல் விழுக்காட்டில் ஒப்பம் வழங்க அனுமதியும் மற்றும் பணி ஆணை வழங்க அனுமதியும்,

2. மேற்காணும் பணிக்குண்டான செலவீனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி கணக்கு குறியீடு எண்.412-401-100 (Storm Water Drain & Culvert) என்ற மூலதன தலைப்பின் கீழ் பட்டித்தீர்வு செய்யவும், நிதி நிர்வாக பிரிவின் மூலம் இதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.278/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.196/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.நீ.வ.து.ந.க.எண்.பி2 / 0474-17 / 2025

ஆணையர் அவர்களின் 11.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 520 / 2025 **பொருள் எண்.192**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - மண்டலம்-10, வார்டு-138ல் உள்ள எம்.ஜி.ஆர். கால்வாயில் (கே.கே. சாலை முதல் முத்துமாரியம்மன் குறுக்கு தெரு 330 m வரை) தரை மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது - ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். Vijay Gowtham Engineering Works அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*10*, வார்டு-*138* உள்ள எம்.ஜி.ஆர். கால்வாயில் (கே.கே. சாலை முதல் முத்துமாரியம்மன் குறுக்கு தெரு *330m* வரை) தரை மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. *6,56,00,000/-*க்கு நிர்வாக அனுமதி மன்றத்தீர்மான எண்.*84/2025*, நாள்.*30.01.2025* ன்படி ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்கண்ட பணியினை செயல்படுத்த ஒப்பந்தபுள்ளி *17.02.2025* அன்று கோரப்பட்டு இவ்வொப்பந்தபுள்ளி *19.02.2025* அன்று ஆங்கில செய்த்தாளான "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" தமிழ் செய்திதாளான தினத்தந்தி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் ஒப்ப அறிவிப்பு *20.02.2025* அன்று வெளியிடப்பட்டது.

இதனை தொடர்ந்து மின்னணு ஒப்பம் திறப்பு நாளான *12.03.2025* அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பப்பட்டன. இவ்வொப்பத்தில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். இதற்கான ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரரார்களும் தகுதி வாய்ந்தவர்களாக தேர்வு செய்யப்பட்டனர். அதன் விவரம் பின்வருமாறு

அட்டவணை-*I*

வ. எண்	பெயர் திரு./திருவாளர்	பணியின் அலுவலக மதிப்பு (*Incl 18% GST*)	குறிப்பு
1	Vijay Gowtham Engineering Works	6,27,33,835.82	தொழில் நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் தகுதியுடையவர்கள்
2	Thomas Iyadurai Infrastruucture Pvt Ltd	6,27,33,835.82	தொழில் நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் தகுதியுடையவர்கள்

இதன் தொடர்ச்சியாக, இப்பணிகளுக்கு தொழில் நுட்ப ஆவணத்தில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரின் நிதி ஆவணங்கள் *27.03.2025* அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

அட்டவணை-II

வ-எண்	ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர் பெயர்கள் திரு/திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை *2024-25* ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி *(18% GST* சேர்த்து) ரூ	ஒப்பந்ததாரர் அளித்த தொகை *(18% GST* சேர்த்து) ரூ	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் *2024-25* ஆண்டு அலுவலக விலைப் பட்டியலின்படி
1	Vijay Gowtham Engineering Works	6,27,33,835.82	6,58,95,621.14	(+) 5.04%
2	Thomas Iyadurai Infrastruucture Pvt Ltd	6,27,33,835.82	6,83,79,881.04	(+) 9.00%

மேற்கண்ட பணிக்கு விலை ஒப்பீட்டு அறிக்கையின்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். விஜய் கௌதம் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் அவர்கள் *(+)5.04%* அளித்துள்ளார்கள்.

எனவே, குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். *Vijay Gowtham Engineering Works* அவர்களிடம் *27.03.2025* அன்று விலைக் குறைப்பு செய்ய கடிதம் அளிக்கப்பட்டது. மேலும் விலைக்குறைப்பு அளிக்குமாறு கோரப்பட்டதன் அடிப்படையில் *(+)2.99%* விழுக்காட்டிற்கு விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள்.

அதன் அடிப்படையில் திருவாளர்கள். விஜய் கௌதம் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

அட்டவணை-III

வ. எண்	கோப்பு எண் / பணியின் விவரம்	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் திரு/ திருவாளர்கள் *(L1)*	பணியின் அலுவலக தொகை *2024-25* ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி*(18% GST* சேர்த்து)	*2*வது விலைக்குறைப்பு கடிதம் அளித்த பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத் தொகை *(18% GST* சேர்த்து)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம்*2024-25* ஆண்டு அலுவலக விலை விவரப் பட்டியல்படி
1	**ம.வ.து.ந.க.எண்.பி*2/0474-17/2025*** மண்டலம்-*10*, வார்டு-*138* உள்ள எம்.ஜி.ஆர். கால்வாயில் (கே.கே. சாலை முதல் முத்து மாரியம்மன் குறுக்கு தெரு *330m* வரை) *Raft* மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி.	Vijay Gowtham Engineering Works	6,27,33,835.82	6,46,09,577.51	(+) 2.99%

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள், விஜய் கௌதம் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் அவர்கள் பேச்சுவார்த்தைக்குப்பின் அளித்துள்ள ஒப்ப தொகை ரூ. *6,46,09,577.51* ஆகும். இத்தொகையானது *2024-25* ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட *(+)2.99%* அதிகம் ஆகும்.

மேற்குறிப்பிட்டுள்ள ஒப்ப சதவீதங்கள் ஏற்க பரிந்துரை வேண்டி இப்பணிக்கான ஒப்பந்த புள்ளிகள் விவர அறிக்கை *03.04.225* அன்று துணை ஆணையர் *(பணிகள்)* அவர்களின் தலைமையிலான ஒப்பம் ஆய்வுக் குழுவிடம் *(Tender Scrutiny Committee)* சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே,

1. மண்டலம்-10, வார்டு-138 உள்ள எம்.ஜி.ஆர். கால்வாயில் (கே.கே. சாலை முதல் முத்துமாரியம்மன் குறுக்கு தெரு 330m வரை) Raft மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். விஜய் கௌதம் இன்ஜினியரிங் ஓர்க்ஸ் அவர்களுக்கு ஒப்பத் தொகை ரூ.6,46,09,577.51 (Including GST 18%) (ரூபாய். ஆறு கோடியே நாற்பத்தாறு இலட்சத்து ஒன்பதாயிரத்து ஐந்நூற்று எழுபத்தி ஏழு மற்றும் ஐம்பத்தி ஒன்று மட்டும்) என்ற மதிப்பிற்கு 2024-25 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி (+)2.99% கூடுதல் விழுக்காட்டில் ஒப்பம் வழங்க அனுமதியும்,
2. மேற்காணும் பணிக்குண்டான செலவீனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி முலதன நிதி கணக்கு குறியீடு எண்.412-401-100 (Storm Water Drain & Culvert) என்ற மூலதன தலைப்பின் கீழ் பட்டித்தீர்வு செய்யவும், நிதி நிர்வாக பிரிவின் மூலம் இதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

> "23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.272/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> "25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.193/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

பா.து.நு.க.எண்.பி3 / 1147 / 2024

ஆணையர் அவர்களின் 18.03.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 521 / 2025 **பொருள் எண்.193**

பெருநகர சென்னை மாநகராட்சி - பாலங்கள் துறை - மண்டலம் - 6, வார்டு - 73ல் ஓட்டேரி கால்வாயின் குறுக்கே நியூ பேரன்ஸ் சாலையில் தற்போதுள்ள பாலத்தை இடித்துவிட்டு புதிதாக கட்டும் பணிக்கு குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த திருவாளர்கள். மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன் அவர்களுக்கு பணி ஆணை வழங்க அனுமதி.

1.	பணியின் பெயர் மற்றும் பணியின் இடம்	மண்டலம்-6, வார்டு-73ல் ஓட்டேரி கால்வாயின் குறுக்கே நியூ பேரன்ஸ் சாலையில் தற்போதுள்ள பாலத்தை இடித்துவிட்டு புதிதாக கட்டும் பணி.
2.	மதிப்பீட்டின் ஒப்புதல் பெற்ற விவரம்	மன்ற தீர்மான எண் 586/2024 நாள்.30.12.2024
3.	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	பாலங்கள் துறை
4.	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2024–25 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5.	மதிப்பீட்டின் தொகை	ரூ.9,00,00,000.00
	(அ)பணி செலவினம் மட்டும்	ரூ. 5,34,76,492.21
	(ஆ) பொருட்கள் மற்றும் சேவை வரி - 18%	ரூ. 96,25,768.60
	(இ)விலையேற்ற கட்டணம்1.5 வருடத்திற்கு @6.25% (பொருட்கள் மற்றும் சேவை வரி - 18% உட்பட)	ரூ. 39,43,891.30
	(ஈ) தளவாடங்களை மாற்றியமைத்தல் (TANGEDCO, CMWSSB, TANTRANSCO)	ரூ. 1,65,48,000.00
	(உ)நிலம் கையகப்படுத்துதல் (ம) மீள்குடியேற்றம் (ம) மறுவாழ்வு செலவினம்	ரூ. 40,00,000.00
	(ஊ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி – 1%	ரூ. 5,34,764.92
	(எ) தரக்கட்டுப்பாடு - 1%	ரூ. 5,34,764.92
	(ஏ) எதிர்பாரா செலவினம் - 2.5%	ரூ. 13,36,318.05
	மொத்தம்	ரூ.9,00,00,000.00
6.	எந்தெந்த பத்திரிக்கைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. தினமலர், நாள்.16.02.2025 2. தி டைம்ஸ் ஆப் இந்தியா, நாள். 16.02.2025

7.	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்.	13.03.2025
8.	நிதியின் தன்மை	மூலதன நிதி (Capital fund)
9.	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	ஒரு ஒப்பம் (e-Tender) இணையதளத்தின் மூலம் பெறப்பட்டது.

ஒப்ப நாளான *14.03.2025* அன்று ஒரு ஒப்பம் *e-Tender* மூலமாக பெறப்பட்டது. தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரரின் நிதி ஒப்பம் *17.03.2025* அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் பின்வருமாறு :-

வ. எண்	தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் *(திருவாளர்கள்)*	பணியின் அலுவலக மதிப்பு *(GST@18% உட்பட)* (ரூ) *2024-2025*	விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு *2024-2025*	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை *(GST@18% உட்பட)* (ரூ)
1.	மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன்	ரூ.6,31,02,260.81/-	(+)9.66	ரூ. 6,92,00,000/-

ஒப்பத் தொகையை குறைக்குமாறு *e-tender* மூலம் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன் அவர்களிடம் *17.03.2025* அன்று கோரப்பட்டது. அதன்படி *BOQ e-tender* வாயிலாக திருவாளர்கள். மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன் அவர்கள் ஒப்பத் தொகையினை ரூ.*6,92,00,000/- ((+)9.66%)*-லிருந்து ரூ.*6,75,13,108.80/- ((+)6.99%)*-க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்.

எனவே, ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை மற்றும் இறுதி ஒப்ப சதவீதம் பின்வருமாறு.

பணியின் அலுவலக மதிப்பு (ரூ) *SOR 2024-25 (GST @ 18% உட்பட)*	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு *(GST@18% உட்பட) (2024-2025)*	முதல் மற்றும் இறுதி விலைக்குறைப்பிற்கு பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு *(GST@18% உட்பட) (2024-2025)*
ரூ.6,31,02,260.81/-	ரூ. 6,92,00,000/-	ரூ. 6,75,13,108.80/-
	(+)9.66%	(+)6.99%

இப்பணியினை கீழ்க்கண்ட காரணங்களை கருத்தில் கொண்டு, திருவாளர்கள். மார்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களின் ஒப்பத் தொகையான ரூ.*6,75,13,108.80/- (+)6.99%* ஐ ஏற்கலாம் எனக் கருதப்படுகிறது.

1. *Ministry of Road Transport & Highways (MORT&H)*-ன் விவரக்குறிப்புகளின் *(Specifications)*-படி பணி மேற்கொள்ள வேண்டியிருப்பதால் *25% Over Head Charges*, ஒப்பந்ததாரரின் லாபம் *(Contract Profit) 10%*மும் விகித அட்டவணையில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.
2. பணி மேற்கொள்ள தேவையான பணியிட அலுவலகம், தொழிலாளர் தங்குமிடம், கட்டுமான பொருட்கள் சேமிப்பு கிடங்கு, தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களின் சம்பளம் ஆகியவற்றிற்கான செலவீனம்,
3. தொழிலாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்குவதற்காக கூடுதல் செலவீனம்,

ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதமான *(+)6.99% (SOR 2024-25)*ன்படி ஒப்பத்தொகையான ரூ.*6,75,13,108.80/- (18% GST* உட்பட*)*, ஏற்று இப்பணியினை திருவாளர்கள். மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன் அவர்களுக்கு வழங்க ஒப்ப பரிசீலனைக் குழு *(Tender Scrutiny Committee)*வின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணியினை திருவாளர்கள். மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்ப சதவீதமான *(+)6.99%*ன்படி ஒப்பத்தொகையான ரூ.*6,75,13,108.80/-*ஐ *(18% GST* உட்பட*)* ஏற்று, திருவாளர்கள். மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன் அவர்களுக்கு பணி ஆணை வழங்க, நிலைக்குழு *(*பணிகள்*)* மற்றும் நிலைக்குழு *(*வரி விதிப்பு மற்றும் நிதி*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*பணிகள்*)* கூட்டத்தின் தீர்மான எண்.283/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு *(*பணிகள்*)* பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*வ.வி.ம.நி.*)* கூட்டத்தில் தீர்மான எண்.199/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு *(*வ.வி.ம.நி.*)* பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ7 / 568 / 2022

ஆணையர் அவர்களின் 22.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 522 / 2025 **பொருள் எண்.194**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் – 14, பகுதி – 41, கோட்டம் – 183 நெடுஞ்சாலைத்துறை பெருநகர வளர்ச்சி திட்டம் உட்கோட்டம் 1 கிழக்கு கடற்கரைச் சாலை கி.மீ 14 / 550 முதல் 15 / 700 வரை பாலவாக்கம் கிராமத்தில் ஆறுவழித்தடமாக அகலப்படுத்தும் பணி கோட்டம்–183வது அலுவலகம் அமைந்துள்ள நிலத்தினை நெடுஞ்சாலைத்துறை கோரியது - நில மாற்றம் (Land Transfer) செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி.

வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் *02.07.2024* நாளிட்ட குறிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-*14*, கோட்டம் - *183* கிழக்கு கடற்கரை சாலை கி.மீ. *14 / 550* முதல் *15/700* வரை பாலவாக்கம் கிராமத்தில் ஆறுவழித்தடமாக அகலப்படுத்தும் பணிக்காக பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*14*, வார்டு-*183* அலுவலகம் அமைந்துள்ள நிலத்தின் ஒரு பகுதி புல எண் *147/2*ஐ நெடுஞ்சாலைத் துறைக்கு நில மாற்றம் செய்யக் கோரி வட்டார துணை ஆணையர் (தெற்கு) பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு *02.11.2022* நாளிட்ட கடித எண்.*157/* பாலவாக்கம் / இநிவ நெடுஞ்சாலைத் துறையிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர், மண்டலம்-*14* அவர்களின் கடித எண்.ம.அ*14*.ந.க.எண். *009593/2023*ல் *ECR* பாலவாக்கம் சாலை விரிவாக்கத்திற்காக சென்னை மாநகராட்சியின் கோட்டம்-*183* அலுவலகத்தின் முன்புறச் சுற்றுச் சுவர் நெடுஞ்சாலைத் துறையின் *(ROW)* விரிவாக்கம் எல்லைக்குள் உள்ளதால் அதற்கு வழங்கப்படும் இழப்பீட்டு விவரங்கள் *08.09.2023* நாளிட்ட கடிதத்தில், கோரப்பட்டதை தொடர்ந்து, சுற்றுச் சுவர் அமைந்துள்ள புல எண்.*147/2* ஆனது அரசாங்க நிலம் என்பதால் சுற்றுச்சுவர் போன்ற தற்காலிக கட்டுமானங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட இயலாது என்பதை உதவி கோட்ட பொறியாளர் (நெடுஞ்சாலைத் துறை) சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம், உட்கோட்டம் *1* எண்.*76* அவர்களால் *20.02.2024* நாளிட்ட கடித எண்.*157/* பாலவாக்கம்/ உ.கோ.பொ-*1*)ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத்துறையினரால் கோரப்பட்டுள்ள புல எண். *147/2*ல் *55.00* ச.மீ மட்டும் அத்துறைக்கு நில மாற்றம் செய்யலாம் என கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணை ஆட்சியர் / நிமஉது (தெற்கு) அவர்களின் *08.08.2024* நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட புலத்தை வட்டாட்சியர் / நிமஉது (தெற்கு) மற்றும் பதிவு பெற்ற நில அளவையர் ஆகியோர் கடந்த *12.07.2024*ல் மேற்கொண்டதன் புலத்தணிக்கை விவரங்கள் கீழ்க்கண்டவாறு என்றும்,

மாவட்டம்	வட்டம்	கிராமம்	புல எண்	வகைபாடு	விஸ்தீரணம் (ச.மீ)	உபயோகம்
சென்னை	சோழிங்க நல்லூர்	பாலவாக்கம்	147/2	ச.புறம்போக்கு	1974 ச.மீ	சென்னை மாநகராட்சி கோட்டம் அலுவலகம் - 183 அஞ்சல் அலுவலகம், மின்வாரிய அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம்

நெடுஞ்சாலை துறையின் கிழக்கு கடற்கரை சாலை கி.மீ. 14/550 முதல் 15/700 வரை பாலவாக்கம் கிராமத்தில் ஆறுவழித்தடமாக அகலப்படுத்தும் பணிக்காக புல எண். 147/2 பெருநகர சென்னை மாநகராட்சி கோட்ட அலுவலகம் – 183ன் முன்புறச் சுற்றுச் சுவரில் சுமார் 55 சதுர மீட்டரை மட்டும் நெடுஞ்சாலை துறைக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்து அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், பாலவாக்கம் கிராமம், மண்டலம்-14, பகுதி – 41, வார்டு-183 கிழக்கு கடற்கரை சாலை கி.மீ. 14 / 550 முதல் 15/700 வரை பாலவாக்கம் கிராமத்தில் ஆறுவழித்தடமாக அகலப்படுத்தும் பணிக்காக வார்டு-183 அலுவலகம் அமைந்துள்ள ஒரு பகுதி புல எண்.147/2, சர்க்கார் புறம்போக்கு வகைபாடு கொண்ட 1974 சதுர மீட்டர் மொத்த விஸ்தீரணத்தில் 55 சதுர மீட்டர் நிலத்தினை நெடுஞ்சாலைத்துறைக்கு நில மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 232/2025, நாள். 25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.நக.எண்.எல்இ1/801/2025

ஆணையர் அவர்களின் 23.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 523/2025 **பொருள் எண்.195**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் மேம்படுத்துதல்/திட்டப்பணிகள் செயல்படுத்துதல் - சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு முன்நுழைவு அனுமதி (Enterupon Permission) வழங்க மன்றத்தின் அனுமதி.

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் *02.04.2025* நாளிட்ட கடிதத்தில், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் தலைவர் அவர்கள் *2025-2026* ஆண்டு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் பல்வேறு நகர்ப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள முன்மொழியப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக கீழே பட்டியலிடப்பட்டுள்ள இடங்கள்/வளாகங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இருப்பதாகவும்,

வளர்ச்சி திட்டப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் முன்நுழைவு அனுமதி / தடையின்மை சான்றுடன் அந்நிலத்தின் சர்வே எண்(உட்பிரிவுடன்) *FMB Sketches*, புல வரைபடத்துடன் கூடிய நில ஆவணங்களை வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

SI. No	Project Name	Constituency	Land Details	Latitude	Longitude
1.	Renovation of Government Higher Secondary School at Lakshimi puram	Madhavaram	Survey No.499 of Pammadukulam	13.176488868608745	80.15349452438863
2.	Renovation of Kasi Balasubramaniya Chetty Govt Girls Higher Secondary School at Redhills	Redhills	Survey No. 97 of Redhills	13.187620787696348	80.18600281774899
3.	Renovation of Jai Gopal Garodia Higher Secondary School at Madhavaram	Madhavaram	Survey No. 445 of Madhavaram	13.154491145809509	80.23161011462335
4.	Development of Indoor Sports Complex and Library at Thiru valluvar nagar, R.K. Nagar	R.K. Nagar	Block. 74, Survey No.3947 of Tondiarpet	13.134836541237902	80.28725275327756
5.	Renovation of Play ground at O.R.G.N. Government Boys Higher Secondary School, Redhills	Redhills	Survey No.86 of Naravarikuppam	13.193169041071284	80.17995655161916
6.	Development of Sports Facilities at Shenoy Nagar	Anna Nagar	Block. 17, Survey No. 20 of Periyakudal	13.078590937488274	80.22219463473532
7.	Upgradation of OSR Area at Anna Nagar	Anna Nagar	Block. 27, Survey No. 3 of Koyambedu	13.079477414594926	80.19642709387598
8.	Development of Community Hall at Sathyamoorthy Street, Chetpet	Egmore	Block. 26, Survey No. 499/1 of Chetpet	13.07386266938168	80.24688728292887

9.	Development of Community Hall at Chinnasekkadu, Devaraj Nagar, Manali	Thiruvottiyur	Survey No. 28 of Chinnasekkadu	13.15844586380068	80.26066527536015
10.	Development of Community Hall at Sheikh Mesthri Road, Royapuram	Royapuram	Block. 48, Survey No. 3251 of Tondiarpet	13.116002276719964	80.2950788870242
11.	Construction of Additional Building for Maternity Hospital at Sanjeevi Rayanpettai, Royapuram	Royapuram	Block. 55, Survey No. 3721/3 of Tondiarpet	13.119462266191583	80.28729260517595
12.	Construction of Additional Building for Hospital at Panamara thotti, Royapuram	Royapuram	Block. 11, Survey No. 466/2 of Tondiarpet	13.112330575992447	80.29655729725367
13.	Development of Play ground at Cheriyan Nagar	R.K. Nagar	Block. 79 of Tondiarpet	13.13851808135242	80.2971596172261
14.	Ambattur Library	Ambattur	Survey No. 21/47 of Oragadam	13.12374123212914	80.1601691583773

மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள இடங்களில் வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி இடத்தினை கள ஆய்வு செய்து அவ்விடத்தின் சர்வே எண் (துணைப் பிரிவுகளுடன்), *FMB Sketches* மற்றும் மேற்கண்ட நிலங்கள் தொடர்பான ஆவணங்களுடன் விரிவான அறிக்கையினை வழங்குமாறும், மேலும், மேற்படி நிலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் வேறு ஏதேனும் திட்டப்பணிகள் மேற்கொள்ள தீர்மானித்திருந்தால் அதன் விவரத்தினையும், அறிக்கையாக உடன் இத்துறைக்கு அனுப்புமாறு மண்டலங்கள் – *2, 3, 4, 5, 7, 8* (ம) *10*-ல் உள்ள மண்டல அலுவலர்களுக்கும், துணை ஆட்சியர்களுக்கும் *02.04.2025* நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

துணை ஆட்சியர், வடக்கு வட்டார அலுவலகம் மற்றும் துணை ஆட்சியர், மத்திய வட்டார அலுவலகம் அவர்களின் *21.04.2025*. நாளிட்ட கடிதங்களில் வளர்ச்சி திட்டப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி வழங்குவது தொடர்பாக இடங்களை கள ஆய்வு செய்து கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

Sl. No	Region	Project Name	Constituency	Land Details	Adangal	Remarks
1.		Renovation of Government Higher Secondary School at Lakshimi puram	Madhavaram	Survey No.499 of Pammadukulam		Avadi Taluk, Thiruvallur District.
2.		Renovation of Kasi Balasubramaniya Chetty Govt Girls Higher Secondary School at Redhills	Redhills	Survey No. 97 of Redhills		Ponneri Taluk, Thiruvallur District

3.	North Div-26 Zone-3	Jai Gopal Garodia Higher Secondary School at Madhavaram	Madhavaram	Block No. 37, TS.No. 2,34	மேய்க்கால்	அரசு மேல்நிலைப்பள்ளி பொதுபணித்துறை கட்டுப்பாட்டில் உள்ளது.
4.	North Div-40 Zone-4	Development of Indoor Sports Complex and Library at Thiru valluvar Main Road, Tondiarpet. Ch-81	R.K. Nagar,	Block No. 74, TS No.3946/2 *Corporation* பொது உபயோகம்	கார்ப்ரேசன்	Court Case Pending W.P.No.8268 of 2018
5.		Renovation of Play ground at O.R.G.N. Government Boys Higher Secondary School, Redhills	Redhills	Survey No.86 of Naravarikuppam		Ponneri Taluk, Thiruvallur District.
6.	Central Div-102, Zone-8	Development of Sports Facilities at Shenoy Nagar	Anna Nagar	Block. 17, T.S. No. 20 of Periyakudal (சர்க்கார் புறம்போக்கு)	----------	Usage of Land Abanded Vehicles Parking Place Dumping Yard Remaining Vacant Land
7.	Central Div-104, Zone-8	Upgradation of OSR Area at Anna Nagar	Anna Nagar	Block. 26, T.S. No. 2/5,4/2 of Koyambedu (ரயத்துவாரி மனை)	Chennai Metropolitan Development Authority	மியாவாக்கி காடுகள் (பராமரிப்பு அற்று இருக்கிறது)
				Block. 27, T.S. No. 3/3 of Koyambedu (ரயத்துவாரி மனை)	Greater Chennai Corporation	பார்க் (பராமரிப்பு அற்று இருக்கிறது)
				Block. 27, T.S. No. 7/2 of Koyambedu (ரயத்துவாரி மனை)	Chennai Metropolitan Development Authority	பார்க் (பராமரிப்பு அற்று இருக்கிறது)
8.	Central Div-108, Zone-8	Development of Community Hall at Sathyamoorthy Street, Chetpet	Egmore	Block. 26, T.S. No. 449/1 of Chetpet (மாநகராட்சி பொது உபயோகம்)	----------	சமுதாய நல கூடம் 30 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. தற்சமயம் டோபிகானாவாக 20ற்கும் மேற்பட்ட துணி துவைக்கும் இயந்திரங்கள் இயங்கி வருகிறது.

9.	North Div-22 Zone-2	Development of Community Hall at Chinnasekkadu, Devaraj Nagar, Manali	Thiruvottiyur	Survey No. 27/2	அரசு புறம்போக்கு	சென்னை மாநகராட்சி சமுதாயக்கூடம்
10.	North Div-50 Zone-5	Development of Community Hall at Sheikh Mesthri Street, Royapuram. Chennai.	Royapuram,	Block No. 48, TS No.3251 and TS.No. 3271/4 மாநகராட்சி	-	Godown
11.	North Div-49 Zone-5	Construction of Additional Building for Maternity Hospital at Sanjeevi Rayanpettai, Royapuram, Chennai	Royapuram	Block No. 11, TS.No. 466/18 மாநகராட்சி	-	ஆரம்ப சுகாதார நிலையம்
12.	North Div-50 Zone-5	Construction of Additional Building for Hospital at Panamara thotti, Royapuram	Royapuram	Block No. 11, TS.No. 466/18 மாநகராட்சி	கார்ப்ரேசன் பிரைவேட்	ஆரம்ப சுகாதார நிலையம்
13.	North Div-39 Zone-4	Development of Play ground at Cheriyan Nagar, New Washermenpet, Chennai	R.K. Nagar	Block No. 79, TS No.4139/1 Government Promboke Land	-	Existing usage Hr.Sec.School and Play Ground
14.	Central Div-80, Zone-7	Ambattur Library	Ambattur	Oragadam Block. 56, T.S. No. 91 (சர்க்கார் புறம்போக்கு)	அனாதீனம்	மருத்துவமனை பள்ளிக்கூடம் மற்றும் காலியிடம்.

மேற்கண்ட 14 இடங்களில் 5 இடங்களுக்கு (வரிசை எண். 1, 2, 3, 4, 5) முன்நுழைவு அனுமதி வழங்க இயலாத நிலை உள்ளது.

எனவே, வரிசை எண். 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14ல் உள்ள 9 இடங்களில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் மூலம் வளர்ச்சித்திட்டப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் மூலம் திட்டப்பணிகள் முடித்த பின்பு தொடர் பராமரிப்பிற்காக பெருநகர சென்னை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.
2. இந்நிலம் எக்காரணம் கொண்டும் எதிர் காலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்படாது.

3. இந்நிலம் எத்தகைய பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படுகிறதோ அத்தகைய பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்தப்படவேண்டும்.
4. முன்நுழைவு அனுமதி அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் ஒப்புதலுக்கு உட்பட்டதாகும்.

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.233/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தி.க.மே.ந.க.எண்.A7 / 1362 / 2025

ஆணையர் அவர்களின் 21.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 524 / 2025 **பொருள் எண்.196**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மண்டலம்-15 (பெரும்பாக்கம்) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு திட்டத்தில் - பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் தூய்மை பணி மேற்கொள்ள ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் மூலம் பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 18.02.2025 அன்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுத்த முடிவின் படி, இனி வரும் காலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் (TNUHDB) பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளின்

1. உட்புற சாலைகள்
2. தெரு விளக்குகள்
3. திடக்கழிவு மேலாண்மை பணிகள்
4. பூங்கா மற்றும் விளையாட்டு திடல் பணிகள்
5. திறந்தவெளி முன்பதிவு நிலம்
6. ரேஷன் கடை பராமரிப்பு பணிகள்
7. மரம் நடுதல்

ஆகிய பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி இனி வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டலம் 15 (பெரும்பாக்கம்) பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 20824 ஆகும். அதனுடைய மொத்த பரப்பளவு 471228.99 சதுர மீட்டர் ஆகும்.

மேற்கூறிய குடியிருப்புகளில் உள்ள உட்புற சாலைகள், பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்கள், திறந்த வெளி முன்பதிவு நிலங்கள் மற்றும் இரண்டு குடியிருப்பு இடையில் உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறிய இடத்தில் ஒன்பது மாத காலத்திற்கு போதிய அளவு ஆட்களை ஒப்பந்ததாரர் மூலம் நியமித்து, போதிய குப்பைத் தொட்டிகளை வைத்து அப்பகுதியை தூய்மையாக வைத்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு ஆகும் தோராய செலவினங்கள்:

TAMIL NADU URBAN HABITAT DEVELOPMENT BOARD										
SOUTH REGION - ZONE 15 Perumbakkam AREA (Outsourcing for 9 months)										
Sweepers			Rotamac Bin		1100 Lt Compactor Bin		Welfare items Expenditure for Sweepers Rs.	Total Amount Expenditure Rs.	Consumables , Supervision & Admin charges (25% of the Total Amount) Rs.	GRAND TOTAL Rs.
Zone	Qty in Nos	Amount (Rs.673.75 incl GST 18% & 3.25% ESI) Rs.	Qty in Nos	Amount (Rs.2400Bin Rs.	Qty in Nos	Amount (Rs.21760 per bin including All taxes)				
XV Perumbakkam area	375	68217188	375	900000	31	6,74,560	25,93,800	7,23,85,548	1,80,96,387	9,04,81,934

மண்டலம் *15* (பெரும்பாக்கம்) பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் திடக்கழிவு மேலாண்மை சம்மந்தப்பட்ட பணிகளை ஒன்பது மாத காலத்திற்கு மேற்கொள்ள தோரயமாக ரூ. *9,04,81,934/-* செலவு ஆகும் (ரூபாய். ஒன்பது கோடியே நான்கு இலட்சத்து எண்பத்தோராயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து நான்கு மட்டும்).

இப்பணியின் அவசர அவசியம் கருதி நிர்வாக அனுமதி மன்றத்தின் பின்னேற்பு ஆணை எதிர்நோக்கி ஆணையரின் அனுமதி பெற்று இப்பணிக்கு மின்னணு ஒப்பம் சமர்ப்பிக்க இறுதிநாளாக *08.04.2025* என்று குறிப்பிட்டு கோரப்பட்டது.

08.04.2025 அன்று *2* ஒப்பங்கள் பெறப்பட்டது

Sl.No	Tender Participants	Technical Bid Qualification
1.	M/s. Jay Kay Tran	Bid Qualified
2.	M/s. Srinvivas Waste Management Private Limited	Bid Qualified

இதில் M/s. Jay Kay Tran மற்றும் M/s. Srinvivas Waste Management Private Limited நிறுவனத்தினர்கள் தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்றதால் இவ்ஒப்பந்ததாரர்கள் ஒப்பங்கள் விலைப்புள்ளி திறப்பிற்கு தகுதி பெறப்பட்டன. இவ்விரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்று விலைப்புள்ளி திறக்க *(Financial Bid)* அனுமதிக்கப்பட்டது.

மேலே கண்டுள்ள இப்பணிக்கான விலைப்புள்ளிகள் *17.04.2025* அன்று திறக்கப்பட்டதில் இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ்வருமாறு,

Sl.No	Name of the Bidder	Estimated Work Value	Rate Quoted inclusive of all taxes for nine months	Whether the Bidder Qualified/Not Qualified	Percentage %
1.	M/s. Jay Kay Trans	9,04,81,934.00	8,94,20,500.30	L1 Bid Qualified	(-) 1.17%

2.	M/s. Srinvivas Waste Management Private Limited		11,19,15,920.00	L2 Bid Qualified	(+) 23.69%

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரரான **திருவாளர்கள் Jay Kay Trans** அளித்துள்ள ஒப்ப தொகை ரூ. *8,94,20,500.30/-* ஆகும் இது அலுவலக தொகையான ரூ. *9,04,81,934/-*விட *(-) 1.17 %* குறைவு ஆகும்.

திருவாளர்கள் Jay Kay Trans *(L1)* ஒப்பந்தாரரிடம் விலை குறைப்பு கோரப்பட்டதில், *17.04.2025* அன்று ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்ப விழுக்காடு விவரங்கள் கீழ்வருமாறு.

Sl. No	Name of the Bidder	Estimated Work Value	Rate Quoted inclusive of all taxes for nine months	After Negotiation	Percentage %
1.	M/s. Jay Kay Trans	9,04,81,934.00	8,94,20,500.30	8,94,20,000.00	(-) 1.174%

மண்டலம் *15 (*பெரும்பாக்கம்*)* பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் திடக்கழிவு மேலாண்மை சம்மந்தப்பட்ட பணிகளை ஒன்பது மாத காலத்திற்கு மேற்கொள்ள ரூ.*8,94,20,000/- (*ரூபாய். எட்டு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்*)* செலவாகும். இது அலுவலக விலையை விட *(-) 1.174 %* குறைவு ஆகும்.

எனவே,

1. மண்டலம் *15 (*பெரும்பாக்கம்*)* பகுதியில் இருக்கும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள *20824* எண்ணிக்கையிலான குடியிருப்புகளில் உட்புற சாலைகள், பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், திறந்தவெளி முன்பதிவு நிலம் மற்றும் இரண்டு குடியிருப்பு இடையில் உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஒன்பது மாத காலத்திற்கு ஒப்பம் கோரப்பட்ட மதிப்பிற்கு ரூ.*8,94,20,000/-* நிர்வாக அனுமதிக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2. இப்பணிக்கு குறைந்த ஒப்பம் கோரியுள்ள **திருவாளர்கள் Jay Kay Trans** நிறுவனத்தின் மண்டலம் *15 (*பெரும்பாக்கம்*)* பகுதியில் இருக்கும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள *20824* எண்ணிக்கையிலான குடியிருப்புகளில் உட்புற சாலைகள், பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், திறந்தவெளி முன்பதிவு நிலம் மற்றும் இரண்டு குடியிருப்பு இடையில் உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஒன்பது மாத காலத்திற்கு ஒப்பந்ததாரர் அளித்த விலைப்புள்ளி ரூ.*8,94,20,000/- (*ரூபாய். எட்டு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்*)* அலுவலக மதிப்பீட்டின் விலையை விட *(-) 1.174%* குறைவு என்பதை ஏற்க அனுமதி வேண்டியும்,

3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை நிதி ஆலோசகர் அவர்களால் வட்டார அலுவலகத்திற்கு (தெற்கு) *Budget Head Code 230-150-100 Privatization Conservancy* தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கி அந்நிதியிலிருந்து பணியை மேற்கொள்ளவும்,

4. பணி ஆணை வழங்கப்பட்ட பின் இப்பணிகளை வட்டார அலுவலகம் (தெற்கு) மூலம் கண்காணிக்கவும் மற்றும் அனைத்து மண்டலங்களிலிருந்து செயல்திறன் சான்றிதழ்கள் பெற்று வட்டார மேற்பார்வை பொறியாளர் (தெற்கு) மூலம் பட்டியை தீர்க்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.081/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.200/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

வ.து.நு.க.எண்.எஸ்யூ.எஸ்வி / 3415-23 / 2025

ஆணையர் அவர்களின் 29.01.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 525 / 2025 **பொருள் எண்.197**

பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - சாலையோர வியாபாரிகளுக்கான நகர விற்பனைக் குழு - விற்பனை செய்யக்கூடிய பகுதிகள் (Vending Zones) மற்றும் விற்பனை செய்யக்கூடாத பகுதிகள் (Non Vending Zones) - சாலையோர வியாபாரிகளுக்கு பொருந்தக்கூடிய வரைமுறைகள் (Norms) - அரசிதழில் வெளியிடுவதற்கு மன்றத்தின் அனுமதி.

சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது மற்றும் விற்பனை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான ஒன்றிய அரசின் சட்டம் எண்.7/2014 மற்றும் தமிழ்நாடு அரசின் திட்டம் மற்றும் விதிகள், 2015 உருவாக்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.(4D) எண்.29, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை, நாள் 07.8.2023ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் ஆணையர் அவர்களை தலைவராகக் கொண்டு பின்வரும் 14 உறுப்பினர்கள் அடங்கிய நகர விற்பனைக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி - நகர விற்பனைக் குழு

வ. எண்.	உறுப்பினர்கள்	உறுப்பினர்களின் வகை	எண்ணிக்கை
1	மாநகர நல அலுவலர்	உள்ளாட்சி அமைப்பின் மருத்துவ அதிகாரி	1
2	காவல் துறை துணை ஆணையர் (சட்டம் மற்றும் ஒழுங்கு)	காவல் துறை அதிகாரி (சட்டம் மற்றும் ஒழுங்கு)	1
3	காவல் துறை துணை ஆணையர் (போக்குவரத்து)	காவல் துறை அதிகாரி (போக்குவரத்து)	1
4	தலைமைப் பொறியாளர் (பொது)	உள்ளாட்சி அமைப்பின் அதிகாரி	1
5	திரு.S.நாகபூஷணம்	வியாபாரிகள் சங்கப் பிரதிநிதி	1
6 7	திரு.D. சங்கர் மற்றும் திரு.A. ஜெகதீசன்	அரசு சாரா அமைப்பு மற்றும் சமூகம் சார்ந்த அமைப்பின் பிரதிநிதிகள்	2
8	திருமதி.T.K.லதா ஃபிளாரன்ஸ்	குடியிருப்போர் நல சங்கப் பிரதிநிதி	1

9	K.மோனிஷா	ஆதி திராவிடர்/பழங்குடியினர் வகுப்பு	6 சாலையோர வியாபாரிகளிலிருந்து 27.4.2023 அன்று நடைபெற்ற தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்
10	S.கண்ணன்	மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு	
11	A.ஜெனிபர்	சிறுபான்மையினர் பிரிவு	
12	M.பாலமுருகன்	மாற்றுத் திறனாளி	
13	S.சித்ரா	மகளிர்	
14	K.பலராமன்	பொது	

சாலையோர வியாபாரிகளுக்கு பொருந்தக்கூடிய வரைமுறைகளின்படி விற்பனை செய்யும் பகுதிகள், விற்பனை செய்யக்கூடாத பகுதிகளை விதி எண்.20-ன்படி நகர விற்பனைக்குழுவினால் உள்ளாட்சி அமைப்பிற்கு பரிந்துரை செய்து சட்டப் பிரிவு 21-ன்படி அரசிதழில் வெளியிட வேண்டி அரசுக்கு கடிதம் அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி பெற பின்வரும் வரைமுறைகள் மற்றும் விவரப் பட்டியல் சமர்ப்பிக்கலாம்.

மன்றத் தீர்மான எண்.385/2024, நாள் 27.09.2024-ன்படி, 6.9.2024 மற்றும் 26.9.2024 நடைபெற்ற நகர விற்பனைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 14 விற்பனை செய்யக்கூடிய பகுதிகள் மற்றும் 14 விற்பனை செய்யக்கூடாத பகுதிகளின் பட்டியல் அரசுக்கு 26.9.2024 அன்று அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டது.

மேலும், அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 27.11.2024 நாளிட்ட கடிதத்தில், சாலையோர வியாபாரிகளுக்கு பொருந்தக்கூடிய வரைமுறைகள் (Norms) அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. சாலையோர வியாபாரிகளுக்கான சட்டம், திட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையில் வரைமுறைகள் தொகுக்கப்பட்டு அதன் விவரங்கள் 22.2.2025 நாளிட்ட கடிதம் மூலம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில், தொடர்ச்சியாக 06.11.2024, 24.01.2025 மற்றும் 26.3.2025 நாட்களில் நடைபெற்ற நகர விற்பனைக் குழு கூட்டங்களில் கூடுதலாக அங்கீகரிக்கப்பட்ட விற்பனை செய்யக்கூடிய பகுதிகள் மற்றும் விற்பனை செய்யக்கூடாத பகுதிகளின் முழு விவரங்களையும் தொகுத்து முழுமையாக அரசுக்கு அனுப்பி அரசிதழில் வெளியிட மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

சாலையோர வியாபாரிகளுக்கான சட்டம் 2014, பிரிவு 21-ன்படி சாலையோர வியாபாரிகளுக்குப் பொருந்தக்கூடிய வரைமுறைகள் (norms) பின்வருமாறு:-

"21. Plan for street vending:- (1) Every local authority shall, in consultation with the planning authority and on the recommendations of the Town Vending Committee once in every five years, prepare a plan to promote the vocation of street vendors covering the matters contained in the First Schedule.

(2) The plan for street vending prepared by the local authority shall be submitted to the appropriate Government for approval and that Government shall, before notifying the plan, determine the norms applicable to the street vendors".

மேற்படி சட்ட பிரிவின்படி, ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும், தெருவோர வியாபாரிகளின் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் திட்டம் *(Plan to promote street vending)* தயாரிக்கும் முன்னர் நகர திட்டமிடுதலுக்கான அதிகார அமைப்பினருடன் *(Planning authority)* ஆலோசனை மற்றும் நகர விற்பனைக் குழுவின் பரிந்துரையுடன் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை, முதல் அட்டவணையில் *(First Schedule)* உள்ள விஷயங்களை உள்ளடக்கியதாக தயாரிக்க வேண்டும்.

அதன்படி முதல் அட்டவணையில் *(First Schedule)* உள்ள இனங்கள் பின்வருமாறு:-

1. **The plan for street vending shall,;-- (தெருவோர விற்பனைக்கான திட்டம்)**

அ) தற்போதுள்ள அனைத்து தெருவோர வியாபாரிகளும் கணக்கெடுப்பில் அடையாளம் காணப்பட்டதை உறுதிசெய்யவும், வார்டு, மண்டலம், நகரம் அல்லது நகரத்தின் மக்கள் தொகையில் இரண்டரை சதவீதம் *(2.5%)* பேர் தெரு வியாபாரத்திற்கான திட்டத்தில் இடமளிக்கப்பட்டது என்பதை உறுதி செய்ய வேண்டும்.

ஆ) பயணிகள் சுதந்திரமாக நடமாடுவதற்கும், சாலைகளை எந்தவித இடையூறும் இல்லாமல் பயன்படுத்துவதற்கும் உரிமையை உறுதி செய்தல் வேண்டும்.

இ) தற்போதுள்ள இயற்கை சந்தைகள், தெருவோர விற்பனைக்குண்டான இடம் அல்லது பகுதி வழங்குவது நியாயமானது மற்றும் இணக்கமானது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

ஈ) அடையாளம் காணப்பட்ட விற்பனை மண்டலங்களுக்கான இடங்கள் அல்லது பகுதிகளை சரியான முறையில் பயன்படுத்துவதற்குண்டான அடிப்படை வசதிகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

உ) வசதியான, திறமையான மற்றும் பொருட்களின் பயனுள்ள விநியோக செலவு மற்றும் சேவைகள் வழங்குவதை ஊக்குவித்தல் வேண்டும்,

ஊ) தெருவோர வியாபாரத்திற்கான திட்டத்தை *(Street vending plan)* வழங்குவதற்கான திட்டத்தில் *(Scheme)* குறிப்பிடப்பட்டுள்ள இதர இனங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்,

(2) The plan for street vending shall contain all of the following matters, namely;-

(தெருவோர விற்பனைக்கான திட்டமானது பின்வரும் அனைத்து விஷயங்களையும் கொண்டிருக்கும்)

அ) தெருவோர விற்பனைக்கான இடஞ்சார்ந்த திட்டமிடலுக்கான விதிமுறைகளை தீர்மானித்தல் வேண்டும்,

ஆ) விற்பனை மண்டலங்களுக்கு இடம் அல்லது பகுதியை ஒதுக்குதல்'

இ) விற்பனை மண்டலங்களை, கட்டுப்பாடு இல்லாத விற்பனை மண்டலங்களாகவும், கட்டுப்படுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களாகவும் மற்றும் விற்பனை தடை செய்யப்பட்ட மண்டலங்கள் என தீர்மானிக்க வேண்டும்,

ஈ) நகரத்தில், தற்போதுள்ள தெருவோர வியாபாரிகளின் எண்ணிக்கைக்கு போதுமான இடவசதி மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கு ஏற்றவாறும் தேவையான விதிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் திட்டங்களை உருவாக்குதல் வேண்டும்,

உ) **தற்போதுள்ள *Master Plan*, *Development Plan*, *Zonal Plan*, *Layout Plan* மற்றும் இதர திட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில் தெருவோர வியாபாரிகளுக்கு இடமளிக்கும் வகையில் வேறு எந்த திட்டத்திலும் அதன் விளைவாக மாற்றங்கள் தேவை.**

ஊ)தற்போதுள்ள சந்தை அல்லது கணக்கெடுப்பின் கீழ் அடையாளம் காணப்பட்ட ஒரு இயற்கை சந்தை விற்பனை தடை செய்யப்பட்ட மண்டலமாக அறிவிக்க கூடாது.

(3) Declaration of no vending zone shall be carried out by the plan for street vending, subject to the following principles, namely:-

(பின்வரும் கொள்கைகளுக்கு உட்பட்டு, தெரு வியாபாரத்திற்கான திட்டத்தால் விற்பனை செய்ய தடை செய்யப்பட்ட மண்டலம் என்ற அறிவிப்பு மேற்கொள்ளப்படும்.)

அ) தெருவோர வியாபாரிகளின் குறைந்தபட்ச சதவிகிதத்தை இடமாற்றம் செய்யப்படும் போது அவ்விடத்தை விற்பனை செய்யக்கூடாத மண்டலம் என்ற அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

ஆ) கணக்கெடுப்பில் தெருவோர வியாபாரிகளாக அடையாளம் காணப்படாத நபர்களுக்கு அத்தகைய பகுதிகளில் விற்பனை சான்றிதழ் வழங்குவதில், கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்பட்சத்தில் எந்த இடத்திலும் கூட்டம் அதிகமாக இருப்பது, எந்த ஒரு பகுதியையும் விற்பனை தடை செய்யப்பட்ட மண்டலமாக அறிவிப்பதற்கு அடிப்படையாக இருக்கக்கூடாது.

இ) சுகாதார குறைபாடுகள் மட்டுமே ஒரு பகுதியினை விற்பனை தடை செய்யப்பட்ட மண்டலமாக அறிவிக்க கூடாது. எனினும் அப்பகுதியில் உள்ளாட்சி அமைப்புகளால் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு செய்யப்படவேண்டும்.

ஈ) கணக்கெடுப்பு நடத்தப்படாதவரை மற்றும் தெருவோர வியாபாரத்திற்கான திட்டம் வகுக்கப்படாத வரை எந்த ஒரு பகுதியும் விற்பனை தடை செய்யப்பட்ட மண்டலமாக அறிவிக்கக்கூடாது.

மேற்கண்ட வழிமுறைகளின்படி தெருவோர வியாபாரத்திற்கான திட்டம் வகுக்கப்பட வேண்டும். எனினும்,

1. மாநகராட்சி எல்லைக்குள் சாலையோர வியாபாரம் செய்யக்கூடிய பகுதியில் அப்பகுதி/அந்த வார்டு மக்கள் தொகையின் அடிப்படையில் இரண்டரை சதவிகிதம் சாலையோர வியாபாரிகளை வியாபாரம் செய்ய அனுமதிக்கலாம்,
   (a) Section 3 (2) of the streets vendors (Protection of Livelihood and Regulation of street vending) Act, 2014
2. சாலை/தெரு குறுகலாக இருப்பதால், வாகன போக்குவரத்துக்கும் மற்றும் பாதசாரிகளின் நடமாட்டத்திற்கும் இடையூறாக இருக்கும்பட்சத்தில் மேலும், பாதுகாப்பு காரணங்களுக்காக மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றுக்கு அருகில் சாலையோர வியாபாரம் மேற்கொள்ள தடை விதிக்கலாம்
   (b) Para No.7-10, of Supreme Court order on Maharashtra Ekta Hawkwers Union & Anr vs Greater Municipal Corporation, dated 09.09.2013.
3. விற்பனையாளர் சந்தைகளுக்கான இடத்தை வழங்குவது நடைமுறைக்குரியது, இயற்கையான சந்தைகளை உருவாக்குவது, தெருவோர வியாபாரிகளின் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தற்போதைய தேவைக்கு போதுமானது மற்றும் எதிர்பார்க்கப்படும் மக்கள்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப அதிகரிக்கும் என்பதை நகர விற்பனைக் குழு உறுதி செய்ய வேண்டும்.

   மேலும், விற்பனை மண்டலங்கள் மற்றும் விற்பனையாளர்கள் சந்தைகளில் குடிமை வசதிகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகளை நகர விற்பனைக் குழு கண்காணித்து, ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும். வாரச்சந்தைகள், திருவிழா பஜார், இரவு பஜார், முக்கிய விடுமுறை நாட்களில் விற்பனை திருவிழாக்கள் போன்றவற்றை ஒழுங்கமைப்பதை நகர விற்பனைக் குழுவினால் ஊக்குவிக்க வேண்டும். அத்துடன், சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நகராட்சி சேவைகளை மேம்படுத்த வேண்டும்.
   (c) Para No.15-4.5.1 (b) and (c) of Supreme Court order on Maharashtra Ekta Hawkwers Union & Anr vs Greater Municipal Corporation, dated 09.09.2013.
4. ஒவ்வொரு தெரு வியாபாரியும் விற்பனை செய்யக்கூடிய மண்டலத்தில் குடிமை வசதிகள் மற்றும் பொதுச் சொத்துக்களை நல்ல நிலையில் பராமரிக்க வேண்டும் மற்றும் பொது சொத்துக்களை சேதப்படுத்தவோ அழிக்கவோ கூடாது. மேலும், ஒவ்வொரு தெரு வியாபாரியும் பெருநகர சென்னை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும், விற்பனை மண்டலங்களில் வழங்கப்படும் குடிமை வசதிகளுக்காக குறிப்பிட்ட காலமுறை பராமரிப்பு கட்டணங்களை செலுத்த வேண்டும்.
   (d) Section 16 and 17 of the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Act, 2014

விற்பனை செய்யக்கூடிய இடங்கள் *(Vending Zones)* தேர்வு செய்யும் வழிமுறைகள்

- விற்பனை செய்யக்கூடிய இடம் என்பது நடைபாதை சாலையோர பகுதிகள் பொதுமக்கள் காத்திருக்கும் பகுதிகள் மேலும் நடைபாதையில் தற்காலிக வணிகம்

செய்யக்கூடிய மற்றும் நகர விற்பனைக் குழுவால் பரிந்துரைத்து அரசினால் ஏற்றுக் கொள்ளக்கூடியபகுதிகள் அல்லது இடங்கள் ஆகும்.

- பகுதி நேர விற்பனை செய்யக்கூடிய இடங்களை குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட வாரத்தில் குறிப்பிட்ட மாதத்தில் குறிப்பிட்ட வருடத்தில் விற்பனை செய்யக்கூடிய இடங்களாக நகர விற்பனைக்குழுவால் அறிவிக்கலாம்.
- இதரவகை வியாபாரிகள் நகர விற்பனைக்குழுவானது. தங்கள் வரம்பு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயற்கையாக வாரச்சந்தை பாரம்பரிய சந்தை திருவிழா சந்தை மற்றும் வரவு நேரச்சந்தையில் வியாபாரம் மேற்கொள்ளும் சாலையோர வியாபாரிகளை தொடர்ந்து வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.
- தனியாருக்கு சொந்தமான பகுதியில் விற்பனை செய்ப அனுமதிக்கக்கூடாது அதே நேரத்தில் பொது இடங்களிலிருந்து சாலையோர வியாபாரிகளை அகற்றவோ அல்லது அவர்களுக்கு மாற்று இடம் வழங்கவோ முயலும் போது தனியாருக்கு சொந்தமான கூடங்களை விற்பனை செய்ய சொத்து உரிமையாளரின் ஒப்புதலுடன் நகர விற்பனைக்குழு அனுமதிக்கலாம்.
- காவல் துறை, போக்குவரத்து காவல் துறையின் எல்லைக்குட்பட்டுள்ள பகுதிகளில் கண்டறியப்படும் விற்பனை செய்யக்கூடிய இடங்களை தேர்வு செய்வதில் காவல்துறையினை கலந்தாலோசிக்கப்பட வேண்டும்
- காவல் துறை போக்குவரத்து காவல் துறையினால் வியாபாரம் செய்யக்கூடிய இடமாக பரித்துரைக்கப்படும் இடத்தில் மாநகராட்சி உரிய காரணங்களுடன் அவ்விடத்தை பகுதியினை வியாபாரம் செய்யக்கூடிய பகுதியாக எற்கலாம் திருத்தம் செய்யலாம் அல்லது நிராகரிக்கலாம்.
- இரு வழி போக்குவரத்து கொண்ட மீட்டருக்கு சமமான மிகச் சிறிய அகலம் கொண்ட சாலைகளில் சாலையோர வியாபாரம் செய்யக்கூடாத இடமாக கருதலாம். எனினும், எந்த காரணத்தை முன்னிட்டும் அத்தகைய சாலைகள் வாகனங்கள் செல்லாத சாலையாக அறிவிக்கப்பட்டால் சாலையோர வியாபாரம் செய்ய அனுமதிக்கலாம்.
- 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை உள்ள சிறிய அகலம் கொண்ட சாலைகளில் சாலையோர வியாபாரம் செய்ய அனுமதிக்கக்கூடாது. இருப்பினும் அத்தகைய சாலை ஒரு வழி வாகன சாலையாக அறிவிக்கப்பட்டால் தெருவோர வியாபாரத்தை அனுமதிக்கலாம்,
- 5 மீட்டர் முதல் மீட்டர் வரை உள்ள பெரிய அகலம் கொண்ட சாலைகளில் ஒரு பக்கத்தில் மட்டும் சாலையோர வியாபாரம் செய்ய அனுமதிக்கலாம்.
- 10 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக அகலம் கொண்ட சாலைகளுக்கு இருபுறமும் சாலையோர வியாபாரம் செய்ய அனுமதிக்கலாம்.

- சாலையோர வியாபாரம் செய்யக்கூடிய தெருக்களை முடிவு செய்த பின்னர் அத்தகைய சாலைகளில் எத்தனை வியாபாரிகளை விற்பனை செய்ய அனுமதிக்க நகர விற்பனைக்குழு முடிவு செய்பலாம்.
- வாகனங்கள் பாதசாரிகள் தடங்கல் இன்றி செல்வதற்கு போக்குவரத்து காவல் துறையிடமிருந்து அனுமதி பெற்ற பிறகு சாலையோர வியாபாரம் செய்ய அனுமதிக்கலாம் தேவைப்பட்டால் இப்பகுதிகளில் வாகனங்களை நிறுத்த தடை விதிக்கலாம்

விற்பனை செய்ய தடை செய்யக்கூடிய இடங்களை *(Non Vending Zones)* கண்டறிவதற்கான வழிமுறைகள்

- விற்பனை செய்யக்கூடாத இடம் என்பது நகர விற்பனைக் குழுவினால் அங்கீகரிக்கப்படாத இடங்கள் ஆகும்.
- பொதுமக்களுக்கு வாகன போக்குவாத்துக்கு மற்றும் அப்பகுதிவாழ் மக்களுக்கு சிரமம் ஏற்படும் வகையில் குறைவான சதவிகித அளவில் வியாபாரம் செய்யும் இடமாக இருந்தாலும் அவ்விடத்தை சாலையோர வியாபாரிகள் விற்பனை தடை செய்யப்ட்ட இடங்களாக அறிவிக்கலாம்.
- இரயில்வே துறைக்கு சொந்தமான மற்றும் கட்டுப்பாட்டில் உள்ள நிலம், இடம், இரயில்கள் இரயில்வே சட்டம் *1989*ன்படி இரயில்வேக்கு சொந்தமான இடங்களுக்கு சாலையோர வியாபாரிகள் சட்டம் பொருந்தாது.
- தேசிய மற்றும் மாநில அரசுக்கு சொந்தமான நெடுஞ்சாலைகளில் மற்றும் கட்டுப்பாட்டில் உள்ள நிலம் மற்றும் சொந்தமான இடங்களுக்கு சாலையோர வியாபாரிகள் சட்டம் பொருந்தாது.
- வழிபாட்டு தலங்கள், புனித தலங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள் உள்ள இடங்களைச் சுற்றி *100* மீட்டர் தொலைவிலும் மற்றும் எந்தவொரு மாநகராட்சி அல்லது இதர சந்தைகள் *(Markets)* மற்றும் இரயில் நிலையங்கள் உள்ள இடங்களிலிருந்து *150* மீட்டர் தொலைவில் சாலையோர வியாபாரம் செய்யக்கூடாது
- அரசு கட்டிடங்கள், உயர் நீதிமன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தீயணைப்பு நிலையங்கள் போன்றவற்றின் நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களிலிருந்து *150* மீட்டர் தொலைவிற்குள் சாலையோர விற்பனை பகுதியாக அனுமதிக்கக்கூடாது
- பழங்கால நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம், *2010* மற்றும் மாநில தொல்லியல் நினைவுச்சின்னங்கள் பாதுகாப்பு சட்டம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் விற்பனை பகுதியாக அனுமதிக்கக்கூடாது.
- பாதுகாப்பு கருத்தில் கொண்டு அரசு தடைசெய்துள்ள எந்தப் பகுதியும் சாலையோர வியாபாரம் செய்ய அனுமதிக்கக்கூடாது

தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் சுற்றறிக்கை, த.பொ.(பொது) ந.க.எண்.அ1/366/2024, நாள் 03.12.2024ல் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான வழிகாட்டி நெறிமுறைகள் (SOP).

1. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கல்வி நிறுவனங்களான பள்ளி மற்றும் கல்லூரி அமைந்துள்ள பகுதியில் 100 மீட்டர் சுற்றளவில் சாலையோர வியாபாரம் மேற்கொள்ள தடை செய்யப்பட்ட பகுதியாக (No vending zone) நகர விற்பனைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.
2. காவல் துறை துணை ஆணையர் (போக்குவரத்து) அவர்களிடமிருந்து பெறப்பட்ட No Parking என பட்டியலிடப்பட்ட சாலைகள், தெருக்கள் (எண்ணிக்கை 22) விற்பனை செய்யக்கூடாத பகுதியாக அறிவிக்க நகர விற்பனைக் குழுவினால் அனுமதிக்கப்பட்டு உள்ளது.
3. நகர விற்பனைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட விற்பனை செய்யக்கூடிய பகுதியில் (Vending zone) பச்சை நிற அறிவிப்பு பலகை மற்றும் விற்பனை செய்யக்கூடாத பகுதிகளில் (Non vending zone) சிகப்பு நிற அறிவிப்பு பலகைகள் அமைக்க வேண்டும்.
4. அறிவிப்புப் பலகைகள் 2 x 1 (2 அடி x 1 அடி) என்ற அளவில் தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
5. அனைத்து மண்டலங்களிலும் நகர விற்பனைக் குழுவால் அனுமதிக்கப்பட்ட விற்பனை செய்யக்கூடிய பகுதிகளில் (Vending zone) அமைய உள்ள சாலையோரக் கடைகளின் அளவுகள் 6x4 (6 அடி x 4 அடி என்ற அளவில் ஒரே மாதிரியாக பச்சை நிற வண்ணத்தில் அளவீடுகள் (Marking) செய்ய வேண்டும்.
6. Vending zone அமைய உள்ள சாலையோரக்கடைகளின் அளவு 6x4 (6x4 என்ற அளவிலும் இரு கடைகளுக்கு இடையேயான இடைவெளி 2' (2 அடி) என்ற அளவிலும் இருக்க வேண்டும். மேலும் அதே சாலையில் அமைந்துள்ள வணிக நிறுவனங்கள், வீடுகள் மற்றும் அலுவலகங்களுக்கு செல்லக்கூடிய பாதையை தவிர்த்து கடைகளை அளவீடு (Marking) செய்ய வேண்டும், நடைபாதை கடைகளின் முன் வாகனம் நிறுத்த அனுமதிக்காமல் பாதசாரிகள் நடக்கும் விதமாக நடைபாதை அகலம் உறுதிசெய்யப்பட வேண்டும்.
7. சாலையோரம் ஏற்கனவே அமைந்துள்ள நிலையான வணிக நிறுவனங்களின் ஒப்புதல் பெற்றபின் கடை அளவுகளை குறிக்கலாம் (அல்லது) ஒப்புதல் பெறமுடியாத நிறுவனங்களை தவிர்த்து கடை அளவீடு செய்யலாம்.

<u>பெருநகர சென்னை மாநகராட்சி</u>

<u>நகர விற்பனைக் குழு</u>

நகர விற்பனைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை செய்யக்கூடிய பகுதிகள், மற்றும் விற்பனை செய்யக்கூடாத பகுதிகளின் விவரப் பட்டியல் (கூட்டம் நடைபெற்ற நாட்கள் 06.09.2024, 20.09.2024, 06.11.2024, 24.01.2025 மற்றும் 26.3.2025)

*****

மண்டலம்	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	Total
VZ *	10	19	15	13	26	18	8	5	6	5	9	7	4	3	2	150
NVZ **	3	6	9	13	19	45	5	4	14	5	23	7	4	16	15	188
Total	13	25	24	26	45	63	13	9	20	10	32	14	8	19	17	338

* Vending Zones (விற்பனை செய்யக்கூடிய பகுதிகள்)

** Non Vending Zones (விற்பனை செய்யக்கூடாத பகுதிகள்)

வரிசை எண்	வார்டு (Ward)	நகர விற்பனைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனைசெய்யக்கூடிய பகுதிகள் (Vending Zones)	வரிசை எண்.	வார்டு (Ward)	நகர விற்பனைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனைசெய்யக்கூடாத பகுதிகள் (Non Vending Zones)
மண்டலம் – 1					
1	3	சுனாமி அடுக்குமாடி குடியிருப்பு	1	7	சார்லஸ் நகர் தெரு
2	3	காசி கோயில் குப்பம் 1வது தெரு	2	7	ராமசாமி முதலியார் தெரு
3	3	காசி கோயில் குப்பம் 2வது தெரு	3	9	கிராம தெரு
4	4	ஜோதி நகர் பிரதான சாலை		-----	-----
5	4	பஜனை கோயில் தெரு		-----	-----
6	5	ராமகிருஷ்ணா நகர் 3வது மெயின் ரோடு		-----	-----
7	8	பெரியார் நகர் ரோடு		-----	-----
8	10	சன்னதி தெரு		-----	-----
9	12	சாத்தாங்காடு நெடுஞ்சாலை-182 மீ		-----	-----
10	13	எம்.ஜி.ஆர் சாலை, சாத்தங்காடு		-----	-----
மண்டலம் – 2					
1	15	மணலி நியூ டவுன் 10வது பிரதான சாலை (இயற்கை சந்தை 40 அடி சாலை)	1	15,16 &18	T.P.P.சாலை (தேசிய நெடுஞ்சாலை)
2	15	மணலி நியூ டவுன் 11வது தெரு (பார்க் சாலை)	2	15	திருவொற்றியூர் பொன்னேரி பஞ்சட்டி சாலை(TPT Road)
3	15	மணலி நியூ டவுன் 15வது	3	17	வடபெரும்பாக்கம் ரோடு

		பிரதான சாலை (மருத்துவமனை சாலை)			முதல் ஞாயிறு ரோடு வரை
4	15	மணலி நியூ டவுன் 4வது பிளாக் 6வது மெயின் ரோடு (SBI சாலை)	4	17	எம்.ஆர்.எச். ரோடு முதல் ரெட்ஹில்ஸ் ஹைவே வரை
5	15	மணலி புதிய நகரம் (அய்யா கோயில் சாலை)	5	21	தாமரைக்குளம் 1-வது தெரு
6	15	மணலி புதிய நகரம் 80 அடி சாலை	6	22	எம். கோவிந்தசாமி தெரு
7	16	மணலி நியூ டவுன் 80 அடி ரோடு		-----	-----
8	16	மணலி நியூ டவுன் துவாரகா நகர்		-----	-----
9	16	மணலி நியூ டவுன் ஆண்டார்குப்பம் முதல் ரெட்ஹில்ஸ் ரோடு வரை		-----	-----
10	17	சாமுவேல் நகர் சுடுகாடு தெரு		-----	-----
11	18	பாரதியார் தெரு		-----	-----
12	18	திருவள்ளுவர் நகர்		-----	-----
13	18	அன்பழகன் தெரு		-----	-----
14	21	பாட சாலை தெரு		-----	-----
15	21	நெடுஞ்செழியன் தெரு,		-----	-----
16	21	திருவேங்கடன் தெரு		-----	-----
17	21	ஈ.வெ.ஆர். தெரு		-----	-----
18	22	பார்த்தசாரதி தெரு		-----	-----
19	22	தேவராஜன் தெரு		-----	-----
மண்டலம் – 3					
1	23	காந்தி மெயின் ரோடு	1	23, 24, 28, 29, 30 & 31	ஜி.என்.டி சாலை (நகர எல்லை முதல் காவாங்கரை சந்திப்பிலிருந்து மூலக் கடை சந்திப்பு வரை)
2	23	சிவந்தி ஆதித்தனார் தெரு	2	27	மூலச்சத்திரம் மெயின் ரோடு
3	24	அம்பேத்கர் தெரு			

4	25	மில்க் காலனி மெயின் ரோடு -209 மீ	3	27	ஆவின் பால் பண்ணை சாலை
5	25	எஸ்.வி. கோவில் தெரு (மாரியம்மன் கோவில் தெரு)	4	27	கணபதி நகர்
6	26	குமரபுரம் மெயின் ரோடு	5	25 &30	200 அடி சாலை (நகர எல்லை முதல் மஞ்சம்பாக்கம் சிக்னல் சந்திப்பு வரை மற்றும் ரெட்டேரி சந்திப்பு வரை)
7	26	அலெக்ஸ் நகர் மெயின் ரோடு	6	29	பெரிய தெரு
8	27	அருள் நகர் முதல் கணபதி நகர் வரை அணுகு சாலை	7	30	அண்ணா தெரு
9	28	அம்பேத்கார் நகர் மெயின் ரோடு	8	30	விநாயகர் கோயில் தெரு
10	28	ஜி.என்.டி. ரோடு (காசாகிராண்ட் அருகில்)	9	30	பரிமளம் தெரு
11	30	செக்ரடேரியட் காலனி		-----	-----
12	31	ஜெயமாருதி நகர்		-----	-----
13	32	புத்தகரம் மெயின் ரோடு		-----	-----
14	33	கடப்பா சாலை		-----	-----
15	33	டீச்சர் காலனி 4வது மெயின் ரோடு		-----	-----
மண்டலம் – 4					
1	34	காமராஜ் சாலை ஜிஎன்டி சாலை அருகில்	1	34	கடும்பாடியம்மன் கோயில் தெரு
2	34	கட்டபொம்மன் தெரு	2	34	பள்ளி சாலை
3	35	முத்தமிழ் நகர் கிழக்கு நிழற்சாலை	3	35	முத்தமிழ் நகர் வடக்கு அவென்யூ சாலை
4	35	முத்தமிழ் நகர் தெற்கு நிழற்சாலை	4	36	TVK 1வது இணைப்பு சாலை (அம்மன் கோயில் தெரு அருகில்)
5	36	மேற்கு நிழற்சாலை, மகாகவி பாரதி நகர்	5	40	இளைய தெரு
6	37	எம்.கே.பி.நகர் 3வது பிரதான சாலை	6	40	காமராஜர் சாலை

7	37	மீனாம்பாள் சாலை	7	41	மணலி சாலை, (தொப்பை விநாயகர் கோயில் தெரு)
8	42	மன்னப்பன் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை	8	42	சேனியம்மன் கோயில் தெரு
9	45	சாஸ்திரி நகர் அண்ணா சாலை	9	43	கும்மாளம்மன் கோயில் தெரு
10	46	எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை	10	43	கணக்கர் தெரு (பஸ் ரூட் & பள்ளி பகுதி)
11	46	சத்தியமூர்த்தி நகர் வியாசர்பாடி மார்க்கெட்	11	43	ஜீவரத்தினம் சாலை
12	47	தியாகப்பா தெரு	12	44	எம்பிஎம் தெரு, ஜவஹர் தெரு
13	48	*DBK* தெரு பாகம்	13	45	ஸ்டீபன்சன் ரோடு
மண்டலம் - 5					
1	49	ஆதாம் தெரு	1	49	ஆளவந்தான் (நா) தெரு
2	49	ராஜகோபால் தெரு	2	49	அப்பாசாமி லேன்
3	49	தாண்டவராயன் (G) தெரு	3	49	கிரேஸ் கார்டன் 2-வது லேன்
4	50	ஆண்டியப்பன் தெரு	4	49	லாயர் சின்னதம்பி தெரு
5	50	பந்தாள விக்னேஷ்வரா கோவில் தெரு	5	49	நமச்சிவாய (செ) தெரு
6	50	கிழக்கு கல்மண்டபம் ரோடு	6	49	நியூ தாண்டவராயன் தெரு
7	50	காமராஜ் பார்க் லேன்	7	49	பண்டால சாலை
8	50	மார்க்கெட் லேன்	8	49	தணிக்காசல (மு) தெரு
9	50	செயின்ட் சேவியர் தெரு	9	49	வெங்கடராமானுஜலு தெரு
10	51	காளிங்கராயன் தெரு	10	49	வெங்கடபதி தெரு
11	51	மணிகண்டன் 5-வது தெரு	11	50	ஆர்த்தூன் ரோடு
12	51	மணிகண்டன் 6-வது தெரு	12	51	ராபின்சன் பார்க் 2-வது லேன்
13	51	நாராயணப்பன் 9-வது லேன்	13	51	என்.என். கார்டன் 8-வது லேன்
14	51	நாராயணப்பன் தெரு	14	51	வெஸ்ட் சிமெண்ட்ரி ரோடு

15	51	ராபின்சன் பார்க் காலனி	15	51	என்.என்.கார்டன் 7-வது லேன்
16	51	ராமநாயக்கன் தெரு	16	51	என்.என்.கார்டன் 2-வது லேன்
17	51	செல்வ விநாயகர் கோவில் தெரு	17	52	மசூதி தெரு
18	52	ஆதாம் சாகிப் தெரு	18	53	கெனால் தெரு
19	52	எம்.எஸ்.கோவில் தெரு	19	61	பாந்தியன் ரோடு
20	53	கத்திவாக்கம் நெடுஞ்சாலை		-----	-----
21	59	TNPSC சாலை		-----	-----
22	59	முத்துசாமி சாலை		-----	-----
23	59	ஜசக் தெரு		-----	-----
24	60	இரண்டாவது லேன் கடற்கரை சாலை		-----	-----
25	61	எத்திராஜ் சாலை – 115 மீ		-----	-----
26	61	பாந்தியன் லேன்		-----	-----
மண்டலம் - 6					
1	64	கிழக்கு லெவல் சாலை (அவ்வை நகர் 2வது தெரு முதல் கிழக்கு பக்கம் சந்திப்பு வரை)	1	64	ஜம்புலிங்கம் மெயின் ரோடு (ஜிகேஎம் காலனி 30வது தெரு முதல் 37வது தெரு வரை)
2	65	மக்காரம் தோட்டம் (தேவர் சிக்கன் ஸ்டால் முதல் டான் போஸ்கோ பள்ளி வரை)	2	64	ஜம்புலிங்கம் கட் ரோடு (ஜிகேஎம் காலனி 38வது தெரு முதல் ராஜாஜி நகர் காவேரி தெரு வரை)
3	65	தென்பழனி நகர் (தேவர் சிக்கன் ஸ்டால் முதல் எஸ்பிஐ வங்கி வரை)	3	64	கே.கே.நகர் 1வது தெரு (கே.கே.நகர் முதல் தெரு முதல் அக்பர் சதுக்கம் தெரு முனை வரை)
4	66	குமரன் நகர் 80 அடி சாலை (குமரன் நகர் பேருந்து நிலையம் முதல் சேகர் காய்கறி சந்தை வரை)	4	64	காமராஜ் தெரு ராஜாஜி நகர் (வில்லிவாக்கம் சுரங்கப்பாதை முதல் மேயர் சிட்டிபாபு பாலம் தொடக்கம் வரை)
5	66	பாலாஜி நகர் மெயின் ரோடு (பாலாஜி நகர் மார்க்கெட்	5	65	பூம்புகார் நகர் 1வது மெயின் ரோடு (SBI

		முதல் சாய்பாபா கோவில் வரை)			வங்கி முதல் WCF மருத்துவமனை வரை)
6	67	எஸ்ஆர்பி கோயில் தெரு (வடக்கு) '(டிவிகே நகர் 22வது தெரு முனையிலிருந்து பல்லவன் சாலை சந்திப்பு வரை)	6	65	பூம்புகார் நகர் 2வது மெயின் ரோடு (காவல் சாவடி முதல் யமுனா நகர் தொடக்கம் வரை)
7	67	டிவிகே நகர் 22வது தெரு, (பிரகாசம் தெரு முதல் எஸ்ஆர்பி கோயில் தெரு (வடக்கு))	7	65	சீனிவாச நகர் 1வது பிரதான சாலை (டான் போஸ்கோ பள்ளி முதல் சீனிவாச நகர் ஜசிஜசிஜ வங்கி வரை)
8	68	சிவ இளங்கோ சாலை, (70 அடி ரோடு) (கே4, காவல் நிலையம் முதல் பேப்பர் மில்ஸ் ரோடு சந்திப்பு வரை)	8	65	தில்லைநகர் 1வது மெயின் ரோடு (ராஜமங்கலம் காவல் நிலையம் முதல் கோயில் பள்ளி வரை)
9	69	லோகோ ஸ்கீம் முதல் தெரு	9	65	செந்தில் நகர் 1வது பிரதான சாலை (டிபிஎஸ் வங்கி முதல் ராஜமங்கலம் காவல் நிலையம் வரை)
10	69	மார்க்கெட் தெரு	10	66	செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலை - வார்டு 65 (அண்ணா சாலை கங்கா ஸ்வீட்ஸ் முதல் ரெட்டேரி சிக்னல் வரை)
11	70	எம்.எச்.ரோடு (சாந்தி நகர் சந்திப்பு முதல் சிம்சன் கேட் வரை)	11	66	கொளத்தூர் மெயின் ரோடு (அண்ணா சாலை கங்கா ஸ்வீட்ஸ் முதல் ரெட்டேரி சிக்னல் வரை)
12	71	வடக்கு பெரம்பூர் நெடுஞ்சாலை	12	67	பேப்பர் மில்ஸ் சாலை (காமராஜ் சிலை சந்திப்பு முதல் ராகவா தெரு காந்தி சிலை வரை)

13	71	நெல்வயல் ரோடு	13	67	ஜவஹர் நகர் 1வது மெயின்ரோடு, (பெரவலூர் இந்தியன் வங்கி முதல் முருகன் கோயில் வரை)
14	72	பவுடர் மில்ஸ் ரோடு	14	67	பேப்பர் மில்ஸ் சாலை (பெரவலூர் டான் போஸ்கோ பள்ளி முதல்அகரம் சிலை வரை)
15	73	டிமெல்லஸ் ரோடு – 250 மீ	15	67	கார்த்திகேயன் சாலை (ஜவஹர் நகர் இறுதியிலிருந்து வெங்கட்ராமன் சாலை சந்திப்பு வரை)
16	74	சந்திரயோகி சமாதி தெரு	16	67	ஜவஹர் நகர் 1வது சர்குலர் ரோடு, (ஜவஹர் நகர் 1வது மெயின் ரோடு முதல் சி. எம். அலுவலகம் வரை)
17	75	சின்ன பாபு தெரு, நம்மாழ்வார்பேட்டை	17	68	வெங்கட்ராமன் சாலை (ஜி.கே.எம்.காலனி 24வது தெரு முதல் பெரியார் நகர் இ.பி. அலுவலகம் வரை)
18	76	புதிய தெரு	18	68	இலட்சுமணன் நகர் மெயின்ரோடு (பெரவலூர் டான் பாஸ்கோ பள்ளி பின்புறம் வரை)
-----	-----	-----	19	68	ராம் நகர் 2வது மெயின் ரோடு (பேப்பர் மில்ஸ் ரோடு சந்திப்பு முதல் ராமமூர்த்தி காலனி சந்திப்பு வரை)

-----	-----	-----	20	68	வரதராஜன் தெரு (ராமமூர்த்தி காலனி உட்புறம்)
-----	-----	-----	21	68	ஜெகந்நாதன் தெரு (பெரியார் நகர் பஸ் டிப்போ முதல் 70 அடி ரோடு சந்திப்பு வரை)
-----	-----	-----	22	68	டி.வி.கே.நகர் (காமராஜர் நகர்) (சென்னை மாநகராட்சி பள்ளி அடுத்த தெரு முதல் ராமமூர்த்தி காலனி சந்திப்பு வரை)
-----	-----	-----	23	69	ஜம்புலிங்கம் மெயின் ரோடு
-----	-----	-----	24	69	லோகோ ஒர்க்ஸ் 2வது தெரு
-----	-----	-----	25	69	முத்துக்குமாரப்பா தெரு
-----	-----	-----	26	69	தெற்கு எஸ்.ஆர்.பி.கோயில் தெரு
-----	-----	-----	27	69	தாந்தோன்றியம்மன் கோயில் தெரு
-----	-----	-----	28	69	செயின்ட்மேரீஸ் கல்லூரி
-----	-----	-----	29	69	காசி விஸ்வநாதர் கோயில் தெரு
-----	-----	-----	30	69	ஆன்டர்சன் சாலை
-----	-----	-----	31	70	பேப்பர் மில்ஸ் ரோடு
-----	-----	-----	32	70	சிறுவள்ளூர் நெடுஞ்சாலை
-----	-----	-----	33	70	பில்கிங்டன் ரோடு
-----	-----	-----	34	70	ஜவஹர் ரோடு
-----	-----	-----	35	70	ராகவன் தெரு
-----	-----	-----	36	71	வடிவேலு மெயின் தெரு

-----	-----	-----	37	71	பாரதி மெயின் தெரு
-----	-----	-----	38	71	தெற்கு பெரம்பூர் நெடுஞ்சாலை
-----	-----	-----	39	71	மேல்பட்டி பொன்னப்பன் தெரு
-----	-----	-----	40	71	மாதவரம் நெடுஞ்சாலை
-----	-----	-----	41	72	வெங்கடேசபுரம் நியூ காலனி மெயின்ரோடு
-----	-----	-----	42	73	குக்ஸ் ரோடு (திரு.வி.க நகர்)
-----	-----	-----	43	73	நியூ பேரன்ஸ் ரோடு
-----	-----	-----	44	74	டேங்க் பன்டு ரோடு
-----	-----	-----	45	76	செல்லப்பா தெரு
மண்டலம் - 7					
1	80	புதூர் மெயின் ரோடு	1	79	எரிக்கரை சாலை
2	84	வடக்கு அவென்யூ சாலை	2	80	அபிராமிபுரம் பிரதான சாலை
3	86	அயனம்பாக்கம் பிரதான சாலை	3	84	*TNHB 38*வது தெரு, கொரட்டூர்
4	87	கிழக்கு அவென்யூ சாலை	4	88	சிடிஎச் ரோடு
5	87	திருஞான சம்பந்தர் தெரு	5	92	பாரி சாலை
6	88 & 90	பார்க் சாலை	-----	-----	-----
7	89 & 92	திருவள்ளுவர் சாலை	-----	-----	-----
8	92&93	சர்ச் ரோடு (வார்டு-*92* கிழக்கு-*28* மீ/ வார்டு-*93* மேற்கு-*40*மீ)	-----	-----	-----
மண்டலம் – 8					
1	95	வில்லிவாக்கம் ஸ்டேஷன் ரோடு	1	98	போலீஸ் மாணிக்கம் தெரு
2	98	வெங்கடேசபுரம் காலனி தெற்கு தெரு – *85* மீ	2	100	இராஜரத்தினம் ரோடு
3	100	ஆம்ஸ் ரோடு	3	100	பர்னாபி ரோடு
4	103	*5*-வது அவன்யூ	4	103	*2*வது அவன்யூ (ரவுண்டானா முதல் *10*வது மெயின் ரோடு வரை)

5	104	15 மெயின்ரோடு (13 வது மெயின் ரோடு முதல் சென்னை மாநகராட்சி கிழக்கு பக்கம் ரோடு	-----	-----	-----
மண்டலம் – 9					
1	112	புலியூர் பிரதான சாலை	1	109	நெல்சன் மாணிக்கம் ரோடு
2	117	டாக்டர்.பி.நரசிம்மன் சாலை	2	110	வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை
3	123	டிமான்டி காலனி	3	111	கிரீம்ஸ் லேன்
4	123	பெரியார் சாலை	4	111	காதர் நவாஸ் கான் ரோடு
5	123	லஸ் சர்ச் சாலை	5	117	ஜி.என்.செட்டி ரோடு
6	124	வெங்கடேஷ் அக்ரஹாரம்	6	118	கதீட்ரல் ரோடு
-----	-----	-----	7	120	இருசப்ப தெரு
-----	-----	-----	8	122	டி.டி.கே. ரோடு
-----	-----	-----	9	123	ஆர்.ஏ.புரம் 2வது மெயின் ரோடு
-----	-----	-----	10	124	வெங்கடேஷ் அக்ரஹாரம் 1வது லேன்
-----	-----	-----	11	124	வெங்கடேஷ் அக்ரஹாரம் 2வது லேன்
-----	-----	-----	12	124	சாரதாபுரம் மெயின் ரோடு
-----	-----	-----	13	124	அலமேலு மங்காபுரம்
-----	-----	-----	14	124	நஞ்சுண்டா ராவ் காலனி
மண்டலம் - 10					
1	133	ராமேஸ்வரம் சாலை	1	133	லேக் வியூ சாலை
2	134	ஆர்யா கௌடா சாலை	2	139	மேற்கு ஜோன்ஸ் சாலை
3	135	A,P பட்ரோ சாலை,கே.கே,நகர்	3	141	மேட்லி சாலை
4	139	கங்கை அம்மன் கோயில் தெரு	4	142	டேங்க் ஸ்கொயர் சாலை
5	141	முத்து ரங்கன் சாலை	5	142	கிழக்கு ஜோன்ஸ் சாலை

மண்டலம் - 11					
1	143	முகபேர் மேற்கு பிரதான சாலை அம்பத்தூர்	1	144	போலீஸ் லேன் ரோடு வளசரவாக்கம்
2	144	எம்எம்டிஏ காலனி 1வது பிரதான சாலை	2	144	பி.எச். ரோடு மதுரவாயல் பாலம் அருகில் (கிழக்கு)
3	148	எம்.ஜி.ஆர் சாலை – 92 மீ (எம்ஆர் பள்ளி)	3	144	பி.எச். ரோடு மதுரவாயல் பாலம் அருகில் (மேற்கு)
4	149	காந்தி ரோடு – 145.90 மீ	4	145	பி.எச். ரோடு மதுரவாயல் மார்கெட் அருகில்
5	149	டாக்டர். ராதாகிருஷ்ணன் தெரு – 57.5 மீ	5	147	பி.எச். ரோடு ஆலப்பாக்கம் ஜங்ஷன் அருகில்
6	150	மெட்ரோ நகர் 4வது அவென்யூ – 34 மீ	6	147	பி.எச். ரோடு ஆலப்பாக்கம் ஜங்ஷன் அருகில் கேரளா சிப்ஸ் அருகில்
7	151	எஸ்.வி.எஸ் நகர் 1-வது மெயின் ரோடு – 40 மீ	7	149	ஆற்காடு ரோடு ரக்க்ஷித் மருத்துவமனை முதல் ஜோதி டெக்ஸ்டைல்ஸ் இருபுறமும்
8	153	சக்தி நகர் மெயின் ரோடு – 21 மீ	8	149	ஆற்காடு ரோடு பெரம்பூர் சீனிவாசா ஓட்டல் முதல் எச்.டிஎப்.சி வங்கி வரை இருபுறமும்
9	153	ராமகிருஷ்ணா நகர் பிரதான சாலை	9	150	தாம்பரம் புழல் பைபாஸ் ரோடு வானகரம் டோல் கேட் பாண்டியன் ஓட்டல் அருகில்
-----	-----	-----	10	150	தாம்பரம் புழல் பைபாஸ் ரோடு வானகரம் டோல் கேட் சமயபுரம் ரோடு அருகில்
-----	-----	-----	11	150	எம்.பி.எச். ரோடு முதல் செட்டியார் அகரம் ஜங்ஷன் முதல் ஸ்ரீராம் நகர் வரை

-----	-----	-----	12	150	எம்.பி.எச். ரோடு போரூர் சர்வீஸ் ரோடு முதல் (நந்தினி ஸ்வீட்ஸ் எதிரில் (செட்டியார் அகரம் ஜங்ஷன் வரை)
-----	-----	-----	13	150	ஆற்காடு ரோடு- வசந்த் அண்டு கோ முதல் காரம்பாக்கம் செக்போஸ்ட் வரை இருபுறமும்
-----	-----	-----	14	151	எம்.பி.எச். ரோடு போரூர் குமார் ஸ்வீட்ஸ் முதல் எதிர்புறம் சர்வீஸ் ரோடு சபரி நகர் ஜங்ஷன் வரை
-----	-----	-----	15	151	எம்.பி.எச். ரோடு- சபரி நகர் பாரத் பெட்ரேல் பங்க் முதல் போரூர் சர்வீஸ் ரோடு வரை (ஆற்காடு பிரியாணி கடை) எதிர்புறம்
-----	-----	-----	16	151	ஆற்காடு ரோடு சரவணபவன் ஹோட்டல் எதிர்புறம் முதல் போரூர் குமார் ஸ்வீட்ஸ் எதிர்புறம் ரோடு வரை
-----	-----	-----	17	152	ஆற்காடு ரோடு ராயல் மருத்துவமனை முதல் கேசவர்த்தினி ஜங்ஷன் வரை இருபுறமும்
-----	-----	-----	18	152	பிரகாசம் சாலை *Faith Home School* முதல் கேசவர்த்தினி ஜங்ஷன் வரை இருபுறமும்

-----	-----	-----	19	153	குன்றத்தூர் ரோடு போரூர் ஆற்காடு பிரியாணி கடை எதிர்புறம் முதல் நாராயண பள்ளி வரை
-----	-----	-----	20	153	குன்றத்துர் ரோடு – பாய்க்கடை ஜங்ஷன் முதல் போரூர் ஜங்ஷன் சிக்னல் ரோடு வரை
-----	-----	-----	21	154	பாரதி சாலை எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் முதல் அரசமரம் ஜங்ஷன் வரை இருபுறமும்
-----	-----	-----	22	155	பிரகாசம் சாலை முதல் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக உரிமையாளர் வீடு வரை இருபுறமும்
-----	-----	-----	23	155	திருவள்ளுவர் சாலை முதல் அரசமரம் ஜங்ஷன் வரை கிரேஸ் பல்பொருள் அங்காடி வரை இருபுறமும்
மண்டலம் – 12					
1	162	தில்லைகங்கா நகர் 3வது பிரதான சாலை	1	162	தில்லைகங்கா நகர் 6வது பிரதான சாலை 100 அடி சாலை
2	162	ஹட்கோ காலனி	2	163	மேடவாக்கம் மெயின் ரோடு சுரேந்தர் நகர்
3	163	பழயாண்டி அம்மன் கோயில் தெரு	3	163	கர்ணீகர் தெரு
4	164	நங்கநல்லூர் 4வது பிரதான சாலை	4	164	நங்கநல்லூர் முதல் பிரதான சாலை
5	165	நங்கநல்லூர் 2வது மெயின் ரோடு	5	165	வாணுவம்பேட்டை பாலாஜி நகர் மெயின் ரோடு

6	165	ராம் நகர் 2வது பிரதான சாலை	6	165	உள்வட்ட சாலை
7	167	எம்.ஜி.ஆர் சாலை – 75 மீ	7	167	நங்கநல்லூர் 100 அடி சாலை
மண்டலம் – 13					
1	170	மேற்கு கால்வாய் கரை சாலை – 600 மீ	1	170	பாரதி அவென்யூ
2	171	ஜானகி அவென்யூ விரிவு	2	171	கற்பகம் அவென்யூ
3	174	பெசன்ட் நகர் 2வது அவென்யூ (மேற்கு பக்கம்)	3	174	பெசன்ட் நகர் 2வது அவென்யூ (கிழக்கு பக்கம்)
4	180	வாட்டர் லேன் டிரைவ் 2வது தெரு	4	180	புதிய கடற்கரை சாலை (வாட்டர் லேண்ட் டிரைவ் சாலை)
மண்டலம் - 14					
1	183	கலைஞர் கருணாநிதி சாலை – 144 மீ	1	191	வீராத்தம்மன் கோவில் தெரு
2	187	லேக் வியூ மெயின் ரோடு	2	183	டாக்டர். முத்தமிழ் அறிஞர் கலைஞர் சாலை (ECR பிரதான சாலை - பாலவாக்கம்)
3	191	செலன் எஸ்டேட் பிரதான சாலை	3	181	OMR ராஜீவ் காந்தி சாலை (ஐஸ்வர்யா மருத்துவமனையிலிருந்து YMCA பாலம் வரை)
-----	-----	-----	4	181	ECR ரோடு கொட்டிவாக்கம்
-----	-----	-----	5	182	OMR ராஜீவ் காந்தி சாலை (பிரின்ஸ் இன்போ சிட்டி (கந்தன்சாவடி) முதல் கந்தன் டெக்ஸ்டைல் வரை

-----	-----	-----	6	182	OMR ராஜீவ் காந்தி சாலை (ராயல் என்பீல்டு) (அப்பல்லோ சிக்னல் அருகில்) பெருங்குடி பாலம் வரை
-----	-----	-----	7	182	OMR ராஜீவ் காந்தி சாலை Kia showroom முதல் சீவரம் பஸ் ஸ்டாப் வரை
-----	-----	-----	8	182	OMR ராஜீவ் காந்தி சாலை கந்தன்சாவடி காளியம்மன் கோவில் முதல் YMCA பாலம் வரை
-----	-----	-----	9	182	OMR ராஜீவ் காந்தி சாலை பெருங்குடி Tollgate முதல் (ASM டிரேடர்ஸ் அருகில்) World Trade Centre வரை
-----	-----	-----	10	184	OMR ராஜீவ் காந்தி சாலை சீவரம் மீன் அங்காடி முதல் SM Towers வரை
-----	-----	-----	11	187	மடிப்பாக்கம் லேக் வியூ மெயின் ரோடு அய்யப்பன் நகர் மடிப்பாக்கம்
-----	-----	-----	12	189	பள்ளிக்கரணை 200 அடி ரேடியல் ரோடு A2B Hotel முன்பறம்
-----	-----	-----	13	189	பள்ளிக்கரணை வேளச்சேரி மெயின் ரோடு சிவன் கோவில் அருகில் இருபுறமும்

-----	-----	-----	14	190	பள்ளிக்கரணை வேளச்சேரி மெயின் ரோடு பள்ளிக்கரணை அரசுப்பள்ளிக்கு அருகில்
-----	-----	-----	15	190	பள்ளிக்கரணை வேளச்சேரி மெயின் ரோடு பள்ளிக்கரணை *Max Showroom* அருகில்
-----	-----	-----	16	191	வேளச்சேரி மெயின் ரோடு (ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ் முன்புறம்)
மண்டலம் - 15					
1	196	கண்ணகி நகர் *TNUHDB 1*வது பிரதான சாலை	1	192	*ECR* முதல் சிங்காரவேலன் சாலை முதல் நீல கடற்கரை சாலை வரை
2	200	செம்மஞ்சேரி *1*வது பிரதான சாலை *TNUHDB*	2	193	துரைப்பாக்கம் ஜங்ஷன் அரசு பள்ளி வார்டு அலுவலகம் மற்றும் மருத்துவமனை
-----	-----	-----	3	193	*TEK Tower* முதல் ஸ்ரீமதி ஓட்டல் செட்டிநாடு துரைப்பாக்கம்
-----	-----	-----	4	193	செல்வா ஹோட்டல் முதல் மார்வல்ஸ்
-----	-----	-----	5	193	*5K Care*, துரைப்பாக்கம்
-----	-----	-----	6	193	ஏகேடிஆர் *Golf Village*, துரைப்பாக்கம்
-----	-----	-----	7	193	பிள்ளையார் கோயில் தெரு ஜங்ஷன் முதல் ராஜ்பவன்

-----	-----	-----	8	193	சுபன் செட்டிநாடு ஓட்டல் முதல் சென்னை *one Gate*
-----	-----	-----	9	193	ஆக்ஸிஸ் வங்கி முதல் பிஎஸ்ஆர் வணிக வளாகம் வரை
-----	-----	-----	10	193	பிஎஸ்ஆர் வணிக வளாகம் துரைப்பாக்கம் கியூரி மருத்துவமனை
-----	-----	-----	11	194	*ECR* முதல் செயின்ட் ஜோசப் பள்ளி
-----	-----	-----	12	194	*ECR* ஹனுமான் காலனி ஜங்ஷன்.
-----	-----	-----	13	194	*ECR* டாக்டர். நஞ்சுண்டராவ் சாலை ஜங்ஷன்
-----	-----	-----	14	197	*ECR* விஜிபி ஜங்ஷன்
-----	-----	-----	15	197	*ECR* அக்கரை ஜங்ஷன்

எனவே, சாலையோர வியாபாரிகளுக்கான நகர விற்பனைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சாலையோர வியாபாரிகளுக்கு பொருந்தக்கூடிய வரைமுறைகள் (Norms), 150 விற்பனை செய்யக்கூடிய பகுதிகள் (Vending Zones) மற்றும் 188 விற்பனை செய்யக்கூடாத பகுதிகள் (Non Vending Zones) ஆக மொத்தம் 338 பகுதிகளின் பட்டியலை அரசுக்கு அனுப்பி அரசிதழில் வெளியிட, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 231/2025, நாள். 25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.14.ந.க.எண்.இ2/ DIV191/8 / 2025

ஆணையர் அவர்களின் 28.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 526/2025 **பொருள் எண்.198**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம்–14, கோட்டம்-191ல் திருவள்ளுவர் நகர் 6வது தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநராட்சி, மண்டலம்–14, பகுதி–43, கோட்டம்–191, திருவள்ளுவர் நகர் 6வது தெருவில் உள்ள 60.45 ச.மீ பரப்பளவு கொண்ட அங்கன்வாடி கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது.

இவ்விடத்தில் புதியதாக பல்நோக்கு கட்டிடம் அமைக்கப்படவுள்ளது. மேற்குறிப்பிட்ட பழைய கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ231286.91/- ஆதலால் 60.45 ச.மீ பரப்பளவு கொண்ட இக்கட்டிடத்தை இடித்துவிட்டு சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து புதிய அங்கன்வாடி கட்டிடம் அமைக்கப்படவுள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

எனவே, மண்டலம்–14, பகுதி–43, கோட்டம்–191, திருவள்ளுவர் நகர் 6வது தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 23.04.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.04.2025 அன்று தீர்மான எண்.337/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.14.ந.க.எண்.இ2/DIV191/9 / 2025

ஆணையர் அவர்களின் 28.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 527/2025 **பொருள் எண்.199**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம்–14, கோட்டம்-191ல் காந்தி தெருவில் உள்ள பழுதடைந்த நிலையில் உள்ள பல்நோக்கு (நியாயவிலைக் கடை) கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநராட்சி, மண்டலம்–14, பகுதி–43, கோட்டம்–191, காந்தி தெருவில் உள்ள 72.23ச.மீ பரப்பளவு கொண்ட கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது.

இவ்விடத்தில் புதியதாக சமுதாய நல கூடம் கட்டிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பழைய கட்டிடம் 1998ஆம் கட்டப்பட்டது. அதன் புத்தக மதிப்பு ரூ. 88593.48/-. ஆதலால் 72.23ச.மீ பரப்பளவு கொண்ட இக்கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக சமுதாய நல கூடம் கட்டிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால் பெருநகர சென்னை மாநராட்சி நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

எனவே, மண்டலம்–14, பகுதி–43, கோட்டம்–191, காந்தி தெருவில் நிலையில் உள்ள பல்நோக்கு (நியாயவிலைக் கடை) கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 23.04.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.04.2025 அன்று தீர்மான எண்.338/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

TVKNGR/117/2025-ADMIN(ENGINEERING)-E1

ஆணையர் அவர்களின் 28.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 528/2025 **பொருள் எண்.200**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-6, பகுதி-15, 16 & 17, வார்டு-64, 67, 68, 70,71,72,73,75,76,77 & கோட்டம்-78க்குட்பட்ட, பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள பல்வேறு கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-15, 16 & 17, வார்டு-64, 67, 68, 70, 71, 72, 73, 75, 76, 77 & கோட்டம்-78க்குட்பட்ட, பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள பின்வரும் கட்டிடங்களின் விவரம்

அட்டவணை-I

வ. எண்	கட்டிடத்தின் விவரம்
1.	கோட்டம்-64, சுப்ரமணியபுரம் 2வது தெருவில் அமைந்துள்ள கோட்ட அலுவலக கட்டிடம்
2.	கோட்டம்-64, சீனிவாச நகர் 3வது பிரதான சாலையில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மைய கட்டிடம்
3.	கோட்டம்-67, திரு.வி.க நகர் 14வது தெருவில் அமைந்துள்ள கால்நடை மருத்துவமனை கட்டிடம்
4.	கோட்டம்-68, ஜவஹர் நகர் 3வது வட்ட சாலையில் அமைந்துள்ள கோட்ட அலுவலக கட்டிடம் மற்றும் துப்புரவு ஆய்வாளர் அலுவலக கட்டிடம் ஆகிய கட்டிடங்கள்
5.	கோட்டம்-68, ஜவஹர் நகர் 3வது வட்ட சாலை 2வது குறுக்கு தெருவில் அமைந்துள்ள பகுதி-16 அலுவலக கட்டிடம், வரி வசூலிப்பவர் அலுவலக கட்டிடம் மற்றும் சுகாதார ஆய்வாளர் அலுவலக கட்டிடம் ஆகிய கட்டிடங்கள்
6.	கோட்டம்-70, வசந்தா கார்டன், மதுரை தெருவில் அமைந்துள்ள பள்ளி வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி
7.	கோட்டம்-71, செய்யூர் பார்த்தசாரதி தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம் மற்றும் சத்துணவு கூட கட்டிடம் ஆகிய கட்டிடங்கள்
8.	கோட்டம்-71, வடிவேல் 2வது குறுக்கு தெருவில் அமைந்துள்ள துப்புரவு/சுகாதார ஆய்வாளர் அலுவலக கட்டிடம் மற்றும் வரி வசூலிப்பவர் அலுவலக கட்டிடம் ஆகிய கட்டிடங்கள்
9.	கோட்டம்-71, கன்னிகாபுரம், மாதவரம் பிரதான சாலையில் அமைந்துள்ள பொது கழிப்பிட கட்டிடம்
10.	கோட்டம்-71, பெரம்பூர் பிரதான சாலை (தெற்கு)ல் அமைந்துள்ள வணிக வளாக கட்டிடம்
11.	கோட்டம்-72, நரசிம்ம நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள சென்னை

	நடுநிலைப்பள்ளி கட்டிடம்
12.	கோட்டம்-72, வாசுகி நகரில் அமைந்துள்ள பொது கழிப்பிட கட்டிடம்
13.	கோட்டம்-72, வ.உ.சி நகரில் அமைந்துள்ள கோட்ட அலுவலக கட்டிடம்
14.	கோட்டம்-73, பொலு (N) தெருவில் அமைந்துள்ள பழைய பகுதி அலுவலக கட்டிடம்
15.	கோட்டம்-73, டாக்டர்.அம்பேத்கர் கல்லூரி சாலை, டிக்காஸ்டர் சாலை சந்திப்பில் அமைந்துள்ள பொது கழிப்பிட கட்டிடம்
16.	கோட்டம்-73, குக்ஸ் சாலையில் அமைந்துள்ள சென்னை துவக்கப்பள்ளி கட்டிடம் மற்றும் கழிப்பிட கட்டிடம்
17.	கோட்டம்-73, ஸ்டிபன்சன் சாலை, டாக்டர்.அம்பேத்கர் கல்லூரி சாலை சந்திப்பில் அமைந்துள்ள பழைய துணை மின் நிலைய கட்டிடம்
18.	கோட்டம்-75, எஸ். எஸ் புரம் 4வது தெருவில் அமைந்துள்ள உடற்பயிற்சி கூட கட்டிடம்
19.	கோட்டம்-75, சுப்புரயான் 2வது தெருவில் அமைந்துள்ள துப்புரவு ஆய்வாளர் அலுவலக கட்டிடம் மற்றும் அம்மா உணவக கட்டிடம் ஆகிய கட்டிடங்கள்
20.	கோட்டம்- 76, செல்லப்பா தெருவில் அமைந்துள்ள சென்னை துவக்கப்பள்ளி கட்டிடம்
21.	கோட்டம்-76, பொன்னியம்மன் கோயில் தெரு (மாநகராட்சி லேன்)ல், அமைந்துள்ள மாநகராட்சியால் ஒதுக்கப்பட்ட கட்டிடம்-1
22.	கோட்டம்-76, பொன்னியம்மன் கோயில் தெரு (மாநகராட்சி லேன்)ல், அமைந்துள்ள மாநகராட்சியால் ஒதுக்கப்பட்ட கட்டிடம்-2
23.	கோட்டம்-76, ஸ்ட்ரான்ஸ் சாலையில் அமைந்துள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி கட்டிடம்
24.	கோட்டம்-76, வெங்கடகிரி தெருவில் அமைந்துள்ள மாநகராட்சி கட்டிடம்
25.	கோட்டம்-77, போகிபாளையத்தில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடம்
26.	கோட்டம்-77, கே.பி பூங்காவில் அமைந்துள்ள உடற்பயிற்சி கூட கட்டிடம்
27.	கோட்டம்-77க்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மகளிர் உதவி குழு கட்டிடம்
28.	கோட்டம்-77, சுந்தராபுரம் திடலில் அமைந்துள்ள பழைய உடற்பயிற்சி கூட கட்டிடம்
29.	கோட்டம்-77, பி.கே காலனியில் அமைந்துள்ள உடற்பயிற்சி கூட கட்டிடம்
30.	கோட்டம்-77, பி.கே காலனியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய கட்டிடம்
31.	கோட்டம்-78, குறவன் குளத்தில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம்
32.	கோட்டம்-78, குறவன் குளத்தில் அமைந்துள்ள அம்மா உணவக கட்டிடம்
33.	கோட்டம்- 78, ஈரன் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம்

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்கள் கட்டப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் இக்கட்டிடங்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், அலுவலர், பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் நலன் கருதி எவ்வித பாதிப்புகள் ஏற்படா வண்ணம் இருக்க இக்கட்டிடங்களை இடித்து கட்டுவது அவசியமாகிறது.

தற்போதுள்ள கட்டிடங்கள் இடிக்க ஒப்பம் கோரும் பொழுது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள மதிப்பினை நிர்ணயிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டதின் அடிப்படையில் கட்டிடங்களை இடிப்பதற்கான சுற்றறிக்கையில் உள்ளவாறு மதிப்பீட்டு தொகை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம்

அட்டவணை-II (மதிப்பீடு)

வ. எண்	கோட்டம்	கட்டிடத்தின் விவரம்	கட்டிடத்தின் விவரம்	ஆண்டு	சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட தொகை	மதிப்பீட்டு தொகை
1.	64	சுப்ரமணியபுரம் 2வது தெரு	கோட்ட அலுவலக கட்டிடம்	2195.04 Sq.ft	1,000 சதுர அடி முதல் 2,500 சதுர அடி வரை	ரூ. 50,000/-
2.	64	சீனிவாச நகர் 3வது பிரதான சாலை	ஆரம்ப சுகாதார மைய கட்டிடம்	10773.99 Sq.ft	10,000 சதுர அடி முதல் 15,000 சதுர அடி வரை	ரூ.3,00,000/-
3.	67	திரு.வி.க நகர் 14வது தெரு	கால்நடை மருத்துவமனை கட்டிடம்	1670.92 Sq.ft	1,000 சதுர அடி முதல் 2,500 சதுர அடி வரை	ரூ. 50,000/-
4.	68	ஜவஹர் நகர் 3வது வட்ட சாலை	கோட்ட அலுவலக கட்டிடம் (ம)துப்புரவு ஆய்வாளர் அலுவலக கட்டிடம்	2115.63 Sq.ft	1,000 சதுர அடி முதல் 2,500 சதுர அடி வரை	ரூ. 50,000/-
5.	68	ஜவஹர் நகர் 3வது வட்ட சாலை 2வது குறுக்கு தெரு	பகுதி-16 அலுவலக கட்டிடம் வரி வசூலிப்பவர் அலுவலக கட்டிடம் (ம) சுகாதார ஆய்வாளர் அலுவலக கட்டிடம்	2243.68 Sq.ft	1,000 சதுர அடி முதல் 2,500 சதுர அடி வரை	ரூ. 50,000/-
6.	70	வசந்தா கார்டன், மதுரை தெரு	பள்ளி வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி	36.80 Sq.ft	1,000 சதுர அடி வரை	ரூ. 25,000/-
7.	71	செய்யூர் பார்த்தசாரதி தெரு	சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம் (ம) சத்துணவு சுட கட்டிடம்	11477.05 Sq.ft	10,000 சதுர அடி முதல் 15,000 சதுர அடி வரை	ரூ.3,00,000/-

8.	71	வடிவேல் 2வது குறுக்கு தெரு	துப்புரவு/ சுகாதார ஆய்வாளர் அலுவலக கட்டிடம் (ம) வரி வசூலிப்பவர் அலுவலக கட்டிடம்	959.36 Sq.ft	1,000 சதுர அடி வரை	ரூ. 25,000/-
9.	71	கன்னிகாபுரம், மாதவரம் பிரதான சாலை	பொது கழிப்பிட கட்டிடம்	590.40 Sq.ft	1,000 சதுர அடி வரை	ரூ. 25,000/-
10.	71	பெரம்பூர் பிரதான சாலை (தெற்கு)	வணிக வளாகம்	3001.18 Sq.ft	2,500 சதுர அடி முதல் 5,000 சதுர அடி வரை	ரூ.1,00,000/-
11.	72	நரசிம்ம நகர் பிரதான சாலை	சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம்	9275.12 Sq.ft	7,500 சதுர அடி முதல் 10,000 சதுர அடி வரை	ரூ.2,00,000/-
12.	72	வாசுகி நகர்	பொது கழிப்பிட கட்டிடம்	925.36 Sq.ft	1,000 சதுர அடி வரை	ரூ. 25,000/-
13.	72	வ.உ.சி நகர்	கோட்ட அலுவலக கட்டிடம்	1802.30 Sq.ft	1,000 சதுர அடி முதல் 2,500 சதுர அடி வரை	ரூ. 50,000/-
14.	73	பொலு (N) தெரு	பழைய பகுதி அலுவலக கட்டிடம்	1854.16 Sq.ft	1,000 சதுர அடி முதல் 2,500 சதுர அடி வரை	ரூ. 50,000/-
15.	73	டாக்டர்.அம்பேத்கர் கல்லூரி சாலை, டிக்காஸ்டர் சாலை சந்திப்பு	பொது கழிப்பிட கட்டிடம்	516.16 Sq.ft	1,000 சதுர அடி வரை	ரூ. 25,000/-
16.	73	குக்ஸ் சாலை	சென்னை துவக்கப்பள்ளி கட்டிடம் (ம) கழிப்பிட கட்டிடம்	7201.56 Sq.ft	7,500 சதுர அடி முதல் 10,000 சதுர அடி வரை	ரூ.2,00,000/-
17.	73	ஸ்டிபன்சன் சாலை, டாக்டர்.அம்பேத்கர் கல்லூரி சாலை சந்திப்பு	பழைய துணை மின் நிலைய கட்டிடம்	1088.91 Sq.ft	1,000 சதுர அடி முதல் 2,500 சதுர அடி வரை	ரூ. 50,000/-
18.	75	எஸ். எஸ் புரம் 4வது தெரு	உடற்பயிற்சி கூட கட்டிடம்	968.40 Sq.ft	1,000 சதுர அடி வரை	ரூ. 25,000/-
19.	75	சுப்ரயான் 2வது தெரு	துப்புரவு (ம) அம்மா உணவகம்	2711.41 Sq.ft	2,500 சதுர அடி முதல் 5,000 சதுர அடி வரை	ரூ.1,00,000/-
20.	76	செல்லப்பா தெரு	சென்னை துவக்கப்பள்ளி கட்டிடம்	11620.80 Sq.ft	10,000 சதுர அடி முதல் 15,000 சதுர அடி வரை	ரூ.3,00,000/-

21.	76	பொன்னியம்மன் கோயில் தெரு (மாநகராட்சி லேன்)	மாநகராட்சியால் ஒதுக்கப்பட்ட கட்டிடம்-1	10760 Sq.ft	10,000 சதுர அடி முதல் 15,000 சதுர அடி வரை	ரூ.3,00,000/-
22.	76	பொன்னியம்மன் கோயில் தெரு (மாநகராட்சி லேன்)	மாநகராட்சியால் ஒதுக்கப்பட்ட கட்டிடம்-2	10760 Sq.ft	10,000 சதுர அடி முதல் 15,000 சதுர அடி வரை	ரூ.3,00,000/-
23.	76	ஸ்ட்ரான்ஸ் சாலை	சென்னை உயர்நிலைப்பள்ளி கட்டிடம்	27438 Sq.ft	20,000 சதுர அடி மேல்	ரூ.6,00,000/-
24.	76	வெங்கடகிரி தெரு	மாநகராட்சி கட்டிடம்	1936.80 Sq.ft	1,000 சதுர அடி முதல் 2,500 சதுர அடி வரை	ரூ. 50,000/-
25.	77	போகிபாளையம்	சமுதாய நலக்கூடம்	13772.80 Sq.ft	10,000 சதுர அடி முதல் 15,000 சதுர அடி வரை	ரூ.3,00,000/-
26.	77	கே.பி பூங்கா,	உடற்பயிற்சி கூட கட்டிடம்	968.40 Sq.ft	1,000 சதுர அடி வரை	ரூ. 25,000/-
27.	77	மகளிர் உதவி குழு கட்டிடம்	மகளிர் உதவி குழு கட்டிடம்	3574.47 Sq.ft	2,500 சதுர அடி முதல் 5,000 சதுர அடி வரை	ரூ.1,00,000/-
28.	77	சுந்தராபுரம் திடல்	பழைய உடற்பயிற்சி கூட கட்டிடம்	365.84 Sq.ft	1,000 சதுர அடி வரை	ரூ. 25,000/-
29.	77	பி.கே காலனி	உடற்பயிற்சி கூட கட்டிடம்	1291.20 Sq.ft	1,000 சதுர அடி முதல் 2,500 சதுர அடி வரை	ரூ. 50,000/-
30.	77	பி.கே காலனி	ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம்	1011.44 Sq.ft	1,000 சதுர அடி முதல் 2,500 சதுர அடி வரை	ரூ. 50,000/-
31.	78	குறவன் குளம்	சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம்	864.03 Sq.ft	1,000 சதுர அடி வரை	ரூ. 25,000/-
32.	78	குறவன் குளம்	அம்மா உணவக கட்டிடம்	3499.37 Sq.ft	2,500 சதுர அடி முதல் 5,000 சதுர அடி வரை	ரூ.1,00,000/-
33.	78	ஈரன் தெரு	சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம்	4556.21 Sq.ft	2,500 சதுர அடி முதல் 5,000 சதுர அடி வரை	ரூ.1,00,000/-

(ஓ) சேவையாளர்களின் ஒப்பந்தம் முடிந்ததும், சுயாதீன பொறியாளர் *(Independent Engineer)*, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாற்றப்பட வேண்டிய சொத்தை மதிப்பாய்வு செய்து, வணிக நடவடிக்கை தேதியில் செயல்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்ட சொத்து மற்றும் அதன் மீது

செய்யப்பட்ட மதிப்பு கூட்டலுடன் ஒப்பிட்டு ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

கழிப்பறைகள் பொது தனியர் மற்றும் கூட்டமைப்பு *PPP* திட்டத்தின் கீழ் *9* ஆண்டுகள் பணி கால அளவிற்காக சுயாதீன பொறியாளர்களை *(Independent Engineer) 3* ஆண்டுகள் *(36* மாதங்கள்*)* காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அழைக்க பரிந்துரைக்கப்படுகிறது, இது குழுவின் செயல்திறனைப் பொறுத்து நீட்டிக்கப்படலாம். ஆணையரின் உத்தரவுகளின் அடிப்படையில் நீட்டிப்பு வழங்கப்படலாம். நீட்டிப்பு வழங்கப்பட்டால், *WPI* மற்றும் *CPI* குறியீடுகளின் அடிப்படையில் பொருத்தமான கால நீட்டிப்பு அதிகரிப்பு வழங்கப்படலாம்.

ஏற்கனவே, சிப்பம்*-1 (*பெருநகர சென்னை மாநகராட்சியின் *5, 6 & 9 (*மெரினா*)* மண்டலங்களில் உள்ள இடங்களில் கழிப்பறைகளின் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, செயல்பாடு மற்றும் பரிமாற்றம் *(DBFOT)*க்கு சுயாதீன பொறியாளர்கள் நியமிக்கப்பட்டனர், மேலும் இத்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. மிக குறைந்த ஒப்பந்ததாரருக்கு *23.06.2023* அன்று பணியாணை *LoA* வழங்கப்பட்டது. தற்பொழுது பணிகள் நடைபெற்று வருகிறது.

சிப்பம் *1* ன் அனுபவத்தின் அடிப்படையில், முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை மேற்பார்வையிடவும் கண்காணிக்கவும் ஒரு மேற்பார்வையாளர் ஒரு நாளைக்கு அதிகபட்சமாக *15* இடங்களை இரண்டு முறை கண்காணிக்க முடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, சுயாதீன பொறியாளர் குழுவின் விவரம் கீழ் வருமாறு:

S. No.	Name of expert	No. of experts	Proposed Man-months
1	Team Leader	1	36
2	Deputy Team Leader	1	36
3	Manager – Contract Management / Quantity Survey / EHS	1	36
4	Zonal Managers	3	36
5	Supervisors	22	36
6	Administrative staff	4	36

2025 ஆம் ஆண்டிற்கான தற்போதைய *Independent Engineer*-க்கு சிப்பம் *- 1* ஒப்பந்தத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்ட விகிதங்கள், மேற்கோள் காட்டப்பட்டுள்ள ஒப்பந்ததாருக்கான திட்ட செலவை மதிப்பிடுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.
மதிப்பிடப்பட்ட ஆண்டு திட்ட செலவு கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது:

S. No.	Name of expert	Unit	Months	Rate Per Month per unit	Total Cost (in INR)
	Manpower				**2,05,44,000**

1	Team Leader	1	12	1,40,000	16,80,000
2	Deputy Team Leader	1	12	1,10,000	13,20,000
3	Manager – Contract Management / Quantity Survey / EHS	1	12	84,000	10,08,000
4	Zonal Managers	3	12	62,000	22,32,000
5	Supervisors	22	12	48,000	1,26,72,000
6	Administrative staff	4	12	34,000	16,32,000
	Overheads				**21,36,000**
1	Local Conveyance Cost for TL – Car	1	12	60,000	7,20,000
2	Local Conveyance for others – Two wheelers	30	12	3,000	11,16,000
3	Printing Cost	LS	12	3,500	42,000
4	Communication expenses	LS	12	11,000	1,32,000
5	Office expenses	LS	12	10,500	1,26,000
	Estimated 1st Year Cost				2,26,80,000
	Estimated 2nd Year Cost including escalation @ 6%				2,40,40,800
	Estimated 3rd Year Cost including escalation @6%				2,54,83,248
	Total Assignment Cost for 3 years duration				7,22,04,048
	GST (@ 18%)				1,29,96,729
	Total Cost				**Rs. 8,52,00,777**
	GCC's share (50%)				**Rs. 4,26,00,388**

சேவையாளர்களின் ஒப்பந்தத்தின் பிரிவு *21* மற்றும் அட்டவணை *M* இன் நிபந்தனைகளின்படி, சுயாதீன பொறியாளரின் *(Independent Engineer)* செலவில் பாதியை சேவையாளரும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியும் ஏற்க வேண்டும்.

எனவே,

1. *Hybrid Annuity Model*-ன் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் உள்ள மண்டலங்கள் *XI*, *XII*, *XIII*, *XIV* மற்றும் *XV* (சிப்பம் *-4) 322* பொது கழிப்பறைகளின் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் *(DBFOT)"* திட்டத்திற்கு *3* ஆண்டுகளுக்கு சுயாதீன பொறியாளரை நியமிப்பதற்கான திட்டத் தொகை ரூ.*8,52,00,777/*க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. திட்டச் செலவினை பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சேவையாளர்களுக்கு இடையே பிரித்து *50%* செலவினை பெருநகர சென்னை மாநகராட்சி ஏற்க வேண்டும் மீதம் *50%* சேவையாளர் ஏற்கவும்,
3. எதிர்பார்க்கின்ற செலவீன தொகை ரூ.*4,26,00,388/-*யை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து சிறப்பு திட்டங்கள் செயல்பாட்டுக் கணக்கு குறியீடு *20-26-00*, கணக்குத் தலைப்பு *220-52-05-00* கலந்தாலோசகர் கட்டணங்களின் கீழ் செலுத்தப்படும்,

4. ஒப்ப ஆவணத்திற்கான *(RfP)* அனுமதியும், திறந்த மின் ஒப்பம் *(e-Tender)* கோரவும்,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 23.04.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.04.2025 அன்று தீர்மான எண்.340/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரி விதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 25.04.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.04.2025 அன்று தீர்மான எண்.238/2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/918/2025

ஆணையர் அவர்களின் 06.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 562/2025 **பொருள் எண்.234**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-13, கோட்டம்-169, மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களுக்கு சென்னை நந்தனத்தில் உள்ள அரசு கலைக்கல்லூரியில் திருவுருவச் சிலை அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்றினை வழங்க மன்றத்தின் அனுமதி.

செய்தி - மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை இயக்குநரின் நேர்முக கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் *03.04.2025* அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவை விதி எண்.*110*-ன்கீழ் *"*மாமேதை மார்க்ஸ் அவர்களது உருவச் சிலை தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரில் அமைக்கப்படும்*"* என்ற அறிவிப்பினை அறிவித்துள்ளார் எனவும்,

மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டு, சென்னையில் காரல் மார்க்ஸ் அவர்களது திருவுருவச் சிலை அமைத்திட ஏதுவாக, சென்னை நந்தனத்தில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் உரிய இடத்தினைத் தேர்வு செய்து, அவ்விடத்திற்கான புலத்தணிக்கை அறிக்கை பெற்று விரிவான அறிக்கையை உடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும், தேர்வு செய்யப்பட்ட இடமானது உச்சநீதிமன்றத்தின் வழக்கு எண்.*SLP (C) 8519/2006*-ல் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு உட்பட்டு அமைந்துள்ளதா என்ற விவரத்தினை தெரிவிக்குமாறும், தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் சிலையினை அமைத்திட தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பின் அனுமதியினையும், காவல் துறையின் இசைவினையும் பெற்று விரிவான அறிக்கை அனுப்பி வைக்குமாறும், மேலும், மேற்கண்ட அறிவிப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு என்பதால் இதன்மீது தனிக்கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு அதற்கான அறிக்கையை உடன் அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது என்றும்,

எனவே, சென்னை நந்தனத்தில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களது திருவுருவச் சிலை நிறுவுதல் தொடர்பாக அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்கும் நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மன்றத்தீர்மானம் மற்றும் இசைவினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.*183*, வருவாய்த்துறை *(LD 4(1))*, நாள்.*23.05.2017*-ன் வழிமுறைகளைப் பின்பற்றி, மண்டலம்-*13*, கோட்டம்-*169*, சென்னை நந்தனத்தில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களது திருவுருவச் சிலை நிறுவுவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்றினை வழங்க, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 25.04.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.04.2025 அன்று தீர்மான எண்.240/2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ7/ப-18/ந.க.எண்.4658/2025

ஆணையர் அவர்களின் 06.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 563/2025 **பொருள் எண்.235**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம் -7, கோட்டம் 83-கொரட்டூர் பகுதியில் NRS சாலையில் அமைந்துள்ள ஆதிகேசவலு கோவிலுக்கு சொந்தமாக உள்ள நிலத்தில் புதிய கோசாலை அமைக்கும் பணிக்கு தடையில்லா சான்று உள்நுழைவு அனுமதி (Enter Upon Permission) பெறுவதற்கும், மாத நியாய வாடகை ரூ. 1,42,032/- செலுத்துவற்கும் மற்றும் 5 வருட குத்தகை காலம் பெறுவதற்கும், மன்றத்தின் அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பொது இடங்களில் சுற்றித்திரியும் மாடுகளை பாதுகாத்து பராமரிக்கும் பணி மேற்கொள்ள ஒரே இடத்தில் தேவையான கட்டமைப்பு ஏற்படுத்தி புதியதாக கோசாலை அமைக்கும் வளர்ச்சி திட்டப்பணி பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளவிருக்கும் கோசாலை கட்டமைப்பு பணிக்காக சென்னை அம்பத்தூர் *N.R.S.* சாலையில் ஆதிகேசவலு கோவிலுக்கு சொந்தமாக உள்ள *7920* சதுர மீட்டர் கொண்ட இடத்தில் *2000* சதுர மீட்டர் நிலத்தில் மண்டலம்-*7*க்காக கோசாலை அமைக்க தடையில்லா சான்று, உள்நுழைவு அனுமதி வழங்குமாறு இந்து சமய அறநிலைத்துறையிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

சென்னை அம்பத்தூர் *N.R.S.* சாலையில் ஆதிகேசவலு கோவிலுக்கு சொந்தமாக உள்ள *7920* சதுர மீட்டர் கொண்ட இடத்தில் *2000* சதுர மீட்டர் நிலத்தில் மண்டலம்-*7*க்காக கோசாலை அமைக்க *2000* சதுர அடிக்கு தோராயமாக சந்தை மதிப்பின் அடிப்படையில் **மாதம் *1* - க்கு ரூ.*1,42,032* /-என திருக்கோவில் அலுவலரால் வாடகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது**. எனவே, மேற்படி திருக்கோயில் இடத்திற்கு செயல் அலுவலரால் கணக்கீடு செய்யப்பட்ட தோராய வாடகையினை ஏற்று கீழ்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு *5* ஆண்டுகளுக்கு குத்தகைக்கு பெற சம்மத கடிதம் அளிக்குமாறு இந்து சமய அறநிலைத்துறையிடம் கோரப்பட்டது.

நிபந்தனைகள்

1. குத்தகைக்காலம் *5* ஆண்டுகள் மட்டுமே.
2. குத்தகைக்காலத்தில் நியாய வாடகை நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட மாத வாடகையினை பிரதி மாதம் *5*ம் தேதிக்குள் திருக்கோயிலுக்கு செலுத்தப்பட வேண்டும்.
3. நிர்ணயிக்கப்பட்ட வாடகை மூன்றாண்டுகளுக்கு மட்டுமே உரியது.
4. மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் சட்டப் பிரிவு *34(A)*ன்படி வாடகை மறு நிர்ணயம் செய்யப்படும்.
5. திருக்கோயில் நிலத்தினை அடமானம் *(Mortgage)* அல்லது உள்குத்தகை *(Sub-Lease)* மற்றும் எவ்வித பாராதீனமும் செய்யக்கூடாது.

6. மேற்கண்ட நிலத்தில் கட்டுமானங்கள் செய்யப்படும்போது திருக்கோயில் மூலம் உரிய அலுவலருக்கு விண்ணப்பித்து அனுமதி பெறப்பட வேண்டும்.

7. கட்டுமானங்கள் தொடர்பான சென்னை பெருநகர குழுமம், சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் முறையான வரைபட அங்கீகாரம் கேட்புத்துறையே சொந்த செலவில் திருக்கோயில் பெயரில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

8. கட்டடங்களில் ஏற்படும் பாதிப்புகள், விபத்துகள், இயற்கைச் சீற்றங்களின் விளைவுகள் ஆகியவற்றிற்கு கேட்புத்துறையே பொறுப்பாகும்.

9. நிலம் எந்நோக்கத்திற்கு கேட்கப்படுகிறதோ அதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

10. குத்தகைக் காலம் முடிவுற்றவுடன் உடனடியாக திருக்கோயில் நிலத்தினை அவற்றில் உள்ள கட்டுமானங்களுடன், ஆக்கிரமிப்புகள் எதும் இருப்பின், அவற்றினை அகற்றி திருக்கோயிலின் வசம் கேட்புத்துறை திரும்ப ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு ஒப்படைக்க தவறின் நிலத்தை ஒப்படைக்கும் காலம் வரை அப்போதைய நில மதிப்பில் சந்தை மதிப்பு அல்லது வழிகாட்டி மதிப்பு இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் இழப்பீட்டுத் தொகையை கேட்புத்துறை திருக்கோயிலுக்கு செலுத்த வேண்டும்.

11. திருக்கோயில் நலன் கருதி திருக்கோயில் நிர்வாகம் விதிக்கும் இதர நிபந்தனைகளுக்கு கட்டுப்பட வேண்டும்.

12. குத்தகை ஒப்பந்தம் இந்து சமய அறநிலையத்துறையால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் சட்டவிதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

13. குத்தகை நீட்டிப்பு திருக்கோயில் நிர்வாகத்தின் விருப்பத்திற்கும், ஒப்புதலுக்கும் மற்றும் சட்டப்பிரிவு 34க்கும் உட்பட்டதாகும்.

14. குத்தகை நீட்டிப்பு தேவையெனில் 4 ஆண்டுகள் முடிந்தவுடன் கேட்புத்துறை முறையாக விண்ணப்பிக்க வேண்டும் மேற்கண்ட விண்ணப்பத்தின் மீது சட்டப் பிரிவு 34ன் கீழ் காணும் வழிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொண்டு குத்தகையை நீட்டிப்பது குறித்து முடிவு செய்யப்படும்

15. ,திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தினை எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அதற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். வேறு காரணத்திற்காக பயன்படுத்தினாலோ அல்லது உள்வாடகைக்கு விட்டாலோ குத்தகை செலுத்தாமல் இருந்தாலோ, அல்லது குத்தகை நிபந்தனைகளுக்கு மாறாக செயல்பட்டாலோ ஒப்பந்தத்தை மீறியதாக கருதி குத்தகை உரிமத்தை இரத்து செய்து நிலத்தினை திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்படும்

16. மேற்கண்ட நிலத்தில் கட்டப்படக் கூடிய கட்டிடத்திற்குரிய மின் கட்டணம், குடிநீர் கட்டணம் மற்றும் வரி ஆகியவற்றை கேட்புத்துறையே செலுத்த வேண்டும்.

17. மேற்காணும் நிபந்தனைகளை உள்ளடக்கி கேட்புத்துறை தனது சொந்த செலவில் குத்தகை ஒப்பந்த பத்திரம் எழுதி பதிவு செய்து தர வேண்டும்.

18. குத்தகை ஒப்பந்த பத்திரம் பதிவு செய்த நாள் அல்லது கேட்புத்துறை மேற்படி இடத்தில் நுழைவு செய்திட அனுமதி வழங்கிய நாள். இதில் எது முன்னதோ அந்த நாளிலிருந்து குத்தகை காலம் நடைமுறைக்கு வரும்.

எனவே, மண்டலம் -7, பகுதி -18, கோட்டம் 83, கொரட்டூர் பகுதியில் NRS சாலையில் ஆதிகேசவலு கோவிலுக்கு சொந்தமாக சென்னை மாவட்டம், அம்பத்தூர் வட்டம், கொரட்டூர் நகரம், பிளாக் எண். 35, நகர புல எண். 23ல் உள்ள 7920 சதுர மீட்டர் கொண்ட இடத்தில் 2000 சதுர மீட்டர் நிலத்தில் மண்டலம் -7க்காக கோசாலை அமைக்க 2000 சதுர அடி இந்து சமய அறநிலையத்துறை நிலத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக புதிய கோசாலை அமைக்கும் பணிக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 25.04.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.04.2025 அன்று தீர்மான எண்.239/2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.6.ந.க.எண்.இ2/10757/2025

ஆணையர் அவர்களின் 29.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 564/2025 **பொருள் எண்.236**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 6, வார்டு -71ல் உள்ள முரசொலி மாறன் பூங்கா (வடக்கு) பகுதியில் தமிழக அரசு மூலம் கலைஞர் நூற்றாண்டு நினைவு தூண் அமைக்க உரிய நிலம் ஒதுக்கி முன் நுழைவு அனுமதி வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, வார்டு-71ல் உள்ள முரசொலி மாறன் பூங்கா வடக்கு பகுதியில் தமிழக அரசு மூலம் கலைஞர் நூற்றாண்டு நினைவு தூண் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி 10100 ச.மீ. பரப்பளவு கொண்ட முரசொலி மாறன் பூங்காவில் காலியாக உள்ள இடத்தில் தமிழக அரசு மூலம் வரைபடத்தில் உள்ளவாறு அமைக்கப்படவுள்ள கலைஞர் நூற்றாண்டு நினைவு தூண் அமைக்க அதற்கான தகுதிவாய்ந்த ஸ்தபதி மூலம் பெறப்பட்ட அளவான 3800 ச.அடி. வழங்கி அவ்விடத்தில் தூண் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட மாநகராட்சிக்கு சொந்தமான 3800 ச.அடி. கொண்ட இடத்தில் தமிழக அரசு மூலம் கலைஞர் நூற்றாண்டு நினைவு தூண் அமைக்க உரிய தடையின்மை அளித்து முன் நுழைவு அனுமதி வழங்கலாம்.

எனவே,

1. வார்டு-71ல் உள்ள முரசொலி மாறன் பூங்காவில் தமிழக அரசு மூலம் கலைஞர் நூற்றாண்டு நினைவு தூண் அமைக்க முன் நுழைவு அனுமதி வழங்கவும்,
2. மேற்கண்ட பூங்காவில் காலியாக உள்ள 3800.ச.அடி இடத்தில் தமிழக அரசு பணி செய்ய ஏதுவாக வழங்கி பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கவும்,
3. தமிழக அரசு தூண் அமைக்கப்படவுள்ள இடத்தின் உரிமை பெருநகர சென்னை மாநகராட்சி பெயரிலும், அத்தூணை நிறுவுதல் மற்றும் பராமரிப்பு பணிகளை அரசின் மூலம் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 17.04.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.04.2025 அன்று தீர்மான எண்.46/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.6.ந.க.எண்.இ3/10756/2025

ஆணையர் அவர்களின் 29.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 565/2025 **பொருள் எண்.237**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்- 6, வார்டு-69, ஜிகேஎம் காலனி 12வது தெருவில் அமைந்துள்ள தொடக்கப்பள்ளி கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் NGO மூலம் முதல்வர் கல்விச்சோலை அமைக்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, வார்டு-69, ஜி.கே.எம்.காலனி 12வது தெருவில் அமைந்துள்ள தொடக்கப்பள்ளி கட்டிடத்தில் காலியாக உள்ள இரண்டாவது தளத்தில் அப்பகுதி வாழ் மாணவர்களின் அறிவுறுத்திறனை மேம்படுத்தும் விதமாக தன்னார்வலர்கள் கொண்டு முதல்வர் கல்விச்சோலை அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி மேற்கண்ட தொடக்கப்பள்ளியில் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் உள்ள 10 வகுப்பறைகள் நீங்கலாக இரண்டாவது தளத்தில் அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்கள் (10ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை) பயன்பெறும் விதமாக டிஜிட்டல் பலகை மற்றும் நவீன மேஜை மற்றும் நாற்காலிகள் கொண்டு NGOக்கள் மூலம் அமைத்து அவர்கள் மூலமாக திறமை மிகுந்த ஆசிரியர்கள் கொண்டு 10, 11 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு கட்டணமில்லா திறன் பயிற்சி வகுப்புகள் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மாணவ, மாணவியர்கள் இளைப்பாறும் வகையில் இருக்கைகள் மற்றும் திறன் பயிற்சி மேற்கொள்ள ஏதுவாக ஏற்கனவே உள்ள கட்டிடத்தில் 20அடிX40அடி என்ற அளவிலும் மற்றும் 20அடிX20அடி என்ற அளவில் குளிர்சாதன வசதியுடன் கூடிய வகுப்பறைகளின் உள்கட்டமைப்பு அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டமைப்புகள் நிறுவி மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்த விருப்பமுள்ள NGOக்களுக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும். மேற்கண்ட NGOக்கள் மாணவர்களிடம் எவ்வித கட்டணமும் வசூலிக்க கூடாது எனவும், அனைத்து உள்கட்டமைப்பு மற்றும் கட்டிடங்கள் மாநகராட்சி பெயரிலேயே இருக்கும் என்றும் மற்றும் மாநகராட்சியில் எடுக்கப்படும் அனைத்து நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.

எனவே,

1. மண்டலம்-6, வார்டு-69, ஜி.கே.எம்.காலனி 12வது தெருவில் அமைந்துள்ள தொடக்கப்பள்ளி கட்டிடத்தில் காலியாக உள்ள இரண்டாவது தளத்தில் NGOக்கள் மூலம் உரிய தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் கொண்டு முதல்வர் கல்வி சோலை நடத்த அனுமதியும்,
2. முதல்வர் கல்வி சோலையினை ஏற்று நடத்த முன்வரும் NGOக்களுடன் உரிய புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு வகுப்புகள் நடத்த அனுமதியும்,

3. மாணவர்களுக்கான உள்கட்டமைப்பு, குளிர்சாதன வகுப்பறைகள் மற்றும் மேஜை நாற்காலிகள் ஆகியவை *NGO*க்கள் மூலம் கொள்முதல் செய்து அமைக்க அனுமதியும்,

4. மேற்படி முதல்வர் கல்விச்சோலை அமைக்க மாநகராட்சி மூலம் ஏற்பாடு செய்ய ஆகும் செலவினத்தொகையினை உரிய மதிப்பீடு தயாரித்து ஒப்புதல் பெற்று அமைக்கவும்,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 17.04.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.04.2025 அன்று தீர்மான எண்.47/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

பா.து.ந.க.எண்.பி3 / 0144 / 2025

ஆணையர் அவர்களின் 18.03.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 566 / 2025 **பொருள் எண்.238**

பெருநகர சென்னை மாநகராட்சி - பாலங்கள் துறை - மண்டலம்-8, வார்டு-105 (ம) 106ல் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தை இடித்துவிட்டு i) திருக்குமரபுரம் ii) கோ.சி.மணி சாலை மற்றும் iii) காமராஜர் நகர் 3வது தெருவில் புதிதாக கட்டும் பணிக்கு குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணி ஆணை வழங்கஅனுமதி.

1.	பணியின் பெயர் மற்றும் பணியின் இடம்	மண்டலம்-8, வார்டு-105 (ம) 106ல் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தை இடித்துவிட்டு i) திருக்குமரபுரம் ii) கோ.சி.மணி சாலை மற்றும் iii) காமராஜர் நகர் 3வது தெருவில் புதிதாக கட்டும் பணி.
2.	மதிப்பீட்டின் ஒப்புதல் பெற்ற விவரம்	மன்ற தீர்மான எண்கள். 587,588 மற்றும் 599/2024 நாள்.30.12.2024
3.	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	பாலங்கள் துறை
4.	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2024-25 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5.	மதிப்பீட்டின் தொகை	ரூ. 9,07,61,000.00
	(அ)பணி செலவினம் மட்டும்	ரூ. 5,60,24,990.29
	(ஆ) பொருட்கள் மற்றும் சேவை வரி - 18%	ரூ. 1,00,84,498.25
	(இ) தளவாடங்களை மாற்றியமைத்தல் (TANGEDCO, CMWSSB, TANTRANSCO)	ரூ. 1,50,00,000.00
	(ஈ) விலையேற்ற கட்டணம்1.25 வருடத்திற்கு @6.25% (பொருட்கள் மற்றும் சேவை வரி - 18% உட்பட)	ரூ. 41,31,843.03
	(உ)நிலம் கையகப்படுத்துதல் (ம) மீள்குடியேற்றம் (ம) மறுவாழ்வு செலவினம்	ரூ. 30,00,000.00
	(ஊ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி – 1%	ரூ. 5,60,249.90
	(எ) தரக்கட்டுப்பாடு – 1%	ரூ. 5,60,249.90
	(ஏ) எதிர்பாரா செலவினம் – 2.5%	ரூ. 13,99,168.63
	மொத்தம்	ரூ.9,07,61,000.00

6.	எந்தெந்த பத்திரிக்கைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1) தினமலர், நாள்.16.02.2025 2) தி டைம்ஸ் ஆப் இந்தியா, நாள். 16.02.2025
7.	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்.	13.03.2025
8.	நிதியின் தன்மை	மூலதன நிதி (Capital fund)
9.	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	ஒரு ஒப்பம் (e-Tender) இணையதளத்தின் மூலம் பெறப்பட்டது.

ஒப்ப நாளான 14.03.2025 அன்று ஒரு ஒப்பம் e-Tender மூலமாக பெறப்பட்டது. தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரரின் நிதி ஒப்பம் 17.03.2025 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் பின்வருமாறு :-

வ. எண்	தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் (திருவாளர்கள்)	பணியின் அலுவலக மதிப்பு (GST@18% உட்பட) (ரூ) 2024-2025	விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு 2024-2025	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (GST@18% உட்பட) (ரூ)
1.	திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட்	ரூ.6,61,09,488.54/-	(+)9.87%	ரூ. 7,26,37,290/-

ஒப்பத் தொகையை குறைக்குமாறு e-tender மூலம் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் 17.03.2025 அன்று கோரப்பட்டது. அதன்படி BOQ e-tender வாயிலாக திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் 17.03.2025 அன்று ஒப்பத் தொகையினை ரூ.7,26,37,290/- ((+)9.87%)-லிருந்து ரூ.7,07,23,930.84/- ((+)6.98%)-க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்.

எனவே, ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை மற்றும் ஒப்ப சதவீதம் பின்வருமாறு.

பணியின் அலுவலக மதிப்பு (ரூ) SOR 2024-25 (GST@18% உட்பட)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@18% உட்பட) (2024-2025)	முதல் மற்றும் இறுதி விலைக்குறைப்பிற்குப் பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@18% உட்பட) (2024-2025)
ரூ.6,61,09,488.54/-	ரூ. 7,26,37,290/-	ரூ.7,07,23,930.84/-
	(+)9.87%	(+)6.98%

இப்பணியினை கீழ்க்கண்ட காரணங்களை கருத்தில் கொண்டு, திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பத் தொகையான ரூ.7,07,23,930.84/- ((+)6.98%)ஐ ஏற்கலாம் எனக் கருதப்படுகிறது.

1. *Ministry of Road Transport & Highways (MORT&H)*-ன் விவரக்குறிப்புகளின் *(Specifications)*-படி பணி மேற்கொள்ள வேண்டியிருப்பதால் *25% Over Head Charges*, ஒப்பந்ததாரரின் லாபம் *(Contract Profit) 10%*மும் விகித அட்டவணையில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.
2. பணி மேற்கொள்ள தேவையான பணியிட அலுவலகம், தொழிலாளர் தங்குமிடம், கட்டுமான பொருட்கள் சேமிப்பு கிடங்கு, தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களின் சம்பளம் ஆகியவற்றிற்கான செலவீனம்,
3. தொழிலாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்குவதற்காக கூடுதல் செலவீனம்,

ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதமான *(+)6.98% (SOR2024-25)*ன்படி ஒப்பத்தொகையான ரூ.*7,07,23,930.84/- (18% GST* உட்பட*)*, ஏற்று இப்பணியினை திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்க ஒப்ப பரிசீலனைக் குழு *(Tender Scrutiny Committee)*வின் பரிந்துரை *17.03.2025* அன்று பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணியினை திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்ப சதவீதமான *(+)6.98%*ன்படி ஒப்பத்தொகையான ரூ.*7,07,23,930.84/- ஐ (18% GST* உட்பட*)* ஏற்று, திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணி ஆணை வழங்க நிலைக்குழு *(*பணிகள்*)* மற்றும் நிலைக்குழு *(*வரி விதிப்பு மற்றும் நிதி*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*பணிகள்*)* கூட்டத்தின் தீர்மான எண்.328 /2025, நாள். 23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு *(*பணிகள்*)* பரிந்துரை செய்து நிலைக்குழு*(*வரிவிதிப்பு(ம)நிதி*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> "25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*வ.வி.ம.நி.*)* கூட்டத்தில் தீர்மான எண். 227/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு *(*வ.வி.ம.நி.*)* பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

பா.து.ந.க.எண்.பி3 / 1044 / 2025

ஆணையர் அவர்களின் 23.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 567 / 2025 **பொருள் எண்.239**

பெருநகர சென்னை மாநகராட்சி - பாலங்கள் துறை - மண்டலம்-15, வார்டு-192 (ம) 193ல், பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே ஈ.சி.ஆர் (ம) ஓ.எம்.ஆர்-யை இணைக்கும் பாண்டியன் தெரு - அண்ணா நகர், துரைப்பாக்கம் பகுதியில் ஏற்கனவே உள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணி - மூலதன (Capital fund) நிதியின் கீழ் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணி ஆணை வழங்க அனுமதி.

*2024-2025*ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் ரூ.*6.99* கோடி மதிப்பீட்டில் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே ஈ.சி.ஆர் (ம) ஓ.எம்.ஆர்-யை இணைக்கும் பாண்டியன் தெரு - அண்ணா நகர், துரைப்பாக்கம் பகுதியில் ஏற்கனவே உள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்கள். அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்குறிப்பிட்டுள்ள பகுதியில் பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு மன்றத்தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

1.	பணியின் பெயர் மற்றும் பணியின் இடம்	:	மண்டலம்-*15*, வார்டு-*192* (ம) *193*ல், பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே ஈ.சி.ஆர் (ம) ஓ.எம்.ஆர்-யை இணைக்கும் பாண்டியன் தெரு - அண்ணா நகர், துரைப்பாக்கம் பகுதியில் ஏற்கனவே உள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணி.
2.	மதிப்பீட்டின் ஒப்புதல் பெற்ற விவரம்	:	மன்ற தீர்மான எண் *592/2024* நாள்.*30.12.2024*
3.	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	:	பாலங்கள் துறை
4.	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	:	*2024-25* ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5.	மதிப்பீட்டின் தொகை		ரூ.*6,98,50,000.00*
	(அ)பணி செலவினம் மட்டும்	:	ரூ. *4,74,75,000.00*
	(ஆ)பொருட்கள் மற்றும் சேவை வரி - *18%*	:	ரூ. *85,45,500.00*

	(இ) மீள்குடியேற்றம் (ம) மறுவாழ்வு செலவினம்	:	ரூ. 40,00,000.00
	(ஈ)கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி		ரூ. 5,00,000.00
	(உ)தளவாடங்களை மாற்றியமைத்தல் (TANGEDCO, CMWSSB &TANTRANSCO)	:	ரூ. 15,00,000.00
	(ஊ) மின்விளக்குகள்	:	ரூ. 15,00,000.00
	(எ) தரக்கட்டுப்பாடு – 1%	:	ரூ. 4,74,750.00
	(ஏ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி – 1%	:	ரூ. 4,74,750.00
	(ஐ) விலையேற்ற கட்டணம்1 ½ வருடத்திற்கு @7.5%	:	ரூ. 35,60,625.00
	(ஒ) விலையேற்ற கட்டணத்திற்கான பொருட்கள் மற்றும் சேவை வரி - 18%	:	ரூ. 6,40,913.00
	(ஓ) எதிர்பாரா செலவினம் – 2.5%	:	ரூ. 11,78,462.00
	மொத்தம்	:	ரூ. 6,98,50,000.00
6.	எந்தெந்த பத்திரிக்கைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	:	தினமணி, நாள்.28.03.2025 டெக்கன் க்ரானிக்கல், நாள். 28.03.2025
7.	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்.	:	16.04.2025
8.	நிதியின் தன்மை	:	மூலதன நிதி (Capital fund)
9.	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	:	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	:	ஒரு ஒப்பம் (e-Tender) இணையதளத்தின் மூலம் பெறப்பட்டது.

ஒப்ப நாளான 17.04.2025 அன்று ஒரு ஒப்பம் e-Tender மூலமாக பெறப்பட்டது. தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்றதால் அவ்வொப்பந்ததாரரின் நிதி ஒப்பம் 19.04.2025 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் பின்வருமாறு :-

வ. எண்	தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் (திருவாளர்கள்)	பணியின் அலுவலக மதிப்பு (GST@18% உட்பட) (ரூ) 2024-2025	விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு 2024-2025	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (GST@18% உட்பட) (ரூ)
1.	தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட்	ரூ.5,60,20,500/-	(+)14.39	ரூ.6,40,81,849.95/-

ஒப்பத் தொகையை குறைக்குமாறு e-tender மூலம் திருவாளர்கள், தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் கோரப்பட்டது, அதன்படி BOQ e-tender வாயிலாக திருவாளர்கள், தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் ஒப்பத் தொகையினை ரூ.6,40,81,849.95/- ((+)14.39%)-லிருந்து ரூ.6,38,57,767.95/- ((+)13.99%)க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்,

ஒப்பத் தொகையை மேலும் குறைக்குமாறு e-tender மூலம் திருவாளர்கள், தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் கோரப்பட்டது, அதன்படி BOQ e-tender வாயிலாக திருவாளர்கள், தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் ஒப்பத் தொகையினை ரூ.6,38,57,767.95/- ((+)13.99%)லிருந்து ரூ.6,35,77,665.45/- ((+)13.49%)க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்,

மீண்டும் ஒப்பத் தொகையை மேலும் குறைக்குமாறு e-tender மூலம் திருவாளர்கள், தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் கோரப்பட்டது, அதன்படி BOQ e-tender வாயிலாக திருவாளர்கள், தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் ஒப்பத் தொகையினை ரூ.6,35,77,665.45/- ((+)13.49%)லிருந்து ரூ.6,16,16,947.95/- ((+)9.99%)க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்,

அதன் விவரம் பின்வருமாறு:-

பணியின் அலுவலக மதிப்பு (ரூ) SOR 2024-25 (GST@18% உட்பட)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@18% உட்பட) (2024-2025)	முதல் விலைக்குறைப்பிற்குப் பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@18% உட்பட) (2024-2025)	இரண்டாவது விலைக்குறைப்பிற்குப் பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@18% உட்பட) (2024-2025)	மூன்றாவது மற்றும் இறுதி விலைக்குறைப்பிற்குப் பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@18% உட்பட) (2024-2025)
ரூ.5,60,20,500/-	ரூ.6,40,81,849.95	ரூ.6,38,57,767.95	ரூ.6,35,77,665.45	ரூ.6,16,16,947.95
	14.39 %	13.99 %	13.49 %	9.99 %

இப்பணியினை கீழ்க்கண்ட காரணங்களை கருத்தில் கொண்டு, திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பத் தொகையான ரூ.6,16,16,947.95 ((+)9.99%)ஐ ஏற்கலாம் எனக் கருதப்படுகிறது.

Ministry of Road Transport & Highways (MORT&H)-ன் விவரக்குறிப்புகளின் *(Specifications)*-படி பணி மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், பணி மேற்கொள்ள தேவையான பணியிட அலுவலகம், தொழிலாளர் தங்குமிடம், கட்டுமான பொருட்கள் சேமிப்பு கிடங்கு, தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களின் சம்பளம் ஆகியவற்றிற்கான செலவீனம், தொழிலாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்குவதற்காக கூடுதல் செலவீனம், கட்டுமான பொருட்களின் விலையேற்றம், ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதமான *(+)9.99% (SOR 2024-25)*ன்படி ஒப்பத்தொகையான ரூ.*6,16,16,947.95 (18% GST* உட்பட*)*, ஏற்று இப்பணியினை திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்க ஒப்ப பரிசீலனைக் குழு *(Tender Scrutiny Committee)*வின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணியினை திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்ப சதவீதமான *(+)9.99%*ன்படி ஒப்பத்தொகையான ரூ.*6,16,16,947.95*ஐ *(18% GST* உட்பட*)* ஏற்று, திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட அவர்களுக்கு பணி ஆணை வழங்க நிலைக்குழு *(பணிகள்)* மற்றும் நிலைக்குழு *(வரி விதிப்பு மற்றும் நிதி)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு *(பணிகள்)* கூட்டத்தின் தீர்மான எண்.329/2025, நாள். 23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு *(பணிகள்)* பரிந்துரை செய்து நிலைக்குழு*(வரிவிதிப்பு(ம)நிதி)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு *(வ.வி.ம.நி.)* கூட்டத்தில் தீர்மான எண். 228/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு *(வ.வி.ம.நி.)* பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

பா.து.நு.க.எண்.பி3 / 1043 / 2024

ஆணையர் அவர்களின் 23.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 568 / 2025 **பொருள் எண்.240**

பெருநகர சென்னை மாநகராட்சி - பாலங்கள் துறை - மண்டலம்-14, வார்டு-182 (ம) 183ல், பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே ஈ.சி.ஆர் (ம) ஓ.எம்.ஆர்-யை இணைக்கும் காமராஜர் சாலை - வீரமணி சாலை, பாலவாக்கம் பகுதியில் ஏற்கனவே உள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணி - மூலதன (Capital fund) நிதியின் கீழ் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ரா ஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணி வழங்க அனுமதி.

*2024-2025*ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் ரூ.*7.00* கோடி மதிப்பீட்டில் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே ஈ.சி.ஆர் (ம) ஓ.எம்.ஆர்-யை இணைக்கும் காமராஜர் சாலை – வீரமணி சாலை, பாலவாக்கம் பகுதியில் ஏற்கனவே உள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்கள். அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்குறிப்பிட்டுள்ள பகுதியில் பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு மன்றத்தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

1.	பணியின் பெயர் மற்றும் பணியின் இடம்	:	மண்டலம்-*14*, வார்டு-*182* (ம) *183*ல், பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே ஈ.சி.ஆர் (ம) ஓ.எம்.ஆர்-யை இணைக்கும் காமராஜர் சாலை – வீரமணி சாலை, பாலவாக்கம் பகுதியில் ஏற்கனவே உள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணி.
2.	மதிப்பீட்டின் ஒப்புதல் பெற்ற விவரம்	:	மன்ற தீர்மான எண் *591/2024* நாள்.*30.12.2024*
3.	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	:	பாலங்கள் துறை
4.	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	:	*2024-25* ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5.	மதிப்பீட்டின் தொகை		ரூ.*7,00,40,000.00*
	(அ)பணி செலவினம் மட்டும்	:	ரூ. *4,76,16,000.00*
	(ஆ)பொருட்கள் மற்றும் சேவை வரி - *18%*	:	ரூ. *85,70,880.00*

	(இ) மீள்குடியேற்றம் (ம) மறுவாழ்வு செலவினம்	:	ரூ. 40,00,000.00
	(ஈ)கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி		ரூ. 5,00,000.00
	(உ)தளவாடங்களை மாற்றியமைத்தல் (TANGEDCO, CMWSSB &TANTRANSCO)	:	ரூ. 15,00,000.00
	(ஊ) மின்விளக்குகள்	:	ரூ. 15,00,000.00
	(எ) தரக்கட்டுப்பாடு – 1%	:	ரூ. 4,76,160.00
	(ஏ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி – 1%	:	ரூ. 4,76,160.00
	(ஐ) விலையேற்ற கட்டணம்1 ½ வருடத்திற்கு @7.5%	:	ரூ. 35,71,200.00
	(ஒ) விலையேற்ற கட்டணத்திற்கான பொருட்கள் மற்றும் சேவை வரி - 18%	:	ரூ. 6,42,816.00
	(ஓ) எதிர்பாரா செலவினம் – 2.5%	:	ரூ. 11,86,784.00
	மொத்தம்	:	ரூ. 7,00,40,000.00
6.	எந்தெந்த பத்திரிக்கைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	:	தினமணி, நாள்.28.03.2025 டெக்கன் க்ரானிக்கல், நாள். 28.03.2025
7.	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்.	:	16.04.2025
8.	நிதியின் தன்மை	:	மூலதன நிதி (Capital fund)
9.	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	:	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	:	ஒரு ஒப்பம் (e-Tender) இணையதளத்தின் மூலம் பெறப்பட்டது.

ஒப்ப நாளான 17.04.2025 அன்று ஒரு ஒப்பம் e-Tender மூலமாக பெறப்பட்டது. தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்றதால் அவ்வொப்பந்ததாரரின் நிதி ஒப்பம் 19.04.2025 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் பின்வருமாறு :-

வ. எண்	தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் (திருவாளர்கள்)	பணியின் அலுவலக மதிப்பு (GST@18% உட்பட) (ரூ) 2024-2025	விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு 2024-2025	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (GST@18% உட்பட) (ரூ)
1.	தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட்	ரூ.5,61,86,880.23/-	(+)14.39	ரூ.6,42,72,172.29

ஒப்பத் தொகையை குறைக்குமாறு e-tender மூலம் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் 19.04.2025 அன்று கோரப்பட்டது. அதன்படி 21.04.2025 அன்று BOQ e-tender வாயிலாக திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் ஒப்பத் தொகையினை ரூ.6,42,72,172.29 ((+)14.39%)-லிருந்து ரூ.6,40,47,424.77 ((+)13.99%)க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்.

ஒப்பத் தொகையை மேலும் குறைக்குமாறு e-tender மூலம் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் 21.04.2025 அன்று கோரப்பட்டது. அதன்படி BOQ e-tender வாயிலாக திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் 22.04.2025 அன்று ஒப்பத் தொகையினை ரூ.6,40,47,424.77 ((+)13.99%)லிருந்து ரூ.6,37,66,490.37 ((+)13.49%)க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்.

மீண்டும் ஒப்பத் தொகையை மேலும் குறைக்குமாறு e-tender மூலம் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் 22.04.2025 கோரப்பட்டது. அதன்படி BOQ e-tender வாயிலாக திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் 22.04.2025 அன்று ஒப்பத் தொகையினை ரூ.6,37,66,490.37 ((+)13.49%)லிருந்து ரூ.6,17,99,949.56 ((+)9.99%)க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்.

அதன் விவரம் பின்வருமாறு:-

பணியின் அலுவலக மதிப்பு (ரூ) SOR 2024-25 (GST@18% உட்பட)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@18% உட்பட) (2024-2025)	முதல் விலைக்குறைப்பிற்குப் பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@18% உட்பட) (2024-2025)	இரண்டாவது விலைக்குறைப்பிற்குப் பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@18% உட்பட) (2024-2025)	மூன்றாவது மற்றும் இறுதி விலைக்குறைப்பிற்குப் பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@18% உட்பட) (2024-2025)
ரூ.5,61,86,880.23	6,42,72,172.29	ரூ. 6,40,47,424.77	ரூ. 6,37,66,490.37	ரூ. 6,17,99,949.56
	14.39 %	13.99 %	13.49 %	9.99 %

இப்பணியினை கீழ்க்கண்ட காரணங்களை கருத்தில் கொண்டு, திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பத் தொகையான ரூ. *6,17,99,949.56 ((+)9.99%)*ஐ ஏற்கலாம் எனக் கருதப்படுகிறது.

Ministry of Road Transport & Highways (MORT&H)-ன் விவரக்குறிப்புகளின் *(Specifications)*-படி பணி மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், பணி மேற்கொள்ள தேவையான பணியிட அலுவலகம், தொழிலாளர் தங்குமிடம், கட்டுமான பொருட்கள் சேமிப்பு கிடங்கு, தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களின் சம்பளம் ஆகியவற்றிற்கான செலவீனம், தொழிலாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்குவதற்காக கூடுதல் செலவீனம், கட்டுமான பொருட்களின் விலையேற்றம், ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதமான *(+)9.99% (SOR 2024-25)*ன்படி ஒப்பத்தொகையான ரூ.*6,17,99,949.56 (18% GST* உட்பட*)*, ஏற்று இப்பணியினை திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்க ஒப்ப பரிசீலனைக் குழு *(Tender Scrutiny Committee)*வின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணியினை திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்ப சதவீதமான *(+)9.99%*ன்படி ஒப்பத்தொகையான ரூ.*6,17,99,949.56* ஐ *(18% GST* உட்பட*)* ஏற்று, திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட அவர்களுக்கு பணி ஆணை வழங்க நிலைக்குழு *(*பணிகள்*)* மற்றும் நிலைக்குழு *(*வரி விதிப்பு *(*ம*)* நிதி*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*பணிகள்*)* கூட்டத்தின் தீர்மான எண்.330/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு *(*பணிகள்*)* பரிந்துரை செய்து நிலைக்குழு*(*வரிவிதிப்பு*(*ம*)*நிதி*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

> "25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*வ.வி.ம.நி.*)* கூட்டத்தில் தீர்மான எண்.229/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு *(*வ.வி.ம.நி.*)* பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ஆணையர் அவர்களின் 23.04.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 569/2025 **பொருள் எண்.241**

பாலங்கள் துறை - மண்டலம்-14, வார்டு-181ல், பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே ஈ.சி.ஆர் (ம) ஓ.எம்.ஆர்-யை இணைக்கும் வெங்கடேசபுரம் - இளங்கோ நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணி - மூலதன (Capital fund) நிதியின் கீழ் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணி வழங்க அனுமதி.

2024-2025ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் ரூ.7.04 கோடி மதிப்பீட்டில் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே ஈ.சி.ஆர் (ம) ஓ.எம்.ஆர்-யை இணைக்கும் வெங்கடேசபுரம் – இளங்கோ நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்கள். அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்குறிப்பிட்டுள்ள பகுதியில் பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு மன்றத்தீர்மானம் எண்.590/2024 நாள்.30.12.2024 பெறப்பட்டுள்ளது.

1.	பணியின் பெயர் மற்றும் பணியின் இடம்	:	மண்டலம்-14, வார்டு-181ல், பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே ஈ.சி.ஆர் (ம) ஓ.எம்.ஆர்-யை இணைக்கும் வெங்கடேசபுரம் – இளங்கோ நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணி.
2.	மதிப்பீட்டின் ஒப்புதல் பெற்ற விவரம்	:	மன்ற தீர்மான எண் 590/2024 நாள்.30.12.2024
3.	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	:	பாலங்கள் துறை
4.	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	:	2024-25 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5.	மதிப்பீட்டின் தொகை		ரூ.7,04,30,000.00
	(அ)பணி செலவினம் மட்டும்	:	ரூ. 4,79,14,000.00
	(ஆ)பொருட்கள் மற்றும் சேவை வரி - 18%	:	ரூ. 86,24,520.00
	(இ) மீள்குடியேற்றம் (ம) மறுவாழ்வு செலவினம்	:	ரூ. 40,00,000.00

	(ஈ)கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி		ரூ. 5,00,000.00
	(உ)தளவாடங்களை மாற்றியமைத்தல் (TANGEDCO, CMWSSB &TANTRANSCO)	:	ரூ. 15,00,000.00
	(ஊ) மின்விளக்குகள்	:	ரூ. 15,00,000.00
	(எ) தரக்கட்டுப்பாடு – 1%	:	ரூ. 4,79,140.00
	(ஏ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி – 1%	:	ரூ. 4,79,140.00
	(ஐ) விலையேற்ற கட்டணம்1 ½ வருடத்திற்கு @7.5%	:	ரூ. 35,93,550.00
	(ஒ) விலையேற்ற கட்டணத்திற்கான பொருட்கள் மற்றும் சேவை வரி - 18%	:	ரூ. 6,46,839.00
	(ஓ) எதிர்பாரா செலவினம் – 2.5%	:	ரூ. 11,92,811.00
	மொத்தம்	:	ரூ. 7,04,30,000.00
6.	எந்தெந்த பத்திரிக்கைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	:	தினமணி, நாள்.28.03.2025 டெக்கன் க்ரானிக்கல், நாள். 28.03.2025
7.	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்.	:	16.04.2025
8.	நிதியின் தன்மை	:	மூலதன நிதி (Capital fund)
9.	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	:	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	:	ஒரு ஒப்பம் (e-Tender) இணையதளத்தின் மூலம் பெறப்பட்டது.

ஒப்ப நாளான 17.04.2025 அன்று ஒரு ஒப்பம் e-Tender மூலமாக பெறப்பட்டது. தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்றதால் அவ்வொப்பந்ததாரரின் நிதி ஒப்பம் 19.04.2025 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் பின்வருமாறு :-

வ. எண்	தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் (திருவாளர்கள்)	பணியின் அலுவலக மதிப்பு (GST@18% உட்பட) (ரூ) 2024-2025	விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு 2024-2025	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (GST@18% உட்பட) (ரூ)
1.	தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட்	ரூ.5,65,38,520.13 /-	(+)14.39	ரூ.6,46,74,413.18/-

ஒப்பத் தொகையை குறைக்குமாறு *e-tender* மூலம் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் கோரப்பட்டது. அதன்படி *BOQ e-tender* வாயிலாக திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் ஒப்பத் தொகையினை ரூ.*6,46,74,413.18/- ((+)14.39%)*-லிருந்து ரூ.*6,44,48,259.10/- ((+)13.99%)*க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்.

ஒப்பத் தொகையை மேலும் குறைக்குமாறு *e-tender* மூலம் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் கோரப்பட்டது. அதன்படி *BOQ e-tender* வாயிலாக திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் ஒப்பத் தொகையினை ரூ.*6,44,48,259.10/- ((+)13.99%)*லிருந்து ரூ.*6,41,65,566.50/- ((+)13.49%)*க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்.

மீண்டும் ஒப்பத் தொகையை மேலும் குறைக்குமாறு *e-tender* மூலம் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் கோரப்பட்டது. அதன்படி *BOQ e-tender* வாயிலாக திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் ஒப்பத் தொகையினை ரூ.*6,41,65,566.50/- ((+)13.49%)*லிருந்து ரூ.*6,21,86,718.30/- ((+)9.99%)*க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்.

அதன் விவரம் பின்வருமாறு:-

பணியின் அலுவலக மதிப்பு (ரூ) *SOR 2024-25 (GST@ 18% உட்பட)*	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு *(GST@ 18% உட்பட) (2024-2025)*	முதல் விலைக்குறைப்பிற்குப் பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு *(GST@ 18% உட்பட) (2024-2025)*	இரண்டாவது விலைக்குறைப்பிற்குப் பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு *(GST@ 18% உட்பட) (2024-2025)*	மூன்றாவது மற்றும் இறுதி விலைக்குறைப்பிற்குப் பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு *(GST@ 18% உட்பட) (2024-2025)*
ரூ.*5,65,38,520.13/-*	ரூ.*6,46,74,413.18*	ரூ.*6,44,48,259.10*	ரூ.*6,41,65,566.50*	ரூ.*6,21,86,718.30*
	14.39 %	*13.99 %*	*13.49 %*	*9.99 %*

இப்பணியினை கீழ்க்கண்ட காரணங்களை கருத்தில் கொண்டு, திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பத் தொகையான ரூ.*6,21,86,718.30 ((+)9.99%)*ஐ ஏற்கலாம் எனக் கருதப்படுகிறது.

Ministry of Road Transport & Highways (MORT&H)-ன் விவரக்குறிப்புகளின் *(Specifications)*-படி பணி மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், பணி மேற்கொள்ள தேவையான பணியிட அலுவலகம், தொழிலாளர் தங்குமிடம், கட்டுமான பொருட்கள் சேமிப்பு கிடங்கு, தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களின் சம்பளம் ஆகியவற்றிற்கான செலவீனம், தொழிலாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்குவதற்காக கூடுதல் செலவீனம், கட்டுமான பொருட்களின் விலையேற்றம். ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதமான *(+)9.99% (SOR 2024-25)*ன்படி ஒப்பத்தொகையான ரூ.*6,21,86,718.30 (18% GST* உட்பட*)*, ஏற்று இப்பணியினை திருவாளர்கள்.

தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்க ஒப்ப பரிசீலனைக் குழு (Tender Scrutiny Committee)வின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணியினை திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்ப சதவீதமான (+)9.99%ன்படி ஒப்பத்தொகையான ரூ.6,21,86,718.30ஐ (18% GST உட்பட) ஏற்று, திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட அவர்களுக்கு பணி ஆணை வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.331/2025, நாள்.23.04.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.04.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.230/2025, நாள்.25.04.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******